

# புவியிலோரிடம்

பா. ராகவன்

# புவியிலோரிடம்

பா.ராகவன்

ஒ ரு நா வ ல்

# பா. ராகவன்

*தொண்ணூறுகளின் மிகத் தொடக்கத்தில் எழுத வந்த பா. ராகவன், பிறவி சென்னைவாசி. பொறியியல் படித்துவிட்டு, தலை தெரிக்க எழுத்துக்கு ஓடி வந்தவர்.*

*இதுவரை ஏழு நாவல்கள், நான்கு சிறுகதைத் தொகுப்புகள், பதினான்கு கட்டுரைத் தொகுப்புகள் மற்றும் பதினைந்து அரசியல் - வரலாற்று நூல்களின் ஆசிரியர்.*

*இவரது டாலர் தேசம், நிலமெல்லாம் ரத்தம், மாயவலை போன்ற அபுனை - அரசியல் நூல்கள் மிகவும் புகழ்பெற்றவை. தமிழ் வெகுஜன தளத்தில், அரசியல் வரலாற்று நூல்களுக்கான நிரந்தர இடத்தை உருவாக்கியவை.*

*சுமார் இருபதாண்டுக் காலம் பத்திரிகை மற்றும் பதிப்புத்துறையில் பணியாற்றிய பா. ராகவன் தற்சமயம் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தொடர்களுக்கு எழுதி வருகிறார்.*

*தமது படைப்பிலக்கியப் பங்களிப்புகளுக்காகப் பெருமைக்குரிய பாரதிய பாஷா பரிஷத் விருது பெற்றவர். இவரது சில படைப்புகள் ஆங்கிலம் மற்றும் மலையாளத்தில் மொழியாக்கம் கண்டுள்ளன.*

*Puviyiloridam – A Novel*

*Copyright © Pa Raghavan*

*Creative Commons Attribution – Non Commercial – No Derivatives 4.0*

சர்வதேச உரிமத்தின்கீழ் பகிரப்படுகிறது

மின் பதிப்பு: அக்டோபர் *29, 2016,* தீபாவளித் திருநாள்

*Author's Home Page: www.writerpara.com*
*Contact: writerpara@gmail.com*

மின்னூல் வெளியீடு : *FreeTamilEbooks.com*

# முன்னுரை

*வாழ்க்கை விடுக்கும் சாவல்களிலேயே ஆகப் பெரியதும் தீவிரமானதும் எது?*

*பிரத்யட்சமாக நேரும் அவசமானங்களைத் தீரமுடன் எதிர்கொள்வதும் அதனைக் கொன்று மீள்வதும்தான் என்று கருதுகிறேன். அப்படியொரு தருணத்தில் என் மீட்சிக்கு எழுத்தை மட்டுமே உபாயமாக நம்பிச் செயல்படத் தொடங்கியபோது உதித்தது இந்நாவலின் கரு. பத்தாண்டுகள் மனத்தில் எழுதிப் பார்த்த இதனைத் தாளில் இறக்கி வைக்க ஏழு நாட்களே போதுமானதாக இருந்தது.*

*ஆனால், மனம் வரைந்த வடிவங்களை எழுத்துக்கு வசப்படவில்லை. எழுதத் தொடங்கிய சில மணி நேரங்களிலேயே என் பிரக்ஞையின் கண்காணிப்பை உடைத்துக் கொண்டு, நாவல் தன்னைத்தானே எழுதிக்கொண்டு சென்ற அதிசயத்தைக் கண்டேன். சுவர்க்கோழிகளின் நகையொலிக்கு இடையில் நள்ளிரவுகளில் மட்டுமே எழுதும் வழக்கமுள்ள எனக்கு இந்நாவல் இதுவரை இல்லாத சில புதிய அனுபவங்களைத் தந்தது.*

*நூற்றுக்கணக்கான உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பெருங்குடும்பம் என்னைச் சுற்றி நின்றுகொண்டு, எழுத எழுத வாசித்துக்கொண்டே வருவது போலவும், புகைப்படத்தில் கூடக் கண்டறியாத நீதிபதி மேதகு மண்டல் என் மைக்கூட்டின் மேல் அமர்ந்து என்னைக் கண்காணிப்பது போலவும், அறையின் மேற்கூரை நகர்ந்து, நட்சத்திரங்கள் ஒரு கம்பியாக மாறி இறங்கி என் தலைக்குள் நுழைவது போலவும் ஆயிரம் மத்தளக்காரர்கள் தொலைதூரத்தில் அமர்ந்து இடைவிடாது வாசித்துக்கொண்டிருப்பது போலவும் - ஒன்றோடொன்று தொடர்பில்லாத பல்வேறு சூசகங்களுக்கு ஆட்பட்டு, மனம் தறிகெட்டு ஓடிக்கொண்டிருந்தது.*

*எழுதி முடித்துச் சில நாட்கள் கழித்தே, ஆழ்மனத்தின் இந்த அலைக்கழிப்பை ஒரு நேர்க்கோட்டில் நிறுத்திப் பார்க்க முடிந்தது. ஒளி வடிவமாகத் தோன்றிய இக்குறியீடுகளை ஒலியாக மாற்றி யோசித்தபோது, அதுவே இந்நாவலின் ஆதார சுருதியாகப் படர்ந்திருக்கக் கண்டேன்.*

*முன் தீர்மானங்களற்ற வாசிப்பு என்கிற வழக்கம் அருகிவரும் காலத்தில் இந்நாவலை எழுத நேர்ந்ததன் துரதிர்ஷ்டத்தை உணர்ந்தே இருக்கிறேன். ஆயினும், சிந்தனையின் முட்தடை களை மீறி, ஆழ்மனம் இதில் நிகழ்த்தியிருக்கும் தர்க்கங்களை ஒளிக்க விரும்பவில்லை.*

*சாதிபேதமற்ற சமூகம் என்னும் பொய்க்கனவை சலியாமல் விதைத்து வருகிறார்கள் அரசியல்வாதிகள். பொய்யை உண்டு வாழ்வதைக் காட்டிலும் பட்டினியில் இறந்து விடுதல் உன்னதமானதென்று நினைக்கிறேன்.*

*தன்னளவில் இது முழு நாவலேயானாலும் என்னளவில் முதல் அத்தியாயமே ஆகும். முன் மதிப்பீடுகளற்று இதனை அணுகும் ஒவ்வொரு வாசகருமே இதன் அடுத்தடுத்த அத்தியாங்களை நிர்ணயிப்பவர்களாவார்கள்.*

*பா.ராகவன்*

# *பாகம் - ஒன்று*

## *1*

*நள்ளிரவு இரண்டு மணிக்கு வாசுவுக்கு விழிப்பு வந்துவிட்டது. சுள்ளிகள் பரப்பி வைத்தாற்போலக் கூடம் முழுவதும் கால்கள் நீண்டிருந்ததைத்தான் முதலில் கவனித்தான். ஆளுக்கொரு புறம் அடையாளம் தெரியாமல் உருண்டிருந்தாலும் அப்பாவின் கால்கள் மட்டும் அந்த இருட்டிலும் கண்டுபிடிக்கும்படியாகவே, எப்போதும்போல் ஆடிக்கொண்டிருந்தன. உறக்கமற்ற இரவுகளில் இலக்கற்று யோசித்துக்கொண்டிருப்பதும், பகல் பதினோரு மணிக்குப் பிறகு திண்ணையில் ஒருக்களித்து, மெல்லிய குறட்டையில் சோர்வைக் கரைப்பதும் அவர் வழக்கம்.*

*இன்றைய பொழுதுக்கு அவர் சிந்தனையை, தன்னைத்தவிர வேறெந்த ஜீவனும் ஆக்கிரமிக்க முடியாது என்று அவன் நினைத்தான். முடிவற்ற வினாக்களும் மீளாக் கனவுகளுமாக நீளும் அவர் வாழ்வில் இன்று நின்று மூச்சு வாங்கிக்கொள்ள ஒரு தருணம். சிறியதொரு பரபரப்பு. அடிவயிற்றில் தொடங்கி, உச்சந்தலை வரை நரம்புகளின் வழியாகப் பரவி, பிறகு தொண்டையில் வந்து சேர்ந்து ஒரு கேள்விக்குறியாக நிற்கும் அது. சில மணி நேரங்களுக்காவது வேறு யோசனை இருக்க முடியாது. சுயப் பிரக்ஞையற்று, தன்னைப் பற்றி மட்டுமே அவர் யோசித்துக்கொண்டிருக்கக்கூடும் என்கிற நினைவே அவனுக்குக் கஷ்டமாக இருந்தது. அம்மாவுக்கோ, அண்ணன்களுக்கோ, மன்னிகளுக்கோ ஒரு பொருட்டல்ல என்றாலும் அப்பாவுக்காகவாவது தன் ரிஸல்ட் சாதகமாக வரலாம் என்று ஒரு ஏக்கம் உண்டானது.*

*இதென்ன வேடிக்கை? எந்தத் தகுதியில் சாதகமான முடிவை எதிர்பார்க்கிறோம் என்றும் உடனே தோன்றியது. எப்படிக் கூட்டிக் கழித்தாலும் ஆங்கிலம் காலை வாரிவிடப்போவது உறுதி. தேர்வெழுதிய அன்றே வீட்டில் அவன் அறிவித்துவிட்டான். மறுபடியும் எழுதுகிற உத்தேசமில்லை. ஒரு சாபம் மாதிரி குடும்பத்தைப் பற்றியிருக்கிற தோல்விகளுக்கு அவனும் விலக்கல்ல. பரீட்சைகளாலான வாழ்க்கை, வெறுப்பும் சலிப்பும் நிறைந்தது. அவன் பாதையையும் ஏதாவதொரு பட்டறை தீர்மானிக்கும்.*

*அப்பா அப்போது ஏதும் பேசவில்லை. உணர்ச்சியற்ற அவரது விழிகளை ஊடுருவிப் பார்த்து மனத்தைப் படிக்க அவனால் ஆகவில்லை. தானொருத்தனாவது கல்லூரிக்குச் செல்லக் கூடுமென்கிற கனவு அவருக்கு இருந்திருக்கலாமென்று தோன்றியது. ஒன்பது பிள்ளைகளில் ஒன்றுகூடக் கல்வி ஆர்வமற்றிருப்பது நிச்சயம் அவருக்கு வருத்தமேற்படுத்தும்தான்.*

*அதனாலென்ன, பிழைத்துவிட முடியும் என்று அவன் தனக்குத்தானே சொல்லிக்கொண்டான்.*

*உத்தரவாதமான வருமானம்; ஒரு கவர்ன்மென்ட் உத்தியோகம். ஒன்பதுபேரில் யாராவது ஒருவருக்காவது இது அமைந்துவிட்டால் தன் கவலை விட்டுவிடும் என்று யாரும் விருந்தினர்கள் வரும்போதெல்லாம் சொல்லிக்கொண்டிருப்பது அப்பாவின் வழக்கம். நினைவு தெரிந்த வருடங்களில் சுமார் நூறுமுறை வாசு இதைக் கேட்டிருக்கிறான். 'உன் வயசென்ன? கூட நாலு வருஷம் சேர்த்துக்கோ, பத்தாயிரம் தடவை நான் கேட்டிருக்கேன்' என்பான் மணிவண்ணன். 'அதுங்கூட இன்னொரு அஞ்சு வருஷம். நான் லட்சம் தடவை' என்பான் சடகோபன். இந்த சம்பாஷணை ஒரு நகைச்சுவை அம்சமாகக் குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவரிடையேயும் பரவி வியாபிக்கும்போது பெரியண்ணா வாசல் திண்ணையிலிருந்து திரும்பிச் சிரிப்பான். அப்பாவின் கனவு அவனிடமிருந்தல்லவா முதல் முதலில் தோல்வியடைய ஆரம்பித்திருக்கும்? யாருமே எதிர்பாராதவிதமாகப் பெரியண்ணா ஒன்பதாம் வகுப்போடு படிப்பை நிறுத்திவிட்டுச் சமையல் வேலைக்குப் போக ஆரம்பித்தபோது ஒரு வாரம் கேவிக்கேவி அம்மா அழுதுகொண்டிருந்தாள் என்று அப்பா சொல்லியிருக்கிறார்.*

*‘நீ அழலையாப்பா?’ என்று வாசு கேட்டபோது, ‘அழத் தோணலை. அதெப்படி விட்டுடும்? எங்கப்பா பண்ணிண்டிருந்த காரியமாச்சே அது?’ என்றார், மிக ஜாக்கிரதையாக, பாவங்கள் ஏதுமற்ற தொனியில்.*

*இதில் கூடப் பெருமை இருக்க முடியுமா என்று வாசு யோசித்தான்.*

*‘படிப்பு, ரொம்பப் பெரிய விஷயம்டா வாசு. வணங்கிக் கூப்பிட்டாத்தான் வரும். அதுவும் எல்லார்கிட்டேயும் வராது. மெனக்கெடணும். பிராணனை விடணும். அதுவும் நம்மை மாதிரி காசுபணம் இல்லாதவாபாடு ரொம்பக் கஷ்டம். பிராமணன் வேறயா? வேற டிஸ்குவாலிஃபிகேஷனே வேணாம். உங்கண்ணன்கள்கிட்ட முட்டிண்டு தோத்துப் போயிட்டேன். சரோ பத்தாங்கிளாஸைத் தொட்டதுமே உங்கம்மாவுக்குப் பொறுக்கலை. கால்லே வெந்நீரைக் கொட்டிண்டா மாதிரி பதறி வரன் தேட ஆரமிச்சுட்டா. உனக்கு ரெண்டு வயசுதான் மூத்தவ. பாரு இப்ப மாமி மாதிரி சதை போட்டுண்டு தோள்ல ஒண்ணும் இடுப்புல ஒண்ணுமா எப்படி ஆயிட்டா பார். நீயாவது புத்தியோட பிழைச்சுக்கோ’.*

*அவன் எஸ்.எஸ்.எல்.ஸி. தேறிவிட்ட தினத்தன்று அப்பா சொன்னார். வாழ்வில் இத்தனை நீளமாக அவர் பேசி அவன் கண்டதில்லை. ஒவ்வொருவரும் எஸ்.எஸ்.எல்.ஸி. முடிக்கிறபோது அப்பாவுக்கு இதை சொல்லத் தோன்றும் போலும். தனக்கும் அவருக்குமான உறவின் ஒரே விளைவு அது என்று எண்ணிக் கொண்டான், அப்போது.*

*நீண்ட பெருமூச்சுகளில் இரவு கரைந்து விடாதா என்றிருந்தது அவனுக்கு.*

*‘தூங்கலையா வாசு?’ என்று திடீரென்று குரல் கேட்க, தூக்கிவாரிப் போட்டது அவனுக்கு. அப்பாதான். தான் தூங்காதது மட்டுமின்றி அவனையும் கவனித்துக்கொண்டிருக்கிறார்.*

*‘போட்டுக் குழப்பிக்காதே. வர்றதுதானே வரப்போறது?’ என்றார் மெல்லிய குரலில்.*

*தோளைச் சொறிந்தபடி சுந்தரா திரும்பிப் படுத்தான்.*

*‘நீ தூங்கலியாப்பா?’ என்று வாசு கேட்டான்.*

*‘என்னென்னமோ அதிசயமெல்லாம் நடக்கறதே. அதுல ஒண்ணா உன்னைத் தூக்கி பாஸ் போட்டுடமாட்டாளான்னு யோசிச்சுண்டிருக்கேன்’ என்றார்.*

*சிரிப்புக்கூட வருகிறதா என்ன? வாசுவுக்கு, ரிசல்ட் வந்த மறுவிநாடி யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் எங்காவது ஓடிவிடலாமா என்று தோன்றியது.*

*தவிர, எதற்கு ரிஸல்ட் வருகிறவரை காத்திருக்க வேண்டும்? எழுதியவனுக்குத் தெரியாதா லட்சணம்? எல்லா பாடங்களிலும் இப்படியுமில்லாமல் அப்படியுமில்லாமல் தேறி விடுவான்; ஆங்கிலம் தவிர. சனியன், மொழியா அது? ஏழெட்டு மார்க்குகள் வித்தியாசத்தில் தன் சவப்பெட்டியை அது தயாரித்துவிடும். உள்ளே இழுத்துப் போட்டுப் புதைத்து மண் மூடிவிட்டால் தீர்ந்தது.*

*வாசுதேவன் எம்.ஏ., அல்ல. பி.ஏ. அல்ல. பிளஸ் டூவுமல்ல. வாசு பத்தாங்கிளாஸ். போதாது? எதேஷ்டம். பெரியண்ணாவுக்குத் துணையாக சாதத் தவலை உருட்டலாம். சுந்தர்ராஜனுக்கு எடுபிடியாக டெஸ்டர், ஸ்குரூ டிரைவர் சகிதம் ரேடியோ ரிப்பேர் செய்யலாம். ரெட்டியார் கடையில் சீனா கணக்கெழுதுகிறான். கேட்டால் துணி கிழிக்கும் உத்தியோகம் கிடைக்காமல் போகாது. முடியாத காரியம், வரதனுக்குத் தோதாக அத்யாபாக கோஷ்டியில் சேருவது. அதென்ன, நீளாதுங்க ஸ்தனகிரி... ஏதோ ஒன்று...*

*வாசு தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தான். ஒரு விளையாட்டுபோல வாழ்க்கை மிகவுமே கோரதாண்டவம் புரிகிறது வீட்டில். இருள் பூசிய சுவர்களினுள் புதைந்திருக்கின்றன ஈரமான கனவுகள்.*

*சொந்தமாக ஒரு வீடு. ஒன்பது பேரும் சேர்ந்து வசிக்கும் பறவைக்கூடு போலாயினும் சரி. அப்பா சொல்லிக் கொண்டிருப்பார் எப்போதும்.*

*'காஞ்சிபுரத்துலே கொஞ்சம் நிலம் இருக்குடா சீனா. ஒவ்வொரு ரூமா கட்டி முடிச்சாலும் சரி. என் காலத்துக்குள்ள நான் பார்த்துடணும்; சொல்லிட்டேன்'.*

*ஏழு வருமானம். பன்னிரண்டு பேர் சாப்பிடுவது போக மாதம் பத்து ரூபாய் கூடத் தேறுவதில்லை.*

*'போறது போ, வாசு தலையெடுத்துத்தான் அது நடக்கணும்னு இருக்கு போலிருக்கு' என்பாள் அம்மா.*

*மன்னிகள் திரும்பிப் பார்ப்பதை உணர முடிந்தாலும் தான் தலை திருப்பாமல் புத்தகத்தில் புதைந்திருப்பான் அவன்.*

*'என்ன பதிலே காணோம்?' என்பாள் பெரிய மன்னி.*

*'பெரிசா எதிர்பார்க்காதீங்கோ. நாம் மாசம் நாநூறு எப்படியாவது கொண்டு வந்துவிடுவேன். அவ்ளோதான்'.*

*அவ்வளவுதானா? தப்பித் தவறிக்கூடத் தவறான நம்பிக்கைகளைத் தந்துவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தான் அவன்.*

*பிராமணர்களில் கல்விமான்கள் அதிகம். விவேகிகள் அதிகம். பிராமணர்கள் எப்படியும் பிழைத்துக்கொள்ளத் தெரிந்தவர்கள். அவர்கள் ராஜதந்திரிகளும்கூட.*

*சந்தேகமில்லை. ஆங்காங்கே கொத்தாக சில மக்கு பிராமணர்களும் பிறக்கவே செய்கிறார்கள்.*

*'உனக்கு அந்தக் காலத்துல படிப்பு வருமாப்பா?' என்று அவன் ஒருமுறை அப்பாவிடம் கேட்டான். நெடுநாள் சந்தேகம் அது. மரபணுக்கள் பற்றிய தகவல்கள் முதல்முதலில் காதில் விழுந்தபோது தற்செயலாகத் தன் வீட்டு ஞாபகம் வந்துவிட்டது. அதெப்படி ஒட்டுமொத்தக் குடும்பமும் படிப்பில் மந்தமாக இருக்க முடியும்?*

*அப்பா பதில் சொல்லவில்லை. வாயில் திணத்திருந்த புகையிலைதான் காரணம் என்பதாக ஒரு பாவனை. அம்மாவிடம் விசாரித்தால் ஒருவேளை பதில் கிடைக்கலாம். ஆனால், 'வேலை இல்லைன்னா மிஷினுக்கு போயிட்டு வாயேன்' என்று எதையாவது அவன் தலையில் கட்டிவிடக்கூடும்.*

*வினாக்களற்ற அவள் வாழ்க்கை அடுப்புச் செங்கற்களால் ஆனது. வெப்பமும் வியர்வையும் எப்போதும் சுருங்கிய புருவமும் பெருமூச்சுகளுமாக வாழ்ந்துகொண்டிருக்கிறாள் அவள்.*

*'உன்னை ம்யூசியத்துலதாம்மா வெக்கணும். எப்படிம்மா ஒம்போது பெத்தே?' என்பான் வரதன். மாதமொரு முறை ஸ்ரீரங்கத்திலிருந்து பட்டைத் திருமண்ணும் 'அமெரிக்கன் டைமண்ட்' கடுக்கனுமாக வெயில் வேளையில் வந்துவிடுவான். அம்மாவுடனும் மன்னிகளுடனும்தான் வரதனால் சகஜமாகப் பழக முடிகிறது. 'என்னடா?' என்கிற ஒற்றைச் சொல் விசாரிப்புடன்*

*வாசுவை முடித்துக்கொண்டு அப்பாவிடம் போய்விடுவான். இடுப்புச் சுருளை நெகிழ்த்தி நோட்டுகளை நீவிக் கொடுத்துவிட்டு, 'சாயந்தரம் பார்ஸார்தி கோயிலுக்குப் போலாம்னு இருக்கேன். அப்படியே கிளம்பறேன். நீ வாயேன். அங்க கொஞ்சநாள் இரேன்' என்பான். 'சித்திரை மாசம் வரேன்' என்றோ, 'மாசி கடைசில வரேன்' என்றோ - எது அதிக நாட்கள் இடைவெளியில் உள்ளதோ, அதைக் குறிப்பிட்டுச் சொல்லுவார் அப்பா. வாசுவுக்குத் தெரிந்து, ஒருமுறை கூட அவர் வரதனுடன் போய் இருந்ததில்லை.*

*'எப்படியோ அவனும் பிழைச்சுண்டுட்டான். கஷ்டமோ நஷ்டமோ, நம்மகிட்ட எதையும் காட்டிக்காமல் இருக்கான் பார், சமத்து. மாசம் பொறந்தா முடிஞ்சதைக் கொண்டு வந்து குடுத்துடறான். நாம போய்கூட இருக்கறதுன்னாகூட செலவுதானே?' என்பாள் அம்மா - அப்பாவின் சார்பாக.*

*அப்பா அதை ஆமோதிக்கும் விதமாகக்கூடத் தலையாட்டாமல் வாசல் திண்ணையில் பெரியண்ணாவுக்குப் போட்டிபோல அமர்ந்திருப்பார் பிரும்மமாக.*

*தன்னினைவின்றி யோசித்துக் கொண்டிருந்தவன், உறங்கியது தெரியாமல் உறங்கி, விழித்தபோது மணி ஆறாகி விட்டிருந்தது.*

*அப்பா எழுந்து, காப்பியை முடித்துவிட்டு முதல் டோஸ் வெற்றிலைக்குச் சுண்ணாம்பு தடவிக் கொண்டிருந்தார்.*

*அம்பத்தூரில் ஒரு கல்யாணம் என்று பெரியண்ணா முதல் நாள் இரவே உதவிக்கு சுந்தரையும் அழைத்துக்கொண்டு போயிருக்க, சீனா, எரியாத ட்யூப் லைட்டை கழற்றி ஏதோ ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தான்.*

*'நீ ஒண்ணும் நோண்டாதேடா. சுந்தரா வந்து பார்க்கட்டும்' என்று சமையலறையிலிருந்து அம்மாவின் குரல் கேட்டது.*

*தீவிரமான பணிகள் இருக்கின்றனவோ, இல்லையோ - வீடு எப்படியோ, காலையில் பரபரப்பாகிவிடுகிறது.*

*'என்னடா? இன்னிக்கு ரிஸல்டா?' என்றான் சடகோபன்.*

*அவன் பதிலேதும் சொல்லவில்லை. பேசிக்கொண்டாலும் இல்லாவிட்டாலும் எல்லோர் மனத்திலும் அதைத்தவிர வேறு சிந்தனை இல்லை போலிருக்கிறது.*

*அத்தனை சீக்கிரம் கோயிலுக்குப் போய்விட்டுச் சின்ன மன்னி வந்து, 'இந்தா' குளிக்காட்டா பரவாயில்லை. காப்பிக்கு முன்னால் துளசி எடுத்துக்கோ' எனறாள்.*

*'உனக்குக்கூட நப்பாசையா மன்னி?' என்றான் வாசு, மெலிதான குரலில்.*

*'பின்னே? உங்கண்ணா ராத்திரி முழுக்கத் தூங்கலை தெரியுமா?'*

*வாசு உடனே சடகோபனைத் திரும்பிப் பார்த்தான்.*

*'காஞ்சீபுரத்து நிலத்துல கடக்கால் போடறதே உன் முதல் பத்தாயிர ரூபா சம்பளத்துலதான்' என்றான் சடகோபன்.*

*'அந்த சிரமத்தை எனக்கு வெக்காம நீயே முடிச்சிருந்தேன்னா, நான் மொட்டை மாடில*

*தோட்டம் போடறதை கவனிச்சிருப்பேன். உன்னை யாரு பாதிப்படிப்புல ஓடிப்போய் சாமியாராகி, கன்டினியூ பண்ணாம திரும்பி வந்து பெட்டிக்கடை வெக்கச் சொன்னது?' என்று சளைக்காமல் பதில் சொல்லிக்கொண்டே குளிக்கப் போனான்.*

*பத்து மணிக்கு ரிசல்ட் வந்துவிடும் என்று சொல்லியிருந்தார்கள் குளித்து, சாப்பிட்டுவிட்டு எட்டரைக்குக் கிளம்பிப் போனான் வாசு. சிந்தனையே கூடாது என்பதுதான் அவனது ஒரே சிந்தனையாயிருந்தது.*

*ஒரு கோடு. ஒன்று இந்தப் பக்கம் அல்லது அந்தப் பக்கம். அந்தச் சந்தேகம்கூட அநாவசியம். ஒரே பக்கம்தான். அவனுக்கு சடகோபனுடன் கடையை கவனித்துக்கொள்கிற யோசனைதான் உவப்பானதாயிருந்தது. சுலபம்; அசௌகர்யம். சில நாட்களில் தனியே ஒரு பெட்டிக்கடை தொடங்குவதுகூடச் சாத்தியந்தான். அவனும் அப்படி பெரியண்ணாவுக்கு எடுபிடியாய் இருந்து ஆரம்பித்தவன்தானே?*

*அப்பா உட்பட யாருமே தன் தோல்விக்காகக் கடிந்து கொள்ளப் போவதில்லை; மனத்தளவில் அப்படியொரு நிலையை எதிர்கொள்ளப் பழக்கிவிட்டோம் என்பதே அவனுக்கு நிம்மதியாகவும் ஆறுதலாகவும் இருந்தது.*

*எல்லாம் கொஞ்ச நேரம்தான். ரயில்வே ஸ்டேஷன் புத்தகக் கடையில் முண்டியடித்த வட்டத்தைத் திருகி நுழைந்து பேப்பரை வாங்கி, இலக்கற்றுத் தன் எண்ணை அவநம்பிக்கையுடன் தேடியவன், அதிர்ச்சியில் பல நிமிடங்கள் அசைவற்று நின்று விட்டான்.*

*தேர்வானவர்கள் பட்டியலில் அவன் எண்ணும் எப்படியோ இடம் பெற்றிருந்தது.*

*வாழ்க்கையில், பல் தேய்க்காமல் குடிக்கும் முதல் காப்பி என்று நினைத்துக்கொண்டான். ஆனந்தமாக ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்து, முழுதாக முடித்துத் தூக்கிப்போடவும் வண்டி கிளம்பவும் சரியாக இருந்தது. எந்த ஊர் செல்கிற வண்டி என்று இப்போதாவது கவனித்திருக்கலாம் என்று தோன்றியது. இரவு முழுவதும் டிக்கெட் பரிசோதகர் யாரும் வராதது பற்றி எழுந்த சந்தோஷம் மட்டும் வெகுநேரம் நீடிக்கவில்லை.*

*அந்த ஸ்டேஷனில் நின்று கிளம்பிய பிறகு அவனுக்குப் பின்னால் ஒரு பரிசோதகரும் ஏறினார்.*

*'டிக்கெட்?' என்றார் அவனிடம். சற்றும் தயங்காமல், 'இல்லை' என்று கையாட்டினான்.*

*'எங்கே போகிறாய்?'*

*'இந்த ரயில் எங்கே போகிறது?'*

*பரிசோதகர் முறைத்தார். மேற்கொண்டு பேசவில்லை. அடுத்த ஸ்டேஷனில் அவனை இறக்கி, தானும் இறங்கினார்.*

*'உன் பெயரென்ன?'*

*'வாசுதேவன்'*

*'தமிழா?' என்றார்.*

*'ஆமாம் சார்'*

*‘எங்கிருந்து வருகிறாய்?’*

*‘ஜோலார்பேட்டையிலிருந்து’*

*‘டிக்கெட் வாங்கவில்லை?’*

*‘வாங்கவில்லை. மன்னியுங்கள் சார்’*

*‘சரி, வா’ என்று கையைப் பிடித்துக்கொண்டு ஸ்டேஷன் மாஸ்டர் அறைப் பக்கம் நடந்தார். வண்டி இன்னும் நின்றுகொண்டிருந்தது.*

*‘பணம் எவ்வளவு வைத்திருக்கிறாய்?’ என்று அவர் ஆங்கிலத்தில் கேட்டார்.*

*‘எண்பது ரூபாய் சார்’ என்று சட்டை மேல் பட்டனைத் திறந்து உள் பாக்கெட்டில் கைவிட்டான்.*

*பார்த்துக்கொண்டே இருந்த பரிசோதகர் ஆச்சரியமாக, ‘பிராமினா நீ’ என்றார் பூணூலை கவனித்துவிட்டு.*

*அவன் ஒரு விநாடி புன்முறுவலுடன் அவரை உற்றுப் பார்த்தான். ‘ஆமாம் சார். பிராமின் தான்!’ என்றான் மிகுந்த பரவசமுடன்.*

## *2*

*உள்ளகரத்திலிருந்து சின்ன மன்னியின் அப்பா வந்திருந்தார். வாசுவுக்கு அவரைப் பார்க்கும் போதெல்லாம் காமராஜர் ஞாபகம் வரும். மினுங்கும் கருமையும் உயரமும் ஆகிருதியுமான தோற்றம். மேலாகக் கண்களில் எப்போதும் சுரக்கும் கனவு. வரதன், ரகசியமாக அவருக்கு மூலவர் என்று பெயர் வைத்திருந்தான். எப்போதும் எண்ணெய்க் காப்பியில் இருப்பது போல ஒரு மினுமினுப்பு. அங்கு வரும்போது மட்டுந்தான் ஸ்ரீசூர்ணம் இட்டுக் கொள்கிறாரா, அல்லது எப்போதும் உண்டா என்று அவர் போன பிறகு சகோதரர்கள் மன்னியின் காதில் படாமல் விவாதித்துக்கொள்வார்கள்.*

*'இருந்துட்டுப் போகட்டும் போயேன். நம்மாத்துல இன்னும் கசாப் வெட்டாதவன் ஒருத்தன்தான் பாக்கி. இந்த பிரமாணன் ஹைஸ்கூல்லே வாத்தியாரா இருந்து ரிடையர் ஆனவர். ஸ்ரீ சூர்ணம் இட்டுக்காட்டாலும் பிராமணன்னு சொன்னா, யாரும் நம்புவா' என்பார் அப்பா.*

*அரசு உத்தியோகத்தில், விசேஷமாக ஓர் ஆசிரியர் பணியில் தன் மகன்களுள் ஒருத்தன் அமருவதென்பது அவர் கனவுகளின் நீட்டல் விகாரம். மன்னியைப் பெண் பார்க்கப் போனபோது மற்ற எல்லாவற்றையும் விட அவளது அப்பா ஓர் ஆசிரியர் என்பதுதான் அவருக்குப் பெரிய விஷயமாயிருந்திருக்கிறது.*

*'எங்கிட்டேயும் பிரமாதமா வசதி ஒண்ணும் கிடையாது சுவாமி. ஆனா, பிள்ளைகளெல்லாம் உழைக்கத் தெரிஞ்சதுகள். அது ஒண்ணுதான் சொல்லிக்கக் கூடிய விஷயம்'.*

*'போருமே?' என்றார் ரங்கநாதன். ஓர் எளிய ஆசிரியர் நடத்தும் திருமணத்தின் விசேஷ அம்சங்கள் என்னென்னவாயிருக்கும் என்று அப்பா சடகோபனின் திருமணத்தன்று தெரிந்துகொண்டார். ஈ மொய்ப்பதுபோல அவரது மாணவர்கள் ஓடி ஓடி உழைத்த காட்சியே அவருக்கு பிரமிப்பூட்டப் போதுமானதாயிருந்தது. 'இவர் எங்க ஹெட்மாஸ்டர், இவர் ஆத்தூர் ஸ்கூல்லே சீனியர் டீச்சர், இவர் ப்ரெஸிடென்ஸியிலே லெச்சரர்' என்று ஒவ்வொருவரையாக அவர் அறிமுகப்படுத்தியபோது வாசுவின் அப்பாவுக்குப் பெருமை பிடிபடவில்லை. சிறியதொரு கடை வைத்திருக்கும் சடகோபனை, 'பிஸினஸ் பண்றான்' என்று சொல்லிக்கொண்டதன் விளைவான குற்ற உணர்ச்சிகூடத் தாற்காலிகமாக மறைந்துவிட்டிருந்தது அப்போது.*

*கல்யாணத்துக்குப் பிறகு முதல் முறை ஆடிக்கு அழைக்க மனைவியுடன் வந்திருந்த ரங்கநாதன், சடகோபனின் கடைக்குச் சென்று பார்த்தார். வியாபாரம் மும்முரமாயிருந்த மாலை நேரம். 'சௌக்கியமா மாப்பிள்ளை?' என்பதைத் தவிர வேறெதும் அவர் பேசவில்லை அங்கே.*

*வீட்டுக்கு வந்து சின்ன மன்னியிடம் ரகசியமாகக் கேட்டாராம். 'சிகரெட்டெல்லாமுமா நம்மளவா விக்கணும்?'*

*இரவு சாப்பிடும்போது மன்னி இதை அம்மாவிடம் சொல்ல, அம்மா அதை ஒலிபரப்ப, வீடே சிரித்தது.*

*'நல்லவேளை, சிகரெட்டெல்லாமா பிடிக்கறார் மாப்பிள்ளைன்னு கேட்கறாப்பல நான் வெச்சுக்கலையே! அது போறாதா?' என்றான் சடகோபன்.*

*அப்பா பேசிக்கொண்டிருந்தார், ரங்கநாதனிடம். பொறுப்புத் தெரிந்த பையன்கள். உறவுகளுக்குள் ஒரு விரிசல் வந்ததில்லை இதுகாறும். கொஞ்சம்தான் ஆனாலும்*

*சம்பாதிப்பதைச் சேமிக்கத் தெரிந்தவர்கள்தான் எல்லாரும். சொந்தமாக ஒரு வீடு கட்டும் கனவை வேறு அவர் எல்லார் மனத்திலும் விதைத்திருக்கிறார். மிகப் பிரும்மாண்டமான அவரது ஆயுள் கனவு அது. எத்தனை நாளைக்கு சைதாப்பேட்டை ரயில்பெட்டி வாடகை வீட்டில் காலந்தள்ள முடியும்? ஏற்கெனவே சடகோபனின் பெட்டிக் கடைக்குத் தனியே வாடகை தந்து கொண்டிருக்கிறார்கள்.*

*குடும்பத்தின் கடைசி நம்பிக்கை நட்சத்திரம் வாசு எப்படியோ பிளஸ் டூ தேறிவிட்டான். அவன் கல்லூரிக்குப் போக முடிந்தால் போதும். நான்கு வருடங்களில் குடும்பம் கணிசமாக முன்னுக்கு வந்துவிடும்.*

*'அடடே!' என்றார் ரங்கநாதன். வாசுவுக்குச் சங்கடமாக இருந்தது. அப்பா உள்ளிட்ட யாருமே புரிந்துகொள்ளக் கண்டிப்பாக மறுக்கிறார்கள். ஒரு மயிரிழையில் மட்டுமே, தவறுதலாக அவன் பாஸாகி இருக்கிறான். இந்த மதிப்பெண் பட்டியல், ஃபெயிலாகி இருக்கக்கூடிய நிலைக்கு சற்றும் மேலானதல்ல. இதை எடுத்துக்கொண்டு போய் சீட் கொடு என்று ஒரு ஐயங்கார் பையன் கேட்டால், எந்தக் கல்லூரி வாட்ச்மேனும் சிரிப்பான். இதை ரங்கநாதன் அறிவார். அவரிடம் தன் மார்க்கை சொல்லவே அவனுக்குச் சங்கடமாயிருந்தது.*

*'கொண்டு வாடா. அவரென்ன மூணாவது மனுஷனா?' என்றார் அப்பா.*

*அவன் சின்ன மன்னியைப் பார்த்தான். அவளிடம்தான் அது இருக்கிறது. சொல்லிக்கொள்ளும்படியாக இருந்தால், அவளே இந்நேரம் கொண்டுவந்திருக்க மாட்டாளா?*

*வாசு சொன்னான்: 'நான் மறைக்க விரும்பலை மாமா. மார்க் ரொம்பக் குறைச்சல். அம்பது பர்ஸெண்ட்கூட இல்லை. கரஸ்பாண்டன்ஸ்ல வேணுமானா ட்ரை பண்ணிப் பார்க்கலாம். ஆனா எனக்கு இஷ்டமில்லை'.*

*ஓஹோ என்றார் மன்னியின் அப்பா. வாசு மெல்ல நகர்ந்து வாசலுக்குப் போனான். உள்ளே அப்பா அவருடன் பேசிக்கொண்டிருந்தது காதில் விழுந்தது.*

*'எனக்குப் புரியாம இல்லே ஸ்வாமி. குறைச்சல் மார்க்தான். ஆனா, குடும்பத்துலேயே ஸ்கூலைத் தாண்டின முதல் ஆளில்லையா? பெத்தவனுக்கு அந்தப் பரபரப்பு இருக்குமில்லியா? பெயில்தான் முடிவு பண்ணியிருந்தபோது பாஸாயிட்டேம்பான்னு வந்து நிக்கறான். எனக்குத் தலை கால் புரியுமா சொல்லுங்கோ. எல்லாம் வேலை பார்க்கறேங்*

*கறதுகள். சம்பாதிக்கறேங்கறதுகள். ஒண்ணானா படிக்கறேங்கமாட்டேங்கறதே? சாஸ்திரத்துக்கு ஒண்ணாவது காலேஜை பார்த்துடுத்துன்னா போதும் எனக்கு. நீங்க சொல்லுங்கோ.என்ன பண்ணலாம்?'*

*அப்பாவின் நோக்கம் அவரை எட்டியிருக்குமா என்று வாசுவுக்குச் சந்தேகமாயிருந்தது. மேலும் அவரால் ஆகக் கூடியதொன்றுமில்லை என்று தீர்மானமாகத் தோன்றியது. சடகோபன் கல்யாணத்துக்கு வாழ்த்த வந்த பேராசிரியர்களை அப்பா இன்னும் மறைக்கவில்லை. வெறும் வாசல் திணணையை நிலைக்களனாகக் கொண்டு, உட்கார்ந்த இடத்தில் அவர் போடும் கணக்குகள் அவனுக்கு ஆச்சர்யமாயிருந்தன. உதவி கேட்க வேண்டும். ஆனால், கேட்கிற தோரணை தவறியும் எட்டிப்பார்க்கக் கூடாது. தன் மனத்தைப் புரிய வைத்துவிட வேண்டும். விடைகள் தாமாக எதிராளியின் பிரக்ஞை மீறி உதிர வேண்டும். 'என்ன பிரமாத காரியம்? நான் சேர்த்து விடறேன் காலேஜுலே' என்று அவரை மீறி ஒரு சொல் வந்துவிட்டால் போதுமானது அப்பாவுக்கு. சம்பந்தி என்று கூடப் பார்க்கமாட்டார். இரு கரம் கூப்பித் தலைகுனிந்து தொழும் தோரணையில், செய்ய நினைத்த உதவிக்கு ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடும். காசுக்கடை குமாஸ்தாவாக இருந்து, ஒன்பது பிள்ளைகள் பெற்று ஓய்ந்தவருக்கு, அனுபவங்கள் சில பிரத்தியேகப் பாணிகளை உருவாக்கித் தந்திருக்கின்றன போலும். அவனுக்கு அப்பாவை*

*நினைக்க, பிரமிப்பாயிருந்தது. அவருக்காகவாவது ஒரு முயற்சி செய்து பார்க்கலாமா என்று ஒரு கணம் நினைத்தான். ஆரம்பச் செலவுகளுடன் அது ஒரு வீண் முயற்சியாக முடிந்துவிடக்கூடும் என்று தோன்றவே, தலையைக் குலுக்கிக்கொண்டு வீதியில் இறங்கி, கால்போனபடி நடக்கத் தொடங்கினான்.*

*குளத்தைச் சுற்றிக்கொண்டு இளையாழ்வார் தெருவழியாக ஜெயராஜ் தியேட்டர் வரை சென்றுவிட்டு, பிறகு பெருமாள் கோயில் தெருவின் பின் வாசல் வழியே வீட்டை அடைய முழுதாக இருபது நிமிடம் பிடித்தது. ரங்கநாதனின் விசாரணைகளிலிருந்து தப்பிப்பது தவிர வேறு காரணமே இல்லை, சுற்றி வந்ததற்கு. ஆனால், அவன் வரும் வரையிலுங்கூட அவர் கிளம்பியிருக்கவில்லை.*

*அவசரமாக வாசலுக்கு வந்த பெரிய மன்னி, அவன் தலை தென்பட்டதும் 'வந்தாச்சு' என்று உள்ளே பார்த்துக் குரல் தொடுத்தாள்.*

*'எங்க போயிட்டே?' என்றார் அப்பா. பதிலேதும் சொல்லாமல் அவன் மறுபடியும் ரங்கநாதன் முன்பு நிற்க வேண்டியதாகிவிட்டது.*

*'திங்கட்கிழமை கார்த்தால பத்து மணிக்கு உன்னை பச்சையப்பாஸ் வாசல்லே வந்து நிக்க சொல்றார். அவர் வராறாம்' என்றார் அப்பா.*

*வாசு அவரை நிமிர்ந்து பார்த்தான். 'அதெல்லாம் கிடைக்காதுப்பா' என்றான் தவிப்பாக.*

*'பெயில்தான்னு சொல்லிண்டிருந்தே என்னாச்சு? அதுமாதிரி ஏதாவது நடந்தா சரி. இல்லேன்னா என்ன பண்ண முடியும்? பாவம், அவரா முன்வந்து ட்ரை பண்ணிப் பார்க்கலாங்கறார். கசக்கறதா?' என்றாள் அம்மா.*

*அவன் சட்டென்று சின்ன மன்னியைத் திரும்பிப் பார்த்தான். பளிச்சென்று எப்போதும் சிரித்துக்கொண்டிருக்க எப்படி முடிகிறது இவளால்?*

*'எல்லாம் வருவார். நான் அனுப்பி வெக்கறேன். நீங்க கிளம்புங்கோ, நாழியாச்சு' என்று தன் அப்பாவிடம் சொன்னாள் மன்னி.*

*'வரேன்' என்றார் ரங்கநாதன். வாசல் இறங்கி, மாடுகள் கட்டியிருக்கும் கோயில் மண்டபம் தாண்டி, ஆஞ்சநேயர் சந்நிதி வரை அவருடனே சென்றுவிட்டுத் திரும்பினார் அப்பா.*

*'மன்னியோட அப்பா லேசுப்பட்டவரில்லே. தெரியுமா?' என்றார் ரகசியமாக.*

*'நீ மட்டும் என்னவாம்?' என்று மாடிப்படி வளைவிலிருந்து சிரித்துக்கொண்டே கேட்டான் சடகோபன்.*

# *3*

*மிகச் சிறந்த சாதனையாளர்களையும் கடைந்தெடுத்த உதவாக்கரைகளையும் ஒன்றாக ஒரு கல்லூரி எப்படி உருவாக்கும் என்று வாசு யோசித்துக்கொண்டிருந்தான்.*

*அவனுக்குத் தெரிந்து பஸ் நிறுத்தம், சாலை மறியல், காலவரையறையற்ற வேலை நிறுத்தம், அரசியல் போராட்டங்கள் - இவற்றில் இடம் பெறும் கல்லூரி மாணவர்களில் அதிகமானவர்கள் பச்சையப்பன் கல்லூரியினராகவே இருந்தார்கள். ஆனால் சரித்திரம் சுட்டிக்காட்டும் சில அறிஞர்களும் மேதைகளுங்கூட அங்கிருந்தே உருவாகியிருக்கிறார்கள். வேலை நிறுத்தம் செய்த நேரம் போக எஞ்சிய சமயங்களில் ஒழுங்காகப் படிக்கவும் செய்வார்கள் போலிருக்கிறது.*

*இரண்டு விதத்திலும் சாதனை படைக்க அருகதையற்ற தன்னை எப்படி ஏற்றுக்கொள்வார்கள்? பூந்தமல்லி நெடுஞ் சாலையில் பிரும்மாண்டமான கல்லூரியின் சுற்றுச்சுவருக்கு வெளியே பிரதான வாசலில் நின்றபடி வருவோர் போவோரைப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.*

*திங்கட்கிழமை ஏழரை - ஒன்பது ராகுவின் காலம். ஆகவே ஏழு மணிக்கே துளைத்தெடுத்து அனுப்பிவிட்டார் அப்பா. சைதாப்பேட்டையிலிருந்து பச்சையப்பன் கல்லூரிக்கு நடந்து வந்திருந்தால் இப்படிச் சாலையோரம் சின்னமன்னியின் தகப்பனாருக்காகக் காத்திருக்க வேண்டியிராது. உள்ளகரத்திலிருந்து இரண்டு பேருந்துகள் மாறி அவர் வந்து சேரச் சமயம் பிடிக்கும். தவிர, அவர் கல்லூரியில் சேரப்போவதில்லை என்பதால் ராகு காலத்துக்கு முன்னதாகக் கிளம்ப வேண்டிய அவசியமும் இல்லை.*

*இவன் வாங்கியிருக்கிற மார்க்குக்கு கல்லூரி ஒன்றுதான் குறைச்சல் என்று அவர் நினைத்திருக்கலாம். ஆனாலும் சம்பந்தியின் மகனல்லவா? அவர் மகளின் சந்தோஷம் அந்தக் குடும்பத்தின் சந்தோஷத்தைப் பொறுத்ததுதானே என்று அவர் எண்ணியிருக்கக் கூடும்.*

*ஒரு சாதாரண ஆசிரியராக இருந்து பல ஆண்டுகள் முன்னால் ஓய்வு பெற்று விட்டவருக்குப் பச்சையப்பன் கல்லூரியில் என்ன செல்வாக்கு இருக்க முடியும் என்று பலவிதமாக அவன் யோசித்துப் பார்த்தும் சரியான காரணமாக எது ஒன்றும் அகப்படவில்லை. கல்லூரியின் முந்நாள் மாணவராக அவர் இருக்கலாம். நல்ல மாணவனாக நடந்துகொண்டதன் மூலம் சில ஆசிரியர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகியிருக்கலாம். அதனாலெல்லாம் ரங்கநாதனின் சம்பந்தி மகனுக்கு இடம் கொடுத்துவிடுவார்களா என்ன? தவிர, இவருக்கு ஆசிரியர்களாக இருந்திருக்கக்கூடியவர்கள் அநேகமாக இறந்தே போயிருப்பார்கள். மேலும் இவர் படித்த காலத்தில் பச்சையப்பன் கல்லூரி இருந்திருக்குமா?*

*அவருக்கு நன்கு தெரிந்த யாராவது அங்கு பணிபுரிபவர்களாயிருப்பார்கள் என்பதே அவன் எப்படி யோசித்தும் ஏற்கும்படியான சமாதானமாயிருந்தது. பிரின்சிபாலே தெரிந்தவராக இருந்துவிட்டால் பிரச்னை இல்லை. ரங்கநாதன் மாமாவின் இரண்டாவது மகளைப் பச்சையப்பன் கல்லூரி பிரின்சிபாலின் மருமகளாக்கியிருந்தால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும்.*

*சம்பந்தியின் சம்பந்தி என்றால் முதல் சம்பந்திக்கும் மூன்றாமவருக்குமுள்ள உறவின் பெயர் என்ன? பெயர் எதுவாயிருந்தாலும் சீட் கிடைத்துவிடக்கூடும். இனி மேலாவது பொறுப்புடன் படித்து, புத்தியுடன் பிழைத்துக்கொள்வதன் பொருட்டுச் சிறு அறிவுரைகளும்கூட.*

*மூன்று கார்கள், இருபது மோட்டார் சைக்கிள்கள், நூற்றுப் பதிமூன்று கால்நடையாளர்கள் கல்லூரிக்குள் நுழைந்த பிறகு ரங்கநாதன் வந்தார்.*

*வணக்கம், அல்லது குட் மார்னிங் இரண்டில் ஏதாவது ஒன்று சொல்லலாம் அவருக்கு என்று நினைத்தவனால் வெறுமனே புன்னகை செய்யத்தான் முடிந்தது. அண்ணாவின் மாமனார் என்பதற்குமேல் புதிதாக அவரிடம் வேறொரு பரிமாணம் ஏற்பட்டு விட்டதில், திடீரென்று ஒரு விலகல் தன்மை உண்டானது போலிருந்தது. அப்பாவுக்காகத்தான் இதைச் செய்ய முன் வந்திருக்கிறார் என்பது மானசீகமாக ஒருவித கஷ்டத்தை உண்டாக்கியது.*

*'நான் எத்தனையோ சொல்லிவிட்டேன் மாமா. அப்பா உங்களைத் தேவையில்லாமல் கஷ்டப்படுத்தறார்' என்றான் குற்ற உணர்ச்சியுடன்.*

*'கஷ்டமென்ன? ட்ரை பண்ணலாம். கிடைக்குமானா நல்லது தானே?' என்றார் புன்னகையுடன்.*

*அவன், ஒரு விநாடி தயங்கினான். பிறகு மெல்லிய குரலில் சொன்னான். 'எனக்குப் படிப்பு வரும்னு நம்பிக்கையில்லை மாமா.'*

*'ஏன்?' அவர் வியப்புடன் கேட்டார்.*

*'படிக்கிற வயசுதானே?'*

*'இருக்கலாம். எங்காத்து வழக்கம் வேற. அண்ணா ஏதாவது கல்யாணத்துக்குத் தளிகைக்குப் போனார்னா, நாங்கள்ளாம் கரண்டி எடுத்துண்டு கூட கிளம்பிடுவோம். வாரக் கணக்கா ஸ்கூலுக்கு லீவ் போட்டுட்டுப் போயிருக்கேன். படிப்பு போறதேன்னெல்லாம் யாரும் சொன்னதில்லை. சடகோபன் கொள்முதலுக்கு டவுனுக்குப் போனால், நான்தான் கடைல உட்காருவேன். ரங்கன் இருக்கானே...'*

*'யாரு?' என்றார் சட்டென்று ஞாபகம் வராமல்.*

*'எனக்கு முந்தினவன். எய்த் மெம்பர்' என்றான் சிரித்தபடி.*

*'ஆமாமாமாமா. சட்டுனு தோணலை'*

*'அவன் ஒரு டூரிஸ்டு கம்பெனில கெய்டா இருக்கால்லியோ? பஸ்ஸுல பல நாள் அவனோட மகாபலிபுரம், கோவளம்னு கூடப் போய் இங்கிலீஷ்காரங்களுக்கு கூடமாட ஹெல்ப் பண்ணி அம்பது, நூறுன்னு சம்பாதிச்சுடுவேன்.'*

*'அவா கம்பெனிகாரா எப்படி அலோவ் பண்ணுவா?'*

*'யார் சொல்லிண்டிருக்கா. மெட்ராஸ்ல வண்டி கிளம்பித்துன்னா, இவனும் டிரைவரும் மட்டுந்தான். இவன் ரூட் டிரைவரையே இவன்தான் ரெகமண்ட் பண்ணி வேலைக்கு வெச்சான், தெரிஞ்சவன்னு - அதனால் ஒரு பிரச்னை இல்லை. பார்க் ஸ்டேஷன்ல கிளம்பி சைதாப்பேட்டை தாடண்டர் நகர் வரும்போது நான் ஏறிண்டுடுவேன். ஒன்-டே பேகேஜ் டூர். எம்.ஜி.ஆர். சமாதி, உயிர் காலேஜ், செத்த காலேஜ், வண்டலூரி ஜூ, மகாபலிபுரம், மண்ணாங்கட்டிபுரம்...'*

*'இதுக்கெல்லாம் வராளான்ன யாராவது?'*

*'பின்னே? பாரினர்ஸ் கொஞ்சம்னா, இங்க இருக்கற லவ்வர்ஸ்தான் ஜாஸ்தி. எப்படியோ ஒருநாள் அவாளுக்கு ஜாலியா பொழுது போகணும்.'*

*ரங்கநாதன் அவனை வியப்புடன் பார்த்தார்.*

*‘இந்த சம்பாத்தியம் போதும்னு நினைக்கறியா?’*

*‘போறாதுதான். எனக்கு வேற பிளான் இருக்கு மாமா. சின்னதா ஒரு டைப் ரைட்டிங் இன்ஸ்டிடியூட் ஆரம்பிக்கணும்.’*

*‘நல்லதுதான். படிப்பு இருக்கறது ஒரு பாதுகாப்பு இல்லியா?’*

*அவன் தலைகுனிந்திருந்தான். சற்று நேரம் பொறுத்துச் சொன்னான்: ‘என்னவோ தெரியலை. எங்க யாருக்குமே அது சரியா வரலை. அதனாலேயே முக்கியமானதாகவும் தெரியலை.’*

*‘அப்படிச் சொல்லக் கூடாது. பிளஸ் டூ பாஸ் பண்ண முடிஞ்சிருக்கு இல்லியா?’*

*‘நீங்க வேற மாமா. ஒம்பதாவதுல ரெண்டு வருஷம். பிளஸ் ஒன்ல ரெண்டு வருஷம். கண்ணுக்குத் தெரியாத எதிரியோட சண்டை போடறமாதிரி இருக்கு’*

*ரங்கநாதன் அவன் தோளைப் பற்றி நிறுத்தினார்.*

*‘பார். உங்கப்பாவுக்கு நீ படிக்கணும்னு ஆசை. படிப்பு இல்லாவிட்டாலும் நீ பிழைச்சுடுவே. அது எனக்குத் தெரியும். உனக்கும் தெரியும். அவருக்காக ஒரு மூணு வருஷம் முயற்சி பண்ணிப் பார். ஒருவேளை உனக்கே திடீர்னு ஆர்வம் வந்து நன்னா படிக்க ஆரம்பிச்சுட்டேனா?’*

*அவன் சட்டென்று கேட்டான்: ‘அப்ப சீட் கண்டிப்பா கிடைச்சுடும்கறீங்களா?’*

*‘தெரியலை’ என்றார் அவர். ‘என் ஸ்டூடண்ட் ஒருத்தன் இங்க பிஸிக்ஸ் டிபார்ட்மெண்டுல லெக்சரரா இருக்கான். போன வருஷம் உங்க மன்னியோட சித்தி பையனுக்கு அவன்தான் சீட் வாங்கிக் கொடுத்தான்’ என்றார்.*

*மன்னியின் சித்திப் பையன் என்ன மார்க் வாங்கியிருந்தான் என்று உடனே கேட்க நினைத்தான். நிச்சயம் தன்னைவிட அதிகமாகத்தான் இருக்கும் என்று தோன்றவே பேசாமலிருந்துவிட்டான்.*

*கல்லூரிச் சாலையில் நடந்து இயற்பியல் துறை வாசலை அடைந்தார்கள். ரங்கநாதன் தன் முன்னாள் மாணவனுக்குத் தான் வந்திருப்பதைச் சொல்லியனுப்பிவிட்டு அவனிடம் சொன்னார்: ‘பிராமணனா பிறந்து தொலைச்சவன் இனிமே கவர்மெண்ட் உதவி எதையும் எதிர்பார்க்க முடியாது. நாம சரணாகதி அடையக்கூடிய ஒரே வாசல் படிப்புதான். நீ டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட் வெச்சி பிழைச்சிக்கலாம்னு இப்ப நினைக்கலாம். நாளைக்கு ஹரிஜன்ஸ் தவிர வேற யாரும் சுயதொழில் தொடங்கக்கூடாதுன்னு ஜி.ஓ. போட்டாலும் போட்டுடுவான். எச்ச இலை பொறுக்கித்தான் சாப்பிடணும்னுவேணா இப்போதைக்குச் சொல்லாம இருக்கலாம். ஜனநாயகத்துல அவாளுக்கு பிராமின்ஸ் வோட்டும் வேண்டியிருக்கே?’ என்றார், குரலைத் தாழ்த்தி.*

*‘படிச்சாலும் இதே நிலைமைதானே மாமா?’ என்றான் வாசு.*

*‘அது வாஸ்தவம்தான். ஆனா படிச்சவனுக்கு உலகம் முழுக்க வேலைதேட ஒரு சான்ஸ் இருக்கே?’*

*தன் குடும்பத்தில் யாருக்குமே ஏன் கல்வியில் நாட்டமற்றுப் போய்விட்டது என்று இப்போதும் அவன் யோசிக்க ஆரம்பித்தான். பேய் மாதிரி துரத்தும் வறுமை தவிர வேறு காரணம் இருக்க முடியாது என்று தோன்றியது. ஒன்பது குழந்தைகள்! அப்பாவின் இருநூறு, முன்னூறு ரூபாய் சம்பளத்தில் என்ன செய்திருக்க முடியும் அம்மாவால்?*

கரைபடிந்த நினைவாக, சிறுவயதில் அத்தனை பேரும் ஒரு வரிசையில் அமர்ந்து டிபன் சாப்பிடும் காட்சி உதித்து மறைந்தது அவனுக்கு.

கொல்லையில் பறித்த பாதாம் இலைகளில் வைத்து, ஆளுக்கு ஒன்றரை தோசை அளந்து தருவாள் அம்மா. ஒன்றரை என்பதே ஒரு எண்ணிக்கைக்குத்தான். உண்மையில் ஒரு தோசை மாவுகூடக் காணாது. அதைச் சாப்பிட்டு முடித்து இலையை வீசிவிட்டு வந்தால் பித்தளைச் சொம்பில் ஆவி பறக்கக் காப்பி தயாராக இருக்கும். காப்பி என்று தான் அதைச் சொல்லியாக வேண்டும். காப்பித் தூளும் கொஞ்சம் பாலும் அதில் இல்லாமல் போகாது. அரை அரை தம்ளராக ஊற்றிக்கொண்டே வருவாள். அது என்ன இம்மி பிசகாத கணக்கோ? பதினோரு பேரும் சாப்பிட்டு முடித்ததும், பித்தளைச் சொம்பு துடைத்துவிட்டாற் போலிருக்கும்.

'ஆச்... சு!' என்பாள் எழுந்தபடி. அடுத்த ஒரு வாரம், பத்து நாட்களுக்கு யாரும் டிபன் ஞாபகம் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அரை வயிறுச் சோறும் எலுமிச்சை ரசமும் கரைத்துக் குடித்து வளர்ந்த உடல்கள்.

எலுமிச்சை ரசத்தின் மருத்துவ குண விசேஷங்கள் பற்றி ஒருநாள் கூட அம்மா சொல்லத் தவறியதில்லை. அந்த நாட்களில். கொல்லையில் காய்க்கிற எலுமிச்சை. வீட்டில் புளி வாங்குவதே அபூர்வம்.

பெரியண்ணாவும் சடகோபனும் தலையெடுத்த பிறகுதான் வீட்டில் காப்பியின் அவலச் சுவை சற்றே மாறியது. பாதாம் இலையில் இரண்டு முழு தோசைகள் சாப்பிட முடிந்தது.

'நானும் லோயர் மிடில் கிளாஸ்தான். உங்காத்து நிலவரம் நன்னா தெரியும் எனக்கு' என்றார் ரங்கநாதன்.

'கவர்மெண்டு ஸ்கூல் வாத்யார்களுக்கெல்லாம் இப்ப எவ்வளவோ சௌகர்யங்கள் பண்ணி குடுத்திருக்கா. முக்கி முக்கி மூவாயிரம் சம்பளத்தைத் தொட்டுப் பார்க்கறதுக்கு முன்னாடியே நான் ரிடையர் ஆயிட்டேன்' என்றார் சிரித்தபடி. ஆயினும் பென்ஷன் வருமல்லவா.

'மூணு பொண்ணாச்சே!' என்று மறுபடியும் சிரித்தார்.

வாசுவுக்குப் பரிதாபமாக இருந்தது. இன்னும் ஒரு பெண்ணுக்கு அவர் திருமணம் செய்துவைக்க வேண்டும். எத்தனையோ கடமைகள் காத்திருக்கக்கூடும். வேகாத வெயிலில் உள்ளகரத்திலிருந்து தனக்காகப் பச்சையப்பன் கல்லூரிக்கும் வரமுடிந்திருக்கிறது அவரால்.

இயற்பியல் பேராசிரியர் மிக இளமையானவராக இருந்தார். கவர்ச்சியான தோற்றமும் அறிவுக் களையும் அவரிடமிருந்தன. பின்னதன் காரணகர்த்தா ரங்கநாதன்தான் என்று உளமாற அவர் நம்பும் பட்சத்தில் வாசுவுக்கு அவசியம் இடம் கிடைத்துவிடக் கூடும்.

'வாங்க சார். நல்லாருக்கீங்களா?' என்று கை கூப்பியபடியே வந்தார் பேராசிரியர்.

ரங்கநாதன் அவர் கூப்பிய கைகளை அப்படியே பிடித்துக்கொண்டு, முகமெல்லாம் புன்னகையாக, 'சௌக்கியமா?' என்று கேட்டார்.

பிடித்த கையை விடாமலே அவர் ஓய்வு அறைக்குள் அழைத்துச் செல்ல, தானும் உள்ளே போகலாமா, அல்லது அழைக்கும் வரை வராண்டாவிலேயே காத்திருக்கலாமா என்று வாசுவுக்குக் குழப்பமாக இருந்தது.

'இவன் வாசுதேவன். என் சம்பந்தி பையன்' என்கிற அறிமுகத்தை எந்த விநாடியும்

*எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். மாறாக, ரங்கநாதன் பேசியபடியே உள்ளே போய்விட்டார்.*

*சில விநாடிகள் தயங்கி நின்றுவிட்டு, பிறகு அவனும் உள்ளே போனான். பேராசிரியரின் குடும்பம், குழந்தைகள், கல்லூரி வாழ்க்கை, வெளிநாடு செல்லும் திட்டம், பழைய பள்ளி தினங்களின் ஞாபகங்கள் என்று விறுவிறுவெனப் பல விஷயங்கள் பேசிவிட்டு, விஷயத்துக்கு வந்தார் ரங்கநாதன்.*

*'அப்ளை பண்ணிட்டீங்களா?' என்று கேட்டார் பேராசிரியர்.*

*'போன வாரமே பண்ணியாச்சு' என்று ரங்கநாதன் பதில் சொல்லிவிட்டு, அவனைத் திரும்பிப் பார்த்தார்.*

*வாசு, தயாராகத் தன் மார்க் ஷீட்டை வெளியே எடுத்து நீட்டினான்.*

*'ரொம்ப கஷ்டஜீவனம் பண்ற குடும்பம். கெட்டிக்காரப் பையன்தான். இருந்தாலும் ஆத்துல உட்கார்ந்து ஒரு மணி நேரம் படிக்க முடியாது. சம்பாதிச்சுண்டே ஸ்கூலுக்கும் போனான்...'*

*ரங்கநாதன் தன்னால் இயன்ற அளவுக்கு அவன் கல்லூரியில் சேர்ந்தே ஆக வேண்டியதன் முக்கியத்துவத்தை விளக்கினார். ஆனால், பேராசிரியர் ஒரு சொல்லில் தகர்த்துவிட்டார்.*

*'மார்க்கே இல்லியே சார். எஃப்.ஸி. கேண்டிடேட் இந்த மார்க்னா தூக்கி அடிச்சிடுவாங்களே'.*

*'பி.ஏ. ஹிஸ்டரி, தமிழ் ஏதாவதுன்னாக் கூடப் பரவாயில்லை. பி.ஜி.ல வேற சப்ஜெக்ட் மாறிக்கலாம்' என்றார் ரங்கநாதன்.*

*பேராசிரியர் அவனைத் திரும்பிப் பார்த்தார். 'கஷ்டமாச்சே சார்?' என்றார் ரங்கநாதனிடம்.*

*'காம்படிஷன் ரொம்ப ஹெவியான காலமாச்சே இது!'*

*வாசு ஒருவாறு இதை எதிர்பார்த்திருந்தான். பதிலேதும் சொல்லாமல் சுவர் மாதிரி நின்றிருந்தான். அப்பாவின் மீதுதான் அவனுக்குக் கோபமாக வந்தது. இநத வயதான மனிதரை இப்படி அலைக்கழித்திருக்க வேண்டாம். சிபாரிசுதான் என்றாலும் தன்னிடம் துளியாவது தகுதி இருக்க வேண்டுமல்லவா.*

*'கரஸ்பாண்டன்ஸ்ல படியேம்ப்பா!' என்றார் பேராசிரியர் அவனிடம்.*

*சற்றும் தயங்காமல், 'சரி சார்' என்று உடனே தலையாட்டி விட்டான். அங்கிருந்து உடனே போய்விட வேண்டும் போலிருந்தது.*

*ரங்கநாதன் சட்டென்று பேச்சை வேறு விஷயத்துக்கு மாற்றி, பேராசிரியர் மேற்கொண்டு ஆய்வு ஏதேனும் செய்யலாமே என்று கேட்டார்.*

*'எங்க சார்? நேரம் இதுக்கே போறலை' என்று அவரும் சுய இரக்கத்துக்கு ஆட்பட்டு, தலை கவிழ்ந்து பேசிக்கொண்டிருந்தார்.*

*விடை பெறும்போது 'டோண்ட் லூஸ் ஹோப்' என்றார் பேராசிரியர். 'எந்த விஷயத்தில்' என்று அவன் கேட்க நினைத்தான்.*

*ரங்கநாதன் மாமாவிடம் விடைபெற்று, சேத்துப்பட்டு ரயில் நிலையம் வரை நடந்து டிக்கெட் வாங்கி, ஏறி அமரும் வரை மனம் தாங்க முடியாத கசப்புணர்வைச் சுமந்திருந்தது.*

*ரயில் வேகம் பிடித்து, காற்று வீசியதும் எல்லாம் சரியாகி விட்டாற்போலிருந்தது.*

# *4*

*ரேழியில் உட்கார்ந்திருந்தாள் மைதிலி. நாசூக்காகக் கால் நீட்டி, இடுக்கில் அரிவாள்மணையை அழுத்திக்கொண்டு வாழைப்பூ திருத்தும் பாவனையில் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தாள். கூடத்தில் ஒட்டடை அடித்துக் கொண்டிருந்த வாசுவுக்கு உடனே பெரியண்ணா ஞாபகம் வந்துவிட்டது. அண்ணா கிளம்பிப்போய் இரண்டு நாட்கள் ஆகிவிட்டன. அதே மஞ்சள் பை, எப்போதும் எடுத்துச் செல்லும் உபகரணங்களுடன்தான் கிளம்பினான். ஆனால் முன் அறிவிப்புகள் ஏதுமின்றி, தங்களில் யார் ஒருவரையுங்கூட உடன் அழைக்காததில், வாசுவுக்கு விளங்கி விட்டது.*

*மைதிலி எப்போதும் அவனுக்கொரு விக்ரகம் மாதிரிதான் தெரிவாள். விலை உயர்ந்த எளிமையும் அச்சமூட்டும்படியான மௌனத்தினடியில் புதைத்து வைத்து துக்கங்களுமாகப் பல நூற்றாண்டுகளாக அந்த வீட்டில் அவள் எதற்கோ தவமிருப்பது போலிருக்கும் அவனுக்கு. வினாக்களுக்கு விளக்கங்கள் தருவதும் நேர்த்தியான செயல்பாடுகளில் வீட்டை நிர்வகிப்பதும் தன் பணி என்பதாக அவளாகவே எடுத்துக்கொண்டு வருடங்கள் பலவாகிவிட்டன. அபூர்வமான தருணங்களில் சடகோபனின் குழந்தையை இழுத்துவைத்துத் தலை பின்னி விடுவாள் மைதிலி. 'அக்கா பின்னிவிட்டா இதுக்கு நாலு நாள் அவிழாது' என்பாள் சின்னமன்னி. சொல்லிக்கொண்டே தானும் பிரித்து விட்டுக்கொண்டு அவள் எதிரே அமர்ந்துவிடுவாள். பெரிய மன்னிக்குத் தலை பின்னிவிட அலுக்காது. ஒரு தலையில் கைவைத்தால் அரைமணி நேரம். துளி சிடுக்கு ஆகாது அவளுக்கு. வாழைத் தண்டு திருத்துகிற சப்தம் வரவேண்டும், வாரும்போது. தன் வாழ்வின் சிடுக்கு ஏன் இவளுக்கொரு பொருட்டாகத் தோன்றவில்லை என்று யோசிப்பான் வாசு.*

*அண்ணா நல்லவன்தான். ஆனால், எந்த ரகம் என்று இனம்பிரிக்க யாராலும் ஆகாது. அப்படியொரு புதிர்ப் பொட்டலமாகத் தன்னை வைத்துக்கொண்டிருந்தான் அவன். மாதம் முழுக்க ஒழுங்காக வேலைக்குப் போய்விடுகிறானே என்று நினைத்துக் கொண்டிருக்கும்போதே திடீரென்று ஒரு ராத்திரி கிளம்பிவிடுவான். தஞ்சாவூர் பாஸஞ்சருக்கு வாங்கிய டிக்கெட்டை மறக்காமல் முதல் நாளே துவைக்கப்போடும் சட்டைப் பையில் வைத்திருப்பான். கண்ணபுரம்தான் போகிறான் என்பதை ஒரு போதும் அவன் மன்னியிடம் மறைக்க விரும்பவில்லை என்பதாக ஒரு பாவனை. சோப்பு நுரைத்த ஈரக்கையில், செத்த எலியைத் தூக்கிப் போவதுபோல மன்னி அந்த டிக்கெட்டை கிணற்றடியிலிருந்து எடுத்து வந்த அண்ணாவின் கண்ணில்படும்படி வைப்பாள். பாவங்களைத் தவறிக்கூட வெளிக்காட்டாத அவள் முகத்தில் புதையுண்டிருக்கும் உணர்ச்சியைத் தேடித் தோற்றுப்போவான் வாசு.*

*சாந்தி முகூர்த்தத்தின்போதே அண்ணா அவளிடம் சொல்லிவிட்டான். ஊரில் ஒரு குடியானவப் பெண்ணின் மீது அவன் கொண்டிருந்த காதல். தைரியமற்ற வயதில் தன்னை வேரோடு வெட்டியெடுத்துக் கொண்டு சென்னைக்கு வந்துவிட்ட குடும்பம். இந்த வீட்டின் உறுதி குலைந்துவிடக் கூடாது என்பதால் தன் கனவைக் காலடியில் தேய்த்து எறிந்துவிட்ட பூர்வகதை.*

*மைதிலி ஆறாம் வகுப்புக்குமேல் படிக்காதவள். சைக்கிளில் உலகம் அளந்து ஒரு தகவல்காரராகத் தபால் பட்டுவாடா செய்யும் சாதாரணமானவரின் மகளாகப் பிறந்துவிட்டதனாலேயே அவள் அதிர்ச்சிகளுக்கும் அவலங்களுக்கும் இளமையிலேயே பழகி விட்டிருந்தாள்.*

*'அவளுக்குக் கல்யாணம் ஆயிடுத்தா?' என்று மைதிலி கேட்டாள்.*

*அண்ணா மௌனமாக இருந்தான். ஒருவேளை ஆகியிருந்தால், தான் இத்தனை தூரம் தகித்துச் சாம்பலாகிக் கொண்டி ருக்கமாட்டோமோ என்று அவனுக்குத் தோன்றியிருக்க வேண்டும்.*

*‘அவளுக்கு நெஞ்சுரம் ஜாஸ்தி’ என்று அவன் பதில் சொன்னான்.*

*அவள் சற்று நேரம் மௌனமாயிருந்துவிட்டுப் பின் தனக்கே சொல்லிக்கொள்பவள் போல, ‘பொம்மனாட்டிகளுக்கே அந்த குணம் உண்டு’ என்று சொன்னாள்.*

*அவன் வெகுநேரம் மரக்கட்டை போலக் கிடந்தான். திடீரென்று, ‘காதலிச்சது தவிர வேறு ஒரு கெட்டகாரியம் நான் பண்ணிடலை. ஒரு பாவம் பண்ணினேன். அப்பா, அம்மா மூஞ்சியைப் பார்த்துண்டு கோழையா இருந்துட்டேன். இப்ப உனக்கும் என்னால கஷ்டம்.’*

*அதிர்ச்சியா, விரக்தியா, கோபமா, வெறுப்பா என்று புரியாத உணர்ச்சியில் பல மாதங்களைக் கரைத்துக்கொண்டிருந்தாள் மைதிலி. ஆனால் அழுது ஆர்ப்பாட்டம் செய்யவில்லை. இடிந்துபோய் மூலையில் உட்கார்ந்துவிட வில்லை. அதெல்லாம் கூடச் சாத்தியந்தான். ஆனால், தன் பெற்றோருக்கோ, கம்பராஜபுரத்திலிருந்து எப்போதாவது பார்த்துப்போக வரும் தம்பிகளுக்கோ ஒரு மூச்சு விடவில்லை.*

*‘வயசான தகப்பனாரைத் தவிர அவளுக்கு இப்ப அங்கே சொந்தம் யாரும் இல்லை. வேறொண்ணுமில்லை - மாசம் ஒரு வாட்டி போய்ப் பார்த்து புளி, பருப்புக்குப் பணம் குடுத்துட்டு வருவேன். இது வழக்கம். நீ என்னை நம்பணும்!’*

*தொடர்பற்ற வாக்கியங்களில், அத்தனை பேர் முன்னிலையிலும் அண்ணா அவளுக்கு எதைப் புரிய வைக்க முயல்கிறான்?*

*மைதிலி அப்போதும் ஏதும் பேசவில்லை. அண்ணா ஒரு ஸ்திரீ லோலன் இல்லை; கல்யாணத்துக்கு முன்னும் சரி - பின்னும் சரி கண்ணியம் தவறி நடக்கிறவனில்லை என்பது மட்டும் எப்படியோ அவளுக்குப் புரிந்திருக்க வேண்டும்.*

*சம்மதமோ, நிராகரிப்போ தொனிக்காத மௌனத்தில் பிறகு இருவரும் பழகிப்போனார்கள்.*

*சடகோபனுக்குக் கல்யாணமாகி ஒன்றரை வருடத்தில் லட்சுமி பிறந்தாள். மைதிலி சகஜமாக வளையவந்து ‘என் செல்லம்’ என்று கொஞ்சவும் ஆரம்பித்தது அதற்கப்புறம்தான்.*

## *5*

*சமையல் உள்பட அருகே அம்மா உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு அடுத்தது, சின்னமன்னி வத்ஸலா. அப்புறம் சடகோபன். சீனாவும் சுந்தர்ராஜனும் அப்பாவுக்கு இரண்டு புறமும். ரங்கனும் மணியும் கடைசியில். லட்சுமி, மணிவண்ணன் மடியில் அமர்ந்திருந்தது. பெரியண்ணா, உள்ளே அப்பளம் பொறித்துக்கொண்டிருக்க, சிறு பிரம்புக் கூடையில் எடுத்துவந்து மைதிலி ஆளுக்கொன்றாகப் போட்டுக் கொண்டிருந்தாள்.*

*'பிரமாதம் மன்னி!' என்றான் வரதன். அவன் வந்து இரண்டு நாட்களாகிவிட்டன. அதிசயமாக இம்முறை மூன்று நாட்கள் தங்கியிருந்தான்.*

*முதல் நாளே அப்பா சொன்னார். 'ஒருவேளையாவது எல்லாரும் சேர்ந்து சாப்பிட்டு எவ்ளோ நாளாச்சுடா வரதா!'*

*அவன் கிளம்புகிற அன்று பெரியண்ணா 'இன்னிக்குக் கலந்த சாதம்' என்று அறிவித்தான். சடகோபன் பன்னிரண்டு மணிக்கே கடையைப் பூட்டிவிட்டு வந்துவிட்டான். சீனா லீவ் போட்டிருந்தான். அதிசயமாக ரங்கனும் மணியும் வீட்டிலிருக்க, பெரிய மன்னி பரபரவென்று புளிக்காய்ச்சல் கிளற ஆரம்பித்தாள்.*

*'எப்படிடா வாசு நீ பாஸ் பண்ணே?' என்று வரதன் கேட்டான்.*

*'படிச்சார்; பண்ணார்!' என்றாள் சின்ன மன்னி.*

*'என்னது? வாசு படிச்சானா! எப்போடா?'*

*'கிண்டல் பண்ணாதேங்கோ. முடிஞ்சா ஏதாவது காலேஜ்லே இடம் வாங்கிக் குடுக்கறது' என்றாள் மைதிலி.*

*'ஏண்டா, உங்க ஜீயர் ரெகமண்ட் பண்ணினா நேஷனல் காலேஜ்ல குடுக்கமாட்டாளா? அந்த பிரின்சிபால் ஐயங்கார்தானே?' என்று உள்ளிருந்து குரல் கொடுத்தான் பெரியண்ணா.*

*'விளையாடறியா? வேணும்னா, நாலாயிரம் சேவிக்கத் தெரிஞ்சா கோஷ்டில சேர்த்துவிடறேன். இவனுக்குத் திருப்பாவைகூட உருப்படியா வராதே?' என்றான் வரதன்.*

*'போரும் போ. நீங்க சேவாகாலம் சாதிக்கற லட்சணம் தெரியாதுன்னு நினைச்சுண்டிருக்கியா? கோஷ்டில குரல் கொடுக்கறவன்ல எத்தனை பேர் அடலம்படலம்னு ஜீவா புடிக்கறான்னு எனக்குத் தெரியும்!' என்றாள் அம்மா.*

*'நீ சொல்லுடா? திருச்சந்த விருத்தம் ஒரு தப்பில்லாம நீ சொல்லு பார்க்கலாம்?' என்றான் சடகோபன்.*

*வரதன், வாயில் புளியோதரையுடன் புறை ஏறச் சிரித்தான்.*

*'சின்னமன்னியோட அப்பா ட்ரை பண்ணியே முடியலைன்னா யாரால ஆகும்? பேசாம கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸ்ல படிக்கட்டும்' என்றான் சுந்தர்ராஜன்.*

*‘தோ பார் சுந்தரா! டிகிரி வாங்கினாத்தான் சம்பாதிக்க முடியும்னு இல்லை. நீங்கள்ளாம் எத்தனை பட்டம் வாங்கிக் கிழிச்சீங்க? நன்னாத்தானே இருக்கோம் எல்லாரும்? என் பாயிண்ட் என்னன்னா, ஆத்துல ஒருத்தன் காலேஜ் போயிருக்கான்னு இருக்கணும். இவன் அங்கபோயி கோட் அடிச்சாலும் சரி. ஆனா, போகணும் அவ்ளோதான்’ என்றார் அப்பா.*

*காலையிலேயே அவர் வரதனிடம் பேசிக்கொண்டிருந்ததை வாசு கவனித்தான். ‘சினிமாக்கு போகணும். பட்டுப் புடவை உடுத்திக்கணும். நகை போட்டுக்கணும். கார் வாங்கணும்னு ஆசைப்படறதில்லையா? எனக்கு ஆசை, என் பிள்ளைல ஒருத்தனாவது காலேஜ் போகணும். நிறைய செலவு பண்ணி நன்னா படிக்கவைக்காதது நம்ம குத்தம்தானேன்னு நினைச்சதுனாலதான் நீங்கள்ளாம் படிப்பு வரலைன்னு நின்னுட்டதைப் பொருட்படுத்தலை. தப்பித் தவறி இவன் பாஸ் பண்ணித் தொலைக்கவேதான் ஆசையா இருக்கு. யாருக்கானா லஞ்சம் குடுக்கணும்னாலும் சரி. காஞ்சீபுரம் நிலத்தை வித்துடுவோம். இல்லியா? நீங்க ஆளுக்கு அஞ்சாயிரம் எங்கேருந்தாவது பிரட்டிண்டு வாங்கோ. அவனை சேர்த்துடணும் ஆமாம்.’*

*தன்னைத் தவிர வீட்டில் அத்தனை பேருக்கும் இதே எண்ணம்தான் என்று வாசுவுக்குத் தோன்றியது. பாஸ் பண்ணமுடியும் என்கிற நம்பிக்கை துளி இருந்திருந்தால் சற்று வணங்கிப் படித்திருப்போமோ என்று நினைத்தான்.*

*ஆங்கிலத் தேர்வுக்கு முந்தைய தினம் பிற்பகல் அவன் ஆஞ்சநேயர் கோயிலுக்குப் பின்புறம் உள்ள மணல் வெளியில் வெகுநேரம் மல்லாக்கப் படுத்திருந்தான். புத்தகத்தைப் புரட்டலாம் என்று கூடத் தோன்றவில்லை. ஒரு சொட்டுப் பரபரப்புகூட இல்லாமல் தன்னால் எப்படி இருக்க முடிகிறது எனறு அவனுக்கே ஆச்சர்யமாக இருந்தது.*

*இருட்ட ஆரம்பித்த நேரம் விளக்கு, திரியுடன் வத்சலா கோயிலுக்கு வந்தாள்.*

*சேவித்துவிட்டுப் பிரதட்சிணம் வரும்போது, வானம் பார்த்துப் படுத்துக் கிடந்தவனைக் கண்டு திடுக்கிட்டாள்.*

*‘என்னது? இங்க சயனமாறதா?’ என்றாள் கொப்பளித்த சிரிப்புடன்.*

*‘இல்லே மன்னி. சும்மாதான் படுத்துண்டிருந்தேன்’ என்றான் வாசு.*

*‘எவ்ளோ நேரமா?’*

*‘ரெண்டு மணிலேர்ந்து’*

*அவள் வாசுவை வியப்புடன் பார்த்தாள்.*

*‘படிக்கலையா?’*

*‘கிழிச்சேன்!’ என்றான் அசுவாரசியமாக. ‘எப்படியும் பெயில்தான் மன்னி. நான் என்ன பண்ணட்டும் சொல்லுங்கோ. இந்த ஒரு வாரப் பரீட்சையால எத்தனை நஷ்டம்? பேசாம அண்ணாவோட வாலாஜாபாத் போயிருந்தாலாவது கூடமாட ஒத்தாசையா இருந்திருக்கலாம். பெரிய கல்யாணம். பாவம், ஆள் போறாம அவஸ்தைப்படுவான்.’*

*‘ஒண்ணும் இல்லே. அஞ்சுபேரும் கூட போயிருக்கா. நீ ஒருத்தன் போகாததால கல்யாணத்துக்கு வந்தவா யாரும் சாப்பிட மாட்டேன்னு அடம்பிடிக்கப்போறதில்லை.’*

*‘அது சரி’ என்றான் எழுந்துகொண்டபடி.*

*‘அம்மா நினைச்சுண்டிருக்கா, நீ இங்க வந்து படிச்சிண்டிருக்கறதா. இங்க என்னடான்னா, மணல் எண்ணியாறது.’*

*அவன் எழுந்து நின்று சோம்பல் முறித்தான். மேலட்டை கிழிந்து, காது மடங்கிய புத்தகம் தரையில் குப்புறக் கிடந்தது.*

*வத்சலா அதை எடுத்துத் தட்டி அவன் கையில் திணித்தாள்.*

*‘படிக்கறதா இருந்தாலும் மண் எண்றதா இருந்தாலும் ஆத்துக்கு வந்து பண்ணு. அப்பாவும் அம்மாவும் இளையாழ்வார் சந்நிதிக்கு கதை கேட்கப் போயிருக்கா. பெரிய மன்னிக்கு உடம்பு சரியில்லை. நான் டாக்டர் வீட்டுக்குக் கூட்டிண்டு போகணும். வர வரைக்கும் லச்சுமியைப் பார்த்துக்கோ.’*

*‘என்ன உடம்புக்கு?’ என்றான் வாசு.*

*‘உனக்கொண்ணுமில்லை. பொம்மனாட்டி உடம்பு’ என்றுவிட்டுத் திரும்பி நடக்க ஆரம்பித்தாள். வாசுவும் பின்னால் நடந்தான்.*

*

*வரதன் வாசலில் அமர்ந்திருந்தான். அப்பா அவனிடம் தீர்மானமாகச் சொல்லியிருந்தார். யாராவது ஏதாவது செய்தாக வேண்டும். வாசுவை இப்போது வேலைக்குப் போக அனுமதிப்பதில் அவருக்கு இஷ்டமில்லை. கரஸ்பாண்டன்ஸெல்லாம் அவனுக்குச் சரிப்படாது. தடியனுக்கு உடம்பு வணங்காது. சேருவதுதான் பெரிதாக இருக்கும். ஆனால், படிக்க மாட்டான்.*

*‘ரொம்பக் குறைச்சல் மார்க் தானேப்பா? எப்படி சீட் கிடைக்கும்?’ என்று வரதன் கேட்டான்.*

*‘நீ ட்ரை பண்ணேன். மெட்ராஸ்ல கஷ்டம்; சரி. திருச்சினாப்பள்ளி கிராமம் தானே? அங்க முடியாதா?’*

*‘கிராமமா!’ என்று சிரித்தான் வரதன். ‘சத்திரம் பஸ் ஸ்டாண்டிலேயோ, பாலக்கரை மெயின் ரோடுலேயோ ரெண்டு நிமிஷம் நின்னு பாரு. மெட்ராஸ் தேவலைன்னுடுவே.’*

*‘கொஞ்சம் தள்ளி தஞ்சாவூர்ல பாரு. காரைக்குடில பாரு. திருப்பதி காலேஜுல சேர்த்துவிடேன், ஜீயர்ட்ட சொல்லி? ஏதாவது பண்ணுடா. அவன் பெயிலாயிட்டு உட்கார்ந்திருந்தான்னா மனசு இப்படி அடிச்சுக்காது’ என்றார் அப்பா.*

*வரதன் வெகுநேரம் யோசித்துக்கொண்டிருந்தான். பிறகு அடிக்குரலில் சொன்னான்: ‘நம்மகிட்டே பணமிருந்தாலாவது ஒரு முயற்சி பண்ணிப் பார்க்கலாம்’*

*‘அதான் சொன்னேனே, நிலத்தை வேணா வித்துடலாம்னு.’*

*‘அதெல்லாம் சரிப்படாதுப்பா. ஒரு ஐஏஎஸ் படிப்புக்கு நிலத்தை விக்கறேன்னா சரி. பி.ஏ., ஹிஸ்டரிக்கு விக்கறேன்னா, கிறுக்கன் கூடச் சிரிப்பான்.’*

*‘என்னதான் பண்றது அப்ப?’*

*‘பார்க்கலாம்’ என்றான் வரதன்.*

*'சாயந்தரம் கேசவப் பெருமாள் கோயிலுக்குப் போயிட்டு அப்படியே ரயிலுக்குப் போயிடறேன். ஸ்டேஷன் வரைக்கும் கூட வரியா?' என்று வாசுவிடம் கேட்டான்.*

*அவன் தலையாட்டினான்.*

*பஸ் பிடித்து, மயிலாப்பூரில் இறங்கி கபாலி குளம் தாண்டும் வரை வரதன் ஒன்றும் பேசவில்லை.*

*கோயிலில் அவனுக்குத் தெரிந்த மனிதர்களிடம் பரிபாஷையில் உரக்க அளவளாவிவிட்டுத் திரும்பி வந்து எழும்பூர் செல்லும் பேருந்தில் ஏறி அமர்ந்ததும் கேட்டான்: 'என்னடா, அப்பா இப்படிப் பிடிவாதமா இருக்காறே? நீ என்ன நினைக்கறே?'*

*'நான் ஒண்ணும் நினைக்கலைடா. படிப்பெல்லாம் வருமான்னு தெரியலை. மூணு வருஷத்துக்குப் பணம் செலவழிக்க என்ன பண்ணுவா அப்பா? கொஞ்சநாள் காசு சேர்த்து ஒரு டைப்ரைட்டர் வாங்கி, ஜாப் டைப்பிங் பண்ணலாம்னு நினைக்கறேன். அதிர்ஷ்டமிருந்தா, ஒரு டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட் பின்னால ஆரம்பிக்கலாம். நல்ல வேளை, எப்படியோ டைப்ரைட்டிங் முடிச்சுட்டேன்' என்றான் வாசு.*

*'அதில்லைடா. நீ ஒருத்தனாவது டிகிரி முடிச்சா அப்பாவுக்கு ஒரு ஆத்மதிருப்தி. அதைச் சொல்ல வந்தேன்.'*

*'புரியாம இல்லை வரதா. இந்த மார்க்கை நாய்கூடச் சீண்டாது. ஆசைப்படறதுக்கு ஒரு தகுதி வேண்டாமா?'*

*வரதன் அவனை உற்றுப்பார்த்தான். அடக்கமுடியாமல் ஒரு புன்னகை பீறிட, 'எனக்கு இப்போ எப்படி இருக்கு தெரியுமா? நீ பாஸ் பண்ணினதையே நம்ப முடியலை. உன் பேப்பர் திருத்தினவன் குடும்பத்தோட நன்னா இருக்கணும்.'*

*'சீ, போடா' என்று தலையைத் திருப்பிக் கொண்டான் வாசு.*

*பேருந்து அண்ணா சாலையைக் கடந்து இடதுபுறம் திரும்பி பாலம் தாண்டி எழும்பூரை நெருங்கியது.*

*'இறங்கணும். முன்னாடி போயிடலாம் வா' என்றான் வரதன்.*

*அவர்கள் எழுந்து கொண்டார்கள். ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரே இறங்கியதும் 'சாப்பிட்டுடலாமா?' என்று வரதன் கேட்டான்.*

*எதிரே ஒரு ஓட்டலுக்குள் நுழைந்ததும், 'எனக்கு ஆனியன் ரவா, நீ?' என்று கேட்டான்.*

*'இரு, இரு. வரதன் ஓட்டல்ல ஆனியன் ரவா சாப்பிடறான்னு ஜீயருக்கு எழுதிப் போடறேன்!' என்றான் வாசு.*

*'நீ வேற, இப்ப நிறையப்பேர் ஆம்லெட்டே சாப்பிட ஆரம்பிச்சுட்டா. எதைத் தின்னா என்ன? மேலுக்கு ஒரு வெத்தலை சீவல் போட்டுண்டுட்டா, மல்லாண்டதிண்தோள் மணிவண்ணனுக்கேகூட வாசனை தெரியாது!' என்று கண்ணடித்தான்.*

*'அடப் பாவி!' என்றான் வாசு.*

*‘இப்ப ஒரு பிராமணன் கிடையாது தேசத்துல, தெரியுமா? எவன் வேளைக்கு சந்தியா வந்தனம் பண்றான்? நீ பண்ணறியா? அப்பா பண்றாளா? நான் பண்ணறேன், வேற வழியில்லை. பூணலைப் போட்டுக்கறவனைவிட பொட்டிக்கடைல போட்டு வெக்கறவன்தான் ஜாஸ்தி. எங்க கோஷ்டில வெங்கட வரதன்னு ஒருத்தன் இருந்தான். திருக்காட்டுப் பள்ளிக்காரன். காலம்பர குளிச்சிட்டு வஸ்திரம் உடுத்திக்கும்போது பூணுலைப் போட்டுப்பான். ராத்திரியானா க்ளீனா கழட்டி வெச்சிடுவான்...’*

*‘எதுக்கு?’*

*‘மனச்சாட்சி உறுத்தறதாம். அப்படீ திருவெறும்பூர் வரைக்கும் போய் ஸார் ஜோரா சுதி ஏத்திண்டுடுவார், அடிக்கடி. ரங்கால நைட் ஷோ. கீதாஞ்சலில ஸ்பெஷல் சாப்பாடு. நடு ராத்திரி வந்து விழுந்தான்னா, காலம்பற எழுந்ததும் ஆளே மாறிடுவான். அவன் மடல் சேவிச்சுக் கேக்கணும் நீ. ஸ்பஷ்டம்னா அப்படியொரு ஸ்பஷ்டம். பெருமாளே எழுந்து வந்து கையைக் கட்டிண்டு உட்கார்ந்துடப் போறாரோன்னு பார்க்கத் தோணும். வைதீகத்துக்கு வைதீகம். லௌகீகத்துக்கு லௌகீகம்.’*

*‘உங்க சமஸ்தானம் வரைக்கும் இது பரவிடுத்தா?’ என்றான் வாசு.*

*‘அப்படீன்னா?’*

*‘இங்க திருவல்லிக்கேணி கோஷ்டி ஒண்ணு இருக்கு இது மாதிரி. எல்லாரும் ஆபீஸ் போறவாதான். கல்யாணம் ஆனதும் ஆகாததுமா ஒரு பத்து பேர் இருப்பா. அந்த செட்டுல சீதாராமன்னு என் ஃப்ரெண்டு ஒருத்தனும் உண்டு. வைகாசி உற்சவத்துக்கு நான் போயிருந்தேன்... இவா, என்ன ஜபர்தஸ்துங்கறே? பெருமாள் ஏளப் பண்றா பாரு, அப்படியொரு சிரத்தை. தூக்கிண்டு ஒய்யாளி போடறா. ஜிங்குஜிங்குன்னு... சிலிர்த்துடுத்து எனக்கு. எல்லாம் முடிஞ்சி ராத்திரி பதினோரு மணிக்கு அவவன் பாட்டிலும் கையுமா உட்கார்ந்து வீதில அரட்டைக் கச்சேரி நடத்தறாபாரு, அப்படியொரு பேச்சு. கிரிக்கெட்டு, சிலுக்கு சுமிதா, கமலஹாசன், உடையவர், பட்டாச்சாரியார் சம்சாரம்னு - இன்னதுதான் பேசறதுன்னே இல்லை. நடுல ஒருத்தன் போதை தலைக்கேறி, ‘விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே’ன்னு சுத்த தன்யாசில இழுக்கறான் பாரு ....’*

*கண்களில் நீர் வருமளவுக்குச் சிரித்தான் வரதன்.*

*‘நல்ல ஆப்ஸர்வேஷன்டா வாசு உனக்கு’ என்றான் தண்ணீர் அருந்தியபடி.*

*பில்லுக்குப் பணம் கொடுத்துவிட்டு, எழுந்து வெளியேறி ஸ்டேஷனை அடைந்தார்கள். மலைக்கோட்டை எக்ஸ்பிரஸில் அன்ரிஸர்வ்டு பெட்டிக்கொரு டிக்கெட் வாங்கிக்கொண்டான் வரதன். பிளாட்பார டிக்கெட் ஒன்றும் வாங்கி வாசுவின் கையில் திணித்துவிட்டு, முன்னால் நடந்தான்.*

*ரயில் வந்ததும் பாய்ந்து ஏறி ஜன்னலோரம் அமர்ந்து கொள்ளும்வரை அவன் ஏதும் பேசவில்லை. பக்கத்து இருக்கைக் குழந்தை, அவன் குடுமியையும் கடுக்கனையும் ஆச்சர்யமாகத் தொட்டுப் பார்த்தது.*

*‘ட்ரூரூ’ என்று அதற்குச் சில விநாடிகள் விளையாட்டுக் காட்டிவிட்டு, ‘எனக்கொண்ணு தோணறதுடா வாசு’ என்றான் மிகத் தீவிர பாவத்துடன்.*

*‘என்னது?’ என்றான் வாசு.*

*‘ஒண்ணுமில்லை. நாலு நாள்லே நான் திரும்பி வரேன். ஒரு ஆட்டம் ஆடிப் பார்த்துடுவோம்’ என்றான் கண்களைச் சிமிட்டியபடி.*

*‘நீ எதைப்பத்திப் பேசறேன்னே புரியல போ’ என்றான் வாசு.*

*‘உன்னை ஒரு காலேஜ்ல பிடிச்சித் தள்ளிடறது சம்பந்தமாத்தான்’*

*அவன் அசுவாரஸ்யமாகச் சூள் கொட்டினான்.*

*‘நிஜமாத்தான் சொல்றேன். உனக்கு இஷ்டமில்லாவிட்டாலும் அப்பாவுக்காகவாவது படிக்கணும். பணமும் செலவு பண்ணமுடியாது. இடமும் கிடைக்கணும். படிக்கிற படிப்பு கொஞ்சமானா உபயோகமாகணும். வரலாறு, புவியியல் படிக்கறதைவிட நீ வெண்டைக்காய் திருத்திண்டி இருக்கலாம்.’*

*‘அதுக்காக?’*

*‘குறைஞ்சது ஒரு பி.காம். இல்லாட்ட பி.ஏ. கார்ப்பரேட்’*

*‘நாமளே ஒரு காலேஜ் ஆரமிச்சுடலாங்கறியா?’ என்று வாசு கேட்டான்.*

*‘அது கஷ்டம். ஆனா, ஒருத்தர் இருக்கார், தனியார் காலேஜ் நடத்தறவர், நாடார். எங்க கோஷ்டில ஒருத்தருக்கு ரொம்ப வேண்டியவர். குளித்தலைல இருக்கு அவர் காலேஜ்.’*

*‘நீயும் புரியாம பேசறியே வரதா? யாரா இருந்தாலும் மார்க் வேணுமில்லையா? எஃப்.சி. பையன் அம்பது பர்ஸென்ட்*

*கூட இல்லைன்னா எவன் சீட் தருவான்? பத்தாயிரம், இருபதாயிரம் டொனேஷன் தர நமக்கேது சக்தி?’*

*‘நான் ஒண்ணு சொல்றேன் - இப்ப இல்லை; ஆத்துக்குப் போய் தீவிரமா யோசி. யார் கிட்டேயும் மூச்சு விடாதே’*

*‘என்னது?’*

*‘சர்டிபிகேட் அளவுல பேசாம நீ நாடாரா மாறிடு. சீட் கிடைச்சுடும்’*

*ரயில் புறப்பட்டுவிட்டது. ‘நாலு நாள்ல வரேன். சைலண்டா யோசி’ என்று மறுபடியும் காதோடு சொன்னான் வரதன்.*

*வெகுநேரம் கயநினைவற்று நின்றுகொண்டிருந்தான் வாசு.*

# *6*

*காற்றில் ஈரம் கலந்திருந்தது. மோதும் வேகத்தில் தோலைத் துளைத்து, நேரே எலும்புகளுடன்தான் சம்பந்தம் என்பதுபோல வெடவெடக்கச் செய்துகொண்டிருந்தது. ஆயினும் பேருந்தின் கண்ணாடிகளை இறக்கிவிட வாசு விரும்பவில்லை. எட்டு மணிக்கு நகரியில் டிபன் என்று ரங்கன் டிரைவரிடம் சொல்லியிருந்தான். நெரிசலற்ற சாலையில் திருப்பதியை நோக்கி விரைந்து கொண்டிருந்தது பஸ்.*

*அறுபது இருக்கைகள் உள்ள வண்டியில் ஏனோ நாற்பதுகூட நிரம்பியிருக்கவில்லை. ரங்கன் சொன்னான்: 'இந்த வருஷம் ரிஸல்ட் ரொம்ப மோசம்னு நினைக்கிறேன்.'*

*ஆண்டுதோறும் பிளஸ் டூ ரிஸல்ட் வந்த இருபது நாட்களுக்குத் திருப்பதிக்கு சிறப்பு சர்வீஸ் நடத்தும், அவனது சுற்றுலா நிறுவனம். தினசரி இரண்டு பேருந்துகள். ஒருநாள் பயணம். உடனடி தரிசனம்.*

*அந்தச் சமயத்தில் மட்டும் ரங்கனை ரூட் மாற்றிப் போட்டுவிடுவார் முதலாளி. தேவஸ்தான ஊழியர்களிடம் அவன் செல்வாக்கு அப்படிப்பட்டது. ஒரு மாயவித்தைபோல, திருமலையில் எத்தனை கூட்டம் இருந்தாலும் அவனது குழு எதற்குமே காத்திருக்கவேண்டி இருக்காது. வெங்கடாஜலபதியுடனும் அவரது ஊழியர்களுடனும் அவனது சிநேகம் அப்படிப்பட்டது.*

*வாசுவுக்குத் திடீரென்று தானும்போய் வரலாம் போலத் தோன்ற, ரங்கனிடம் சொன்னான்: 'கூட்டமில்லாத நாளா சொல்லு'*

*முதல் நாள் இரவு பதினொன்றரைக்குத்தான் ரங்கன் வீடு வந்தான். அந்நேரம் வரை மைதிலி மன்னி விழித்திருந்து அவனுக்குச் சாதம் போட்டுக்கொண்டே கேட்டாள் : 'காலம்பற எத்தனை மணிக்கு எழுப்பணும்?'*

*'தூங்கவே வேண்டாம்னு பார்க்கறேன் மன்னி. திருப்பதி ரூட்டுன்னு நினைச்சாலே, பிராணன் போயிடும் போல இருக்கு. கார்த்தால ஆறு மணிக்கு ட்ரிப்' என்று ரங்கன் சொன்னான்.*

*'உடம்பு என்னத்துக்கு ஆறது?' என்று மன்னி கேட்டாள்.*

*அவன் பதில் சொல்லவில்லை. விளையாட்டுப் போல ஆரம்பித்த வேலை அது. மெல்ல, மெல்ல அட்டைப்பூச்சியாக அவனை உறிஞ்சிக் கொண்டுவிட்டது.*

*'வாசு எப்பவோ கேட்டான் மன்னி. நாளைக்குக் கூட்டமே இல்லை. அவனையும் எழுப்பி விட்டுடுங்கோ. கூட அழைச்சுண்டு போறேன்.'*

*'என்னை ஒருநாள் அழைச்சுண்டு போகக் கூடாதா?' என்று மன்னி கேட்டாள்.*

*ரங்கன் சிரித்தான்.*

*'தாராளமா போகலாம். முதலாளிகிட்டே சொன்னா, கார்லே கூட்டிண்டு போயிட்டு வாம்பார்.'*

*'காரெல்லாம் வேண்டாம். கூட்டத்தோட கூட்டமா போகணும். ஆனா ஃப்ரீயாகவும் போகணும். செலவில்லாம ஆகும்னா சரி.'*

*‘வெங்கடாஜலபதி, உலகத்துலேயே காஸ்ட்லியான கடவுள். அவரை ஃப்ரியா சேவிக்கணுமா?’*

*‘முடியாதான்ன? இத்தனை வருஷமா உங்க முதலாளிக்கு மாடா உழைக்கறியே?’*

*‘அது சரி’ என்றான் ரங்கன். ‘வாசு விஷயம் வேற மன்னி. முன்னால நின்னுண்டே கூட வந்துடுவான் அவன். க்ளீனருக்கு பதிலா கூட்டிண்டு போறதா முதலாளிகிட்டேயே சொல்லிடுவேன். தனியா சம்பளம் குடுக்காம ஒருத்தன் ஊழியம் பார்க்க வரேன்னா அவருக்குக் கசக்குமா?’*

*‘நான் சும்மாதான் கேட்டேன்’ என்றபடி பாத்திரங்களை ஒழித்துப் போட்டுவிட்டுப் படுக்கப்போனாள் மைதிலி.*

*அதிகாலை நாலரைக்கெல்லாம் வாசுவை எழுப்பி, காப்பி கொடுத்து, விஷயத்தைச் சொல்லிவிட்டு, ‘வெந்நீர் போட்டுட்டேன்’ என்றாள்.*

*கண்கள் எரிய, அவன் ரங்கனுடன் பார்க் ஸ்டேஷன் வந்து இறங்கும்போது மணி ஆறாகி விட்டது.*

*பஸ் புறப்படத் தயாராக இருந்தது. நாற்பத்தைந்து பேர் மட்டுந்தான். ரங்கன் அவனைக் கடைசி வரிசைக்குப் போய்விடச் சொன்னான். ‘படுத்துண்டு வேணுமானா தூங்கு’*

*ஆனால் பெரும்பாலும் காலைக் காற்று தூங்க விடுவதில்லை.*

*நகரியில் டிபன் முடித்துவிட்டுக் கிளம்பிய பிறகு ரங்கன், வாசுவிடம் வந்து அமர்ந்தான். ‘நேத்து வரதன் போன் பண்ணினாண்டா’ என்று சொன்னான்.*

*‘எப்போ?’*

*‘ராத்திரி எங்க ஆபீசுக்கு’*

*‘என்ன சொன்னான்?’*

*‘ஸ்டேஷன்ல உன்கிட்டே சொன்னானாமே, அதைத்தான்’*

*வாசு சிரித்தான். ‘நடக்கறமாதிரி ஏதாவது சொல்ல மாட்டான். பாரு, யார் கிட்டேயும் சொல்லாதேன்னு என் வாயைக் கட்டிப் போட்டுட்டு அவனே உனக்கு போன் பண்ணியிருக்கான்.’*

*‘காரணமில்லாம பண்ணலை. என் ஃப்ரெண்டு ஒருத்தன் தாசில்தார் ஆபீஸ்லே வேலை பார்க்கறது சட்டுனு அவனுக்கு ஞாபகம் வந்திருக்கு.’*

*‘நமக்கு இதெல்லாம் சரிப்படுமா ரங்கா? வம்மை விலைகொடுத்து வாங்கற யோசனை இது. இப்ப காலேஜுக்குப் போகலைன்னு நான் அழுதேனா?’*

*‘எதுக்கு அழணும்? அவவன் என்னென்னவோ ஃப்ராடு பண்றான். இது சாதாரணம். எத்தனையோ பேர் தினசரி பண்றது தான்.’*

*‘அப்பாக்குத் தெரிஞ்சா உசிரை விட்டுடுவார்.’*

*'யாருக்கும் தெரியவேணாம். சைலன்டா முடிக்கலாம்.'*

*'ரொம்ப ரிஸ்க்டா. தவிர, நீங்கள்ளாம் இப்படி மெனக்கெடற*

*தைப் பார்த்தா, விட்டுட்டு ஓடிடிலாமான்னு இருக்கு'*

*'மடையன் மாதிரி பேசாதே. பெரியண்ணா சொல்லிண்டி*

*ருந்தான். இன்னும் அஞ்சு வருஷத்துல நாம அத்தனை பேரும் சேர்ந்து பண்றாப்பல ஒரு பிசினஸ் ஆரம்பிக்கணும்னு. நம் வழியை நாம பார்த்துண்டாத்தான் உண்டு.'*

*'என்ன பிசினஸ்?'*

*'ஏதோ ஒண்ணு. அண்ணாக்கு ஒரு ஓட்டல் ஆரம்பிக்கணும்னு பிளான். போனவாரம் வரதன் வந்தப்பக் கூடப் பேசிண்டிருந்தான். ஸ்ரீரங்கத்துல ஆரம்பிக்கலாம்; இடம் பிடிச்சித் தரேன்னான் வரதன். அங்க வர டூரிஸ்டுகளுக்கு ரெண்டு, மூணு ஓட்டல்தான் இருக்காம். அதுவும் பாழடைஞ்ச வீட்டுக்குள்ள நடக்கற ஓட்டல்'*

*'ஓட்டல் நல்ல யோசனைதான். அதுக்கு நான் ஏன் காலேஜ் போகணும்?'*

*'முட்டாள் மாதிரி பேசாதே வாசு. ஒருத்தனானா நல்லா படிச்சிருந்தா பின்னால தொழிலை விஸ்தரிச்சா சௌகர்யமா இருக்கும். சின்னமன்னி சடகோபன்கிட்டே சொன்னாளாம், கடையை வித்துட்டு ஏதாவது தனியார் காலேஜ்ல கேபிடேஷன் ஃபீஸ் கட்டியானா சேர்க்கப் பாருங்கோன்னு. ஒரு வருஷம் பெரியண்ணாவோட தளிகைக்குப் போயிட்டு, பின்னால மறுபடியும் வேற கடை ஆரம்பிச்சுண்டா போறதுன்னாளாம்.'*

*வாசு அதிர்ந்துவிட்டான். அடக்க முடியாமல் அவன் கண்களைத் துடைத்துக் கொள்ள, 'சீ, ஏண்டா அழறே?' என்றான் ரங்கன்.*

*எத்தனை உயிர்கள் தன்னொருவனைக் களமாகக் கொண்டு கனவைப் பயிரிடுகின்றன என்று அவன் எண்ணிப் பார்த்தான்.*

*'அத்தனை ஒஸ்தியாடா நான்?' என்று கேட்டான் நம்ப*

*முடியாமல்.*

*ரங்கன் அவனைக் குறும்புடன் முறைத்தான். 'ரொம்ப எமோஷனாகாதே. திருட்டு தம் அடிக்கிறியா?' என்று கேட்டான்.*

*'பாவி! நீ அடிப்பியா?'*

*'மூச்சு விடாதே யார்கிட்டேயும்!' என்று விட்டு, சன்னலோரம் அமர்ந்து ஒன்றைப் பற்ற வைத்தான். 'நாள் முழுக்க சுத்திண்டே இருக்கறதுக்கு இது ஒண்ணுதான் வழித்துணை விநாயகர்' என்று கண்ணடித்தான். 'ஒரு இழுப்பு இழுக்கறியா?'*

*வாசுவுக்கும் ஆர்வமாக இருந்தது. வீட்டில் மற்ற எல்லோரை விடவும் ரங்கன் நெருக்கம்தான். இன்று நெருக்கத்தில் வேறொரு பரிமாணம் தென்பட்டாற் போலிருந்தது. அவனிடமிருந்து வாங்கி, உதறியபடியே இழுத்தான். கண்கள் தளும்பி நின்றன. 'சூப்பரா இருக்குடா' என்று*

*சொன்னான்.*

*'லிமிட்டா இருந்தா தப்பில்லை; யாரும் கண்டுபிடிக்கவும் மாட்டா. பெரியண்ணா அடிப்பான். உங்க யாருக்காவது தெரியுமா? மன்னிக்குத் தெரிஞ்சிருக்கும்.'*

*'நிஜமாவா!' என்றான் வாசு.*

*'பாம்பின்கால் பாம்பறியும். இதைப்போய் கேட்டுத் தொலைக்காதே' என்று எச்சரித்தான்.*

*பத்து மணிக்குப் பேருந்து திருமலையை அடைந்ததும் ரங்கன் ஆளே மாறிப்போனான். வண்டியிலேயே பேன்ட்டைக் கழற்றிவிட்டு வேஷ்டிக்கு மாறி, முகம் கழுவி ஸ்ரீசூர்ணம் இட்டுக் கொண்டான். சட்டையையும் கழற்றிவிட்டு நேரே ஜீயர் மடத்துக்குப் போனான்.*

*திரும்பி வரும்போது அத்தனை பேருக்குமான சிறப்பு தரிசன டிக்கெட்டுகள் அவனிடமிருந்தன. ஒன்றரை மணி நேரத்தில் சேவை முடித்து, வெளியே அழைத்துக்கொண்டு வந்துவிட்டான். பஸ்ஸில் ஏறிய பக்தர்கள் இன்ப அதிர்ச்சி அடையும் விதமாக, அத்தனை பேர் இருக்கையிலும் இரண்டு லட்டுகள் இருந்தன.*

*'இந்தா, ஒரு முழு லட்டு சாப்பிடு' என்று வாசுவிடம் ஒன்றை நீட்டினான்.*

*மங்காபுரம், கோவிந்தராஜர் கோயில், சீனிவாசர் கோயில் என்று சுற்றுவட்டார ஸ்தலங்களை முடித்துக்கொண்டு கிளம்ப, மாலையாகிவிட்டது.*

*களைப்பில் அத்தனைபேரும் தூங்கத் தொடங்கியதும் ரங்கன் மீண்டும் அவனருகே வந்தான்.*

*'நாளைக்கு அடுத்த, மறுநாள் நான் லீவ் போடறேன். சர்டிபிகேட்டெல்லாம் எடுத்துண்டு பேசாம வா, என்கூட. முடியறதா பார்ப்போம். அஞ்சு பத்து செலவானா பரவால்லைன்னான் வரதன். ஆனா ஒண்ணு. சாகிற வரைக்கும் மூச்சு விடாதே வேற யார் கிட்டேயும்.'*

*வாசு கண்களை மூடிக்கொண்டு உறங்க ஆரம்பித்தான். சிறியதொரு கனவில் அவன் பி.காம் முடித்துவிட்டதாகத் தென்பட்டது.*

*வீடு திரும்பப் பதினோரு மணியாகிவிட்டது. மைதிலியும் வத்ஸலாவும் விழித்திருந்து சாதம் போட்டார்கள். அவனுக்குக் கஷ்டமாக இருந்தது. இனம்புரியா குற்ற உணர்ச்சி இனி தொடர்ந்துகொண்டே இருக்கும் என்பதாகப்பட்டது.*

## 7

*அதிசயமாக, இஸ்திரி போடப்பட்ட முழுக்கைச் சட்டை அணிந்திருந்தான் பெரியண்ணா. மைதிலிக்கு மிகப்பல நாட்களுக்குப் பிறகு வெளியே போகிற அனுபவம் முகத்தில் ஒரு ஒளி சேர்த்திருந்தது.*

*'இன்னிக்கு லச்சுமியும் மைதிலியும் ஒரே மாதிரி தெரியறதுகள்' என்று அம்மா சொன்னாள்.*

*அப்பா, வரதனைப் பார்த்தார். எப்போதும் லொடலொடவென்று ஏதாவது பேசிக்கொண்டிருப்பவன், திடீரென்று மாறிவிட்டாற் போலிருந்தது. அவரைப் போலவேதான் எல்லாருக்கும் தோன்றியிருக்க வேண்டும்.*

*'பயம்மா இருக்கு போலிருக்கு' என்று வத்சலா கிண்டல் செய்தாள்.*

*'பயமென்ன? ஒரு பணிவு வந்திருக்கும்' என்றான் சடகோபன்.*

*'மன்னிகிட்டே உனக்கு வந்தா மாதிரிதானே?' என்றான் வரதன்.*

*'வரதனுக்குத் தலைவாரி முடிஞ்சுவிட ஒரு ஆள் வந்துடும் இனிமே. ம்யூச்சுவல் அக்ரிமென்ட் போட்டுண்டுடுங்கோடா. கார்த்தால உனக்கு அது தலை வாரி விடணும். சாயந்திரம் நீ அவளுக்கு' என்றான் பெரியண்ணா.*

*லட்சுமி தன் தலையிலிருந்து ஒரு பூவைக் கிள்ளி வரதனின் குடுமியில் ரகசியமாகச் சொருக, குப்பென்று சிரித்தாள் அம்மா.*

*'தேறிடுத்து!' என்று அதன் கன்னத்தைக் கிள்ளினாள் மைதிலி.*

*பேருந்து மதுராந்தகத்தில் நின்றதும் இறங்கி ஆட்டோ பேசினான் சடகோபன். முகவரியைச் சொல்லி, இரண்டு ஆட்டோக்களில் பெண்வீட்டுக்குப் போய் இறங்கினார்கள்.*

*நான்கு மணி வெயில் வேளையில் தண்ணீர் தெளித்துப் போடப்பட்டிருந்த மயில் கோலம் அழகாக இருந்தது.*

*முன்புறம் ஓலை சரிந்த ஓட்டு வீடு. இருபுறமும் திண்ணை வைத்து, சிமெண்டு மெழுகியிருந்தது. கதவருகே இருந்த செம்பருத்திச் செடியில் ஒரு பூ பெரிதாக ஆடிக் கொண்டிருந்தது.*

*தலை தென்பட்டதும், உள்ளிருந்து விரைந்து வந்த மனிதர், 'வாங்கோ' என்று கை கூப்பினார். அகலத் திருமண்ணும் சட்டை போடாத ஒடுங்கிய மேனியும் கச்சத்தில் சொருகிய கட்டம் போட்ட கர்ச்சீப்புமாகப் பார்க்க அறுபது வயதுக்கு மேல் தெரிந்தார்.*

*கூடத்தில் ஊஞ்சல் இருந்தது. பழுப்பேறிய புகைப்படங்களும் பெண்கள் பத்திரிகைகளும் ஒரு கறுப்பு வெள்ளை டீவியும் அங்கிருந்தன.*

*அவர் மனைவி வெளியே வந்து 'வாங்கோ' என்று ஒருதரம் சொல்லிவிட்டுச் சில விநாடிகள் என்ன பேசுவது என்று தெரியாமல் நின்று, 'தோ வரேன்' என்று மறுபடியும் உள்ளே*

*மறைந்துவிட்டாள்.*

*‘பெரியார்ல வந்தேளா?’ என்று அந்த மனிதர் அப்பாவிடம் கேட்டார்.*

*‘கூட்டமா இருந்திருக்குமே?’ என்றும் சொன்னார்.*

*அப்பா, அனைவரையும் அறிமுகப்படுத்த ஆரம்பிக்கவும் மைதிலி எழுந்து சுவாதீனமாக அவர்கள் வீட்டின் உள்ளே போனாள்.*

*‘அவளுக்குத்தான் ஃபர்ஸ்டு பாத்துடணும்’ என்று அண்ணா சொன்னான். வரதன் சுவரில் தொங்கிக்கொண்டிருந்த புகைப்படங்களை ஓர் ஆராய்ச்சியாளன் போல் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.*

*‘ஒரே பொண்ணு, தஞ்சாவூர்ல இருக்கா. ரெண்டு குழந்தைகள் அதுக்கு. மாப்பிள்ளை அங்கே பாத்திரக்கடை வெச்சிருக்கார். எல்லாம் செட்டில் ஆயிடுத்துகள். வரிசையா இனி கல்யாணம் பண்ண வேண்டியதுதான் பாக்கி. கடைசி பையன் மட்டும் குளித்தலை காலேஜுல பி.காம் வாசிச்சுண்டிருக்கான். வாசுதேவன்னு பேர். மெஸ்ஸுல சாப்பிட்டுண்டு, ரூம்ல தங்கிண்டு எப்படியோ ஒரு வருஷம் ஓட்டிடுத்து. இன்னும் ரெண்டு வருஷம் பாக்கி...’*

*அப்பாவுக்குக் காது கொடுத்துக்கொண்டிருந்தாலும் அந்த மனிதரின் பார்வை வரதன் மேலேயே படந்திருந்ததை வத்சலா கவனித்தாள். அவன் காதோடு, ‘பொண்ணு இவர் ஆத்துக்காரி ஜாடைன்னா நான் சம்மதிக்கமாட்டேன்’ என்றாள். வரதன் தலையைத் திருப்பிக் கொண்டு சிரிப்பதை அப்பா கவனித்தார்.*

*மைதிலி வந்து உட்கார்ந்தாள். அவள் முகத்தில் தென்பட்ட திருப்தியின் அறிகுறி அம்மாவுக்கு நிம்மதியாக இருந்தது.*

*மயில் கழுத்து நீலத்தில் புள்ளி வைத்த புடைவையில் சட்டென்று அந்தப் பெண் வெளியே வந்தது. உடன் வந்த தாவணி, தங்கையாயிருக்கும் என்று வரதன் நினைத்தான்.*

*படிய வாரி அழுந்தப் பின்னிய தலையும் பூச்சுகளற்ற முகத்தில் பிரகாசித்த பொட்டும் மிக எளிய ஆபரணங்களுமாக அவனுக்கு வைதேகியைப் பார்த்ததும் திருப்தி ஏற்பட்டது.*

*‘உம்ம பொண்ணைக் கொஞ்சம் நிமிர்ந்து பார்க்கச் சொல்லுங்கோ. அப்புறம் குடுமி வெச்ச மாப்பிள்ளைன்னு தெரியாம போச்சேன்னு சொல்லப் போறா’ என்றான் பெரியண்ணா.*

*அவள் வரதனை நிமிர்ந்து பார்த்தாள். குடுமிதான் ஓர் ஆணுக்கு எத்தனை கம்பீரம் தந்து விடுகிறது என்று அவளுக்குத் தோன்றியது. நீண்ட நாசியும் விசாலமான நெற்றியும் கல்லணை மாதிரி இருந்த தோள்களும் அவள் மனத்தில் நிழல்படமாகப் படிந்தன.*

*‘குடுமி பரவாயில்லையா?’ என்று அண்ணா மறுபடியும் சிரித்துக் கொண்டே கேட்டான். ‘ஏன், எங்கப்பாவும் அண்ணாவும் கூடத்தான் வெச்சுண்டிருக்கா’ என்றாள் வைதேகி.*

*‘அப்படிப் போடு!’ என்று குஷியாகிவிட்டார் அப்பா.*

*‘எல்லாருந்தான் எல்லாத்தையும் விட்டாச்சு. ஒருத்தர் ரெண்டு பேராவது ஞாபகச் சின்னமா வெச்சிண்டிருக்கட்டுமே?’ என்றார், தொடர்ந்து.*

*‘மெரீனால இன்னும் நிறைய சிலைக்கு இடம் இருக்கு’ என்றான் சடகோபன்.*

*‘அப்படிச் சொல்லிடறதா? அவாவா ப்ரொஃபஷனுக்கு ஏத்த மாதிரி ட்ரெஸ் பண்ணிக்கறா. எங்க ப்ரொஃபஷனுக்கு இதான் ட்ரெஸ். என்ன சார் சொல்றேள்?’ என்று அந்த மனிதர், வரதனைப் பார்த்துக் கேட்டார்.*

*‘ப்ரொஃபஷனா!’ என்று ஒரு கணம் திகைத்தவன், ‘சரி சரி, அப்படித்தானே ஆயிடுத்து!’ என்றான் அவரை நேராகப் பார்ப்பதைத் தவிர்த்து.*

*வைதேகி இன்னும் நின்றுகொண்டிருந்தாள். ‘உட்காரேம்மா?’ என்றாள் அம்மா.*

*‘தளிகை நன்னா பண்ணுவோ. தையல் தெரியும்’ என்று தொடங்கி வைதேகியின் அம்மா பட்டியலிட ஆரம்பித்தாள்.*

*வாசலில் செருப்பு அவிழ்க்கும் சப்தம் கேட்டது.*

*‘வந்துட்டானே, இவன்தான் என் சன். இங்க ராமர் கோவில்ல தான் இருக்கான்’ என்றார்.*

*முரளி, பொதுவாகக் கை கூப்பிவிட்டு, வரதனிடம் சில விநாடிகள் பார்வையை நிறுத்தினான். ஞாபகத்தில் திடீரென்று தட்டுப்பட்டவனாக, ‘போன வருஷம் சம்ப்ரோஷணத்துக்கு வந்திருந்தேளில்லையா?’ என்று கேட்டான்.*

*‘ஆமாமாமா!’ என்றான் வரதன்.*

*‘உங்க மூஞ்சி எனக்கு மறக்கலை. ஜீயர் கூடவே இருந்தேள், இல்லியா?’*

*வரதன் புன்னகை செய்தான்.*

*‘ரொம்ப சந்தோஷம் எனக்கு. வைதேகியைப் பிடிச்சிருக்கா?’ என்றான் பட்டென்று.*

*அவன் அப்பாவுக்குச் சற்று திடுக்கிட்டாலும் இதுதான் சரியான அணுகுமுறை என்று பட்டது. பெண்ணைப் பார்த்துவிட்ட பிறகு கடத்துகிற நிமிஷங்கள் ஒவ்வொன்றிலும் அணுவளவேனும் பயன் இருப்பதில்லை.*

*‘மொதல்ல அவ சொல்லட்டும். வரதன் ஓகே வா?’ என்றாள் அம்மா.*

*அம்மாவுக்கு எப்போதும் சில பயங்கள் உண்டு; அவை தீரவே தீராது என்று வரதன் நினைத்தான்.*

*வைதேகி என்ன சொல்வதென்று புரியாமல் சற்றுத் திகைத்தாள். ‘எனக்குப் பரம சந்தோஷம்’ என்று அவள் அப்பா சமிக்ஞை தரவே, மையமாகத் தலையாட்டினாள்.*

*‘வரதா, உனக்கு?’ என்றான் சடகோபன்.*

*‘போய் விஷயத்தைச் சொன்னா, கோஷ்டிக்காராளெல்லாம் போட்டோ இருக்கான்னு கேட்பா. இருக்கா?’ என்றான் வரதன்.*

*வைதேகி உள்ளே சென்றுவிட்டாள்.*

*பஸ் பிடித்து சைதாப்பேட்டை வந்துசேர இரவு ஒன்பதாகிவிட்டது.*

பூட்டைத் திறக்கும்போது தபால்காரன் சொருகிப்போயிருந்த இன்லண்டு லெட்டர் கீழே விழுந்தது.

வாசுதான் எழுதியிருந்தான். இந்த வருஷம் கல்லூரி யூனியன் தேர்தலில் நிற்கலாமா என்று யோசித்துக்கொண்டிருக்கிறானாம்.

# *8*

*ஜன்னல்கள் திறந்திருந்தன. கதவு திறந்திருந்தது. கொடியில் தொங்கிய துணிகள், மின்விசிறிக் காற்றுக்கு ஆடிக்கொண்டிருந்தன. மேசையில் பிரித்திருந்த புத்தகங்கள் தமக்குத்தாமே படித்துக் கொண்டிருந்தன. மழை மூட்டம் அசாதாரணமான இருளாகக் கவிந்து வானை மறைக்க, சைக்கிளை எடுத்து உள்ளே நிறுத்தி ஸ்டாண்ட் போட்டான் வாசு.*

*பொதுவாக ஞாயிற்றுக்கிழமைகளில் அவன் அறையில் இருப்பதில்லை. பஸ் பிடித்து ஸ்ரீரங்கத்துக்குப் போவான். வரதனுடன் கோயிலுக்குப் போய்விட்டு, கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு, ராகவேந்திரர் மடத்துத் தோப்பில் ஒரு மணி நேரம் உட்கார்ந்திருப்பான். கீழச் சித்திரை வீதியில் அவன் நண்பன் ராஜப்பா இருந்தான். அவனுடன் கொஞ்சம் அரட்டை.*

*பகல் உணவை வரதனுடன் முடித்துவிட்டு பஸ் பிடித்து திருச்சியில் இறங்கிக் கொஞ்சம் ஊரைச் சுற்றுவான். இஷ்டமிருந்தால் ஏதாவது சினிமா. இல்லாவிட்டால் குளித்தலை பஸ் ஏறி கல்லூரிக்குப் போய்விடுவான். தோள் வலிக்கும் வரை டேபிள் டென்னிஸ் ஆடி விட்டு இருட்டிய பிறகுதான் அறைக்கு வருவான்.*

*வரதன் பேசி ஏற்பாடு செய்திருந்த வீட்டுக்கார மாமி சுட்ட அப்பளமோ, கத்திரிக்காய் வதக்கலோ புதிதாகச் செய்து, காலை ரசத்தைச் சூடு பண்ணிப் போட்டால், சாப்பிட்டுவிட்டு வாசல் அறைக்குப் போய்விடுவான்.*

*'முன்னூறு ரூபாய்க்கு யார் இத்தனை சௌகர்யம் பண்ணித் தருவா?' என்று வரதன் கேட்டான்.*

*எல்லாமே சௌகர்யமாகத்தானிருந்தது. படிப்பதைத் தவிர வேறு பொழுதுபோக்கு இல்லாததால் ஒழுங்காகப் படிக்கவும் ஆரம்பித்தான்.*

*முதல் வருஷத் தேர்வில் ஐம்பது சதவீத மார்க் என்றபோது அவனுக்கு அது வியப்பாக இல்லை. வரதன் வியந்துபோனான். கட்டிக்கொண்டு தூக்கிச் சுற்றினான். மல்லிகைப் பூப்பந்துகளும் ரங்கநாதர் பிரசாதமும் எடுத்துக்கொண்டு ஊருக்குப் போய் மார்க் ஷீட்டை நீட்டியபோது அப்பா கண்ணில் ஒற்றிக்கொண்டார்.*

*'வாசு,இந்த வேகத்தை விடாம அப்படியே கன்டினியூ பண்ணி நீ சி.ஏ. முடிச்சுடணும்டா' என்றான் பெரியண்ணா.*

*மன்னி அன்று ஸ்பெஷலாக அவனுக்காகக் கேசரி கிளறினாள்.*

*சீனாவும் சுந்தரும் 'எப்படிடா? எப்படிடா மாறினே?' என்று வாய் ஓயாமல் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.*

*மாறித்தான் போய்விட்டேன் என்று தனக்குள் சொல்லிக்கொண்டான் வாசு.*

*மறுநாள் ரங்கனுடன் பழையபடி மகாபலிபுரம் ட்ரிப்புக்குப் போகும்போது, கடற்கரையில் இருவரும் சுவாதீனமாக அமர்ந்து சிகரெட் பிடித்தபடி பேசிக் கொண்டிருந்தார்கள்.*

*'தண்ணி போடறியா?' என்று ரங்கன் கேட்டான்.*

*‘எப்பவாச்சும் பீர் மட்டும். ஒண்ணு தெரியுமா? சேர்ந்த கொஞ்ச நாள்ல ராகிங்ல மாட்டினேன். ஒருத்தன் சிகரெட்டை நீட்டி பிடிடான்னான். எனக்கென்ன போச்சு? கோல்டு பிளேக் கிங்ஸ். குருவேன்னு உன்னைத்தான் நினைச்சுண்டு ஃபுல்லா முடிச்சுட்டு எழுந்துபோயிட்டேன். அதுக்கப்புறம் ஒருத்தன் நம்மகிட்ட வரலை.’*

*‘ஆளே மாறிட்டேடா வாசு!’ என்றான் ரங்கன்.*

*‘ஜாக்கிரதையா இருந்துக்கோ. வரதன் அங்கங்க ‘ஸ்பை’ வெச்சிருப்பான்.’*

*வாசு சிரித்தான். ‘யார், எனக்கா? எத்தனை பெரிய பூசணிக்காயை மறைச்சிருக்கேன். இதென்ன பெரிசு!’ என்றான் அலட்சியமாக.*

*‘பூணல் போட்டுண்டிருக்கியா?’ என்று ரங்கன் கேட்டான்.*

*‘இங்க வரும்போது வாங்கி, போட்டுண்டு வந்தேன்.’*

*‘காலேஜ்ல யாருக்கும் எதுவும் தெரியாதே?’*

*‘கவலைப்படாதேடா. ஒரு பிராப்ளம் இல்லை. ஐ கேன் டாகிள் எவ்ரிதிங்!’ என்றான் சிரித்துக்கொண்டே.*

*‘ராஸ்கல், இங்கிலீஷ் வேறயா?’*

*‘பின்னே? ஒண்ணு தெரியுமா ரங்கா? படிப்பு பிரமாதமில்லை. சாதம்போட்டா சுத்தி வர்ற நாய்க்குட்டி மாதிரிதான். தினம் ஒருமணி நேரம் அதோட மெனக்கெட்டா போதும். இதை முன்னாடியே புரிஞ்சுண்டிருந்தேன்னா இத்தனை அவஸ்தைபட்டிருக்க வேண்டாம். பெட்டர் லேட் தேன் நெவர்னு எனக்காகத்தான் சொல்லியிருக்கான் போலிருக்கு.’*

*‘சந்தோஷமா இருக்குடா வாசு.’*

*‘எல்லாம் உங்களாலதானே!’ என்றான் அவன்.*

*வீட்டுக்கார அம்மாளுக்கு இரண்டு பெண்கள். முதல் வருஷ ரிஸல்ட் கொடுத்த தெம்பில் யாரையாவது காதலிக்கலாமா என்று யோசித்தான் வாசு. இரண்டு பேரையுமே அவனுக்குப் பிடித்திருந்தது. அலம்பிக் கவிழ்த்த பித்தளைச் சொம்பு மாதிரி என்ன வாளிப்பு!*

*‘வரதா, அந்த ரெண்டு பேரைப் பத்தி நீ என்ன நினைக்கறே?’ என்றான், வரதன் ஒருமுறை அறைக்கு வந்திருந்தபோது.*

*‘படவா, இதைத்தான் பண்ணிண்டிருக்கியா இங்கே?’ என்று போலியாக மிரட்டியவன், ‘பார், ஐயராத்துப் பொண்ணுகள் லேசுப்பட்டதில்லே. முந்தில முடிஞ்சுண்டாலும் முடிஞ்சுக்கும்; சந்திக்கு இழுத்தாலும் இழுத்துடும். நமக்கெதுக்கு வம்பு? அப்பாக்கு வடகலைன்னாலே அலர்ஜி. நீ வடமாள்ல தேடறியா? தூக்கம் கலைய மூஞ்சி அலம்பிக்கற மாதிரி பார்த்து ‘ரெஃப்ரெஷ்’ பண்ணிக்கறதோட நிறுத்திக்கோ, பேச்சுக் கொடுத்து சோத்தைக் கெடுத்துண்டுடாதே. குளித்தலைல எனக்கு வேற ஒருத்தரையும் தெரியாது; உன்னை வெச்சு சோறுபோடற மாதிரி.’*

*வாசு விளையாட்டாகத்தான் கேட்டான். உண்மையில் தன்னால் யாரையும் காதலிப்பதையெல்லாம் தீவிரமாகச் செய்யமுடியாது என்பது அவனுக்குத் தெரிந்தே இருந்தது.*

*தவிரவும் அவனுக்கு எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் மைதிலியின் சாயல் துளியாவது ஒட்டிக் கொண்டிருப்பது போலவே பட்டது. அது சாயல் இல்லை; ஒரு குறியீடு போல அண்ணாவின் ஞாபகம் தன்னை மன்னியின் உருவில் கட்டிப் போடுவதாகப் பிறகு உணர்ந்தான்.*

*முகம் தெரியாத அவனது திருக்கண்ணபுரத்துக் குடியானவக் காதலி. அண்ணா ஏன் அப்படியொரு கோழையாக இருந்துவிட்டான் என்று பல இரவுகள் அவன் யோசித்துப் பார்த்தான்.*

*வரதனிடம் பேசியபோது, 'அண்ணாவை விடு. எந்த ஐயங்கார் பையன் போல்டா காதலிச்சு, போல்டா கல்யாணம் பண்ணிக்கறான்? சிலருக்கு ஃப்ளூக்ல நடந்துடறது. மெஜாரிடி கோழைகள்தானே? நம்ம சாப்பாட்டு முறைல ஏதோ கோளாறுன்னு நினைக்கறேன்' என்று சிரித்தபடி சொன்னான் வரதன்.*

*'ஆம்லெட்ல அப்படியொண்ணும் டேஸ்ட் இல்லை வரதா' என்று எழுந்து ஓடியபடி சொன்னான் வாசு.*

*'அட நாயே! தின்னுட்டியா?' என்றான் வரதன்.*

*'ஒரே ஒருவாட்டி, சும்மா டேஸ்ட் பார்த்தேன். மண்ணு*

*மாதிரி இருக்கு'*

*'ஆத்துல இதையெல்லாம் உளறிவெக்காதே...'*

*'சேச்சே!' என்றான் வாசு.*

*'எனக்கென்னவோ சந்தேகமா இருக்கு. நீ நிஜமாவே நாடாரா மாறி, கன்வெர்டட் கிருஸ்டியனாயிடுவியோன்னு. உங்க காலேஜ் ஸ்தாபகர் அப்படி ஆனவர் தானே?'*

*'அதுக்கென்ன?'*

*'இல்லே, நீயும் அப்படி ஆகி, நல்லாவும் படிச்சி, பிரமாதமா வந்துட்டேன்னா அங்கேயே ஒரு லெக்சரரா உட்கார்ந்துடலாம்.'*

*வாசு பெருமூச்சுவிட்டான்.*

*'சமயத்துல, நினைச்சாலே ஒரு மாதிரி கஷ்டமா, பதற்றமா ஆயிடறது வரதா. வேற எந்த ஐயங்கார் பையனுக்காவது இப்படியொரு குண்டு தைரியம் வந்திருக்கா?'*

*'ஆம்லெட் சாப்பிடற தைரியம் வந்துடுத்தோல்லியோ? அப்புறமென்ன படபடப்பு, மண்ணாங்கட்டி. ஒழுங்கா முடிச்சுட்டு வந்து சேர்ற வழியைப் பாரு' என்றான் வரதன்.*

*மழை வலுத்திருந்தது. ஜன்னல் வழியே சாறலடிக்க, எழுந்துபோய்ச் சாத்திவிட்டு வந்து கட்டிலில் படுத்தான் வாசு. வீட்டுக்கார மாமி நீளமான தடியால் உயரே தொங்கிய துணிகளை எடுத்துக்கொண்டபடியே கேட்டாள்: 'இன்னிக்கு எங்கேயும் வெளியில போகலையாக்கும்?'*

*'எங்க போறது மாமி? கார்த்தாலேருந்து மழை விடறாப்பல தெரியல்லியே.'*

*‘மத்தியானம் அரிசி உப்புமா. பிடிக்குமில்லியா?’ என்று கேட்டாள்.*

*அவனுக்கு உடனே அம்மா ஞாபகம் வந்துவிட்டது. அவள்தான் அரிசி உப்புமா ஸ்பெஷலிஸ்ட். மணல் மாதிரி உதிர்உதிராகத் தட்டில் போட்டு ஒரு துண்டு எலுமிச்சை ஊறுகாயை ஓரமாக வைப்பாள். மைதிலியும் வத்சலாவும் மாற்றிமாற்றிப் போராடிப் பார்த்து விட்டார்கள். அந்த உதிர் உதிரான பதம் அவர்களுக்கு வரவே இல்லை. ஒன்று, அடிபிடித்து விடும் அல்லது களியாகிவிடும். பிறகு மோரில் கரைத்துத்தான் இறக்கவேண்டியிருக்கும்.*

*வீட்டுக்கார அம்மாளின் அரிசி உப்புமா பதத்தை அவன் அதுவரை ருசி பார்த்திருக்கவில்லை. ஆகவே, ஆர்வமாக ‘ரொம்பப் பிடிக்கும் மாமி’ என்றான்.*

*‘அப்ப சரி. தூங்கி எழுந்திரு. மூணு மணிக்குச் சாப்பிடலாம்’ என்றாள் மாமி.*

*கதவைச் சாத்திவிட்டுப் படுத்தான். புரட்டிக் கொண்டிருந்த புத்தகம் நழுவியது தெரியாமல் உறங்கிப் போனான்.*

*மூன்று மணிக்குக் கதவு தட்டப்பட, அந்த வீட்டின் இரண்டாவது பெண் நின்று கொண்டிருந்தது. பெயர் மாதங்கி என்றும் பக்கத்துப் பள்ளியில் பத்தாம் வகுப்பு படிக்கிறாள் என்பதும் தவிர அவனுக்கு அதைப்பற்றி வேறெதுவும் தெரியாது.*

*‘அம்மா, டிபன் சாப்பிடக் கூப்பிட்டா’ என்று அறிவித்துவிட்டுப் போய்விட்டது அது.*

*முகம் கழுவிக்கொண்டு அவன் அவர்கள் வீட்டுக் கூடத்துக்குப் போனான்.*

*‘உட்கார்’ என்றாள் மாமி.*

*‘எப்படிப் போயிண்டிருக்கு காலேஜ்?’ என்றார் வீட்டுக்காரர்.*

*‘போறது மாமா’ என்றான் வாசு.*

*‘நீ வரதும் தெரியலை. இருக்கறதும் தெரியலை. போறதும் தெரியறதில்லை. இன்னிக்குத்தான் அதிசயமா ரூம்ல இருக்கே போலிருக்கு’ என்றார் அவர்.*

*‘மழையால தான் அதுவும்’ என்று சமையல் உள்ளிலிருந்து குரல் கொடுத்தாள் மாமி.*

*‘செகண்ட் இயர் வந்தாச்சே. இனிமே அதிகம் ஊர் சுத்த முடியாது மாமா’ என்றான் வாசு.*

*‘வாஸ்தவம் தான்’ என்றபடி அவர் நகர்ந்தார்.*

*வீட்டில் யாருமே தன்னை வித்தியாசமாக நினைக்காதது பற்றி அவனுக்கொரு உறுத்தல் எழுந்தது.*

*அதனாலேயே சாப்பிட்டு முடித்து எழுந்து திரும்புகையில், அந்த மூத்தபெண் தாவணியைச் சரி செய்யும் லாகவத்தில் சற்று முன் சாய்ந்து மேலாக்கை விசிறி விட்டபோது கொழுந்துவிட்ட உணர்வை மறந்துவிட மிகவும் விரும்பினான்.*

# *9*

*கல்லூரியில் கிரிக்கெட் அணியில் சேர்ந்திருந்தான் வாசு. வெடவெட வென்ற உயரமும் தொடை வரை நீண்டிருந்த கரங்களும் ஒரு நல்ல வேகப் பந்து வீச்சாளனாவதற்கு உதவிகரமாயிருந்தன.*

*'நீ மட்டும் முயற்சி பண்ணினா டிஸ்ட்ரிக்ட்லேயே பெஸ்ட் போலரா வந்துடலாம்' என்று சொல்லியிருந்தார் பிஸிக்கல் டைரக்டர். விருப்பமில்லாத வகுப்புகளைத் தவிர்ப்பதற்கும் கிரிக்கெட் உபயோகமாயிருந்தது.*

*திருவெறும்பூர் மைதானத்தில் அன்று மேட்ச் இருந்தது. ஜோசப் கல்லூரியுடன் ஆட வேண்டும்.*

*வாசு, காலை ஏழு மணிக்கே கிளம்பிவிட்டான். ஞாயிற்றுக் கிழமையானதால் வரதன் எதிர்பார்த்துக்கொண்டிருப்பானே என்று நேரே ஸ்ரீரங்கம் போய்ச் சொல்லிவிட்டு, அங்கிருந்தே பஸ் பிடித்து, ஒரு மணி நேரத்தில் மைதானத்துக்கு வந்தான். முடிந்தால் மாலை அப்படியே தஞ்சாவூர் போய் சரோவைப் பார்த்துவிட்டு வரலாம் என்று நினைத்துக் கொண்டான்.*

*சாலையில் இருபுறமும் திராவிடர் கழகச் சுவரொட்டிகள் புதிதாக ஒட்டப்பட்டிருப்பதை கவனித்தான். திருவெறும்பூர் மைதானத்தில் மேட்ச் மட்டுந்தான் நடக்க வேண்டுமென்று சட்டமேதும் இருக்கவில்லை.*

*அவன் சென்றபோது மைதானத்தின் ஓரத்தில் மேடை கட்டுவதற்காகக் கட்டைகளும், மர ஸ்லாப்புகளும் வந்து இறங்கியிருந்தன.*

*இருபது, இருபது ஓவர்களில் முடித்துக்கொள்ளலாம் என்று இரண்டு கேப்டன்களும் தீர்மானித்தார்கள்.*

*டாஸில் ஜெயித்து, முதலில் அவர்கள் ஆட, இரண்டாவது அணி விளையாடுவதில் சிக்கல் ஏற்பட்டது. மிட் ஆனில் யாராவது நான்கு ரன்கள் அடிக்கும் போதெல்லாம் மேடை கட்டும் கலைஞர்களுக்குப் பிரச்னை உண்டானது. மேலும் ஒன்றரை மணிக்கு லாரியில் மடக்கு நாற்காலிகள் வந்து இறங்கின.*

*'நெக்ஸ்ட் வீக் வெச்சுக்கலாம் பிரதர். இங்க வேணாம். எங்க காலேஜ் கிரவுண்டிலேயோ, உங்க கிரவுண்டிலேயோ ஆடுவோம்' என்றான் ஜோசப் கேப்டன். அதிகாரபூர்வமற்ற மேட்ச்களை வெளி கிரவுண்ட்களில் ஆடுவதுதான் வழக்கம். திருவெறும்பூர் மைதானத்தை அட்வான்ஸ் புக்கிங் செய்வதெல்லாம் இயலாது. அது தனியார் நிலம். எந்த நாளும் அங்கே கட்டடம் எழலாம் என்கிற அபாயமுடன்தான் அரை நூற்றாண்டுகளாக அங்கு கிரிக்கெட் மேட்ச்களும் கலை நிகழ்ச்சிகளும் அரசியல் கூட்டங்களும் நடந்து கொண்டிருந்தன.*

*'யாருப்பா வராங்க?' என்று முத்துராமன், மேடையை மேற்பார்வை பார்த்துக்கொண்டிருந்தவனிடம் கேட்டான். மேட்ச் நின்றும் கிளவுஸை கழற்றத் தோன்றாத விக்கெட் கீப்பரின் கேள்வியை அந்த ஆள் பொருட்படுத்தவில்லை.*

*வாசு அருகே சென்றான். 'வழில போஸ்டர் பார்க்கலையா நீ? கிருபானந்த வாரியார் கந்தபுராணம் சொல்றாரு'.*

*இப்போது அந்த ஆளுக்குப் பொருட்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது.*

*‘மக்கா, கிண்டலா?’ என்றான் ஒரு ஒயரை வாயில் கடித்தபடி.*

*இரண்டு அணியினரும் மேடைக்கு அருகே வர, ‘படிக்கற பசங்களா? இருந்து கூட்டத்தைப் பாருங்கப்பா, பாப்பாரப் பசங்க எவனாச்சும் இருந்தா மட்டும் ஓடிப் போயிருங்க. பூணல் அறுப்புப் போராட்டம் அறிவிக்கப்போறாங்க’ என்றான் கடித்த ஒயரை எடுக்காமல், சுத்தியலால் ஓர் ஆணியைத் தட்டியபடி.*

*வாசுவுக்குச் சட்டென்று கை, தோள் பக்கம் சென்றது.*

*‘என்ன, நீ ஐயரா?’ என்றான் அந்த ஆள்.*

*‘இல்லை’ என்றான் வாசு. ‘ஐயங்கார்’ என்ற மனத்துக்குள் சொல்லிக் கொண்டான்.*

*‘அட எதுக்குய்யா அதை அறுக்கணும்? பாப்பாரப் பசங்களாச்சும் ஒழுங்கா முதுகு தேய்ச்சிக் குளிக்கட்டுமே?’ என்றான் முத்துராமன்.*

*அவன் தீவிர தி.மு.க. அனுதாபி என்பது வாசுவுக்குத் தெரியும். ஆனால் வாரம் தவறாமல் உச்சிப் பிள்ளையார் கோயிலுக்குப் போய்விடுவான்.*

*‘பாப்பாரப் பசங்க உங்களை என்னய்யா பண்ணாங்க?’ என்று வாசு கேட்டான்.*

*‘ம்? ராத்திரி கூட்டத்துக்கு வா. சொல்லுவாங்க’ என்று நகர்ந்துவிட்டான் அவன்.*

*அவனுக்கு வெறுப்பும் கோபமும் படபடப்புமாக வந்தது. தனக்கு இனப்பற்றெல்லாமுங்கூட உண்டா என்ன என்று கேட்டுக் கொண்டான். உண்மையில், அந்த ஆள் பேசியதன் விளைவான அருவருப்பு மட்டுமே பிரதானமான உணர்ச்சியாகத் தெரிந்தது.*

*‘ஸ்டேட் கவர்ன்மென்ட்லேயும் சென்ட்ரல் கவர்ன்மென்ட்லேயும் அம்பது பர்ஸன்ட் அதிகாரிங்க ஐயருங்க தான் தலைவா. நீ என்னதான் ரிஸர்வேஷன் வெய்யி. முட்டி மோதி, தாவி எப்படியோ வந்துருவானுங்க. அந்தக் காய்ச்சல் இவனுங்களுக்கு. இவன் பூணூலை அறுத்துட்டான்னா, அவன் புத்தி இல்லாம போயிடுவானா? நாலணா குடுத்து இன்னொண்ணு வாங்கி மாட்டிக்கிட்டுப் பேசாம போயிட்டே இருப்பான். ஊர்ல வேலைக்கும் சோத்துக்கும் வக்கில்லாம கெடக்கற எத்தனையோ பசங்களுக்கு உருப்படியா ஒரு உதவி செய்ய சொல்லு? அது மாட்டான்’*

*ஸ்பின்னர் ஆறுமுகச்சாமி வழியெல்லாம் திட்டிக்கொண்டே வந்தான்.*

*‘நீ பெரியார் கட்சிதானே ஆறுமுகம்?’ என்று வாசு கேட்டான்.*

*‘நான் பெரியார் கட்சிதான். எங்கப்பனும் அதே கட்சிதான். ஆனா, நாங்க புரிஞ்சிக்கிட்டதுல கால்வாசி கூட இவனுங்க புரிஞ்சிக்கலை அவரை’*

*வாசு அவனை வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்தான்.*

*‘வன்முறை உதவாது வாசு. வருணாசிரம தர்மத்தை ஒழிக்கணுங்கறான்; சரி. இப்ப எவன் அதைக் கடைப்பிடிக்கிறான்றேன்? வடநாட்டுல இருக்கா? சரி. பீகார்ல இன்னிக்கும் எஸ்.ஸிங்களுக்கு டீக்கடைல தனி கிளாஸ் வெக்கறானாம். போயி அங்க தாளிக்கச் சொல்லு. இங்க எவன் இப்ப பார்ப்பானா இருக்கான்? ஸ்ரீரங்கத்துப் பார்ப்பான்ல எத்தனைபேர் நாமத்தை அளிச்சிட்டு மிலிட்டரி ஓட்டலுக்குப் போறான் தெரியுமா உனக்கு?’*

ஆறுமுகம் மிக உக்கிரமாகப் பேசிக்கொண்டே போனான். வாசுவுக்கு அது மிகப் புதிய அனுபவமாக இருந்தது. பிரத்திகமாகத் தன்னை நன்கு அறிந்துகொண்டே அவன் பேசுவதுபோல இருந்தது. சிறிதளவேனும் கோபமோ, குற்ற உணர்வோ இன்றி, தான் அதைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதே அவனக்கு வினோதமாகவும் வியப்பாகவுமிருந்தது.

வேறு யாராவது ஒரு சாதிக்காரனிடம் இப்படிப் பேச முடியுமா, கேட்டுக்கொண்டு சும்மா வருவானா என்று யோசித்துப் பார்த்தான்.

இது, தன் சகிப்புத் தன்மை என்று கூட அவன் நினைக்கவில்லை. ஒரு சிறு சலனம்கூட உண்டு பண்ண இயலாத நிலையிலல்லவா ஜாதிக்குத் தன்னிடம் அங்கீகாரம் மறுக்கப்பட்டிருக்கிறது?

அப்பாவோ, அண்ணன்களோகூட இப்படியொரு சந்தர்ப்பம் நேர்தால் - இப்படித்தான் சலனமற்று இருப்பார்கள் என்று அவன் நினைத்தான். ஒருவேளை, வரதனுக்குக் கோபம் வரக்கூடும். திருமண்ணும் பூணூலும் அவனுக்கு ஒரு வாழ்க்கைய அமைத்துக் கொடுத்திருக்கின்றன.

இப்படித் தோன்றியதும் சட்டென்று ஒரு விஷயம் பிடிபட்டாற்போலிருந்தது. வாழ்க்கைக்கு உதவாத எந்த ஒரு அடையாளமும் இப்படியொரு அங்கீகார மறுப்பைப் பெற்றே தீரவேண்டும் என்பதுதான் அது.

தஞ்சாவூர் போகும் யோசனையைத் தவிர்த்துவிட்டு, பஸ் பிடித்து நேரே ஸ்ரீரங்கம் போனான். மடத்தில் வரதன் இல்லை. செருப்பை அங்கேயே கழற்றி வைத்துவிட்டு, கோயிலுக்குச் சென்றான்.

நல்ல கூட்டம் இருந்தது. வரிசையில் நின்று சேவித்துவிட்டு, பிராகாரம் சுற்றி வரும்போது துலுக்க நாச்சியார் சந்நிதி வாசலில் வரதன் வந்துகொண்டிருந்ததைக் கண்டான்.

இவனைப் பார்த்ததும், 'என்னடா திடீர்னு?' என்றான் வரதன்.

'நான் தஞ்சாவூருக்குப் போகலை. மேட்சும் கேன்ஸல் ஆயிடுத்து' என்றான் வாசு.

'ஏன்?'

நடந்த வாக்கில் முழு விவரமும் சொன்னான். பதில் பேசாமல் கேட்டுக்கொண்டே இருந்த வரதன், வாசு பேசி முடித்ததும், 'தி.க. காரா நல்லதுதான் பண்ண நினைக்கறா. பூணூலை அறுத்துப் போட்ட கையோட, அத்தனை பிராம்மணனும் இனிமே 'பேக்வர்ட் காஸ்ட்'னு சொல்லி, அதுக்கு சட்டபூர்வமா அங்கீகாரம் வாங்கித் தந்துட்டான்னா, நான் கூட ஜீயரை விட்டுட்டு, பெரியாருக்குக் கொடி பிடிக்க ஆரம்பிச்சுடுவேன்' என்றான் சிரித்துக்கொண்டே.

'அடப்பாவி!' என்றான் வாசு.

'என்ன அடப்பாவி? அந்தக்காலத்துல பிராம்மணனுக்கு ஒரு கௌரவம் இருந்தது. அவனும் அதுக்கேத்தபடி நடந்துண்டான். அடுத்த வேளை சாப்பாட்டுக்கு சேர்த்து வெக்கக்கூடாதுன்னா, சேர்த்துவெக்கமாட்டான். வேதம் சொல்லிக்கொடுத்து, ஆழாக்கு ஆழாக்காத்தான் அரிசி சம்பாதிச்சான். பின்னால திமிர் பிடிச்சி அலைஞ்சான். அடுத்த ஜாதிக்காரனை மதிக்காம நடந்துண்டான்; இப்ப படறான், அவஸ்தை... இங்க இருக்கிற மடங்களையே எடுத்துக்கோ. இன்னிய தேதிக்கு எத்தனை மூட்டை அரிசி ஸ்டாக் இருக்குன்னு தெரிஞ்சா மயக்கம் போட்டுடுவே! பூணூல் அறுக்க வரவன், பிராமணன் இருக்கிறதா நினைப்பானா, கொள்ளையடிச்சவன் இருக்கிறதா நினைப்பானா? சொல்றதுக்கில்லை. அவனே ஒரு பூணூலை

மாட்டிண்டு சிஷ்யனாயிடறேன் சுவாமின்னு உட்கார்ந்தாலும் உட்கார்ந்துடுவான். சோத்துக்கு மிஞ்சின சாமி இல்லேடா வாசு. அது பெரியாரா இருந்தாலும் சரி; பெருமாளா இருந்தாலும் சரி.'

பேச்சு மூச்சற்றுப் போனான் வாசு.

## *10*

*பழங்களை பெரியமன்னி தனியே ஒரு கூடையில் எடுத்தக்கொண்டாள். வேஷ்டி, உத்ரியமும் ஒன்பது கெஜமும் வத்சலாவிடம் இருந்த தட்டில் இருந்தன. கவுளி வெற்றிலையையும் கொட்டைப் பாக்குகளையும் சடகோபனின் கடையிலிருந்து சுந்தர்ராஜன் எடுத்து வந்தான்.*

*'பேன்டைக் கழட்டிட்டு வேஷ்டில வாடா' என்று பெரியண்ணா மணி வண்ணனிடம் சொன்னான். அவன் எப்போதும் போல காக்கி பேன்ட்டே அப்போதும் அணிந்திருந்தான்.*

*'சேவிச்சுட்டு அப்படியே போயிடலாம்னு இருந்தேண்ணா' என்று மணிவண்ணன் சொன்னான். ஒரு வாடகை டாக்ஸி டிரைவருக்கு நேரம் முக்கியமல்லவா என்று ரங்கன் கேட்டான். தவிர, மணி விமான நிலையத்தில் தன் சமஸ்தானத்தை அமைத்துக் கொண்டிருந்தான். அவனது வருமானம் தில்லியிலிருந்தும் பெங்களூரிலிருந்தும் வந்து இறங்கின.*

*'ஒரு லாஜிக் தெரியுமா? பாம்பே பிளைட்ல வர்றவன் யாரும் வாடகை டாக்ஸில ஏறமாட்டான். ஒண்ணு, சொந்த கார் வந்துடும். இல்லாட்டா பஸ்ஸோ, ரயிலோ பிடிச்சுத்தான் போவான், சொல்லிவெச்சா மாதிரி அத்தனை பேரும்' என்பான் மணி.*

*இன்றைக்கு நிச்சயம் அவன் வருமானம் கொஞ்சம் குறையும் என்று சீனா வருத்தப்பட்டான், ரகசியமாக - அப்பாவின் காதுகளில் விழாத வண்ணம்.*

*ஆனால், அம்மா கேட்டுவிட்டாள்.*

*'போறதுபோ. வராத மனுஷர் வந்திருக்கார். போய் சேவிச்*

*சுட்டுப் போனான்னா, நாளைக்கு ஒண்ணுக்குப் பத்தா சவாரி கிடைக்கும்' என்று சொன்னாள்.*

*கிளம்புகிற பரபரப்பையும் அவரவர் அலங்கார விசேஷங்களையும் ஆர்வமாக கவனித்துக்கொண்டிருந்தான் வாசு.*

*முந்தைய நாள் காலையே சரோ அவள் புருஷனுடன் வந்திருந்தாள். விடிந்ததும் முதலில் குளித்துக் கிளம்பியது அவள் குடும்பம்தான். ஆறரைக்கே வரதனுடன் புறப்பட்டுப் போய்விட்டார்கள் அவர்கள்.*

*'மாம்பலத்துல எங்கே?' என்று அம்மா கேட்டாள்.*

*கோதாண்டராமர் கோயில் தெரு. அகோபில மடம் ஸ்கூலுக்கு எதுத்தாப்பலன்னு வரதன் சொன்னான்' என்றான் சடகோபன்.*

*நாங்குநேரியிலிருந்து ஆசாரியர் வந்திருந்தார். அவர் சென்னைக்கு வரப்போவதையும் மாம்பலத்தில் தங்குவதையும் குடும்பத்தோடு ஒரு நடை போய் சேவித்து வந்துவிடவேண்டுமென்பதையும் வரதன் தான் ரங்கராஜனுக்கு போன் செய்து தெரிவித்திருந்தான்.*

*'அப்பாட்ட மறக்காம சொல்லிடுடா' என்றான் வரதன்.*

*இரண்டு நாட்கள் மறந்துவிட்டு, மூன்றாம் நாள் சொன்னபோது, 'கார்த்தால அவரே போட்டிருந்த லெட்டர் வந்துடுத்து' என்றார் அப்பா.*

*வாசுவுக்கும் சரோவுக்கும் வரதனே தகவல் சொல்லி, வாரக்கடைசியில் வீட்டுக்கு வந்துவிடச் சொல்லியிருந்தான்.*

*வாசுவுக்கு, தங்கள் குடும்பத்துக்கு ஆசாரியர் என்றொருவர் உண்டு என்பது தவிர வேறு விவரங்கள் ஏதும் தெரிந்திருக்கவில்லை.*

*சீனா சொன்னான் : 'யாருக்கு என்ன விவரம் தெரியும்? தபாலாபீஸ்ல முத்திரை குத்தற மாதிரி, போய்க் கேட்டா, ரெண்டு தோளிலேயும் சங்கு, சக்கர சீல் போட்டுவிடுவார். கிருஸ்டியன்ஸுக்கு ஞானஸ்னானம் மாதிரி நமக்கு சமாஸ்ரயணம். அதைப் போட்டுண்டாத்தான் ட்ரூ ஐயங்கார். அப்புறமென்ன? ஆத்துல ஒரு கல்யாணம்னு பத்திரிகை அனுப்பினா போஸ்ட் கார்டுல மஞ்சள் தடவி ஆசீர்வாதம் பண்ணுவார். அம்பது ரூபா கூடவெச்சு அனுப்பிச்சேன்னா, பிளாஸ்டிக் பாக்கெட்ல அட்சதை வரும் ...'*

*'சீச்சீ, அப்படியெல்லாம் பேசாதே' என்றார் அப்பா.*

*'எதையும் குருமுகமா பண்றதுதான் நம்ம வழக்கம். ஆசார்ய சம்பந்தம்ங்கறது அந்தக் காலத்துல பெரிய விஷயம். எங்கப்பாவெல்லாம் வாரம் ஒரு வாட்டி நாங்குநேரி போயிடுவார். திருப்பதிக்குப் போறதும் ஒண்ணு, திருமாளிகைத் தேவரை சேவிக்கறதும் ஒண்ணும்பார். இப்ப எதைத்தான் மிச்சம் வெச்சுண்டிருக்கோம். நாம் போய் சேவிக்கிறது நின்னுபோனதுல, அவரே ஊர் ஊரா வர ஆரமிச்சுட்டார்' என்றார் அப்பா.*

*சரோவின் புக்ககத்தாருக்கும் இவர்தான் ஆசாரியர் என்பது வாசுவுக்கு அப்போதுதான் தெரிந்தது.*

*'எல்லா ஐயங்கார்ஸுக்கும் உண்டாப்பா?' என்று அவன் கேட்டான்.*

*'இல்லாம பின்னெ? ஆனா அப்படியொருத்தர் இருப்பார்ங்கற பிரக்ஞைகூடப் பலபேருக்குக் கிடையாது. உங்கம்மாவோட தங்கை ஆம்படையான் இருக்கானே, பேரென்ன, பாலாஜி... அவன் பொண்ணுக்கு கல்யாணம் நிச்சயம் ஆனப்போ, சம்பந்தி இவன் கிட்டே 'எந்தத் திருமாளிகை சம்பந்தம்?'னு கேட்டார். நான் பக்கத்துலேயே பார்த்துண்டு நிக்கறேன், என்ன பதில் சொல்லப் போறான்னு. ஒரு பத்து செகண்டு தவிச்சுப்போயிட்டான் மனுஷன். கெக்கேபிக்கேன்னு 'நானும் ஐயங்கார்தான் சுவாமி'ன்னானே பார்க்கணும். என் ஆயுசுல நான் அன்னிக்கு சிரிச்சமாதிரி அப்புறம் சிரிக்கலே!'*

*அப்பாவுக்கு அந்தச் சம்பவம் இப்போதுகூடச் சிரிப்பை உண்டாக்குவதை வாசு ஆர்வமுடன் பார்த்தான். அவனுக்குச் சிரிப்பு வரவில்லை. மாறாகச் சில வினாக்களைக் கிளப்பியது.*

*'அவரைக் கிண்டல் பண்றது எனக்கு சரியாப் படலைப்பா. நம்மாத்துலேயே யாருக்கு இதெல்லாம் தெரியும் சொல்லு. உன்னைச் சொல்லலை. வரதனை விட்டுடு. பெரியண்ணாக்கும் சடகோபனுக்கும் சமாஸ்ரயணம் ஆனதால ஆசாரியரைத் தெரிஞ்சிருக்கு. மிச்சம் எங்கள்ல ஒருத்தனுக்காவது தெரியுமா? எனக்குத் தெரிஞ்ச ஆசாரியர் எங்க காமர்ஸ் லெக்சரரும் அகவுண்டன்ஸி ப்ரொபசரும் தான். ரங்கனுக்கு ஆசாரியார், அவன் கம்பெனி முதலாளி. மணிக்கு அவன் டாக்ஸி ஓனர் பெருமாள் சாமி...'*

*அப்பா சிரித்தார்.*

*'தெரிஞ்சுக்கணும் வாசு. இப்ப இதெல்லாம் பொருட்டா இருக்காதுதான். சம்பாத்தியமும் மூணு*

*வேளைச் சாப்பாடுமே பெரிசா தெரியறதாலே சம்பிரதாயமெல்லாம் துச்சமாத்தான் படும். நாளைக்கு நாப்பது வயசுக்குமேல பழசைத் தேடிண்டு போறதுல ஒரு சுகம் இருக்கறது தட்டுப்படும். இந்தச் சாப்பாடும் சம்பளமும் ஒழுங்கா கிடைச்சுடறதேங்கற சந்தோஷத்திலாவது யாரையாவது சேவிக்கத் தோணும். வரதன் முகத்துல என்ன தேஜஸ் பார். நம்ம யார் மூஞ்சியிலயாவது அது இருக்கா? என்ன காரணம்? தினமும் பெருமாள் சேவிக்கறான். ஜீயரை சேவிக்கறான். வாய், ஓயாம நாலாயிரம் சொல்லிண்டிருக்கு.'*

*'பளிச்சென்று நாமம் போட்டால் எந்தக் கழுதைக்கும் அந்த தேஜஸ் வரும்' என்று வாசுவுக்கு நாக்கு நுனிவரை வந்தவிட்டது. அடக்கிக்கொண்டு வாசலுக்குப் போய்விட்டான்.*

*முன்னும் பின்னும் நிறைய இடைவெளியில் தோட்டம் வைத்து, அழகாக இருந்தது வீடு. வாசலில் மாவிலை கட்டி, பண்டிகைக் கோலம் போட்டிருந்தார்கள்.*

*வீதியிலேயே நின்றுகாண்டிருந்தார்கள், வரதனும் சரோவின் புருஷனும். அப்பாவைப் பார்த்துவிட்டதும் அவசரமாக உள்ளே ஓடினான் வரதன்.*

*மாடி முழுக்க அறைகள் ஏதுமற்று ஒரே நீளமான கூடமாயிருந்தது. சிவப்புச் சிமிண்டு பூசி, மழமழவென்றிருந்தது தரை. சுவரில் ஒரு பெரிய பட்டாபிஷேகப் படம். கீழே ஒரு குத்துவிளக்கு.*

*உட்காருமுன் அம்மா அதன் திரியை நிமிண்டிவிட்டு வந்து உட்கார்ந்தாள்.*

*வாசலிலேயே மேல் சட்டையை அவிழ்த்துப் பையில் திணித்திருந்தார் அப்பா. பெரியண்ணாவும் சடகோபனும் பட்டை வைத்த பஞ்சகச்சத்தில் ஆளே மாறிவிட்டாற்போலிருந்தது வாசுவுக்கு. 'பாம்பின்கால் பாம்பறியும்' என்று எப்போதோ ரங்கன் சொன்னது அசந்தர்ப்பமாக ஞாபகத்துக்குவர, குப்பென்று சிரிப்பு வந்துவிட்டது அவனுக்கு.*

*திரும்பி ரங்கனைப் பார்த்தான். அவன் காண்பித்துக்கொண்டிருந்த பவ்யம் மேலும் சிரிப்பூட்டுவதாயிருந்தது. 'கருந்தடியன் என்னமா வேஷம் போடறான்!' என்று நினைத்துக்கொண்டான்.*

*'பக்கவாட்டுக் கதவு திறந்து சட்டென்று ஆசாரியர் வரவும் பரபரவென்று அப்பா எழுந்துகொண்டார். வரிசையாக அத்தனைபேரும் தட்டிக்கொண்டு எழுந்ததில் உண்டான சப்தம் அந்தக் கூடம் முழுவதிலும் நிரம்பிப் பரவுவது போலிருந்தது. பத்து மணிக்கு மாம்பலம் இத்தனை நிசப்தமாகவா இருக்கும் என்று ஆச்சர்யமாக இருந்தது வாசுவுக்கு.*

*கோதுமைக் கதிர் மாதிரி இருந்தார் அவர். அட்சதை போட உயர்த்திய கரத்தில் நரம்புகள் தெரிந்தன. ஒடுங்கிய மார்பில் கிடந்த பூணூல் தாம்புக்கயிறு மாதிரி தடிமனாக இருந்தது.*

*'சௌக்கியந்தானே?' என்று அப்பாவிடம் கேட்டார்.*

*கையைக் கட்டிக்கொண்டிருந்த அப்பா, வாய் திறக்காமல் தலையை மட்டும் ஆட்டினார்.*

*'வரதனுக்கு நிச்சயமாயிருக்கா? பேஷ்' என்றார் திடீரென்று.*

*'எல்.ஐ.சி. வரதாச்சாரி இப்பத்தான் வந்துட்டுப் போறார்' என்றார் சம்பந்தமில்லாமல்.*

*'அம்மங்கா வந்திருக்காரா?' என்று அம்மா கேட்டாள்.*

*கதவருகே ஒரு கரம் தென்பட்டது. குள்ளமாக, முகத்தில் மூக்குத்தி மட்டுமே பிரதானமாகத் தென்பட, அவரது தர்மபத்தினி மெல்ல நடந்து வந்தாள்.*

*‘எல்லாரும் நன்னா இருக்கேளோல்லியோ? ஆசாரி யாரைத்தான் மறந்தாச்சு!’ என்றாள் வெடுக்கென்று.*

*‘மறக்கறதாவது!’ என்று பதறிச் சொன்னார் அப்பா.*

*‘ஆறுகாணி நிலம் இருந்தது. வித்துச் சாப்பிட்டே அத்தனையும் மறைஞ்சாச்சு. ஆசாரியர், தள்ளாம கிடக்காரேன்னு நீங்கள்லாம் பார்த்துண்டாத்தானே உண்டு?’ என்றாள் அம்மங்கா.*

*ஆசாரியர் ஏதும் பேசாமல், தனக்குச் சம்பந்தம் இல்லாததுபோல் வேறெங்கோ பார்த்துக்கொண்டிருந்தார்.*

*‘ஒம்போது பிள்ளேள் தானே உமக்கு?’ என்று கேட்டாள்.*

*அப்பா தலையாட்டினார்.*

*‘யார் அதிகம் சம்பாதிக்கிறா?’*

*வாசு, சடகோபனைப் பார்த்தான். அவன் உதட்டில் கை வைத்துப் ‘பேசாதே’ என்று சமிக்ஞை காட்டினான்.*

*‘நன்னா சம்பாதிக்கறது எங்கே? இனிமேத்தான். பெரியவாதான் ஆசீர்வாதம் பண்ணணும்’ என்று அப்பா சொன்னார்.*

*‘ஆசீர்வாதத்துக்கென்ன? அது அமோகமா இருக்கு. ஒருநாள் தவறாம உங்களையெல்லாம் அவர் நினைச்சுக்காம இருக்கறதே இல்லை.’*

*அம்மா எழுந்துகொண்டு தட்டை மாமியிடம் கொடுத்துச் சேவித்தாள்.*

*உடனே புடைவையைத் தொட்டுப் பார்த்து, ‘சுங்குடியா?’ என்றாள் அவள்.*

*அம்மா தலையாட்டினாள்.*

*‘ஏண்டா வரதா, நீ போனவிசெ நாங்குனேரி வந்திருந்தப்போ ஒண்ணு சொன்னேனே, ஆத்துல சொன்னியோ அதெ?’ என்று சட்டென்று வரதனிடம் திரும்பிக் கேட்டாள்.*

*வரதன் சொல்லியிருந்தான். அம்மங்காவின் பழைய வளையல்கள் இரண்டும் நசுங்கிச் சீரழிந்துவிட்டன. அதைப் போட்டுத்தான் ஒரு மாத மருந்து செலவை சமாளித்தாள். இந்த, கல்வெச்ச வளையலாமே? கைக்கு ஒன்றாக அடுத்த சந்திப்பில் வாங்கிவர இயலுமா என்று கேட்டிருந்தாள்.*

*‘என்னமோ இங்கே குபேரன் சொத்து வீணாப்போறதா நினைச்சுண்டாளாக்கும்?’ என்று சடகோபன் சொன்னான்.*

*வத்டிசலா சிரித்தாள். ‘மன்னி, நம்மாத்துக்காரர்களையும் பேசாம ஆசாரியாளா ஆயிடச் சொல்லிடுங்கோ. நமக்கும் வரதன் மாதிரி யாராவது சிரேஷ்டமான சிஷ்யன் கல்வெச்சது,*

*வெக்காததுன்னு வாங்கித் தந்தாத்தான் உண்டு!' என்று மைதிலியிடம் சொல்லிச் சிரித்தாள்.*

*பதிலுக்காகக் காத்திருந்தாள் கிழவி. அம்மா ஜாக்கிரதையாக, 'சொன்னான், சொன்னான். ஆகட்டும் மாமி' என்பதுடன் நிறுத்திக் கொண்டாள்.*

*மாப்பிள்ளை அப்பாவிடம் கீழ்க் குரலில், 'சமாஸ்ரயணம் பண்ணிக்கணும்' என்றார். அவரது தகப்பனார் காலமானபின், வீட்டில் வேறு பெரியவர்கள் இல்லாததில், வாசுவின் அப்பாதான் அவருக்கு எல்லாமாக இருந்தார்.*

*'மாப்ள என்ன சொல்றார்?' என்று ஆசாரியர் கேட்டார்.*

*'நானே கேட்கறதாத்தான் இருந்தேன். ஆத்துல மொதல் மூணைத்தவிர இன்னும் யாருக்கும் சமாஸ்ரயணம் ஆகலை. மாப்பிள்ளைக்கும் பண்ணிக்கணும்...'*

*'அதுக்கெல்லாம் தானே வந்திருக்கார்?' என்றாள் அவரது பத்தினி.*

*'நாள் பார்த்து வரதன்கிட்டே சொல்லியனுப்பறேன்' என்றார் ஆசாரியர்.*

*சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் புறப்பட்டார்கள்.*

*வாசு, மைதிலியிடம் சொன்னான் : 'என்னை விட்டுடுங்கோ மன்னி. நான் நாளைக்குக் கிளம்பிடறேன். இப்போ சூடு வெச்சிக்க நான் தயாரில்லை?'*

*'ஏண்டா?' என்று அண்ணா கேட்டான்.*

*'நாளை கழிச்சி காலேஜ் எலெக்ஷன். நான் ஜெனரல் செகரட்டரிக்கு நிக்கறேன், தெரியுமில்லியா?'*

*'உனக்கெதுக்குடா வாசு இதெல்லாம்?'*

*'சும்மா ஒரு ஜாலிக்குத்தான்!' என்றான் சிரித்தபடி.*

*வீடு திரும்பிய பிறகு அப்பா ஆசாரியரைப் பற்றி அதிகம் பேசவில்லை. யாராவது கிண்டலாக ஏதும் சொல்லப் போகிறார்களே என்று அவர் தவிர்க்கப் பார்ப்பதாகப் பட்டது.*

*மத்தியானம் திரும்பி வந்து வரதன் 'வெள்ளிக்கிழமை வெச்சுக்கலாம்னார்' என்று விட்டு,*

*'என்ன வாசு, கண்டிப்பா பண்ணிக்க வேண்டியதுதானே?' என்றான் கண்ணைச் சிமிட்டியபடி.*

*'ஞானஸ்னானம்னா ஓகே!' என்றான் வாசு.*

# *11*

*வைதேகிக்கு முதலில் மிரட்சியாக இருந்தது. சமையலறை உள்ளிருந்த பாத்திரங்களின் அளவு உண்டாக்கிய மிரட்சி. குக்கர் நுழையாத அந்த அறையில் கேஸ் அடுப்பு மட்டும் ஒன்றுக்கு இரண்டாக எப்படியோ வந்துவிட்டிருந்தது. பெரும்பாலான பாத்திரங்கள் வெண்கலத்தால் ஆனவை. தம்ளர்களும் தட்டுகளும் மட்டுமே எவர்சில்வராக இருந்தன. அகலமும் திண்மையும் பருமனுமாக இருந்த கரண்டிகளை அவள் அதுகாறும் கையாண்டிருக்கவில்லை. கல்யாண வீடுகளில் மட்டுமே பார்க்க முடிகிற அரிவாள்மணை காய்கறி திருத்தவென அங்கே இருந்தது.*

*ஒன்றரைப் படி அரிசியை முறத்தில் கொட்டிக்கொண்டு கல் நீக்கும் காரியம், ஒரு சிறு சமையலையே முடித்துவிட்ட உணர்வை உண்டாக்குவதாயிருந்தது. அவள் வெண்கலப் பானையில் சாதம் வடித்ததில்லை. அடுப்பில் ஏற்றி இறக்கும்போது தீவிரமும் படபடப்பும் எப்படியோ ஒவ்வொரு முறையும் வந்துவிடுகிறது.*

*'உனக்கெதுக்குடீ இந்த வேலை? நகரு சொல்றேன்' என்று புடைவையை இழுத்துச் சொருகிக்கொண்டு மைதிலி அவளை நகர்த்தினாள்.*

*'நீ சின்னச்சின்ன காரியங்கள் பார்த்தால் போதும் வைதேகி. தேங்காய் மூடியைத் துருவிக் கொடு. வெங்காயம் உரி. வாசல்லே, லாரி வருதான்னு பார்த்துத் தண்ணி பிடி. எல்லாருக்கும் தட்டைப் போட்டு, தீர்த்தம் வையி. அது போரும். தவிர, நீ இங்கே இருக்கப் போறதே ஒரு மாசம்தானே? அப்புறம் ஸ்ரீரங்கத்துக்குப் போயி உங்காத்துக்காரருக்கு சொப்புல தளிகை பண்ணிப் போடப்போறே. இப்போ ஒண்ணரைப் படி சாதம் வடிக்கப் பழகிண்டுட்டா, பின்னால ஒரு ஆழாக்குக்குப் பதம் பிடிபடாது. இதுக்கு நாங்கதான் இருக்கவே இருக்கோமே?' என்றாள் வத்சலா.*

*'வரதன் எழுந்துட்டாரா பார். இன்னிக்கு அயோத்யா மண்டபத்துல என்னமோ ப்ரோக்ராம் இருக்குன்னாரே?' என்று மைதிலி சொன்னாள்.*

*வைதேகிக்கு அது அப்போதுதான் நினைவுக்கு வந்தது. வரதன், முதல் நாள் காலையே அவளிடம் சொல்லியிருந்தான். திருமாலடியார் குழாம் ஏற்பாடு செய்திருந்த பாதயாத்திரையைத் தொடங்கி வைக்கும் விதமாக முதலாயிரம் சேவை. தொடர்வதாக அன்னதானம்.*

*'பார்க்கறேன் மன்னி' என்று வெளியேறி, இருட்டுக் கூடத்தைக் கடந்து வாசல் அறையில் எட்டிப் பார்த்தாள்.*

*வரதன் இன்னும் எழுந்திருக்கவில்லை. மேல் வஸ்திரத்தையே போர்வையாகப் போர்த்திக்கொண்டு சுவரைப் பார்க்க ஒருக்களித்துப் படுத்திருந்தான். லேசான குறட்டைச் சத்தம் வந்துகொண்டிருந்தது.*

*வைதேகி, கதவருகே வந்து, வாசலிலிருந்து கொல்லை வரை ஒருமுறை நன்றாகப் பார்த்து, யாரும் இல்லை என்று நிச்சயப்படுத்திக்கொண்டாள். சட்டென்று ஒருத்தர் வருவதானாலும் தாழ்வாரம் கடக்க எட்டு விநாடிகள் பிடிக்கும்.*

*சரேலென்று திரும்பி, அவனருகே சென்றாள். 'ட்ரொய்ங்' என்று கட்டுக் குடுமியை அவிழ்த்துவிட்டு, முள்தாடிக் குத்தலுடன் கன்னத்தில் ஒரு முத்தம் ஒற்றி, விலகினாள்.*

*வரதன் விழித்துக்கொண்டான். 'குட்மார்னிங்!' என்றாள் வைதேகி. இனிய புன்னகையுடன்*

*அவன், அவளைப் பார்த்தான். 'யாராவது வராளா?' என்று சைகையில் கேட்டுவிட்டு, 'கட்டிக்கோ' என்றான்.*

*மறுபடியும் கதவருகே பார்க்கச் சென்றவள், 'கூடத்துல அப்பா' என்றபடி வேகமாக அருகில் வந்து ஒருமுறை இறுக்கிக்கொண்டு விட்டு, விலகி ஓடிவிட்டாள்.*

*வெற்றிகரமான இரண்டாவது வாரம் என்று சினிமா சுவரொட்டி போல அவன் மனத்தில் ஒரு பொறி தோன்ற, சிரித்துக்கொண்டே எழுந்து, கூந்தலை உதறி முடிந்துகொண்டான். கடுக்கன் திருகைச் சரிபார்த்தபடி, பாயைச் சுருட்டிப் போட்டுவிட்டு, கொல்லைக்குப் போனான்.*

*அண்ணா அங்கே கோடரியை மண்ணில் நட்டு, தேங்காய் உரித்துக் கொண்டிருந்தான்.*

*எட்டுத் தென்னை மரங்கள் இருந்தன. ஒரு எலுமிச்சையும் பாதாமும் கூட. எல்லாம் அவன் நட்டு வளர்த்தது. வீட்டுக்கார ரெட்டியாருக்குத் தன் மண்ணில் முளைவிட்டதே பரம சந்தோஷமாகிவிட்டது. பத்து வருஷங்கள் முன்னால், முதல் காய்ப்பின்போது ஒரு சிமெண்டுக் கோணியில் உரித்துப் போட்டு நீட்டியபோது 'நல்லா இருக்குதே? இடம் குடுத்ததுக்குத்தான் வாடகை வாங்கிடறேனே? இதென்ன கொசுறா?' என்று கேட்டபடி சந்தோஷமாக வாங்கிக்கொண்டார்.*

*'எங்கப்பாரு காலத்துல மூணு மாடு கட்டியிருப்பம். சாணி அள்ளத்தான் செரியா இருக்கும். இங்க மரத்தை நடலாம்னுகூட யோசனை வந்ததில்லை' என்பார் ரெட்டியார்.*

*அண்ணா ஒரு சரியான கலைஞன். சமையல் மட்டுமின்றிப் பல சூட்சுமமான யோசனைகளை எப்போதும் வைத்திருப்பான். இனி திருக்கண்ணபுரம் இல்லை; சைதாப்பேட்டை பெருமாள் கோயில் தெருதான் என்று வேரோடு பிடுங்கிக் கொண்டுவந்துவிட்ட முதல் நாலைந்து மாதங்களில் அவன் மனிதனாக இல்லை. எப்போதும் எரிச்சல்; கோபம். உரத்த குரலில் சண்டை. ஆங்காரமாகத் தூக்கியெறிந்துவிட்டுக் கிளம்பிப்போனால் இரண்டு, மூன்று நாட்கள் கூட வீடு வராமல் இருந்திருக்கிறான்.*

*பிறகு மைதிலி வந்தபின் அடையாளம் தெரியாமல் மாறிப்போனான். எப்படியெல்லாம் காசு சேர்க்கலாம் என்பதுதான் அவன் அந்தராத்மாவில் நிரந்தரச் சிந்தனையாயிருந்தது. ஒரு யோசனையுடன்தான் தென்னைகள் நட்டான். அதே யோசனையின் நீட்சியாகத்தான் சடகோபனைச் சிறு பெட்டிக்கடை ஆரம்பிக்க ஊக்குவித்து, கடனுக்குச் சரக்கு தரும் சிறு மொத்த வியாபாரி ஒருவரை அறிமுகப்படுத்தி வைத்தான். அவனுக்கு மனைவியாக வரப்போகிறவள் நிச்சயமாக எஸ்.எஸ்.எல்.சி. முடித்திருக்க வேண்டும் என்று அம்மாவிடம் வலியுறத்தி, வத்சலாவை வரவழைத்தான். சுந்தரா எட்டாம் வகுப்பைத் தாண்டமாட்டான் என்பதை அவன் நான்கில் இருக்கும்போதே உள்ளுணர்வால் அறிந்தான். விளையாட்டுப்போல ரேடியோவைப் பிரித்துப் போட்டு சேர்க்கவும் மின்சார பல்பு மாற்றவும் சில்லறை ஒயரிங் வேலைகளையும் ஒரு பொழுதுபோக்காகக் கற்றுக் கொடுத்தான். ஆறாம் வகுப்பு விடுமுறைக் காலத்தில் தனக்குத் தெரிந்த ஸ்கூட்டர் மெக்கானிக்கிடம் அவனை அனுப்பி வைத்தான்.*

*சீனாவையும் மணியையும் சமையலில் பழக்கினான். பின்னால் எல்லாருக்குமே ஒரு தொழில் அமைந்துவிட, எல்லோருக்குமே சமையலும் கூடுதல் தகுதியாக வாய்த்துவிட்டது.*

*வரதன் கேட்டான்: 'என்னை மட்டும் எப்படிடா உன் கஸ்டடில வெச்சுக்காம விட்டே?'*

*'அது அம்மா சாய்ஸ். அஞ்சு வயசுலேயே உன்னை முதலியாண்டான் சந்நிதிக்கு அனுப்பிட்டா. அங்கே கொடுக்கற பொங்கலுக்காகவே நீ நாநூறு பாசுரம் ஒப்பிப்பே அப்போ'.*

*அவன் இயல்பாகப் பேசிச் சிரிக்கும்போதுகூட முகத்தில் நிரந்தரமாக ஒரு சோகத்தின் சாயை*

*படர்ந்து இறுகிவிட்டதுபோல் தோன்றும் வரதனுக்கு.*

*உரித்த தேங்காய்களை ஒரு பார்வை பார்த்துவிட்டு, 'போரும் இறங்கிடு!' என்று உயரே பார்த்துக் குரல் கொடுத்தான் அண்ணா.*

*வரதன் மேலே பார்த்தான். சீனா இடுப்பில் சிறு கத்தியுடன் தென்னையின் உச்சியில் நின்றுகொண்டிருந்தான்.*

*'வரதா, மகத்துக்கு ஊருக்குப் போகலாம்னு இருக்கேன் - மன்னியையும் அழைச்சுண்டு. நீ வழக்கமா போறவன். இந்த வருஷம் என்ன பிளான்?' என்று கேட்டான்.*

*'போகணும்தான்' என்று முணுமுணுத்துக் கொண்டான். அப்படியும் இப்படியுமாக இருபது நாட்களாகிவிட்டன, ஸ்ரீரங்கத்தை விட்டு வந்து. கிளம்புமுன் உத்தர வீதியில் ஒரு போர்ஷன் பார்த்து அட்வான்ஸ் கொடுத்திருந்தான். பங்குனியில் குடித்தனம் வைத்துவிடலாமென்பது அவன் திட்டம். ஆனால், காசிக்குப் போகும்படி உத்தரவாகும் போலிருந்தது. அங்கே பல்கலைக் கழகத்தில் வைஷ்ணவத்தை எம்.ஏ.வுக்குத் தனிப்பாடமாக வைத்துப் பார்க்க உத்தேசித்திருக்கிறார்களாம்.*

*'மூணு மூணு மாசத்துக்கு ஒருத்தரா அனுப்பச் சொல்லிக் கேட்கறா. போலாமோல்லியோ?' என்று ஜீயர் சொன்னார்.*

*வாய்ப்பு என்னவோ பிரமாதம்தான். ஆனால், மூன்று மாதத்துக்கென ஒரு குடித்தனம் வைக்க முடியுமா என்று அவன் யோசித்துக்கொண்டிருந்தான்.*

*'பதிலைக் காணோம்?' என்று அண்ணா அவனைக் கலைத்தான்.*

*'இல்லேடா. உற்சவத்துக்குப் போகணும்தான். ஆனா ஊர்லே நிறைய காரியம் வேற இருக்கு. மூணுமாசம் காசி போனாலும் போகவேண்டி வரும்' என்றான் வரதன்.*

*'காசிக்கா?' என்று கேட்டுவிட்டு, 'போறதானா சொல்லு, நானும் வரேன். நீ மூணு மாசத்துல திரும்பிடு. நான் ஒரு வருஷம் இருந்துட்டு வரலாம்னு பார்க்கறேன். கங்கைக் கரையிலே' என்றான் சாதாரணமாக.*

*'விளையாடறியா?' என்ற வரதன், 'அப்போ மன்னீ?' என்றான் சந்தேகமாக.*

*'அவளுந்தான் வந்துட்டுப்போறா. எத்தனை நாளைக்குத்தான் வெங்கலப்பானை சாதம் வடிச்சுண்டே இருக்கமுடியும் சொல்லு?' என்று கேட்டான்.*

*வரதனுக்கு மனத்தில் கரிய நிழலொன்று படர்வது போலிருந்தது. அண்ணா தான் யூகிக்க முடியாத ஏதாவது திட்டங்கள் வைத்திருக்கிறானா என்ன? ஒரு வருஷமென்ன, சேர்ந்தாற்போல ஒரு வாரம் அவனும் மைதிலியும் இல்லாதுபோனால் வீடு என்னவாகும் என்று எண்ணிப் பார்த்தான். அப்பா விழுந்துவிடுவார் என்று தோன்றியது.*

*முன் தீர்மானங்கள் ஏதும் உள்ளதாகக் காண்பித்துக்கொள்ளாமல், தற்செயலாக, மிக சுவாதீனமாக ஒரு பேச்சுக்குச் சொல்லும் தொனியில்தான் பேசுகிறான். ஆனால், அவன் இயல்பே அப்படித்தான். செயலுக்கு வராத எது ஒன்றையும் பேச்சுக்காக அவன் எப்போதும் சொன்னதில்லை.*

*மௌனமாகக் குளித்துவிட்டு உள்ளே போனான் வரதன். மைதிலிதான் காப்பி கொடுத்தாள்.*

இவளிடம் கொஞ்சநேரம் பேசலாமா என்று அவனுக்குத் தோன்றியது. பிறகு, இரவு பார்த்துக்கொள்ளலாம் என்று நினைத் தான். வைதேகி, அம்மாவிடம் தலை பின்னிக் கொண்டிருந்தாள். 'நானும் கூட வரேன்' என்று சொல்லியிருந்தாள்.

'நாழியாச்சேடா' என்டிறு அப்பா சொன்னார்.

அவசரமாகத் திருமண் இட்டுக்கொண்டு மேல் வேஷ்டியை ஒரு சுழற்றுச் சுழற்றி மார்பில் போர்த்திக்கொண்டு, 'வரேம்மா' என்று கிளம்பினான்.

தாற்காலிகமாக அவனுக்கு எல்லாம் மறந்து போனது.

## *12*

*நட்சத்திரங்கள் இல்லை. நிலவில்லை. சீதோஷணத்தின் வெம்மை, துளி காற்றைக்கூட அனுமதிக்கவில்லை. முதுகில் சூடேறிப் பரவும் மொட்டை மாடியின் கட்டாந்தரையில் இருளில் கரைந்து போய்க் கிடந்தான் வாசு.*

*ஒரு சாபம் மாதிரிக் கவிந்திருந்த தனிமையும் கோரமான அமைதியும் அவனைக் குதறிக் கொண்டிருந்தன.*

*வீட்டுக்கார அம்மாள், உறவுக்காரப் பையனுக்குத் திருமணம் என்று, பூட்டிக்கொண்டு குடும்பத்தோடு திருப்பாதிரிப்பூலியூருக்குப் போய்விட்டாள். கேட்பாரற்றுத் திறந்து கிடந்த அவனது முன்வாசல் அறையில் மட்டும் அழுக்குத் துணிகள் இறைந்துகிடந்தன. ஒழுங்கற்றுச் சிதறிக் கிடந்த புத்தகக் குவியலினிடையே பல்லியொன்று கடந்துபோனது. ஓட்டலில் தின்று வயிற்று வலியெடுத்ததில் சலிப்புற்று மொட்டை மாடிக்கு வந்திருந்தான் அவன்.*

*சமயமற்ற சமயமாக வந்து தொலைந்தது வீட்டு ஞாபகம். உடனே அவனுக்குச் சுய இரக்கத்தில் துக்கம் பீறிட்டது. அழுத்தி அழுத்திப் புதைத்து வைத்திருந்த பய உணர்ச்சி, அடி மனத்தில் ஒரு சிறிய விரிசலை ஏற்படுத்திக்கொண்டு, சுரீரென்று கிளம்பித் தொண்டையை அடைத்தது. உடல் வியர்த்து, பாதங்கள் சில்லிட்டது போலிருந்தது. கடவுளே, வரதன் எப்படித் தனிமையில் வருடங்களை இத்தனை காலம் ஓட்டினான்? அவனது இரவுகள் எப்படிக் கழிந்திருக்கும்?*

*ஆனால், குறுகுறுப்புகளற்ற மனத்தைத் தனிமை என்னவும் செய்துவிட முடியாது என்று பட்டது.*

*சற்றும் எதிர்பாராமல் வாழ்க்கை தன்னை எப்படியெல்லாம் புரட்டிக்கொண்டோடிவிட்டது? பொய் சுமந்த நெஞ்சில் இனி தாற்காலிக சந்தோஷங்களுக்குக்கூட இடமிருக்காது போலிருக்கிறது.*

*அவனுக்கே தெரிந்திருந்தது. அவன் மிகவும் மாறியிருந்தான். மறுபடியும் படிப்பு கண்ணாமூச்சி காட்டுகிறது. கிரிக்கெட் அலுத்துவிட்டது. பல மேட்ச்களில் அவனது நம்பகத்தன்மை விமர்சனத்துக்குள்ளாகிவிட்டது. ஒரு ஓவரின் ஆறு பந்துகளையும் ஓர் இக்கட்டான சமயத்தில் நோ - பாலாக அவன் வீசியதில், அணியிலிருந்து நீக்கப்பட்டிருந்தான்.*

*வருத்தமேதுமில்லை. கேப்டனுக்கு நன்றி சொல்லிவிட்டே திரும்பினான்.*

*அன்று குடிக்கலாம் என்று பட்டது. எப்போதும் நாடும் பீரை விடுத்து ஜின் வாங்கினான். ப்ளூ ரிபாண்ட். தண்ணீர் கலக்காமல் குடித்துக் கவிழ்த்ததில், மரணம் நெருங்கிவிட்ட உணர்வை உள்ளே தீயாய்ப் பரவிய சூடு அளித்தது.*

*இறந்திருக்கலாம் என்று நினைத்தான். பாதி தெளிந்த போதையில், செய்வதறியாமல் சாலையோரம் அமர்ந்து ஒரு பாதுகாப்புக்காக வாய்விட்டு, சஹஸ்ரநாமம் சொல்ல ஆரம்பித்தான்.*

*அதுகூட முடியவில்லை. மரத்தையாவது கட்டிக்கொண்டு கதறித் தீர்க்கலாம்போலிருந்தது. நெடுநேரம் கழித்து அறைக்கு வந்து விழுந்தான். உடம்பு சரியில்லையா என்று வீட்டுக்காரர் கேட்டபோது 'அதெல்லாமில்லையே' என்றான் இயல்பாக இருப்பதுபோலக் காட்டிக்கொண்டு.*

குடிக்காமல் இருந்திருந்தால் அவருடனாவது அமர்ந்து சற்றுநேரம் ஏதாவது பேசிக் கொண்டிருக்கலாம் என்று நினைத்தான். தறிகெட்ட நடவடிக்கைகளால் கால்பந்துபோல திசைதோறும் முட்டிமோத, என்றாவது ஒருநாள் வேலியோரம் காற்றிறங்கிக் கிடப்போம் என்பதாகச் சொற்களற்று உணர்ந்தான்.

இரண்டாமாண்டும் தேறியிருந்தான். ஆனால் மதிப்பெண்கள் காணாது. ஒரு முழு வட்டம் சுற்றி, மீண்டும் பழைய நிலையை எய்திவிட்டது போலிருந்தது. புத்தகங்களைப் பிரிக்கவே பிடிக்காமல் மணிக்கணக்கில் வெற்றுச் சுவர் காரை பெயர்ப்புகளைப் பார்த்துக்கொண்டே இருந்தான்.

கூடைக்காரி போலவும் வணிகவியல் பேராசிரியர் போலவும் ரங்கநாதரின் பாதங்கள் போலவும் எரியும் சிகரெட்டை போலவும் மைதிலி மன்னியின் பின்னல் போலவும் நாளுக்கொரு தோற்றம் தரும் நீளமான சுவர் பிளவு அது.

பல தினங்களின் கனவுகளில் அவனை யாரோ கடத்திப்போய் குழியில் இறக்கி, யானையின் காலால் இடறச் செய்ய ஏற்பாடு செய்து கொண்டிருக்கும் காட்சி திரும்பத் திரும்ப வந்தது.

ஒரு கோழைபோல இரவெல்லாம் அழுது தீர்ப்பது பற்றி விடிந்தால் வெட்கம் உண்டாகும். தன் ஆண்மையைத் தனக்கே உணர்த்தும் விதமாகச் சிகரெட்டுகளைப் புகைத்துத் தீர்த்தான்.

கெட்ட வார்த்தைகள் பழகியிருந்தன. கல்லூரியில் அவனைக் கண்டு அஞ்சவும் ஒரு சிலர் இருந்தார்கள்.

இதெல்லாம் என்ன? எதற்காகத் திரைக்கு மேல் திரையாகப் போட்டுக்கொண்டே போகிறேன்? யார், எதைக் கண்டுபிடித்துவிடக் கூடுமென்று அஞ்சுகிறேன்? அச்சம் தானா அது? மிகக் குறைந்தபட்ச உணர்ச்சியையே வெளிக்காட்டும் பெயர்ச் சொல்லாகத் தோன்றியது. நேரம், பொழுதற்று எந்த விநாடியும் மனத்தில் உதித்துக் குலை நடுங்கச் செய்துகொண்டிருந்தது அது. ஒரு பிசாசுபோல. விஷ மூச்சைப் பரப்பும் கருநாகம்போல. மேலே கவிந்து புவியோடு புதைக்கும் ஒரு சூனியக்காரிபோல.

வரதன் குறிப்பிட்டதுபோல தான் உண்ணும் சாத்வீக உணவுதான் தன்னைக் கோழையாக்கிவிட்டதா என்று அவன் எண்ணிப் பார்த்தான். பைத்தியம் முற்றியவனாகத் தள்ளுவண்டி மாட்டிறைச்சி, எலும்புகள் தட்டுப்படும் பிரியாணியை உண்டு இரவெல்லாம் வாந்தியெடுத்துக் கிடந்த தினங்களும் உடனே நினைவுக்கு வந்தன. அன்றிரவு, வெறிகொண்டவனாக, வரதன் மாட்டிவிட்டுப் போயிருந்த ரங்கநாதர் படத்தைப் பிடுங்கிக் கீழே விசிறியெறிந்து, ‘என்னை ஏன் பிளஸ் டூ பாஸ் பண்ண வெச்சே?’ என்று சுயநினைவற்றுக் கேட்டுக்கொண்டிருந்தான், வெகு நேரம்.

அடுத்த வாரம் திடீரென்று நினைத்துக்கொண்டு, யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் ஊருக்கு வந்துவிட்டான் வாசு. வரதனிடம் கூட அவன் சொல்லியிருக்கவில்லை. தன் கொந்தளிப்பு அத்தனையும் அப்பாவிடம் இறக்கி வைத்துவிடலாம் என்பதுதான் அவன் தீர்மானம்.

வைதேகி சீமந்தத்துக்கு இன்னும் பதினைந்து நாட்களிருந்தன. அதைச் சேரத்தான் வருவான் என்று எண்ணிக் கொண்டிருந்த அப்பா, அவனைக் கண்டதும், ‘என்னடா? சொல்லாமகொள்ளாம வந்து நிக்கறே?’ என்றார் வியப்புடன்.

‘சும்மாத்தான்’ என்றான் சமாளித்துக்கொண்டு.

‘காலேஜெல்லாம் எப்படிப் போயிண்டிருக்கு’ என்று மைதிலி மன்னி கேட்டாள்.

*‘வழக்கம் போலத்தான்’ என்று பதில் சொன்னான்.*

*‘ஏண்டா, மூஞ்சி உதடெல்லாம் கறுத்துக் கிடக்கு?’ என்று குண்டைத் தூக்கிப் போட்டான் சடகோபன்.*

*‘திருச்சி வெயில் உனக்கென்ன தெரியும்?’ என்று சமாளித்து, அவனைத் தனியே அழைத்துச் சென்றான் ரங்கன்.*

*‘என்ன சமாசாரம், சொல்லு!’ என்றான் நேரடியாக.*

*அவனுக்கு அழுதுவிடுவோமோ என்று பயமாக இருந்தது. கன்னங்களில் வெப்பம் பரவி, உட்புறம் அதிகமாக எச்சில் சுரப்பதை உணர்ந்தான்.*

*‘என்னால முடியலைடா ரங்கா. செத்துப்போயிடுவேன் போலருக்கு. தனியா இருக்க முடியலை, படிக்க முடியலை. இந்த வருஷம் முடிப்பேனான்னே சந்தேகம் வந்துடுத்து’.*

*‘ஏண்டா?’ என்று அதிர்ந்தான் ரங்கன்.*

*‘எதுவும் கேட்காதே. பைத்தியமாவே ஆயிட்டேன்னு வெச்சுக்கோ’ என்றான், கண்களைத் துடைத்துக் கொண்டு.*

*ரங்கன் அவனை உற்று நோக்கினான். சில விநாடிகள் ஏதும் பேசவில்லை. பிறகு, ‘காலேஜ்ல ஏதாவது பிரச்னையா? யாராவது எதாவது...’*

*அவனை முடிக்கவிடவில்லை.*

*‘எனக்கு யாரும் வில்லனே இல்லை, என்னைத்தவிர. ஏண்டா அப்படியொரு காரியம் பண்ண வெச்சிட்டீங்க? நிமிஷத்துக்கு நிமிஷம் சாகறேன் தெரியுமா?’*

*சடாரென்று இளகினாற்போல ரங்கன் சிரித்தான். ‘நீ இப்ப சொல்றவரைக்கும் எனக்கு அந்த ஞாபகமே வரலை தெரியுமா?’ என்று கேட்டான்.*

*‘உனக்கு எப்படிடா வரும்? ஐயோ இப்படியொரு காரியம் பண்ணினமோ என்ன ஆச்சோ, என்னமோன்னு அந்தத் தாசில்தார் ஆபீஸ் கிளார்க்குக்குத் தோணுமா? அவனுக்குத் தோணினாத்தான் உனக்குத் தோணும். வரதனுக்குத் தோணும். பைத்தியம் மாதிரி ஒரு மாசம் வேலை மெனக்கெட்டு நாடார் பாஷை பேசக் கத்துக்கப் பார்த்தேன் தெரியுமா? எவனாவது கண்டுபிடிச்சான்னா கன்வர்டட் கிருஸ்டியன்னா நம்புவான். கன்வர்டட் நாடார்னா செருப்பால அடிக்க மாட்டான்?’*

*‘தேவையில்லாம பயப்படறே வாசு. நீட் அண்ட் க்ளீன் சர்டிபிகேட். ஒருத்தன் வாலாட்ட முடியாதுங்கறதை மனசுல வெச்சுக்கோ. ஒரே வருஷம். படிச்சி முடிச்சியா? நேரா வந்து பிசினஸ் ஆரம்பி. எதையாவது சொந்தமா பண்ணுவோம். மறுபடியும் அதைத் தூக்கிண்டு அலைய வேண்டாம். டிகிரி இருந்தா லோன் கிடைக்கறது சுலபம்ங்கறதாலதான் வரதன் அப்படியொரு பிளான் பண்ணானே தவிர, நீ படிச்சி கவர்மெண்ட் ஆபீஸ்ல குப்பை கொட்டப் போறதா யாரும் கனவு காணலை. முடிச்சிட்டு வந்ததும் டி.ஸியைக் கிழிச்சி குப்பைல போட்டுடு. டிகிரி சர்டிபிகேட் ஒண்ணுபோதும். அதுல நீ ஐயங்காரா, நாடாரா, செட்டியாரான்னெல்லாம் யாரும் எழுதி வெக்கப் போறதில்லை.’*

*ரங்கன், அவன் நம்பிக்கை கொள்ளும் விதமாகப் பேசினான். நீண்ட யோசனைக்குப் பின் ஒரு*

*பெருமூச்சு கிளம்பியது வாசுவிடமிருந்து, பனிவிலகி, ஏதோ தெளிந்தாற்போலத்தான் இருந்தது.*

*'இப்படி உட்கார்ந்து பேசக்கூட அங்க எனக்கு யாரும் இல்லியேடா. ராத்திரிகளே வராம இருக்காதான்னு இருக்கு. படுத்தா என்ன பயங்கரம் தெரியுமா?'*

*'நான் வேணா ஒரு வாரம் லீவ் போட்டுட்டு வந்து இருக்கட்டுமா?' என்று ரங்கன் கேட்டான்.*

*'பார்க்கலாம். நான் இன்னிக்கே கிளம்பிடறேன். வரதன் சீமந்தத்தைச் சேர ஒரு வாரம் இருக்கறாப்பல வரேன்' என்றான் வாசு.*

*ஆனால், சீமந்தத்துக்கு அவனால் வர இயலவில்லை. நல்ல காய்ச்சலுடன் வீட்டுக்காரம்மாள் கரைத்துக் கொடுத்த கஞ்சியைக் குடித்துவிட்டுப் படுத்திருக்கத்தான் முடிந்தது.*

*ஏன் வரவில்லை என்று கேட்டு அப்பா கடிதம் எழுதியிருந்தார். பெரியண்ணா, மன்னியுடன் பத்ரி போகக் கிளம்பிக் கொண்டிருப்பதாகவும் அதில் குறிப்பிட்டிருந்தார்.*

## *13*

*வாசல் திறந்திருந்தது. கூடத்தில் யாருமில்லை. காயும் வெயில் வீணாகப் போகாமல் மொட்டை மாடியில் வற்றல் போடப் போயிருந்தாள் வத்சலா. மத்தியானம் சாப்பிட வந்த சீனாவும் சுந்தராவும், சாப்பிட்ட சுருக்கில் கிளம்பி விட்டார்கள். சடகோபன் கடையை மூடிவிட்டுக் கொள்முதலுக்குப் போயிருந்தான். கொல்லைப்புறத் தாழ்வாரத்தில் சாய்வு நாற்காலி ஆடிக் கொண்டிருந்தது. பக்கத்தில், ஸ்டூலில் மூக்குக் கண்ணாடியைக் கழற்றி வைத்திருந்தார் சௌரிராஜன். அவர் கண்கள் மூடியிருந்தன. ஆனால் உறங்கமாட்டார் என்பது செண்பகாவுக்குத் தெரியும். வெளிச்சமற்ற நடையோடியில் சுவரைத் தொட்டபடி மெல்ல நடந்து வந்து அவர் அருகே அமர்ந்து கொண்டாள்.*

*'சாப்பிட்டியா?' என்றார் அவர். அப்போதும் கண்களைத் திறக்கவில்லை. கடந்துபோகும் காற்றைக் கொண்டு அவர் நெருங்கிவரும் மனிதர்களை இனம் காண ஆரம்பித்திருந்தார்.*

*'ஆச்சு' என்றாள் அவள்.*

*உலகில் பேச இருப்பதெல்லாம் அந்த ஒரு வினா - விடைக்குள் முடிந்து விட்டாற்போல, கனமான மௌனம் சூழ்ந்து நின்றது சற்று நேரம். அவரே தான் அதையும் கலைத்தார்.*

*'கண்ணன் இப்போ எதுக்கு அவ்ளோ தூரம் போனான்னே தெரியலை.'*

*அவள் பதிலேதும் சொல்லாமல்தான் இருந்தாள். அவர் தனக்கே சொல்லிக்கொள்பவர் போலத் தொடர்ந்தார்.*

*'டூரிஸ்டு கூட்டிண்டு போறவன் பர்மனென்ட் சமையல்காரன் வெச்சுக்காமலா இருப்பான்? திடீர்னு எவனோ ஒருத்தன் முளைச்சி, இவனை ஏன் வந்து பண்ணிப் போடுன்னு கூட்டிண்டு போகணும்? எனக்கென்னவோ, இவனே போய்க்கேட்டுத்தான் போயிருப்பான்னு படறது.'*

*'எதுத்தாப்பல இருக்கற கோயிலுக்கே எப்பவாவது தான் போவான்' என்றாள் செண்பகா.*

*'அதைச் சொல்லு!' என்றார் சௌரிராஜன்.*

*மறுபடியும் மௌனம் புகுந்துவிட்டது. மாடியில் வத்சலா காகம் விரட்டும் சத்தம் கேட்டது. வாசலில் தள்ளு வண்டிக்காரன் பிளாஸ்டிக் பொருட்கள் விற்றுக்கொண்டு போனான்.*

*'வீட்டைப் பார்த்துக்கறான் சரி. என்னிக்காவது மனசு விட்டுப் பேசியிருக்கானா?' என்று கேட்டார்.*

*அவள் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.*

*'நான் எதிர்பார்த்தேன், எப்பாவது இது நடக்கும்னு. அவளும் இனி வேகறதுக்கு உடம்புல ஒண்ணுமில்லைன்னு ஆகறமட்டும் அடுப்படியிலேயே கிடந்துட்டா.'*

*அவர் அதிர்ந்து கேட்டார். 'திரும்பி வரமாட்டாங்கறியா?'*

*'வருவான். ஏதாவது ஏற்பாடு பண்ணிண்டு வருவான்.'*

*'எதுக்கு ஏற்பாடு?'*

*'எதுக்கோ! ஒண்ணு சொல்றேன். அவன் என்ன சொன்னாலும் ஒத்துண்டுடுங்கோ.'*

*'எனக்குப் புரியலை ஜெம்பகம்' என்றார் கவலையுடன்.*

*'பாங்கில காசு எவ்ளோ இருக்கு?' என்று செண்பகம் கேட்டாள்.*

*அவர் யோசித்தார். 'எதுக்குக் கேக்கறே?' என்று விட்டு, 'இருக்கும், சுமாரா ஏழு, எட்டு...'*

*'சடகோபன்கிட்டே சொல்லுங்கோ. கடன் கிடன் வாங்கியானா அந்தக் காஞ்சீபுரம் மனையிலே சின்னதா குடிசையாட்டமாவது போட ஆரமிச்சுடணும்.'*

*'எனக்குப் புரியலை. நீ என்ன சொல்லவரே?'*

*அவள் அழுதாள். நெடுநேரம் அழுதுகொண்டிருந்தாள். கண்கள் சிவக்க, மெதுவாக எழுந்துபோய்க் கொஞ்சம் தண்ணீர் அருந்திவிட்டு வந்து மறுபடியும் அமர்ந்து மூக்கை உறிஞ்சினாள்.*

*அவர், ஓயட்டும் என்று காத்திருந்தார். பொழுதெல்லாம் வீட்டோடு இருந்தும் அவரறியாத சில வருத்த மேற்படுத்தக் கூடிய செய்திகளை செண்பகா எத்தனை நாட்களாகச் சுமந்துகொண்டிருக்கிறாள்? சமையலறைக்குள் அவர் நுழைந்தே ஆண்டுகள் பலவாகி விட்டன. பாத்திரங்கள் மாறும்போதும் மண்ணெண்ணெய் அடுப்பு, எரி வாயு அடுப்பாக மாறியபோதும் ஒரு முறை சுண்ணாம்பு அடித்தபோதும் தகவல் அளவில் அவருக்கு அறிவித்திருக்கிறார்கள். ஆனால் வாழ்ந்துகொண்டிருந்த உடல்களுக்கு அவரறியாமல் ஏதோ ஆகிவிட்டிருக்கிறது. மேலான புன்னகையில் எல்லோருமே எதையாவது ஒளித்தவைக்கப் பழகித்தானிருக்கிறார்கள். கண்ணனுமா?*

*'மைதிலி கொஞ்சகாலம் தனியா இருக்க முடிவு பண்ணுவான்னு நினைக்கிறேன்' என்றாள் செண்பகம்.*

*அவர் எழுந்துவிட்டார். 'ஏன்டீ?'*

*'தப்பென்ன அதுலெ? நான் அதைச் சொல்லலெ....'*

*அவளை முடிக்க விடவில்லை, அவர்.*

*'என்ன ஆச்சு? என்ன நடக்கறது எனக்குத் தெரியாம இங்கே?'*

*பதறிக்கொண்டிருந்தார்.*

*'கடவுளே, நீங்க உட்காருங்கோ சொல்றேன். உட்காருங்கோ.'*

*வத்சலா பக்கத்துவீட்டுப் பெண்ணுடன் பேசிக்கொண்டிருக்கும் சத்தம் கேட்டது.*

*'எத்தனை வருஷமாச்சு அவவந்து? காட்டுச் செடி மாதிரி கவனிப்பாரில்லாமெ இருந்துட்டா. ஒரு நகை நட்டுக்கு ஆசைப்பட்டிருப்பாளா? ஒரு சினிமா, டிராமா போயிருப்பாளா?'*

*‘நீ இப்ப சொல்லப்போறியா? இல்லியா?’ என்றார் பொறுமை அழிந்தவராக.*

*செண்பகம் மறுபடி அழத்தொடங்கினாள். ‘அவளுக்கு நின்னுபோயிடுத்து...’*

*‘என்னது ...’ என்று அரைவிநாடி புரியாமல் இழுத்தவர், சட்டென்று அடங்கிப்போனார். மூடிய விழிகளிலிருந்து நெடுநேரம் நீர் வழிந்துகொண்டே இருந்தது.*

*மணி மூன்றடித்தது. வாசலில் சடகோபன் மூட்டைகளுடன் ஆட்டோவில் வந்து இறங்கினான். ‘அப்பா...’ என்று மாடியிலிருந்து லட்சமி கத்திக்கொண்டே ஓடி வருவதும், ‘மெதுவாடி சனியனே!’ என்று வத்சலா உடனோடி வருவதும் தெரிய, செண்பகா எழுந்து கொண்டாள்.*

*அவரும் சரக்குகளை எண்ணி இறக்க எழுந்துகொண்டார்.*

# 14

அன்ரிசர்வ்டு பெட்டியில் ஏறிப்படுத்துக்கொள்ளுமுன் பையைத் தொட்டுப்பார்த்துக் கொண்டான் வாசு. ஒரு சட்டை, வேட்டியும் சுக்கா ரொட்டிப் பொட்டலம் ஒன்றும் எண்பது ரூபாய் பணமும் அதில் இருந்தது. ஏதோ நினைத்துக்கொண்டவனாகப் பணத்தை மட்டும் எடுத்து, போட்டுக்கொண்டிருந்த சட்டையின் உள் பாக்கெட்டில் வைத்துக் கொண்டு, மறுபடியும் படுத்தான்.

வண்டி புறப்படச் சமயம் இருந்தது. ஆனால், அதற்குள் அத்தனை இருக்கைகளும் நிரம்பிவிட்டிருந்தன.

'சார், இந்தப் பையனை மட்டும் உங்க பக்கத்துல படுக்க வெச்சிக்கறீங்களா?' என்று கீழிருந்து ஒருவன் கேட்டான்.

வாசு கைகளை நீட்டினான். அந்த நான்கு வயதுப் பையன் 'ஙைய்ய்' என்று அழ ஆரம்பிக்க, சுளீர் என்று பின்காலில் ஒரு அடிகொடுத்தாள் அதன் தாய்.

'அடிக்காதீங்க. குழந்தைதானே?' என்று வாங்கி, தன் அருகே படுக்கவைத்து, தான் கொஞ்சம் ஒடுங்கிக்கொண்டு ஓ ஓ ஓ என்று அதைத் தட்டினான்.

நான்கு வயதுச் சிறுவனை யாரும் ஓ ஓ சொல்லிச் சமாதானப்படுத்த மாட்டார்களே என்று தோன்ற, சட்டென்று மௌனமாகி, வெறுமனே தட்டினான்.

புழுக்கம் தாங்க முடியாதபடி இருந்தது. மின்விசிறியின் விசையை மேலும் கீழுமாகப் பலர் அழுத்திப் பார்த்தார்கள்.

'மெயின் ஸ்விட்சை இன்னும் போட்டிருக்கமாட்டாம்பா' என்று ஒருவன் சொன்னான்.

உடனே விளக்குகளும் விசிறிகளும் உயிர் பெற்றன.

'த, பார்!' என்றான் அந்தக் கண்டுபிடிப்பாளன்.

வாசுவுக்கு அந்தச் சிறுவனை வைத்துக்கொண்டு படுப்பது கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால், டிக்கெட்டே வாங்காமல் 'ரைட் - ராயலாக'த் தான் ஏறிப்படுத்திருப்பதன் விளைவான குற்ற உணர்ச்சியை அந்தச் சிறுவன் ஓரளவுக்குக் குறைத்தான். அன் ரிசர்வ்டு பெட்டிக்கு டிக்கெட் பரிசோதகர் வருவாரா என்று அவனுக்குச் சந்தேகமாக இருந்தது. சென்னைக்குப் போகும்போதும் வரும்போதும் பஸ்ஸில் மட்டுமே அவன் பயணம் செய்வது வழக்கம்.

கையில் எண்பது ரூபாய் இருப்பதற்கு, கொஞ்ச தூரம் வரையிலுமாவது டிக்கெட் வாங்கியிருக்கலாம் என்று நினைத்தான். ஆனால், எந்த ஸ்டேஷனின் பெயரைச் சொல்லி டிக்கெட் கேட்பது? 'எண்பது ரூபாய்க்குள்ள ஆகற ஊருக்கு ஒரு டிக்கெட் கொடுங்க' என்று கேட்க முடியாது. ஆகவே, பேசாமல் ஜோலார்பேட்டை ஸ்டேஷனில் நின்றுகொண்டிருந்த ஏதோ ஒரு ரயிலில் ஏறிப் படுத்துவிட்டான். முன்னதாக மூன்று பேருந்துகள் மாறி, அவன் ஜோலார் பேட்டை வந்திருந்தான்.

அரை மணி நேரம் வரை நின்று, பொறுமையைச் சோதித்துவிட்டுக் கிளம்பியது ரயில். காற்று

வரவும், அவன் சட்டை பட்டன்கள் இரண்டை அவிழ்த்துவிட்டுக்கொண்டான். அப்போது, உள் பாக்கெட்டிலிருந்த பணத்தை மறக்காமல் எடுத்து பேன்ட் பாக்கெட்டில் வைத்துக்கொண்டான்.

பத்து நிமிடங்கள் வரை டிக்கெட் பரிசோதகர் வருகிறாரா என்று பார்ப்பதிலேயே மனம் நின்றது. பிறகு அதை மறந்துவிட்டுக் கண்ணை மூடிக்கொண்டான்.

விடிந்தால், கல்லூரியில் தேர்வுகள் ஆரம்பமாகிவிடும் என்பது நினைவுக்கு வந்தது. தலையை உலுக்கிக்கொண்டான். தீவிரவாதிகளிடமிருந்து விடுபட்டவன் மனநிலையில் இருந்தான். இப்படியொரு முடிவெடுக்கிற அளவுக்குத் தான் துணிந்தவன் தான் என்கிற உணர்வே அவன் திருப்திகொள்ளப் போதுமானதாக இருந்தது. துன்பங்களற்று, கவலைகளற்று, உறுத்தல்களற்று இனி சுதந்திரமாக சுவாசித்துக்கொண்டிருக்க முடியும்.

சட்டைப் பையிலிருந்து ஒரு சிகரெட்டை எடுத்தான். சிறுவன் உடன் படுத்துக்கொண்டிருக்கிறானே என்று, பற்றவைக்காமல் வெறுமனே வாசனை பார்த்தான்.

நேற்று முன் தினம் கல்லூரியின் முதல்வர் அவனைக் கூப்பிட்டு அனுப்பினார். அவனைத் தேர்வு எழுத அனுமதிப்பது குறித்து அவருக்குச் சில சங்கடங்கள் இருந்தன.

முதலாவது, அவனது வருகைப் பதிவு மிக மோசமான நிலையில் இருந்தது. கடந்த ஆறு மாதங்களில் வெறும் நாற்பது நாட்கள் மட்டுமே வகுப்புக்கு வந்திருக்கிறான்.

தவிர, ஆசிரியர்களிடமும் நல்ல பெயர் எடுக்கவில்லை. நேஷனல் கல்லூரியுடன் கிரிக்கெட் மேட்ச் நடந்துகொண்டிருந்தபோது, மைதானத்தில் குடித்துவிட்டு அவன் செய்த கலாட்டாவில் கல்லூரி இதுநாள் வரை கட்டிக்காத்து வந்த பெயரை இழந்திருக்கிறது. முதலிரண்டு வருடங்களில் காணமுடிந்த வாசுதேவன் இல்லை அவன். கல்லூரிப் படிப்பு பிடிக்கவில்லையென்றால் போய்விடலாம். யாரும் குறுக்கே விழுந்து தடுக்கப்போவதில்லை.

இத்தனை சொல்லிவிட்டு, இறுதியாக 'சாதிக்காரப் பையனாச்சேன்னு பாக்கேன். மன்னிச்சுப் பரீட்சை எழுத விடறேன்' என்று சொன்னார்.

அன்றிரவு வெகுநேரம் சுவரை வெறித்துப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். நள்ளிரவு எதற்கோ எழுந்து வந்த வீட்டுக்காரர், 'லைட் எரியறதே, வாசு தூங்கலையா?' என்று கேட்டார்.

'தோ, படுத்துக்க வேண்டியதுதான் மாமா' என்று பதில் சொல்லிவிட்டுப் பரபரவென்று ஒரு பையில் முடிந்த அளவு மட்டும் திணித்துக்கொண்டு விளக்கை அணைத்தான்.

வீட்டுக்காரர் திரும்ப உள்ளே போய்விட்டதை நிச்சயித்துக் கொண்டு, ஓசைப்படாமல் எழுந்து வெளியே வந்தான்.

கப்பிச் சாலையில் ஒன்றிரண்டு நாய்கள் மட்டும் விழித்திருந்தன. பஸ் நிலையத்துக்கு அவன் வந்தபோது, இரவு விளக்கொளியில் பேருந்துகளெல்லாம் வரிசை வரிசையாக ஆட்களற்று நின்றுகொண்டிருந்தன. விடிகிற வரை காத்திருக்க அவன் விரும்பவில்லை. ஒரு லாரி பிடித்து திருச்சி போனான். இலக்கில்லாமல் விழுப்புரம் வந்தான். மறுபடி லாரி. இம்முறை அரக்கோணம் அங்கிருந்து ஜோலார்பேட்டை.

உறங்கியது எப்போது என்று தெரியாமல் உறங்கி, அவன் கண்விழித்தபோது பொழுது விடிந்துகொண்டிருந்தது. ரயில் நிற்பது எந்த ஸ்டேஷன் என்று பார்க்க இறங்கினான். ஆந்திரா என்று தெரிந்தது. ஊர் பெயர் தெரியவில்லை. யாரையாவது கேட்கலாமா என்று நினைத்தான். கேட்டுத் தெரிந்துகொண்டு என்ன ஆகப் போகிறது என்று பேசாமல் இருந்து விட்டான்.

*எவர்சில்வர் டிரம்மில் வந்த காப்பியை வாங்கிக் குடித்தான். வாழ்க்கையில், பல் தேய்க்காமல் குடிக்கும் முதல் காப்பி என்று நினைத்துக்கொண்டான். ஆனந்தமாக ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்து, முழுதாக முடித்துத் தூக்கிப்போடவும் வண்டி கிளம்பவும் சரியாக இருந்தது. எந்த ஊர் செல்கிற வண்டி என்று இப்போதாவது கவனித்திருக்கலாம் என்று தோன்றியது. இரவு முழுவதும் டிக்கெட் பரிசோதகர் யாரும் வராதது பற்றி எழுந்த சந்தோஷம் மட்டும் வெகுநேரம் நீடிக்கவில்லை.*

*அந்த ஸ்டேஷனில் நின்று கிளம்பிய பிறகு அவனுக்குப் பின்னால் ஒரு பரிசோதகரும் ஏறினார்.*

*'டிக்கெட்?' என்றார் அவனிடம். சற்றும் தயங்காமல், 'இல்லை' என்று கையாட்டினான்.*

*'எங்கே போகிறாய்?'*

*'இந்த ரயில் எங்கே போகிறது?'*

*பரிசோதகர் முறைத்தார். மேற்கொண்டு பேசவில்லை. அடுத்த ஸ்டேஷனில் அவனை இறக்கி, தானும் இறங்கினார்.*

*'உன் பெயரென்ன?'*

*'வாசுதேவன்'*

*'தமிழா?' என்றார்.*

*'ஆமாம் சார்'*

*'எங்கிருந்து வருகிறாய்?'*

*'ஜோலார்பேட்டையிலிருந்து'*

*'டிக்கெட் வாங்கவில்லை?'*

*'வாங்கவில்லை. மன்னியுங்கள் சார்'*

*'சரி, வா' என்று கையைப் பிடித்துக்கொண்டு ஸ்டேஷன் மாஸ்டர் அறைப் பக்கம் நடந்தார். வண்டி இன்னும் நின்றுகொண்டிருந்தது.*

*'பணம் எவ்வளவு வைத்திருக்கிறாய்?' என்று அவர் ஆங்கிலத்தில் கேட்டார்.*

*'எண்பது ரூபாய் சார்' என்று சட்டை மேல் பட்டனைத் திறந்து உள் பாக்கெட்டில் கைவிட்டான்.*

*பார்த்துக்கொண்டே இருந்த பரிசோதகர் ஆச்சரியமாக, 'பிராமினா நீ' என்றார் பூணூலை கவனித்துவிட்டு.*

*அவன் ஒரு விநாடி புன்முறுவலுடன் அவரை உற்றுப் பார்த்தான். 'ஆமாம் சார். பிராமின் தான்!' என்றான் மிகுந்த பரவசமுடன்.*

# *பாகம் - இரண்டு*

## *1*

*பொழியும் பனியில் நகரம் குளிர்ந்திருந்தது. எதிர்வரும் லாரியின் முன் விளக்கொளியில் புகைமூட்டம் தென்பட்டது. சாலையோர மரங்கள் நனைந்து, விரைத்திருந்தன. பனிக்கால இரவுகளில் வீதி நாய்கள் எங்கு சென்று உறங்குகின்றன என்று கண்டுபிடிக்க முடிந்ததில்லை, இதுகாறும்.*

*ஆகாசவாணிக் கட்டடத்தின் பின்புறம் முதல் பேருந்து, சன்னல்கள் மூடியவண்ணம் வந்து நின்று, ஆளில்லாமல் புறப்பட்டபோது வாசு விழித்துக் கொண்டான். முந்தைய தினம் நள்ளிரவைத் தாண்டியும், விழித்துக்கொண்டிருந்ததில், கண்கள் தணலாகியிருந்தன. கம்பளியை இன்னும் இழுத்துவிட்டுக்கொண்டு கம்பிச் சுருள்போலச் சுருங்கிக் கிடக்க விழைந்த ஆர்வத்தை விலக்கிச் சடாரென்று எழுந்தான். குளிரைச் சமாளிக்க ஒரே வழி அதை அனுபவித்துவிடுவதுதான் என்பதுதான் அவன் தனக்குத்தானே வகுத்துக்கொண்ட சூட்சுமம்.*

*விளக்கைப் போட்டு, ஹீட்டரை இயக்கிக் கொஞ்சம் நீரைச் சுட வைத்துவிட்டு, பல் துலக்கினான். வெந்நீரில் முகம் கழுவி, அழுந்தத் துடைத்துக்கொண்டான். 'டைகர் பாமை' எடுத்து நெற்றி, மூக்கின் மேல்புறம், கால் முட்டி, நடு மார்பில் என விறுவிறுப்பாகத் தேய்த்துக்கொண்டான். அதுவும் அவன் பிரத்தியேகமாகக் கண்டுபிடித்திருந்த குளிர் தற்காப்பு நடவடிக்கை. தைலத்தின் எரிச்சலை மீறிக் குளிர் உள்ளே நுழைவதற்குள் தெற்கு தில்லியின் கணிசமான பகுதிகளை அவன் சைக்கிளில் சுற்றி வந்துவிட முடியும். அணிந்திரந்த இரு ஸ்வெட்டர்களுக்கு மேல், கழுத்தில் மஃப்ளரை இறுக்கமாகச் சுற்றிக்கொண்டு, காதுகளில் பஞ்சை அடைத்துக்கொண்டான்.*

*ஜோடுகளை மாட்டி, இறுக்கமாக முடிச்சிட்டு, தொப்பியை எடுத்துக்கொண்டு அறைக்கதவைச் சாத்தி, வெறுமனே தாளிட்டான். சைக்கிளைத் தள்ளிக்கொண்டு பெரிய கதவுவரை வந்து கொக்கியை எடுத்தபோது, காவல் கூண்டில் கூர்க்கா விழித்துக்கொண்டு, கண்ணை இடுக்கிப் பார்த்தான்.*

*'இந்திரஜித், தூங்கு, தூங்கு' என்று சொல்லியபடி வெளியே வந்து மறுபடியும் கேட்டைச் சாத்தி கொக்கியை மாட்டினான். பங்களாவின் மாடியில் நீதிபதியின் அறையில் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அவன் இரவு எத்தனை நேரம் கழித்து வந்தாலும் அவர் அறையில் விளக்கு எரிந்துகொண்டுதானிருக்கும். காலை பேப்பர் போட எழுந்திருக்கும்போதும் அப்படியேதானிருக்கும். 'ஸாப், நீங்கள் எப்போது படுக்கிறீர்கள்? எத்தனை மணிக்கு எழுந்திருக்கிறீர்கள்? மேம்சாப் உங்களைக் கண்டிப்பதே இல்லையா?' என்று ஒருமுறை அவரிடம் கேட்டான்.*

*நீதிபதி சிரித்தார். 'மேம்சாபா? அவளே ஒரு கொட்டப்புளி அல்லவா? தூங்குகிற விஷயத்தில் என்னைவிடப் படுமோசம்!' என்றார் பைப்பில் புகையிலையை நிரப்பிக்கொண்டபடி.*

*'இருந்தாலும் நீங்கள் உடம்பைப் பார்த்துக்கொள்ள வேண்டும்.'*

*'அச்சா பேட்டா!' என்றார் நீதிபதி.*

*பகுதிநேர வேலைக்காரர்களை சொந்தக் குழந்தையாக நினைக்கிற, அல்லது கூப்பிடுகிற கனிவை நிச்சயம் உச்ச நீதிமன்றம் வழங்கியிருக்க முடியாது. வி.கே.சாபிடம் கொலை வழக்கு சென்றால், சந்தேகமில்லாமல் ஆயுள் தண்டனை என்பது நகரப் பிரசித்தம்.*

*'ஆயுள் தண்டனை ரொம்ப நல்லது வாசு. அது குற்றவாளிகளைக் குதறிக்குதறி யோசிக்கவைக்கும், பண்படுத்தும். நான்கூட உருப்படாத வக்கீலாகத்தான் இருந்து சீரழிந்திருப்பேன். உன் மேம்சாபைக் கல்யாணம் செய்துகொண்ட பிறகுதான் நீதிபதியானேன்.'*

*'ஐஸா நஹி போல்னா சாப். மேம்சாப் மிக நல்லவர்கள்'*

*'நான் மட்டும் வேறென்ன சொன்னேன்? ஆயுள் தண்டனை ரொம்ப நல்லது!'*

*குருட்டு அதிர்ஷ்டம் என்று அவன் நினைத்துக்கொண்டான். தினசரி பேப்பர் போட்டு, காய்கறிகள் வாங்கிக் கொடுத்து, மொத்த வீட்டையும் பெருக்கித் துடைப்பதற்கு மட்டும் சம்பளமாகத் தங்கிக்கொள்ள ஓரிடம் தருவதற்கு தில்லியில் வேறு யார் முன்வருவார்கள்?*

*'எனக்குச் சம்பளமோ, சாப்பாடோ வேண்டாம் மேம்சாப். உங்கள் டிரைவர், கூர்க்கா, தோட்டக்காரன் வசிக்கும் பொந்துகளில் எனக்கும் ஒரு மூலை. பஸ்!' என்றான் வாசு.*

*'அச்சா?' என்றாள் நீதிபதியின் மனைவி.*

*'வேறென்ன வேலை செய்கிறாய், சாப்பாட்டுக்கு?'*

*'பேப்பர் போடுகிறேன். தவிர, இரண்டு தமிழ் வாரப் பத்திரிகைகளுக்கு இங்கே சப் - ஏஜென்ஸி, எடுத்திருக்கிறேன். ஹஜ்ரத் நிஜாமுதீனில் ஒரு காலனியில் மட்டும் நாற்பத்தைந்து தமிழ்க் குடும்பங்கள் உள்ளன. அவர்களுக்கு புதன்கிழமை கல்கியுடனும் வியாழன் குமுதமுடனும் வெள்ளி பாக்யாவுடனும் சனி தாயுடனும்தான் விடிய வேண்டும்.'*

*'அப்புறம்?'*

*'சுமாராகச் சமையல் வரும். யு.என்.ஐ. கேன்டீன் கான்ட்*

*ராக்டர், பிழைத்துப் போ என்று வேலை போட்டுக் கொடுத்திருக்கிறார்.'*

*'இவ்வளவுதானா?'*

*'இரவு எட்டு மணிக்குப் பிறகு ஐ.என்.எஸ். கட்டடத்துக்குப் போய்விடுவேன். தேசத்தின் ரகசியங்களையெல்லாம் தெரிந்துகொண்டபடி 'மனோரமா' அலுவலகத்தில் பார்ஸல் சுற்றுவேன்.'*

*'ரகசியங்களெல்லாம்தான் யு.என்.ஐ. கேன்டீனில் பிளேட் பிளேட்டாகக் கிடைக்குமே?'*

*'அதெல்லாம் செய்தியே இல்லை மேம்சாப். நான் ஒரு ஸ்கூப் தகவல் சொல்லட்டுமா? ஜட்ஜ் சாபிடம் உண்மைதானா என்று கேட்டுச் சொல்லுங்கள். நேற்று பதவி ஏற்றிருக்கிற புதிய பிரதமர் செய்யப்போகிற முதல் காரியம், மண்டல் கமிஷன் அறிக்கையைப் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு விட்டு, உடனடியாக அமுலுக்குக் கொண்டுவருவதுதான்.'*

*'பக்வான்! உன்னை இங்கே தங்க வைப்பது ஆபத்தாச்சே!'*

*‘ஐயோ, நான் ஒரு குழந்தை மேம்சாப். நீங்கள் கைவிட்டால் கேர்-ஆப்-பிளாட்பாரம் தான்!’*

*நீதிபதியின் மனைவி, தாளாத வியப்புடன் கேட்டாள்: ‘என்ன படித்திருக்கிறாய்?’*

*அவன் யோசித்தான். எதையும் மறைப்பதில் எப்போதும் சிக்கல்கள்தான் வந்து சேருகின்றன. உண்மையைச் சொல்பவனுக்கு எதையும் ஞாபகம் வைத்துக்கொண்டிருக்க அவசியம் ஏற்படுவதில்லை.*

*‘டிகிரி டிராப் அவுட் மேம்சாப். அதனாலெல்லாம் என்னை வீடு கூட்டிப் பெருக்கச் சொல்வதா என்று யோசிக்க ஆரம்பித்துவிடாதீர்கள். தற்காலிகமாக எனக்கொரு புகலிடம் வேண்டியிருக்கிறது.’*

*‘பிறகு?’*

*‘கொஞ்சம் சம்பாதித்துக்கொண்டு கல்காஜி பக்கமாக வாடகை அறை எடுத்துக்கொண்டுவிடுவேன்.’*

*மேம்சாப், குறும்பாக அவனை முறைத்துக்கொண்டே சொன்னாள். ‘நான் நினைக்கிறேன், நீ வெகு சீக்கிரம் எம்.பி.யாகி விடுவாய்.’*

*‘உங்கள் ஆசீர்வாதம் மேம்சாப்’*

*போலியான பணிவுடன் அவன் கை கூப்பி அவன் முன் தலையைக் குனிந்து நீட்ட, சிரித்தபடியே தலையில் கைவைத்து, நகர்ந்தாள்.*

*சைக்கிளை வேகமாக மிதித்தான் வாசு.நேரமாகிவிட்டது. ரயில் நிலையம் சென்று பேப்பர்களை எண்ணி வாங்கிக்கொண்டு புறப்பட்டால் பதினாறு சாலைகளையும் இரண்டு காலனிகளையும் ஏழரைக்குள் சுற்றிவர வேண்டும். அஜ்மல்கான் வீதியில் ஒரு சாய் குடித்துவிட்டு, எட்டே காலுக்குள் யு.என்.ஐ. கேன்டீனுக்கு வந்துவிட வேண்டும்.*

*

*கேன்டீனில் அன்று காலையிலேயே நிறையப் பேர் சேர்ந்திருந்தார்கள். முன்புறம் அஸ்பெஸ்டாஸ் கூரை சரித்து, நட்டிருந்த கம்பங்களில் நின்று தேனீர் அருந்தியபடி பேசிக்கொண்டிருந்தார்கள் நிருபர்கள். நின்றபடி சாப்பிட ஏதுவாக அமைக்கப்பட்டிருந்த வட்டக்கல் மேசைகளில் பூரியும் கிழங்கும். வெட்டவெளிக் குளிருக்குத் தொட்டுக்கொள்ளக் கூடுதலாய் மிளகாய்க் குழம்பு.*

*வாசு, நேரே கிரைண்டர் ஓடிக்கொண்டிருந்த இடத்துக்குப் போனான். மாவைத் தொட்டுப் பார்த்துவிட்டுக் கையில் அள்ளியெடுத்துப் பாத்திரத்தில் போட்டான். துளி தொட்டு நாக்கில் வைத்துப் பார்த்த ஹெட்குக் ‘நாலு பழம் எலுமிச்சை பிழி’ என்று உத்தரவிட்டார்.*

*பரபரவென்று வேலையில் முனைந்தவன், எலுமிச்சை சாதம் கலந்தான். வடை தட்டிப் போட்டெடுத்தான். அப்பளம் பொரித்துக் கூடையில் அடுக்கினான். வேகவைத்த உருளைக்கிழங்கில் தோல் உரித்தான். வெண்ணெய் காய்ச்சி, தனியே எடுத்துவைத்தான். பாத்திரங்களைக் கழுவி, தரையைத் துடைத்தான். பச்சை மிளகாய் நறுக்கி வைத்துவிட்டு எழுந்து சென்று மணி பார்த்தான். நாலாகி இருந்தது.*

*மாலை டிபனை கவனிக்க வேறு ஆட்கள் வந்துவிடுவார்கள். அவன் முகம் கழுவி, அழுக்கு*

வேட்டியைக் களைந்து பேண்ட் அணிந்துகொண்டான். சூடாக ஒரு காப்பி போட்டுச் சாப்பிட்டுவிட்டு, வெளியே வந்தான். கட்டடத்தைச் சுற்றிக்கொண்டு முன்பக்கம் போனபோது கணபதி சார் எதிர்ப்பட்டார். 'லெட்டர் வந்திருக்கேப்பா உனக்கு?' என்றவர் 'என் டேபிள்ல இருக்கு. போய் எடுத்துக்கோ' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

வாசு, கடிதங்களுக்கு அவர் முகவரியைத்தான் கொடுத்திருந்தான். நீதிபதி வீட்டு முகவரியைத் தருவதில் அவனுக்குச் சில சிக்கல்கள் இருந்தன. பிரதானமாக, அவன் அங்கு இருக்கும் நேரம் குறைவு. கடிதங்களை வாங்கி, தன் கூண்டில் சொருகி வைக்கிற கூர்க்கா, மறந்து போய்விடுகிறான், அடிக்கடி. மேலும் தவறுதலாக அவை சமயத்தில் மேம்சாபிடம் போய்டுகின்றன. கவனிக்காமல் பிரித்துவிட்டு, தமிழ் எழுத்துக்களைப் பார்த்து, டிரைவருக்கோ என நினைத்து, அவனிடம் நீட்டினால் கடங்காரப் பாண்டியன் படித்துப் பார்க்காமல் தரமாட்டான்.

'இந்தா வாசு, உனக்கு லெட்டர் வந்திருக்குது. உங்கண்ணனுக்கு ரெண்டாங் குழந்தை பிறந்திருக்குதாம். சரோ யாருப்பா? அவங்க ஊட்டுக்காரருக்கு டைபாய்டு வந்திருக்குதாம். இப்ப பரவால்லைன்றாங்க. வூடு கட்ட ஆரமிச்சிகிறாங்களாமா? எங்கிட்ட சொல்லவே இல்லியே நீ? உங்க அண்ணாத்தையே கொல்த்து வேலை பார்க்கறாராம். கரெக்டா? அதைத்தானே இப்ப படிச்சிக்கினுவரே? அம்மா உடம்பு பரவாயில்லியாம். அப்பாருக்குத்தான் கண்ணு செரியா தெரியமாட்டேங்குதாம். நீ எப்ப வரேன்னு கேட்டிருக்காரு பாரு. தீவளிக்குத்தான்னு எழுதிப் போட்ரு...'

'ராஸ்கல்' என்று அடிக்கக் கை ஓங்கினால், 'சாப், கொலை! கொலை!' என்று கத்திக்கொண்டே ஓடிவிடுவான்.

கணபதி சார் அவனுக்கொரு பாதுகாப்புப் பெட்டகம்போல இருந்தார். பணத்தைக் கொடுத்துவைப்பதில் தொடங்கி கடிதங்களுக்கு முகவரியாக அவர் அமைந்தது வரை வாசுவுக்கு அவரது அறிமுகம் மிக உபயோகமாயிருந்தது. தவிரவும் தமிழர்.

'படிப்பை முடிச்சிட்டு வந்திருந்தேன்னா உன்னை ஒரு ஜர்னலிஸ்டா ஆக்கறதுக்காவது ட்ரை பண்ணியிருப்பேனேடா' என்பார் கணபதி சார்.

'அதெல்லாம் வராது சார் எனக்கு'

'தோசைக்கு அரைக்க மட்டுந்தான் வருமாக்கும்? ஃபூல்!'

முட்டாளாக வாழ்வதில், அல்லது காட்டிக்கொள்வதில் உள்ள சௌகரியங்களை இரண்டரை வருட தில்லி வாழ்க்கையில் அவன் நன்றாக உணர்ந்திருக்கிறான். உள்ளுக்குள் போடும் கணக்குகள் உண்டாக்கும் பரவசத்தை வெளிக்காட்டிவிடாதபடிக்கு முகத்தில் நிரந்தரமாகப் படிந்துவிட்ட அப்பாவித் திரையும் மொழியில் தட்டுப்படும் கோழைத்தனமும் ஓர் அரணாயிருக்கின்றன. சகலமானவர்களும் வசப்படுகிறார்கள். சூரியனின் ஒளி அவன் மீதும் படுகிறது. புன்னகை செய்கிறார்கள். அவன் நல்லவன். தட்டிக் கொடுக்கிறார்கள். அவன் அப்பாவி. உண்ண உணவும் தங்க இடமும் கிடைத்துவிடுகின்றன. அவன் ஆதரவற்றவன். நம்பி, சில பொறுப்புகளும் தரப்படுகின்றன. பிராமணன்; சூதுக்கு வசப்படமாட்டான்.

வாசு சிரித்தான். சிகரெட் புகையை வான்நோக்கி ஊதினான். சைக்கிளில் ஏறி கரோல்பாக் சென்றான். அங்கே, ஏழாவது செக்டரில், இரவுகளில் மட்டும் பணியாற்றுவதாக ஒப்பந்தமாகி ஒரு பாரில் அட்டெண்டராகச் சேர்ந்திருக்கிறான்.

## *2*

*‘இருபத்தைந்தா? இருபத்தேழா? என்ன உன் வயது? பார்க்க, கண்ணியமானவனா யிருக்கிறாய். நீ தலை வாரியிருக்கும் முறையை வைத்தே சொல்லி விடுவேன், யு பிலாங் டு எ டிபிகல் சவுத் இண்டியன் ஆர்தடாக்ஸ் ஃபேமிலி. சரியா? இத்தனை எண்ணெய் தடவாதே தலையில். டெல்லியில் எறும்புகள் அதிகம். என்ன செய்து கொண்டிருக்கிறாய் இந்த பாரில்? நீ செய்ய வேண்டியது என்ன? சுமாராக ஆங்கிலம் பேசுகிறாய். ஆகவே, படித்திருக்கிறாய். உன் எதிர்காலத்தை இந்த அறைக்குள்தான் தீர்மானித்திருக்கிறாயா?’*

*அவன் பதிலேதும் சொல்லவில்லை. பத்து மணிக்குக் கடை கட்டியாக வேண்டும். எல்லா டேபிள்களும் காலியாகிவிட்ட பின் பும் அந்த இருவரும் எழுந்திருக்க விருப்பமின்றி இன்னொரு லார்ஜ் கேட்டார்கள்.*

*‘கொடுத்துத் தொலை. இன்றைக்கு ஏதாவது வழக்கைத் தோற்றுவிட்டு வந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்’ என்றார் பார் முதலாளி.*

*வக்கீல்கள், சிவில் அதிகாரிகள், தெற்கு பிளாக் குமாஸ்தாக்கள், பத்திரிகையாளர்கள், வியாபாரப் பிரதிநிதிகள், இரண்டாம் கட்ட அரசியல்வாதிகள் எனச் சுமார் நூறு பேரைப் பற்றியாவது வாசுவுக்கு அந்தரங்கமாகத் தெரிந்திருந்தது. காதுகளே இல்லாதவன்போல நடந்துகொள்வது ஒரு கலை. பார் முதலாளி அவனுக்கு அதைக் கற்றுக் கொடுத்திருந்தார்.*

*‘எல்லார் பேச்சையும் நிச்சயம் நீ கவனிக்க வேண்டும். உபயோகம் என்ன என்கிற பேச்சுக்கே இடமில்லை. விபரீதமாக ஏதாவது காதில் விழுந்தால் உடனே என்னிடம் சொல்லி விடு.’*

*இரண்டு லார்ஜ்களை எடுத்துக்கொண்டுபோய் அவர்கள் முன் வைத்தான் வாசு. வழக்கறிஞர்களுக்கு ஞாபகம் முற்றிலும் பிசகவில்லை.*

*‘நான் கேட்டதற்கு நீ இன்னும் பதில் சொல்லவில்லை. உன் எதிர்காலத்தை இந்த அறையில்தான் தீர்மானித்திருக்கிறாயா?’*

*அவனுக்குச் சங்கடமாக இருந்தது. ‘இல்லை சார்’ என்று நகர்ந்துவிடப் பார்த்தான்.’*

*‘போகாதே. நில் நில். அப்படியானால் நீ உன் முதலாளிக்கு துரோகம் நினைக்கிறாய். ஆம் ஐ ரைட்?’*

*வாசு, முதலாளியைப் பார்த்தான். வேறு வழியின்றி, அவர் அருகே வந்து ‘ஏதாவது பிரச்னையா ஸார்?’ என்றார் பணிவாக.*

*‘நத்திங், நத்திங். கிளம்ப வேண்டியதுதான்’ என்று நிதானத்துக்கு முயன்றபடி தம்ளரில் மிச்சமிருந்ததைக் கவிழ்ந்துக்கொண்டார்கள்.*

*‘மிஸ்டர் பார் ஓனர், இனிமேல் உங்களுக்கு ஊழியம் செய்ய இவனை மாதிரி பையன்கள் கிடைக்கமாட்டார்கள். ரிஸர்*

*வேஷன் நிறைய கொண்டுவரப்போகிறார்கள். பிற்படுத்தப்பட்டவர்களெல்லாம் முன்னேறிவிடுவார்கள். தேசம் செழிப்படையப்போகிறது! ஹா!’ என்றார் ஒரு வழக்கறிஞர்.*

*‘பிரச்னை இல்லை சார். அப்போது நானே உங்களுக்கு ஸர்வ் பண்ணுவேன்’ என்றார் முதலாளி.*

*‘ரியலி? தட்ஸ் ஃபண்டாஸ்டிக்’ என்று பெரிய நகைச்சுவையைக் கேட்டது போலச் சிரித்தார்கள்.*

*‘ஆனால், இப்போது கதவை அடைக்க வேண்டும் சார்’ என்றார் முதலாளி.*

*‘யெஸ், யெஸ்’ என்றபடி பில்லுக்குப் பணம் வைத்துவிட்டு, தள்ளாடி நகர்ந்தார்கள். அவர்கள் தலை மறையும்வரை காத்திருந்துவிட்டு, ‘நாய்கள்! நாய்கள்!’ என்றார் முதலாளி.*

*‘வெறும் வயிற்றெரிச்சல்! இவன் பண்டிட் ஜாதி. அடுத்தவன் வளர்ந்துவிடப்போகிறானே என்ற வயிற்றெரிச்சல். நீ சொல், தண்ணி அடிக்கிற பண்டிட் உருப்படுவானா? ஸாலா, இவனையெல்லாம் கையைக் காலைக் கட்டி, ராஜ்பாத்தில் குடியரசு தின மிலிட்டரி வண்டி அணிவகுப்பின்போது குறுக்கே உருட்டிவிட்டுவிட வேண்டும்.’*

*வாசு, அவரை அனுசரித்துச் சிரித்தான். ஆனால் ஓர் அனல்மின் நிலையம் மாதிரி உள்ளுக்குள் வெப்பம் பரவுவதைக் கூடவே உணர முடிந்தது.*

*தலைநகரில் சூடு பரவிக்கொண்டிருந்தது. கலவரங்களை எதிர்பார்த்துக் காவல் நிலையங்களில் படை குவித்துக் கொண்டிருந்தார்கள். நிச்சயம் ஓரிரு தலைகளாவது உருளக்கூடுமென்று கணபதி சார் சொல்லியிருந்தார்.*

*‘ஆல் இர்ரெஸ்பான்ஸிபிள் ஃபெல்லோஸ். வெறும் அரசியல்வாதிகள்!’ என்று சீனியர் நிருபர் ஒருவர் அவரிடம் பேசிக்கொண்டிருந்தபோது வாசு அருகில் இருந்தான்.*

*‘வளரட்டும் சார். எஸ்.ஸி., பி.ஸி., எம்.பி.ஸி. கேண்டிடேட்ஸ் எல்லாரும் நன்றாக வளரட்டும். அமோகமாக வாழட்டும். இருபது, முப்பது என்ன? தொண்ணூறு சதவீதமே இடம் ஒதுக்கட்டும். ஆனால் ஒரு காலக்கெடு வைக்கலாமில்லையா? ஸே, ஒரு இருபது வருஷம். அல்லது முப்பது வருஷம். முப்பத்தைந்து வருஷம். அதற்கப்புறம் ரிஸர்வேஷனை எடுத்துவிடட்டும். ஒரு கம்யூனிடி வரை முப்பதாண்டு அவகாசம் போறாது?’*

*கணபதி சார் இடை மறித்தார். ‘இது சீரியஸான விஷயம், குஞ்சப்பா! மெட்ரோபாலிடன் நகர மக்களை மனத்தில் வைத்துக்கொண்டு பேசக் கூடாது. பீகாரிலும் ஓரிஸாவிலும் இன்னும் கொத்தடிமைகள் இருக்கிறார்கள். ராஜஸ்தானில் வோட்டே போட்டுப் பழக்கமில்லாத ஒரு கூட்டம் இருக்கிறது. எங்கள் தமிழ்நாட்டிலேயே பள்ளிக்கூடம் இல்லாத கிராமங்கள் எத்தனை தெரியுமா? முப்பது வருடத்தில் இவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த எந்த கவர்ன்மெண்டுக்கு நேரம் கிடைக்கப்போகிறது? ஓட்டப்பந்தயத்தில் கால் சுளுக்கிக்கொண்டவனும் கலந்துகொள்ளத்தான் வேண்டுமென்றால், அவனைப் பத்தடி முன்னால் நிறுத்திவைப்பதுதான் நமது தருமாயிருக்க முடியும். ஜனநாயக அரசு என்பதால் பத்தடி என்பது நூறாடியாக்கப்படலாம். ஆனால், சலுகையை நீ மறுக்கக் கூடாது.’*

*வாசு கவனித்துக்கொண்டிருந்தான். ஏதும் குறுக்கே பேசிவிடக்கூடாது என்றுதான் நினைத்திருந்தான். ஆனால், சுயகட்டுப்பாட்டை மீறிப் பொங்கிய உணர்வில், ‘அப்ப, பின்தங்கிய பிராமணனையெல்லாமும் பேக்வர்டுல சேர்க்கட்டுமே சார்? ஒண்ணு காசு பணத்துல பின் தங்கியிருக்கணும்; இல்லியா? படிப்புல பின் தங்கியிருக்கணும். அதுவும் இல்லாட்டி, சமூக அந்தஸ்துல பின் தங்கியிருக்கணும். இந்த மூணு க்வாலிஃபிகேஷனும் எஃப்.ஸி. கம்யூனிடியிலேயும் உண்டே?’*

*குஞ்சப்பன் சிரித்தான்.*

*‘ஸார், உங்களுக்குத் தெரியாததில்லை. நான் பேக்வர்ட் கிளாஸ்தான். ஆனாலும் இந்த வரம்பு மீறிய சலுகை அருவருப்பூட்டுகிறது. ஒருவிதத்தில், நாட்டு ஜனத் தொகையில் ஒரு பெரிய கூட்டத்தைச் சோம்பேறியாக்கிவிடும் இது. சொல்லப்போனால் சலுகைகளால் எந்த கம்யூனிடியும் வளராது. மாறாக, ஒரு மாதிரி எருமை மாட்டுத்தனம்தான் வந்துவிடும்.’*

*‘ஸ்டில் யு டோன் அண்டர்ஸ்டாண்ட் மை பாய்!’ என்றார் கணபதி சார்.*

*‘வா. ஒரு டீ சாப்பிடலாம்’ என்று கேன்டீனை நோக்கி நடந்தார். வாசுவும் கூடவே சென்றான்.*

*‘எங்கடா போயிட்டே, வேலை நேரத்துல?’ என்று கல்லாவிலிருந்து இரைந்தார் மணி அய்யர்.*

*‘விடுங்க ஐயர்வாள். பேசிட்டிருந்தோம்’ என்றார் கணபதி சார்.*

*‘நீங்க பேசுவீங்க சார். உங்க பிழைப்பே அதான். இவன் வாயைப் பார்த்துட்டுச் சும்மாதானே நிப்பான்?’*

*‘சும்மா நிக்கறவனா இவன்? விட்டா, பார்லிமெண்டுல போய்ப் பேசி ரிஸர்வேஷன் பில்லை பாஸ் பண்ணவிடாம அடிச்சிடுவான் போலிருக்கு’ என்று சிரித்தார்.*

*‘இப்படிப் பாருங்க சார். வளர்ந்த கம்யூனிடி. வளராத கம்யூனிடி. இதானே சார் அளவுகோல்? எவனா இருந்தாலும், எந்த கம்யூனிடியா இருந்தாலும் ஸ்கூல் ஃபைனல் வரைக்கும் ஃப்ரீ எஜுகேஷன்; கம்பல்ஸரி எஜுகேஷன், சரியா? ஆசுபத்திரியிலே பிறப்புச் சான்றிதழ் கொடுக்கும்போதே ஒரு காப்பி, லோக்கல் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பிடணும். ஸ்கூல் அட்டண்டன்ஸ்ல பேர் இருந்தாத்தான் ரேஷன் கார்டுலேயும் பேர் வரும்னு வைங்க. இப்ப என்ன ஆச்சு? படிக்க முடியாதவன், வசதி இல்லாதவன்கிற பேச்சு வராதில்லை? அதுக்கப்புறம் ஓப்பன் காம்படிஷன்ல மோதட்டும். உண்மையிலேயே பிற்படுத்தப்பட்ட வங்க வளரணும்னு நினைக்கற அரசாங்கம் இதைத்தானே சார் செய்யணும்? ஆகக்கூடிய செலவை ஒயின்ஷாப் நடத்தி சம்பாதிச்சாகூடத் தப்பில்லை சார்.’*

*‘என்ன போடு, போடறே நீ?’ கணபதி சார் சிரித்தார்.*

*‘சீரியஸா சொல்றேன் சார். எல்லாரும் படிச்சி முன்னேற வழி பண்ணாம ரிஸர்வேஷன்னு லிஃப்ட் பண்ணிவிடறது உண்மைல அந்த கம்யூனிடிக்குப் பண்ணுற துரோகம்தான் சார். இஞ்சினீயரிங்ல, தொண்ணூறு மார்க் எடுக்கறவன் சாயா போடுவான். அறுபது எடுத்தவனுக்கு கவர்மெண்ட் வேலை கிடைக்கும். ரோடு சரியில்லை. பிரிட்ஜ் இடிஞ்சுதுன்னு சொன்னா, ஏன் சார் இடியாது?’*

*‘என்ன கோவம் வருது உனக்கு!’*

*‘கோவம் இல்லை சார். வயித்தெரிச்சலும் இல்லை. ஓப்பன் காம்படிஷன் வெச்சாலும் என்னால ஜெயிக்க முடியாது. மக்கு பிராமணன்தான் நான். என் கேள்வி என்னன்னா, மக்கா, புத்திசாலியான்னுகூடப் பார்க்காம எஃப்.ஸியா, நீ ஒதுங்குன்றது எப்படி நியாயம்ங்கறது தான்...’*

குஞ்சப்பன் சொன்னான் : *‘பார்த்துக்கிட்டே இருங்கோ கணபதி சார்! ஒரு அம்பது வருஷம் பி.ஸி., எஸ்.ஸி.க்குக் கொடி பிடிச்சிட்டிருப்பாங்க. திடீர்னு ஒருநாள் பிராமின்ஸ், பண்டிட்ஸ்தான் மைனாரிடி, உண்மையில அவங்கதான் பேக்வர்டுன்னு சொல்லி பிளேட்டைத் திருப்பிடுவாங்க. தே நீட் வோட்ஸ் அட் எனி காஸ்ட்; தட்ஸ் ஆல்!’*

*வாசு கேன்டீனுக்குள்ளே போய்விட்டான். நீதிபதியின் மனைவி, வரும்போது குடை மிளகாய்*

வாங்கிவரச் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது.

மறுபடியும் கரோல்பாக் போகவேண்டுமே என்று அலுப்பாக இருந்தது அவனுக்கு.

## *3*

*இரவு அறைக்குத் திரும்பும்போது, தலைவலிப்பது போலிருந்தது வாசுவுக்கு. இப்போதெல்லாம் அடிக்கடி தலைவலிக்கிறது. கண் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும் என்று நினைத்துக்கொண்டான். ஆனால் தில்லி கண் மருத்துவர்கள் ஐம்பது ரூபாய்க்குக் குறைந்து கட்டணம் வசூலிப்பதில்லை. அதனாலேயே அவன் நாட்களைக் கடத்திக்கொண்டிருந்தான். டைகர் பாமைத் தேய்த்துக்கொண்டு, கோணிகளை ஒன்றன்மீது ஒன்றாக விரித்து, அதன்மேல் பாயைப் போட்டு, பிறகு மெத்தையை விரித்துப் படுத்தான். இரண்டு கம்பளிகளை ஒன்றாக வைத்துத் தைத்து ஒரு பிரத்தியேகமான 'ரஜாயை' அவன் உருவாக்கியிருந்தான். இரக்கம் மேலிட்ட தருணத்தில் மேம்சாப் அளித்திருந்த, சற்றே கிழிந்த பழைய கம்பளிகள். வெயில் காலத்தில் தொட முடியாது அவற்றை, சமயமில்லாமல் காய்ச்சல் கண்டு, போர்த்திக்கொண்டு படுத்தால் சிதையில் இருப்பது போலிருக்கும்.*

*கணபதி சாரிடம் ஒரு ரஜாய் வாங்கித்தரக் கேட்கலாமா என்று தோன்றியது. கூச்சம் போலொரு உணர்வு எப்போதும் தடுத்துக்கொண்டே இருக்கிறது. கோரிக்கை ஏதுமற்ற வெறும் சந்திப்புகளில் கூட ஓரிரு சொற்களுக்கு மேல் பேச வராது அவரிடம். அவர் ஆளுமையின் மொத்தச் சாறையும் கண்களில் தேக்கி வைத்திருப்பதுபோல உணர்வான் வாசு. நேருக்கு நேர் இரண்டு நிமிடங்கள் முகம் பார்த்துப் பேசி விட முடிந்ததில்லை, அவனால். ஒரு தமிழர், தலைநகரச் செய்தியுலகில் தவிர்க்கமுடியாத நபராகவும் யாரும் எட்டித் தொடப் பல்லாண்டுகள் பிடிக்கக் கூடிய உயரத்தைத் தொட்டவராகவும் இருப்பதால் உண்டான பிரமிப்பினால்தான் தனக்கு அவ்வாறு தோன்றுகிறதா என்று எண்ணிப் பார்த்தான்.*

*இருக்க முடியாது என்று தோன்றியது. சொந்தச் சகோதரர், சொந்த இனம், சாதி என எதுவும் தன்னிடம் செல்வாக்குகொள்ள இயலாது என்று பட்டது. அவர் தமிழராக இல்லாது இருந்தால், இந்தியில் பேசிப் பழகியிருப்போம் என்று எண்ணிக்கொண்டான்.*

*தன்னை பிரமித்துப் பேசவிடாமல் செய்வதெல்லாம் அவரது கல்வியும் கல்வியின் விளைவான உயர்பீடமும்தான் என்று உறுதியாகத் தோன்றியது. ஆனால், இன்றைக்கு என்ன ஆகிவிட்டது எனக்கு? ரிஸர்வேஷன். ஆம். பரபரவென்று என்னென்னவோ சொல்லிவிட்டோம் இடையில் புகுந்து. கணபதி சார், அதை அதிகப்பிரசங்கம் என்று கருதவில்லை. வாயை மூடு என்று சிடுசிடுக்கவில்லை. அவர் இயல்பின் படியான புறக்கணிப்பு விதமாக எழுந்து போய்விடவுமில்லை. மாறாக, பேசவிட்டு, ஆழம் பார்ப்பதாகத்தான் பட்டது. எதையும் மறுப்பதோ, தன் கருத்தை முன் வைப்பதையோகூட குஞ்சப்பன் பேசும்போதுதான் செய்தார். தன் விஷயத்தில் ஏன் அப்படி நடந்துகொண்டார்? கேவலம் ஒரு எடுபிடிப் பையனை எதற்காகப் பேசவிடுகிறார் என்று குஞ்சப்பன் நினைத்திருக்கக்கூடும். ஒத்த கருத்துதான் எனினும் தனக்கும் அவனுக்கும் அதை எதிர்ப்பதற்கான காரணங்கள் வேறு வேறானவை என்று நினைத்தான்.*

*மிகப்பரந்த சிந்தனையுடன் மக்களை இது மந்தைகளாக்கிவிடும் என்கிற தொலைநோக்குப் பார்வையுடன் அவன் பேசுகிறான். தனக்கு அப்படியெல்லாம் சிந்திக்க வராது என்று அவனுக்குப் பட்டது.*

*மிகச்சுலபம். அவனறிந்து சுமார் ஒரு நூற்றாண்டுக் காலமாக அவன் குடும்பம் ஏழைமையின் வழுக்குப் படிகளில் கால்வைத்து ஏறியே வாழ்ந்து வந்திருக்கிறது. அப்பா சொல்லியிருந்த பழைய கதைகளெல்லாம் பெருஞ்சோகம் சுமந்தவை. நாளைய பொழுதின் அரிசிக்கு என்ன செய்வதென்கிற சிந்தனையைப் பற்றிக்கொண்டிருப்பவனுக்குப் படிப்பு எப்படி வரும்? அரிசி ஒரு குறியீடுதான். அற்ப சந்தோஷங்களைக்கூட அனுபவிக்க முடியாத நெருக்கடி, காலச் சூழலில் முகங்களுக்கு நிரந்தரமானதொரு சவக்களையைக் கொடுத்துவிடுகிறது.*

*அவனுக்கு ஒரு சம்பவம் நினைவுக்கு வந்தது. சடகோபனுக்குக் குழந்தை பிறந்து நான்கு மாதங்களாகியிருந்த சமயம். வீட்டில் வடிக்கிற சாதத்தின் அளவைக் குறைத்து, பால் பவுடர் வாங்கலாம் என்கிற யோசனையைப் பெரியண்ணா முன் வைத்திருந்தான். அவனையும் சடகோபனையும் தவிர, வேறு யாருமே சம்பாதிக்கத் தொடங்காத நேரம் அது. வரதன் எப்போதாவது கொண்டுவரும் இருநூறு முன்னூறையும் வாசல் படியிலேயே உட்கார்ந்திருந்து அப்பா வாங்கிக்*

*கொள்வார். அவர் விரல்களின் ரேகை அதில் படிவதற்குள் கடன் கொடுத்திருந்தவர்களின் ஞாபகம் வந்துவிடும் அவருக்கு.*

*'கடன் தரவனும் கடவுளும் ஒண்ணு. கடவுளை ஏமாத்தலாமோ?' என்பார் அப்பா. ஓரிரண்டு ரூபாய் மீதியிருந்தால், பெரியண்ணா அதைப் பிடுங்கிக்கொண்டுபோய் வெற்றிலை, சீவலும் புகையிலையும் வாங்கிவந்து அவரிடமே தந்துவிடுவது வழக்கம்.*

*'உனக்கு இதுதானேப்பா சாப்பாடும் பட்சணமும்?' என்று சிரித்தபடி கேட்டுவிட்டுப் போவான்.*

*எப்போதோ திருப்பதிக்கு மஞ்சள் துணியில் முடிந்துவைத்த ஒரு ரூபாய்க் காசைத் தவிர வீட்டில் கொஞ்சமும் பணமில்லாத ஒரு தினத்தில் குழந்தைக்கு வயிற்றுப்போக்கு உண்டானது.*

*காசில்லாமல் ஆகக்கூடிய, தானறிந்த அத்தனை வைத்தியங்களையும் அம்மா செய்து பார்த்தாள்.*

*வேட்டியை உதறிக் கட்டிக்கொண்டு அப்பா தெரு இறங்கி வெளியே போனார், கடவுள்களைத் தேடி.*

*சடகோபன் கடையில் வாங்கி வைத்திருந்த வயிற்றுவலி மாத்திரைகளைக் கொடுத்துப் பார்க்கலாமா வென்ற யோசனையை அண்ணா நிராகரித்தான்.*

*'குழந்தைடீ அது! கொன்னுடாதீங்கோ' என்றவன், 'தோ வரேன்' என்று பரபரவென சட்டையைக் கழற்றிவிட்டு, தட்டுச் சுற்று வேட்டியைப் பஞ்சகச்சமாக்கிக்கொண்டு வெளியே விரைந்தான்.*

*வாசுவுக்குத் தணலின் ஜொலிப்புடன் அந்தக் காட்சி மனத்தில் வெந்துகொண்டிருந்தது வெகுநாட்களாக. மஹாளய அமாவாசை தினம் அது.*

*குளத்தங்கரையில் பித்ரு காரியம் செய்யவென வரும் பல சாதிக்காரர்களையன்றி அண்ணாவின் இலக்கு வேறில்லை என்பது புரிந்துவிட்டது. பேச்சற்ற வெறுமையைக் குழந்தையின் இடைவிடாத அழுகை நிறைத்து மறைத்துக்கொண்டிருந்தது.*

*அப்பா வெறுங்கையுடன் திரும்பி வந்து இருண்ட முகத்துடன் கூடத்தில் அமர்ந்து அரை மணி ஆனதும் அண்ணா வந்தான்.*

*'தூக்கிண்டு கிளம்பு!' என்று சடகோபனுக்கு உத்தரவிட்டுவிட்டு வத்சலாவிடம் பணத்தைக் கொடுத்தான்.*

*அப்பா பார்த்துக்கொண்டே இருந்தார். விநாடியில் நடந்தது என்னவென்று விளங்கிவிட்டது அவருக்கு. அவர் விரல்கள் நடுங்க ஆரம்பித்தன. கண்களிலிருந்து கரகரவென நீர் சுரந்தோடியது. அம்மா வாயடைத்து அமர்ந்திருந்தாள்.*

*'அவாவா வேலையைப் பார்க்கப்போகலாம்' என்று அண்ணா சொன்னான். சொல்லிவிட்டு*

*கொல்லைப்புறம் போனான்.*

*திரும்பி வரும்போது வேட்டி மறுபடி தட்டுச் சுற்றாகியிருந்தது. 'சாதம் போடு' என்று மைதிலியிடம் சொன்னான். பிறகு எதுவும் பேசாமலேயே சாப்பிட்டு முடித்தான்.'*

*வாசுவுக்கு, மைதிலி அதை எப்படி எதிர்கொண்டிருக்கிறாள் என்பதை அறிய, கட்டுக்கடங்காத ஆவலாயிருந்தது. ஆனால், வீட்டில் இனி உரையாடல்களே நிகழாதோ என்று அச்சம் உண்டாகிற வண்ணம், ஒரு பூதமாகக் கவிழ்ந்து கிடந்தது மௌனம்.*

*மறுநாள் தாங்கமுடியாமல் அவனே, அவள் கிணற்றடியில் துணி துவைத்துக்கொண்டிருந்தபோது கேட்டுவிட்டான்: 'கஷ்டமாயிருந்ததா மன்னி?'*

*மைதிலி அவனை நிமிர்ந்து பார்த்தாள்.*

*'ம்?' என்றாள் புன்னகை செய்தபடி.*

*'இல்லே. நேத்து அண்ணா உணர்ச்சிவசப்பட்டு அப்படிப் பண்ணியிருக்கவேண்டாம்தான். உங்களுக்கு எவ்ளோ கஷ்டமாகியிருக்கும்னு எனக்குத் தெரியும். ஸாரி'.*

*'பைத்தியம்! குழந்தை நீ எதுக்கு ஸாரி சொல்றே? சட்டுனு ஒரு அம்பது ரூபா வேணும்னா, யார்தான் என்ன பண்ணமுடியும்? உங்கப்பா கடன் கேட்கப் போனாரே, கிடைச்சுதா? உங்கண்ணாவுக்கு சரியாத்தான் தோணியிருக்கு. அந்த நெருக்கடியிலே எப்படியோ யோசிச்சி ஒரு வழி கண்டுபிடிச்சுட்டாரேன்னு எனக்குக் கொஞ்சம் பெருமையாகக் கூட இருந்தது.'*

*'பொய் செவால்லாதீங்கோ மன்னி!' என்றான் வாசு.*

*மைதிலி அவனை உற்றுப் பார்த்தாள்.*

*'நான் என்ன பண்ணணுங்கறே இப்போ? அவர் பண்ணினது தப்புன்னு நீ நினைச்சேன்னா, போய் நேரடியா சொல்லிடு. எனக்குத் தோணலை. நான் பொருட்படுத்தலை. ஆச்சா?' என்றாள் தொடர்ந்து சிரித்துக்கொண்டே.*

*வாசு பேசாமலிருந்தான்.*

*'எங்கப்பா போயிருக்கார் வாசு. அவர் வருஷம் தவறாம மகாளய அமாவாசைக்குத் தர்ப்பணம் பண்ணிவைக்கப்போய் சம்பாதிக்கறதைப் பார்த்திருக்கேன். கம்பராஜபுரத்திலே, அவருக்கு போஸ்ட்மேன் சாஸ்திரிகள்னே பேர்.'*

*'ஆனா, அண்ணாக்கு ஒரு மந்திரம்கூடத் தெரியாது மன்னி. திவசத்துக்கு யாராவது சாப்பிடக் கூப்பிட்டாக்கூட, போகக்கூடாது; ஆகாத காரியம்பான். இவன் போய் என்ன மந்திரம் சொல்லி பண்ணி வெச்சிருப்பான்? கடவுளே!'*

*'எல்லாம், சுக்லாம்பரதரம் போறும் அவாளுக்கு. நீ போ. படிக்கிற வேலையைப் பார்.'*

*'அப்பா இன்னும் நார்மலாகலை மன்னி'*

*'ஆனா லச்சுமி நார்மலாயிடுத்தே' என்று சிரித்தாள் மைதிலி.*

*கண்ணுக்குத் தெரியாத சிறுசிறு நூலிழைகளில் யாரோ மணி கோத்துக்கொண்டிருக்கிறார்கள். நெருக்கமாகவும் பிசிறுகளற்றும். நகக்கணு இடைவெளி அளவே வெளியில் நீட்டிக்கொண்டிருக்கிறது நூலிழையின் முனைகள். இழுத்து ஒரு முடிச்சுப் போட்டுவிட இயலுமா என்பதுதான் சவால். பார்வையைக் குறுக்கி, இரு கைவிரல் நுனிகளில் தாங்கிப் பற்றி இழைகளை ஒன்று சேர்ப்பதில் ஜீவன் முடிந்துவிடுகிறது. வழுக்கியோடும் மணிகளைச் சேர்த்துத் தொகுத்து மீண்டும் மீண்டும் எப்படியாவது மாலையாகிவிடக் காத்திருக்கின்றன நூலிழைகள். முடிச்சிடப்பட இயலாத அதன் நுனியில்தான், தான் வாழ்ந்துகொண்டிருக்கிறோமா என்ன?*

*மிக நீண்டதொரு பெருமூச்சில் தன் மூளை அதிர்வுகளைக் காற்றாக்கி வெளியேற்றிவிட்டுப் பிணமாகக் கிடக்கலாம் போலிருந்தது வாசுவுக்கு.*

*ஆனால், உடைசல்களும் ஒழுங்கற்ற பொருட்களும் சுரண்டச் சுரண்டத் தீராத அழுக்கும் மண்டிய சிறு அறையில் அவனால் செய்யமுடிந்ததெல்லாம் மற்றுமொரு இரவை உறங்கிக் கழித்து, பனி இருளில் அதிகாலை எழுந்து பேப்பர் போடப் போக முடிந்ததுதான்.*

## *4*

*‘மண்ணின் மைந்தர்கள் என்று சொல்ல நம் நாட்டில் ஓரினம்கூடக் கிடையாது தெரியுமா?’ என்று வி.கே. சாப் சொன்னார்.*

*அபூர்வமாக வேலைகளற்று அன்று வீட்டில் இருந்தவர், ‘இன்றைக்கு நானும் வாசுவுடன் சேர்ந்து வீட்டைச் சுத்தம் செய்யப்போகிறேன்’ என்று அறிவித்துவிட்டு ஒரு வெள்ளைத் துணியை எடுத்து முகத்தில் தீவிரவாதி போலச் சுற்றிக்கொண்டு, வாக்குவம் க்ளீனரால் கார்ப்பெட்டுகளைத் தேய்க்க ஆரம்பித்தார்.*

*‘சாப், சாப்! நீங்கள் தயவுசெய்து வைத்துவிடுங்கள். நான் எதற்கு இருக்கிறேன்?’ என்று வாசு அவர் கையிலிருந்து ட்யூபை பிடுங்கினான்.*

*‘சுப்!’ என்று விழிகளை உருட்டிப் போலியாக மிரட்டினார் நீதிபதி.*

*‘என் மகன் அமெரிக்காவிலிருந்து வருகிறான். என் சந்தோஷத்தை இப்படி வெளிப்படுத்துவது எனக்குப் பிடித்திருக்கிறது. இன்று நீ எனக்கு உதவி செய்தால் மட்டும் போதுமானது’ என்றார் கண்டிப்பாக.*

*நாற்காலிகளைக் கவிழ்த்துப்போட்டார். ஷோ-கேஸிலிருந்து பொம்மைகளை எடுத்து, சோபாவில் குவித்தார். பிறகு, தரையில் அமர்ந்து ஒவ்வொன்றாகத் துடைக்க ஆரம்பித்தார்.*

*மேம்சாப் புன்னகையுடன் இவற்றை கவனித்துக்கொண்டிருந்தாள்.*

*‘வாசு, அவர் உன் கெஞ்சல்களுக்கு மசியமாட்டார். உச்சஞ்தலையில் களிப்பு ஏறிவிட்டது!’*

*வீட்டில் ஒரு பெங்காலிப் பெண்மணி சமையலுக்காக இருந்தாள். அவளை வேடிக்கை பார்க்கச் சொல்லிவிட்டு மேம்சாப் சில பிரத்தியேக பஞ்சாபி இனிப்பு வகைகளைத் தானே தயார் செய்துகொண்டிருந்ததையும் அவன் கவனித்தான்.*

*மிகவும் நெகிழ்ந்துள்ள நேரங்களில் முதலாளி - பணியாளர் என்கிற உணர்வெல்லாம் எப்படியோ இல்லாமலாகி விடுகிறது. வாசு சொன்னான், ‘உங்கள் களிப்பு, விதம்விதமான வாசனைகளாக வெளியே வருகிறது. சாபின் களிப்பு தூசி நெடியாகக் கிளம்புகிறது. இதில் என்ன வித்தியாசம் மேம்சாப்?’*

*‘வாசு, நம் மக்கள் அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் வேறுவேறு தேசங்களுக்கும் போய் செட்டிலாக விரும்புவதற்குப் பணம்தான் காரணம் என்று நினைக்கிறயா?’ என்று நீதிபதி கேட்டார்.*

*‘வேறென்ன இருக்க முடியும் சாப்?’ என்றான் வாசு.*

*‘எண்பத்தொன்பதில் நான் கென்யாவுக்குப் போனேன். அங்கே எத்தனை இந்தியர்கள் தெரியுமா? ஒரு சிறு மாநிலமாகச் சேர்த்துவிடலாம் போல!’ என்று தனக்குத் தானே வியப்புற்றுக் கூறிக்கொண்டவர், ‘ஆயிரமாயிரம் வருஷங்களுக்குப் பிறகு அவரவர் வேர்கள் உள்ளிழுத்துக் கொள்ள ஆரம்பித்திருக்கின்றன’ என்றார்.*

*‘எனக்குப் புரியவில்லை சாப்!’ என்றான் வாசு.*

*சற்று நேரம் பேசாதிருந்த நீதிபதி, ‘நீ பண்டிட் அல்லவா?’ என்று கேட்டார்.*

*‘பிராமின்தான் சார்’*

*‘ஆம்... ஆரியன். மத்திய ஆசியா, கைபர் கணவாய் விஷயங்களைப் படித்திருப்பாய்’.*

*‘ஆமாம் சாப். எங்கள் ஊர் திராவிடக் கட்சிகள் இதைச் சொல்லித்தான் அரசியல் பண்ணிக்கொண்டு வந்திருக்கின்றன.’*

*‘திருப்பிச் சொல்லி வாயடைக்கச் செய்ய, தமிழ்நாட்டு பிராமின்ஸுக்குத் தினவு கிடையாது. சொல்லலாமே, திராவிடர்கள் மத்திய தரைக்கடல் பகுதியிலிருந்து வந்தவர்கள்தான். ஆப்பிரிக்க நீக்ராய்டுகளின் வம்சா வழியினர்தான் தென்னிந்தியப் பழங்குடி மக்கள் - இருளாஸ் பன்யாஸ் அண்ட் அதர்ஸ். இங்கே, வடகிழக்கு மாநிலத்தவர்களின் முகங்களைப் பார்! மங்கொலாய்டு என்பார்கள். செங்கிஸ்கானின் பேரன் பேத்திகள். ஆஸ்டிரிக்ஸ் இனம் என்று கேள்விப்பட்டிருக்கிறாயா? இந்திய நாகரிகத்தை வடிவமைத்தவர்கள். முண்டா மொழி அவர்களுடையதுதான். யார் அவர்கள்? வடகிழக்கு தேசங்களிலிருந்து வந்தவர்கள்...’ என்று சொல்லிக்கொண்டே வந்தவர், ‘தோடாபானி மிலாவோ’ என்று குரல் கொடுத்துவிட்டு, ‘வாசு, இந்தியா ஒரு பெரிய லாட்ஜ். அவ்வளவுதான். இயற்கையான சௌகரியங்கள் ஜாஸ்தி. ஆகவே, பிழைக்க வந்து குடியேறியவர்களின் பிரதேசமாகிவிட்டது. இத்தனை வருஷம் கழித்து நாமெல்லாம் பிழைப்பைத் தேடி வெளிநாடு போகிறோமென்றால், ஒரு முழுவட்டம் சுற்றி, ஆரம்பப் புள்ளிக்கு வருவதாகத்தான் எனக்குத் தோன்றுகிறது. இன்னும் நூறு வருஷம்... அதிகம் போனால் இருநூறு வருஷம். தேசம் காலியாகிவிடும். மறுபடியும் இடம் பெயர்ந்து யாராவது வந்து சேருவார்கள்.’*

*‘அப்போதும் நமது அரசியல்வாதிகள் மட்டும் நகரமாட்டார்கள் சாப். உண்மையில் அவர்கள் மட்டும்தான் இந்த மண்ணில் சுயம்புவாக முளைத்தவர்களாக இருக்கமுடியும்.’*

*‘சுப்!’ என்றார் நீதிபதி. ‘சுப்ரீம்கோர்ட் நீதிபதி வீட்டில் உரத்த குரலில் அரசியல் பேசக்கூடாது!’ என்றவர், குரலைத் தழைத்து, ‘ரகசியமாகப் பேசலாம்’ என்றார் சிரித்துக்கொண்டே.*

*‘உங்கள் மகன் எத்தனை மாத விடுமுறையில் வருகிறார் சாப்?’ என்று வாசு கேட்டான்.*

*‘எத்தனை மாதமா? இருபதே நாட்கள். அவன் பெண்டாட்டிக்கு இங்கே இருப்புக்கொள்ளாது’ என்று மேம்சாப் உள்ளிருந்து குரல் கொடுத்தாள்.*

*‘கேட்டாயா? இதிலிருந்து புரிந்திருக்குமே, யாரும் இந்த மண்ணின் மக்கள் அல்ல என்று? நான்கூட ரிடையரான பிறகு பாரீஸ் போய்விடலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன். நல்ல பண்பாடு, நல்ல இசை, நல்லமது. இதற்கு மேல் என்ன வேண்டும்?’*

*கீழ்த்தளம் முழுவதும் சுத்தம் செய்துவிட்டார்கள். ‘மாடியை மாலை வைத்துக்கொள்ளலாம்’ என்று நீதிபதி சொன்னார்.*

*நீங்கள் போய் ஓய்வெடுங்கள் சாப். நான் பார்த்துக்கொள்கிறேன்’ என்றான் வாசு. சொல்லிவிட்டுச் சற்று தயங்கினான்.*

*அவனுக்கு, அவரிடம் ஒரு கோரிக்கை இருந்தது. ஒரு கடிதம் எழுத வேண்டும். மிக அழகான படித்ததுமே மதிப்பேற்படும் விதமான ஆங்கிலத்தில் ஒரு விண்ணப்பம்.*

*தில்லியிலிருக்கும் பெரும்பான்மையான தமிழர்களை அவன் அறிவான். அவர்களது உத்தியோகம், சம்பளம், வீட்டு விவரங்களுடன். தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் அனைத்துப் பத்திரிகைகளுக்கும் ஏஜென்ஸி தரக்கோரி, கேட்க விரும்பினான். வேண்டுகோள்தான். தருவதும் தராததும் அவர்கள் இஷ்டம். 'நீண்ட நெடுங்காலமாகப் பணியாற்றும் ஏஜெண்டுகளை எந்தப் பத்திரிகையும் மாற்ற விரும்பாது' என்று மலையாள மனோரமா அலுவலகத்தின் சர்குலேஷன் பிரிவில் பணியாற்றும் அவன் நண்பன் ஒருவன் கூறியிருந்தான்.*

*நீளும் சொந்தம். தொடரும் உறவு. நல்ல விஷயம்தான். ஆனால் இளமைத் துடிப்புடன், ஆர்வப் பிழம்பாகத் தலைநகரில் ஒரு தமிழ் இளைஞன் காத்திருக்கிறான் என்கிற விஷயத்தையாவது அவர்கள் காதில் போட்டுவைக்கலாமே?*

*ஐ.என்.எஸ். கட்டடத்தில் ஒரு நம்பகமான தமிழதிகாரி மூலம் அவனொரு தகவல் கேள்விப்பட்டிருந்தான். தலைநகரில் குப்பை கொட்டிக்கொண்டிருக்கிற முகவர்கள் மீது பல பத்திரிகை நிர்வாகத்தினர் அதிருப்தி கொண்டிருக்கின்றனர். அலட்சிய பாவமும் விற்பனை உயர்வுக்கு முனையாத பாங்கும், கேவலம், அனுப்புகிற போஸ்டர்களைக் கூடச் சுவர்களில் ஒட்டாமல் பொட்டலம் கட்டப் பயன்படுத்திக்கொள்கிற அக்கறையின்மையும் தமிழ் முதலாளிகளைச் சலிப்புற வைத்திருக்கின்றன.*

*கிடைக்கிற இடைவெளியில் தன்னைத் துருத்திக்கொள்ள அவன் விரும்புகிறான். அவன் வேண்டுவதெல்லாம் அழகான ஆங்கிலத்தில் ஒரு கடிதம். படித்ததுமே நம்பிக்கையும் உற்சாகமும் ஏற்படும்விதமாக. நீதிபதி அவனைப் பார்த்தார்.*

*'பத்திரிகை ஏஜென்ஸியில் அத்தனை நல்ல எதிர்காலம் இருக்கிறதா என்ன?' என்று கேட்டார்.*

*'எதிர்காலம் இல்லை சாப். ஆனால் நிகழ்காலம் நன்றாக இருக்கிறது. புதிய, பரபரப்பூட்டும் செய்திகள் தாங்கிய அரசியல் இதழ்கள் வர ஆரம்பித்திருக்கின்றன. மக்கள் அதில் எதைக் காண்கிறார்களோ தெரியவில்லை. கிராமங்களில்கூட நிறைய விற்கிறது.'*

*'அப்படியா?' என்றார் நீதிபதி. சற்றுப் பொறுத்து, 'நீ அவற்றைப் படிக்கிறாயா?'*

*'இல்லை சாப்' என்றான்.*

*'வேறென்ன படிப்பாய்?'*

*'எனக்குப் பத்திரிகை படிக்கும் அவசியமே இல்லை சாப். யுஎன்ஐ கேன்டீனிலல்லவா வேலை பார்க்கிறேன்! தவிர நேரமும் விருப்பமும்கூட இல்லை.'*

*'வேறெதில் உனக்கு விருப்பம்?' என்று நீதிபதி கேட்டார்.*

*அவன் சற்றும் தயங்கவில்லை. 'சம்பாதிக்க வேண்டும் சாப்! வரி கட்டி மாளாத அளவுக்கு சம்பாதிக்க வேண்டும். நான் பிராமணன். அரசு வேலை கொடுக்காது. படிப்பு அரைகுறை. பெரிய உத்தியோகங்களைப் பற்றிக் கனவு காணவில்லை. சுயதொழில்தான் என்னைப் போன்றவர்களுக்கு ஒரே போக்கிடம்'*

*'எனக்கு ஆச்சர்யமாயிருக்கிறது!' என்று அவர் சொன்னார்.*

*'சொல்கிறேனென்று தவறாக நினைக்காதே. பொதுவாக பிராமணர்கள் ரிஸ்க் எடுக்கமாட்டார்கள்.'*

*வாசு சிரித்தான். 'பிராமணன் என்பது அரசு சொல்வதுதான் சாப்! ஏழைகளில் ஜாதி கிடையாது அல்லவா! எல்லாரும் இடுப்பில் கயிறு கட்டிக்கொண்டிருக்கிறார்கள். பழக்கதோஷத்தில் நாங்கள் தோளில் மாட்டியிருக்கிறோம். அவ்வளவுதான் வித்தியாசம்.'*

*'ஆனால் சில அடையாளங்கள்...'*

*அவரை முடிக்கவிடவில்லை அவன். 'ஒன்றுமே இல்லை சாப். நானாகச் சொல்லியிராவிட்டால் என்னை நீங்கள் கண்டுபிடித்திருப்பீர்களா?'*

*அவர் சிரித்தார். 'நான் அதைச் சொல்லவில்லை. எல்லாவற்றிலுமே சில விதிவிலக்குகள் உண்டு. ஆனால், உயர்ஜாதி மனோபாவம் என்பது இங்கே இன்னும் மாறவில்லை வாசு.'*

*'மன்னித்துவிடுங்கள் சாப். நீங்கள் இதற்கு பீகார், ஒரிஸாவை உதாரணம் காட்டினால், நான் ஏற்கமாட்டேன். அங்கேயேகூட உயர் ஜாதி மனோபாவம் என்பதை அவரவர் பணமும் விளைநிலங்களுந்தான் தீர்மானிக்கின்றன. சோற்றுக்கு லாட்டரி அடிக்கிற எந்த பிராமணனும் பிச்சைக்காரனுக்குத் தண்ணீர் கொடுத்த குவளையைத் தூக்கிப் போடுவதில்லை.'*

*'ரொம்ப நல்லது. நீ கேட்ட கடிதத்தை நான் மாலை எழுதிவைக்கிறேன்' என்று சட்டென்று பேச்சைத் துண்டித்துவிட்டுப் போனார் நீதிபதி.*

*'இதுதான் உயர்ஜாதி மனோபாவம். நீங்கள் ஒரு பிற்படுத்தப்பட்ட வகுப்பினராயிருந்தும் எப்படி இது உங்களுக்கு வந்தது?' என்று கேட்க நினைத்தான்.*

*ஆனால், 'மாஃப் கீஜியே சாப்' என்று சொல்லிவிட்டு வேலையில் ஆழ்ந்துபோனான்.*

# *5*

*பாண்டியனுக்குத் திருமணம் ஏற்பாடாகியிருந்தது. விடுமுறையில் அவன் ஊருக்குப் போகவும், இரண்டு நாட்களில் மாற்று டிரைவர் வந்துவிடுவான்; அதுவரை நீ கார் ஓட்டு என்று மேம்சாப் வாசுவிடம் சொன்னாள்.*

*'லைசென்ஸ் இருக்கிறதா?' என்று நீதிபதி கேட்டார்.*

*'இருக்கிறது சார்!' என்று வாசு சொன்னான்.*

*'பார்த்து, ஐம்பதுக்கு மேல் வேகம் வேண்டாம். மதுரா சாலை மாட்டு வண்டி செல்லத்தான் லாயக்கு.'*

*'நான் பார்த்துக் கொள்கிறேன் சாப். அசோக் பையா, தேரில் போய் வருவதுபோல அழைத்துப்போய் வந்துவிடுகிறேன்.'*

*அசோக் சிரித்தான். 'நீ தேரில் போயிருக்கிறாயா?'*

*'போனதில்லை. ஆனால் சோப்ரா சாப் சீரியலில் பார்க்கிறேன். கர்ணனின் ரதம் கப்பல் போலல்லவா போகிறது! ஆனால் கிருஷ்ணரின் டிரைவிங் சுத்தமாயில்லை. அர்ஜுனன் ரதத்தில் இருக்கும்போதெல்லாம் குலுங்கிக்கொண்டே இருக்கிறான்.'*

*நீதிபதியின் மருமகள் சிரித்தாள். 'நல்ல ஆப்ஸர்வேஷன்' என்று சான்றிதழ் வழங்கினாள்.*

*மறுநாள் அதிகாலை வாசு அவர்களை அழைத்துக்கொண்டு மதுரா புறப்பட்டான்.*

*தொம்பங்கூடைக்குச் சட்டை மாட்டினாற்போலிருந்தாள் அசோக்கின் மனைவி. ஆபரணங்கள் உட்பட அனைத்துமே பெரிது பெரிதாக இருந்தால்தான் அவளுக்குச் சரிப்படும் போலிருக்கிறது என்று வாசு நினைத்துக்கொண்டான். பேசும்போது முன்னும் பின்னுமாக ஆடிக்கொண்டே இருக்கும் அவளது பிரும்மாண்டமான காது வளையங்கள் அடிக்கடி அவன் கவனத்தைக் கலைத்தன. அதிகாலை வேளையில் ஒருவரால்வாய் நிறையப் பான் போட முடியுமா என்பதும் அவனுக்கு வியப்பாக இரந்தது. இவள் அமெரிக்காவிலும் இப்படித்தான் இருப்பாளா என்று சந்தேகமாக இருந்தது. நீதிபதி மகனின் சகிப்புத்தன்மை அளவிடற்கரியதாயிருக்கும் என்று நினைத்துக்கொண்டான். ஆனால், சகிப்புத்தன்மை என்பது மிகையாயிருக்கலாம். புரிந்துகொள்ளுதலில் பிரச்னை ஏற்படாத வரையில் எது ஒன்றும் பொருட்படுத்தும்படியான பிழையாகத் தோன்றாதல்லவா!*

*அவனுக்கு மைதிலியின் ஞாபகம் வந்தது. மன்னிக்கு எப்போதாவது வெற்றிலை போட்டுக்கொள்ளப் பிடிக்கும். ஆசை வந்துவிட்டால், இரவு அப்பா உறங்கியபின் சத்தமில்லாமல் அவர் பொட்டலத்தைப் பிரித்து, இரண்டு வெற்றிலைகளை எடுத்துக்கொண்டு, துணைக்கு வத்சலாவை அழைத்துக்கொண்டு வாசலுக்குப் போய்விடுவாள்.*

*எந்நேரமானாலும் கோயிலின் எதிர்ச்சாலையில் போக்குவரத்து ஓயாது. நடுவே சுவரில் கோடுபோட்டுக் கிரிக்கெட் ஆடும் பையன்கள். மணி அடித்து குல்பி ஐஸ் விற்றுப்போடும் தாடிக்காரக் கிழவன். பெட்ரோமாக்ஸ் ஒளியில் அவன் முகம் தாகூருடையது போலிருக்கிறது என்பாள் மைதிலி.*

*பத்தே முக்காலுக்குக் கடையைப் பூட்டிவிட்டு இளையாழ்வார் தெரு முனையில் சடகோபன் தலை தெரிகிறவரைதான் அவள் கணக்கு.*

*'வந்தாச்சு என் மச்சினர்; உங்காத்துக்காரர்' என்றபடி எழுந்து விடுவாள். அதற்குள் இரண்டு வெற்றிலைகளும் கரைந்து, இறங்கியிருக்கும். உள்ளே போய் ஒரு சொம்பு நீர் அருந்திவிட்டு, 'இன்னிக்கென்னவோ வயிறு திம்முனு இருந்தது' என்பாள் வத்சலாவிடம்.*

*வாசு திரும்பிப் பார்த்தான் அசோக்கின் மனைவி, கார் சன்னல் வழியே உதட்டில் இரு விரல்களை வைத்து 'சப்'பென்று வெளியே துப்பினாள். இவள் நிச்சயம் மண்ணின் மகளாகத்தானிருக்க முடியும் என்று நினைத்தவனுக்குச் சட்டென்று சிரிப்பு வந்துவிட்டது. கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டான்.*

*திடீரென்று நினைத்துக்கொண்டவள்போல அவள் வாசுவிடம், 'சீரியல் பார்க்கிறாயே, கிருஷ்ணர் என்ன ஜாதி சொல்?' என்று கேட்டாள்.*

*படித்துக்கொண்டிருந்த தினசரியை மடித்து வைத்துவிட்டு அசோக் அவனை கவனித்தான்.*

*'சீரியல் தொடங்கியது இப்போதுதானே மேம்சாப். நான் பிறந்ததிலிருந்து கிருஷ்ண ஜெயந்தி தவறாமல் கொண்டாடும் குடும்பத்திலே வாழ்ந்தவன்' என்று வாசு சொன்னான்.*

*தொடர்ந்து, 'என் அப்பா அவர் சிறு வயதில் கிருஷ்ணர் பார்த்த வேலையைப் பார்த்திருக்கிறார்.'*

*'ரியலி?'*

*'ஆமாம் மேம்சாப். எங்கள் ஊரில் படிப்பு வராதவர்களை மாடு மேய்க்கத்தான் போகச் சொல்லுவார்கள்.'*

*மிகப்பெரிய நகைச்சுவையைக் கேட்டதுபோலச் சிரித்தாள் அவள். 'கிருஷ்ணருக்குக்கூடச் சிறுவயதில் படிப்பு வரவில்லையோ என்னவோ.'*

*'அதனாலென்ன மேடம்? அவர் பேக்வர்ட் கிளாஸ்தானே? இப்போது உயிர் உடம்புடன் திரும்பிவந்தால் பிரதான் மந்த்ரி சாப் கூப்பிட்டு செகரடேரியட்டில் ஒரு வேலை போட்டுக் கொடுத்து உட்கார வைத்துவிடுவார்'*

*'ரொம்ப வாய் உனக்கு' என்று அசோக் சொன்னான். 'ஹி இஸ் ஸேயிங் அபவுட் தி ரிஸர்வேஷன் பில்' என்று தன் மனைவியிடம் திரும்பிச் சொன்னான்.*

*'மன்னித்துக்கொள்ளுங்கள் சார். நான் தமாஷுக்குச் சொன்னேன்'*

*சற்றுநேரம் அமைதியாகச் சென்றது. மதுராவை நெருங்கும்போது பனி சற்றே விலகி, வெயிலடித்தது. ஆனால் குளிர்விடவில்லை.*

*திடீரென்று அசோக் சொன்னான்: 'நீ சொன்னது சரிதான் வாசு.ஒன்று கவனி. நம் கடவுள்கள் அத்தனை பேருமே வேடர்களாகவும் இடையர்களாகவும் சுடுகாட்டு வாசிகளாகவும் இருக்கிறார்கள். மீனவர்களையும் மலை ஜாதியினரையும் பிற காட்டுவாசியினரையும் மணந்தவர்களாயிருக்கிறார்கள்.'*

*'ஆமாம் சாப். ராமர் மட்டும்தான் ராஜாவாக இருந்திருக்கிறார். அப்படியும்கூட ஜாதி அடிப்படையில் மோஸ்ட் பேக்வர்ட் கிளாஸ்தான்!' என்று சொல்லிச் சிரித்தான் வாசு.*

*‘இதிலிருந்து என்ன தெரிகிறது?’*

*‘கடவுள்கள் அளவிலேயே ஃபார்வர்ட்காஸ்ட்காரர்கள்தான் மைனாரிடிகள். நியாயமாக அவர்களுக்குத்தான் இட ஒதுக்கீடு செய்திருக்க வேண்டும் மேதகு மண்டல் அவர்கள்.’*

*‘நீ செமத்தையாக யாரிடமோ உதைபடப்போகிறாய்’ என்றான் அசோக்.*

*‘ஐயோ, விளையாட்டுக்கு நான் உங்களிடமும் ஜட்ஜ் சாபிடமும் மட்டுந்தான் இப்படியெல்லாம் ஜோக்கடிப்பேன். மற்ற யாரிடமும் வாயைத் திறக்கமாட்டேன் சார்’ என்றான் வாசு.*

*நெரிசல் மிகுந்த மதுராவில், புராதனமான மசூதியும் கிருஷ்ணரின் கோயிலும் ஒன்றையொன்று தொட்டணைத்துக்கொண்டு காட்சியளித்தன. ஈரச் சாலையில் இருபுறமும் சிவப்பும் வெளுப்புமாக மலைபோலப் பூக்கள் குவித்து, விற்றுக்கொண்டிருந்தார்கள். குறுகிய இடைவெளிகளில் ஹாரன் அடிக்காமல் கார்களை விரைந்து ஓட்டிச் சென்றார்கள்.*

*வாசு, காரை பார்க் செய்துவிட்டு வரும் வரை காத்திருந்த அசோக் ‘நீயும் வருவாயல்லவா?’ என்று கேட்டான்.*

*‘நீங்கள் இருவரும் போய்வாருங்கள் சார். நான் பலமுறை போயிருக்கிறேன். தவிர இன்று காலை நான் குளிக்காமல் கிளம்பிவிட்டேன்.’*

*‘அடடே!’ என்றாள் அவன் மனைவி. ‘ஸோ? குளிக்காமல் கோயிலுக்குப் போகமாட்டாய்?’*

*‘ஆமாம் மேடம்’ என்றான் வாசு.*

*அவர்கள் சென்று விட்டார்கள். வாசுவுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஞாபகமில்லாத வயதில் கோயிலுக்குப் போவதையும் குளிப்பதையும் எப்போதும் இணைத்தே அம்மா சொல்லிவந்திருப்பது, பிரக்ஞையின் பிடிகளுக்கு அகப்படாமலே இத்தனை வருடங்கள் நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது. ஒரு வெறுப்பில் எத்தனையோ சம்பிரதாயங்களைக் காலந்தோறும் அவன் உதறி வந்திருக்கிறான். இலக்கணம் என்று சுட்டிக்காட்டப்பட்டவற்றை வலிந்து மீறிவிடுவதன் மூலம் தன் பிரத்தியேக அடையாளங்களை அழித்துக்கொள்ள எத்தனை சிரமப்பட்டிருக்கிறான்!*

*தலையை உலுக்கிக்கொண்டான் அவன். குளித்துவிட்டுக் கோயிலுக்குப் போவது மதம் சம்பந்தப்பட்டதல்ல; சுத்தம் - ஒழுக்கம் தொடர்பானது என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான்.*

*ஆனால், சற்று நேரத்தில் ஸ்வெட்டரும் மஃப்ளரும் அணிந்த பண்டாக்கள் கோயிலிருந்து வருவதைப் பார்த்தபோது மீண்டும் மனம் முரண்டு பிடிக்க ஆரம்பித்துவிட்டது. பத்து டிகிரி, பன்னிரண்டு டிகிரி குளிர். கோயில் ஊழியர்கள் குளித்திருப்பார்களென்றோ, குறைந்தபட்சம் இரவு அணிந்திருந்ததைக் கழற்றிவிட்டு வேறு ஸ்வெட்டர் அணிந்து வந்திருக்கக்கூடுமென்றோ அவனுக்குத் தோன்றவில்லை. குளிர் தேசத்தில் சாமிகளேகூட அபிஷேகம் செய்துகொள்வதில்லை. தான் குளிக்காமல் உள்ளே போக மறுத்ததற்கு வேறென்ன காரணமிருக்க முடியும்?*

*‘ஆனால் சில அடையாளங்கள்...’*

*இரு வாரங்கள் முன்பு நீதிபதியுடன் பேசிக்கொண்டிருந்தபோது எதையோ குறிப்பிட வந்தாரே. தடுத்து, தான் குறுக்கே பேசியிருக்கக் கூடாது என்று இப்போது தோன்றியது அவனுக்கு. அவர்*

*பேச்சைக் கத்திரித்துவிட்டுப் பாதியில் எழுந்துபோனது சரிதானோ என்கிற சந்தேகம் வந்தது.*

*எல்லாம் சில விநாடிகள்.*

*ஓர் உத்வேகத்துக்கு ஆட்பட்டவன் போலப் பரபரவெனப் படியேறி கோயிலுக்குள் நுழைந்தான். வெளேரென்று புன்னகைக்கும் வடநாட்டுக் கிருஷ்ணனுக்குத் தமிழ்நாட்டு அழகு இல்லை என்றுதான் அவனுக்கு எப்போதும் தோன்றும். அதனாலென்ன. வணங்குவதற்குத் தோற்றம் இடைஞ்சலில்லை.*

*இருகைகளாலும் பூக்களை அள்ளிப்போட்டான். ஸ்வெட்டர் அணிந்த அர்ச்சகர் வாழையிலைத்துண்டில் சந்தனம் தந்தார். வாங்கி இட்டுக்கொண்டு விறுவிறுவெனக் கீழே வந்தான்.*

*கார் அருகே நின்றுகொண்டிருந்த அசோக்கின் மனைவி சிரித்தாள். 'அதற்குள் எங்கே போய்க் குளித்துவிட்டு வந்தாய்?' என்று கேட்டாள். அவன் அதற்கு பதில் சொல்லவில்லை. சில விநாடிகள் மௌனமாயிருந்து விட்டு, 'மேம் சாப் உங்களிடம் ஒன்று கேட்கலாமா?' என்றான்.*

*'என்னது?'*

*'அமெரிக்காவில் ஷூக்கள் ரொம்ப மலிவா?'*

*'விலை என்ன பெரிய விஷயம்? உனக்கு ஷூ வேண்டும், அவ்வளவுதானே?'*

*'அதில்லை மேடம். இங்கே யுனிவர்சிடி பையன்களெல்லாம் வெளிநாட்டு ஷூ என்றால் பைத்தியமாக அலைகிறார்கள். கரோல்பாக் வீதிகளில் ஆக்ராவில் தைக்கிற ஷூக்களையெல்லாம் மேட் இன் யுஎஸ் என்று போட்டு விற்கிறார்கள். உங்களுக்குச் சம்மதமென்றால், முடியுமென்றால் மாதமொருமுறை யாராவது வருபவர்களிடம் ஐம்பது ஜோடி வாங்கி அனுப்ப முடியுமா? நீங்கள் இதைப் பொழுதுபோக்காகச் செய்யலாம். விற்ற பணத்தை நான் ஜட்ஜ் சாரிடம் கொடுத்துவிடுகிறேன். மேலே கிடைப்பதெல்லாம் எனக்கு.'*

*'மேலே என்றால்?' அசோக் புன்னகையுடன் கேட்டான்.*

*'மேம்சாப், ஷூவின் விலை என்ன சொல்கிறார்களோ, நான் அதற்குமேல் சில பர்ஸன்டேஜ் கூட்டி விற்றுக்கொள்வேன்.'*

*'கெட்டிக்காரன் நீ' என்றாள் அவன் மனைவி.*

*'நானே அங்கு டிபார்மென்ட் ஸ்டோர்தான் நடத்திக்கொண்டிருக்கிறேன். இது செய்யக்கூடியதுதான்' என்றாள் அவள்.*

*'அதிகம் வேண்டாம் மேடம். அதிகாரபூர்வமாகவெல்லாம் என்னால் இப்போது முழுநேர பிஸினஸ் செய்ய முடியாது. ஒரு சிறு உதவியாக நீங்கள் இதைச் செய்தால் எனக்குக் கொஞ்சம் வசதி' என்றான் வாசு.*

*'அதற்கென்ன! பார்க்கலாம்' என்றாள்.*

*அசோக் ஊர் திரும்பி, இரண்டு மாதங்கள் கழித்து, அவன் மனைவி ஒரு கடிதமும் பெரிய பார்சலும் அவன் பெயருக்கு அனுப்பியிருந்தாள்.*

*தில்லியில் அதுவரை காணக்கிடைக்காத புதுவித வண்ணங்களிலும் மோஸ்தர்களிலுமான நூறு ஜோடி ஷூக்கள். இந்திய மதிப்பில் ஒவ்வொன்றும் முன்னூறு ரூபாய் பெறுமானம் உள்ளது என்று குறிப்பிட்டிருந்தாள்.'*

*வாசுவால் அவற்றைப் பதினைந்து நாட்களில் விற்றுவிட முடிந்தது, அவனுக்கே வியப்பாக இருந்தது. வாழ்வில் முதல்முறையாகப் பத்தாயிரம் ரூபாய் மொத்தமாகக் கையில் கண்ட தினத்தில், இரவு முழுவதும் அடக்க முடியாமல் அழுதுகொண்டே இருந்தான்.*

# *6*

*‘தேர்தல் வரும்போதெல்லாம் எனக்கு ஜனநாயகத்தின் மீது வெறுப்பு வந்துவிடுகிறது. எத்தனை செலவு!’ என்று கணபதி சார் சொன்னார்.*

*நீண்ட நாட்களுக்குப் பிறகு அவரை சந்திக்கச் சென்றிருந்தான் வாசு. கேன்டீன் வேலையையும் பார் வேலையையும் விட்டுவிட்டு, கல்காஜி எக்ஸ்டன்ஷனில் ஒரு சிறு கடை திறந்திருந்தான் அவன். பெரும்பாலான பத்திரிகைகளுக்கு சப்-ஏஜெண்டாகவும் சிலவற்றுக்குப் பிரதான ஏஜெண்டாகவும் ஆகியிருந்தான்.*

*விடிகிற நேரம் ரயில் நிலையம் சென்று பார்சல்களை எடுத்து வருவதும் கணக்குகளைச் சரிபார்த்து, விற்பனை விகிதம் விழுந்துவிடாமல் பார்த்துக்கொள்வதும், மனிதர்களுடனான தொடர்புகள் அறுந்துவிடாமல் பாதுகாப்பதுமே பிரதானமான பணிகளாயிருந்தன, அவனுக்கு. அப்புறம் பேப்பர் போடுவது.*

*ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் அதைத் தானே செய்வதும் இதர நாட்களுக்கு ஒரு பையனை அமர்த்திக்கொள்வதுமாக ஏற்பாடு செய்துகொண்டிருந்தான். நிரந்தரமான புன்னகையும் தலை வணங்கிய வணக்கமும் அவனுக்குப் பழகியிருந்தது. நீதிபதியின் வீட்டு அவுட்-ஹவுஸ் அறையை காலி செய்த தினத்தன்று மேம் சாபுக்குக் கண்ணீரே வந்துவிட்டது.*

*‘நீ வந்த தினத்தில் நான் சொன்னது நினைவிருக்கிறதா?’*

*‘என்னது?’ என்று நீதிபதி கேட்டார்.*

*‘இவன் கூடிய சீக்கிரம் ஒரு எம்.பி. ஆகிவிடுவான் என்று சொன்னேன்.’*

*‘வேண்டாம் உத்ரா. அப்போது இவனை யாராவது கடத்திப்போய்விடுவார்கள்.’*

*வாசு சிரித்தான். ‘எனக்கு வேண்டாம் சார். உங்கள் மருமகள் தயவில் நான் செருப்பு விற்றே பிழைத்துக்கொள்வேன்.’*

*‘கடைக்காரர்கள் எப்படி இத்தனை நாள் உன்னை சும்மா விட்டுவைத்தார்கள்?’*

*‘நான் மார்க்கெட் பக்கமே போவதில்லை சார். பேப்பர் போடப் போகும்போது, பையன்கள் இருக்கும் வீட்டில் பேசுவேன். அமெரிக்கா என்றால் போதும். ஆட்டுக்குட்டிகூட வாங்கி வைத்துக்கொள்வார்கள்.’*

*‘நீ பிழைத்துக் கொள்வாய்’ என்றார் நீதிபதி.*

*‘எப்படி இருக்கேப்பா?’ என்று கணபதி சார் கேட்டார்.*

*‘போறது சார். வீக்லீஸ் இத்தனை நாளா கொஞ்சம் டல் அடிச்சிட்டிருந்தது. எலக்ஷன் அடிக்கடி வந்தா எனக்கு சௌகர்யமா இருக்கும்!’ என்றான் வாசு.*

*‘தேசத் துரோகி!’ என்று போலியாகத் திட்டினார் கணபதி சார்.*

*‘பீகார் போயிருந்தேன் வாசு, லாஸ்ட் வீக். பணத்தைப் பணமாவா செலவு பண்றாங்க? அட்ராஷியஸ்! ஒரு பார்ட்டி ஆபீஸ்ல, பிரம்புக் கூடைல கட்டுக்கட்டா நோட்டு வெச்சிக்கிட்டு எடுத்துவிடறான். பார்த்ததும் ‘திக்’குனு ஆயிடுச்சு எனக்கு. எல்லாம் தெரிஞ்சதுதான். ஆனா, நேர்ல பார்க்கும்போது வரற தாக்கம் தனி இல்லியா?’*

*‘என்னைக்கூட எலக்ஷன் முடியறவரைக்கும் ஏதாவது ஒரு பார்ட்டில ‘இன்டோர்’ வேலைக்குச் சேர்த்துவிடுங்க சார். ரொம்ப தாகமா இருக்கு.’*

*‘பாவி! பரிபாஷையெல்லாம் கத்துக்கிட்டே?’*

*சொல்லலாமா என்று ஒரு கணம் யோசித்தான். வாழ்வின் அகண்ட வெளியை நீந்திக் கடக்க எத்தனை பாதைகள் போட்டு வைத்திருக்கிறார்கள்! பணம். அது நிற்காமல் முன்னே பாய்ந்துகொண்டிருக்கிறது. ஒரு எட்டில் ஓரமாகத் துளி பிடித்துக்கொண்டுவிட்டால் எத்தனை தூரத்துக்குச் சிரமமில்லாமல் அதுவே இழுத்துக் கொண்டோடிவிடுகிறது!*

*துக்ளக் சாலையிலுள்ள ஒரு கட்சியின் முக்கியப் பிரமுகர் வீட்டுக்கு அவன்தான் பேப்பர் போட்டுக்கொண்டிருந்தான். ஹிந்து, டைம்ஸ் ஆஃப் இந்தியா, ஆஜ், ஏஷியன் ஏஜ் தவிர சில வாராந்தரிகளும் மாத இதழ்களும்கூட.*

*தேர்தல் அறிவித்த தினத்துக்கு மறுநாள் அவனுக்குகொரு யோசனை தோன்றியது. அதன்படி தினம் ஒரு நம்பிக்கையூட்டும் வாசகத்தையும் கவர்ச்சியான பிரசார சுலோகனையும் ஒரு வெள்ளைத்தாளில் வண்ண மையால் கொட்டை எழுத்தில் எழுதி, செய்தித்தாளுக்குள் வைத்து வீசிவிட்டு வர ஆரம்பித்தான்.*

*முதல் ஒரு வாரம் அவன் முயற்சி அர்த்தமற்றிருந்தது.*

*அவன் எதிர்பாராத ஒரு தினத்தில் இருளில், அந்த பிரம்மாண்டமான கதவின் அருகே ஓர் உருவம் நின்றிருந்ததைக் கண்டான். கூர்க்கா அல்ல அது என்பதை அவன் வரும்போதே கவனித்துவிட்டான்.*

*அன்று தாளை அவன் பேப்பருக்குள் வைத்து வீசி எறியவில்லை. மாறாக, அவர் கையிலேயே கொடுத்துவிட்டு ‘பெஸ்ட் ஆஃப் லக் சார்’ என்றான்.*

*தலைவர், புன்னகை செய்தார். வேறேதும் பேசாமல், பெயரை மட்டும் கேட்டுக்கொண்டு அவனைக் கட்சி அலுவலகத்துக்கு வரச் சொன்னார்.*

*ஒரு சில வாசகங்களை எழுதித் தருவதன் மூலம் இத்தனை சம்பாதிக்க முடியும் என்று பத்து நாட்களில் அவன் புரிந்துகொண்டான்.*

*மறுநாளிலிருந்து அனைத்துக் கட்சித் தலைவர்களின் வீட்டுக்கும் - ஒப்பந்தம் இல்லாவிட்டாலும் அவன் பேப்பர் போட ஆரம்பித்தான்.*

*உதடுகளின் விளிம்பு வரை வந்துவிட்ட இத்தகவலை, கணபதி சாரிடம் சொல்லவேண்டாம் என்று ஏனோ தோன்றிவிட்டது அவனுக்கு.*

*தற்செயலாக ஒருமுறை அவர், அவன் பணியாற்றிக்கொண்டிருந்த பாருக்கு இரண்டு நண்பர்களுடன் வந்துவிட்ட சம்பவம் அவனுக்கு ஞாபகம் வந்தது.*

*தீக்குச்சி உரசிப் பொறி கிளம்புகிற நேரம், அவன் அவர் கண்களைத் தவிர்க்க முடியாமல் நேரில்*

*சந்திக்க நேர்ந்துவிட்டது.*

*ஒரு பார்வை. பார்வைதானா அது? எதிர்பாராத கணத்தை விழுங்கி ஜீரணிக்கும் விதமாக ஒரு கண்மூடல். பிறகு, தொண்டையைக் கனைத்துக்கொண்டு 'டியா-மரியா மூன்று லார்ஜ்' என்று தங்கள் மூவரையும் சுட்டிக் காட்டிவிட்டு, வேறுபுறம் திரும்பிப் பேச ஆரம்பித்தார். உள்ளடங்கிய கீழ்க்குரல் ஆங்கிலத்தில்.*

*அவன், அவர் கூறியதைக் கலந்து எடுத்து வந்து மேசையில் வைத்தான். 'எனிதிங் எல்ஸ் ஸர்?' என்றான் வழக்கமான பாவனையில்.*

*'நத்திங், தேங்ஸ்' என்றார் கணபதி சார்.*

*அரைமணி நேரம் இருந்தார். கிளம்பும்போது ஒரு முழு நூறு ரூபாய்த் தாளை டிப்ஸாக வைத்துவிட்டு, அவனைத் தொட்டுக் கூப்பிட்டுச் சுட்டிக் காட்டினார்.*

*அவனுக்கு அழலாம் போலிருந்தது. ஆனால் அழுகை வரவில்லை. அதிசயம் மாதிரி அன்றிரவு சிந்தனைகள் ஏதுமற்று நிம்மதியாக உறங்கினான்.*

*மறுநாள் காலை பதினோரு மணிக்கு கணபதி சார் டீ குடிக்க கேன்டீனுக்கு வந்தார்.*

*'குட்மார்னிங் சார்' என்றான் வழக்கமில்லாத வழக்கமாக.*

*'ஹவ் குட் இஸ் திஸ் மார்னிங்?' என்றார் சட்டென்று.*

*என்ன பதில் சொல்வதென்று புரியாமல் சிரித்தான்.*

*'சொல்லுகிற சொல்லுக்கும் செய்கிற செயலுக்கும் ஒரு அர்த்தமும் நோக்கமும் வேண்டும் வாசு. செக்குமாட்டுத்தனம் எப்போதும் உயர்ந்தாது.' அவன் கேன்டீனிலிருந்து வெளியே வந்தான்.*

*'எனக்கு நோக்கம் இருக்கிறது சார்' என்றான் மெல்லிய குரலில்.*

*'என்னது? பணம் சம்பாதிப்பதுதானே? அசோகாவுக்குப் பின்னால், மேம்பாலத்தினடியில் மாலை ஏழு மணிக்குப் போய் நில். பாரில் கிடைப்பது மாதிரி பத்து மடங்கு சம்பாதிக்கலாம்.'*

*ஒரு மோட்டார் சைக்கிள் வந்து நிற்கிற சத்தம். உள்ளே ஒரு பாத்திரம் கீழேவிழும் ஓசை. இப்போது அவனுக்கு அழுகை வந்தது. அவர் கைகளைப் பிடித்துக்கொண்டு மிக ரகசியமான குரலில், உடைந்துபோய்ச் சொன்னான்.*

*'அதைக்கூட முயன்று பார்த்துவிட்டேன் சார். என்னால் முடியவில்லை. எல்லா பெண்களிடமும் என் மன்னியின் சாயல் கொஞ்சம் இருக்கிறது.'*

*நிற்கப் பிடிக்காமல் விறுவிறுவென நடந்து வாசலுக்கு வந்தான். ஐ.என்.எஸ். வாசலில் பெட்டிக்கடையில் ஒரு சிகரெட் வாங்கிப் பற்றவைத்துக்கொண்டு தலைதெறிக்க ஓட ஆரம்பித்தான். துக்ளக் ரோடு மைதானம் தாண்டி, சாலையின் மறுமுனை வரை மூச்சு வாங்குமளவு நடந்து, இடது புறம் ரவுண்டானாவைச் சுற்றிக்கொண்டு பிரஸ் கிளப் வாசல் மரத்தடியில் வந்து அமர்ந்தான். சுட்டெரிக்கும் வெயிலில் தன் சதை பொசுங்கி, ரத்தம் பெருக்கெடுத்து வழிந்து ஓடி, எலும்புகள் உருகிவிட வேண்டும் என்பதாக ஆசைப்பட்டான்.*

பெருகும் வியர்வையைத் துடைக்கக்கூடத் தோன்றாமல் வானம் நோக்கிப் படுத்துக்கிடந்தான் வெகுநேரம்.

*‘ஸோ?’ என்றார் கணபதிசார்.*

*‘காரணம் ஒண்ணுமில்லை சார். சும்மா உங்களைப் பார்க்கணும்னு தோணித்து, அதான் வந்தேன்’ என்றான் வாசு.*

*‘டீ சாப்பிடலாமா?’ என்று அவர் கேட்டார்.*

*‘அதே மணி ஐயர், அதே ராமபத்ரன், அதே மகாலிங்கம்தான். வா, நீ கேளு. என்ன ரியாக்ஷன்னு பார்க்கலாம்.’*

*‘வேண்டாம் சார். வெளியில போயிடலாம்’ என்றான் வாசு.*

*‘நோ, நோ வாசு! இஸ்திரி போட்ட பேன்ட் ஷர்ட்ல உன்னைப் பார்க்கறது எவ்வேளா சந்தோஷமா இருக்கு தெரியுமா? எவ்ரிபடி இன் தி கேம்பஸ் ஷ ú ட் ஃபீல் இட். நீ தில்லிக்கு வந்து எத்தனை வருஷமாச்சு?’*

*‘அஞ்சு வருஷமாறது சார்’*

*‘அஞ்சு வருஷமா!’ என்று கண்களை அகல விரித்து வியந்தவர், ‘ஓடியேபோச்சு பாரேன்!’ என்றார்.*

*அவனுக்கும் அது ஆச்சர்யமாகத்தான் இருந்தது. கூடவே, குற்ற உணர்வும் மிகுந்திருந்தது. ஐந்து வருடங்களில் அவன் ஒருமுறைகூட ஊருக்குப் போகவே இல்லை.*

# 7

*அன்புள்ள வாசு, நீ சௌக்கியமாகத்தான் இருக்கிறாய் என்பது உன் கடிதங்களிலிருந்தும் அனுப்புகிற பணத்திலிருந்தும் தெரிகிறது. ஆனால் எப்படி உன்னால் சாப்பிட்டு எச்சில் பிரட்டித் துடைப்பதுபோல் உறவுகளைத் துடைத்து எறிந்துவிட்டுக் கண்காணாமல் இருக்கமுடிகிறது என்பதுதான் புரியாத சங்கதியாக உள்ளது.*

*படித்துக்கொண்டிருந்த காலத்தில் உன் வயதுப் பையன்களின் மன வளர்ச்சி உன்னிடம் இருந்ததில்லை. 'புடைவை பிடிச்சான்' என்று நீ ஒன்பதாம் வகுப்பில் இருந்தபோதும் வீட்டில் கிண்டல் பண்ணுவார்களே, ஞாபகம் இருக்கிறதா? உறங்கும்போது உனக்கு அம்மாவின் புடைவை வேண்டும். சாப்பிட உட்கார்ந்தால், மன்னிகள் இருவரும் ஆளுக்கொரு பக்கம் இருக்க வேண்டும். மருதாணி இட்டுக்கொள்ளவும் சட்டமாகக் கால் போட்டு உட்கார்ந்து ஏழாங்காய் ஆடவும் கொல்லைப்புறத்துத் தென்னை ஓலையில் 'பீப்பி' செய்து உறங்குபவர்கள் காதில் ஊதி அலறி எழச்செய்து வேடிக்கை பார்க்கவும் உன் வயதுப் பிள்ளைகள் துளியும் விரும்பமாட்டார்கள். 'பொம்மனாட்டி குணம் ஒண்ணு மிச்சமில்லை' என்று எத்தனை முறை அம்மா திட்டலாகவும் கொஞ்சலாகவும் கவலையாகவும் சொல்லியிருப்பாள்!*

*எனக்குத் தெரிந்ததெல்லாம், ஞாபகமிருப்பதெல்லாம் அந்த வாசுதான். அப்புறம் நீ இரண்டு முறை ஃபெயிலாகி, அண்ணாவுடன் சமையலுக்குப்போகிறேன் என்று புறப்பட்ட வீறாப்பு நினைவிருக்கிறது. அங்கே போய், காலில் ரசம் கொட்டிக்கொண்டதும், முதலுதவியாக மேலுக்குப் போட்ட அரிசிமாவை வெண்ணெயோ என நினைத்து, அந்த எரிச்சலிலும் துளி தொட்டு நாக்கில் நக்கிப் பார்த்ததாக அண்ணா சொன்னதும்.*

*சென்ற கடிதத்தில், நீ பணத்தைத் துரத்திக்கொண்டிருப்பதாக எழுதியிருந்ததைப் படித்து அப்பாவுக்கு ரொம்ப வருத்தமாகிவிட்டது. கஷ்டப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறோமென்றாலும் ஒரு வேளையாவது சாப்பிடாமலிருந்திருக்கிறோமா என்று உன்னிடம் கேட்டு எழுதச் சொன்னார். பழைய சுள்ளிக்கட்டுக் கதையைத்தான் உனக்கு அவர் ஞாபகப்படுத்த விரும்புகிறார். தெரியும்தானே? எல்லோரும் சேர்ந்திருப்பதில்தான் சுகமும் சௌகர்யமும். கடவுள் புண்ணியத்தில் இங்கு யாருக்கும் எந்த உடம்பும் இல்லாமலிருக்கிறது. அப்பாவுக்குத்தான் பாவம், கண் பார்வை சுத்தமாக இருண்டுபோய்விட்டது. சென்ற இரு வருடங்களில் நீ அனுப்பிய பணம் முழுவதுமே அவர் கண்ணுக்காகத்தான் செலவிடப்பட்டது. ஆனால், ஓரெல்லைக்குமேல் மனிதர்கள் நாம் என்ன செய்துவிடமுடியும்?*

*அவர் அதிகம் எழுந்திருப்பதோ, நடப்பதோ இல்லை. வயதும் ஆகிறதல்லவா? ஆயிற்று, ரங்கனுக்கும் உனக்கும் தான் ஒரு வழி பண்ணவேண்டும் என்று அண்ணா சொல்லிக்கொண்டிருக்கிறார்.*

*போன கடிதத்தில் எழுதியிருந்தபடி மணி கல்யாணம் சிம்பிளாக, நமது பெருமாள் கோயிலிலேயே ஒரு வேளையுடன் நடந்து முடிந்துவிட்டது. அதற்காவது நீ வருவாய் என்று அப்பாவுக்கு நப்பாசை. ஜாதிவிட்டு ஜாதி கல்யாணம் செய்துகொள்வது சாதாரணமாகிவிட்ட நாளில், அப்பாவே சம்மதித்துவிட்ட நிலையில் அத்தனை கோபமாக, வெறுப்பை உமிழும் சொற்களில் நீ கண்டித்திருந்தது எனக்குப் பேராச்சரியமாயிருந்தது. காதலெல்லாம் நமக்கு ஆடம்பரம் என்று நீ எழுதியிருந்தது, ஒரு வகையில் சரிதான். ஆனால், சமமாகவோ சற்றுத் தாழவோ சம்பந்தம் அமையும்போது சிக்கல் வர வாய்ப்பில்லை. அந்தப் பெண் நம்முடன் எப்படியோ ஒட்டிக்கொண்டுவிட்டது. ஆத்தில் பூண்டு ரசமும் மசாலா குருமாவும் புழக்கத்தில் வந்துவிட்டதால் எங்களது தளிகையை அந்தப் பெண் கீதாவின் சமையல் 'ஓவர் டேக்' செய்துவிட்டது.*

*ஆயிரம் சமாதானம் செய்துகொண்டாலும், நீ டெல்லியில் பார்க்கிற ஏஜென்ஸி உத்தியோகத்தைச் சென்னையில் பார்க்கமுடியாதா என்று அப்பா கேட்கும்போது பதில் சொல்ல முடியாமல்தான் போகிறது.*

*காஞ்சிபுரம் நிலத்தில் வரும் வாரம் கடக்கால் போடுகிறார்கள். ஒரே வீடு. 'ப' வடிவில் இருக்கும். ஆனால் மொத்தம் பத்து வாசல்கள்! ரயில் கம்பார்ட்மென்டை ஞாபகப்படுத்திக்கொள். தனித்தனிப் பெட்டியாகவும் ஒரு கதவைத் திறந்தால் ஒன்றே போலவுமான ஏற்பாடு. இப்படித்தான் இருக்க வேண்டுமென்று அப்பாவும் அம்மாவும் தீர்மானமாகச் சொல்லிவிட்டார்கள். சரோ வரும்போது தங்கவும் சேர்த்துத்தான் இந்த ஏற்பாடு.*

*உன் அண்ணா இப்போது வெறும் கல்யாண சமையல்காரர் இல்லை. 'உட்லண்ட்ஸ்' ஓட்டலில் 'செஃப்' ஆகிவிட்டார். நிரந்தரமான வருமானமென்பதே பெரிய நிம்மதியல்லவா!*

*போன வாரம் வரதன் வந்திருந்தார். 'ராஸ்கல், போரும் அவன் அங்கே வேலைபார்த்துக் கிழிச்சது. அடுத்த மாசம் நான் போய் குண்டுக்கட்டா தூக்கிண்டு வந்துடறேன் பார்' என்று சொல்லியிருக்கிறார். அவர் குழந்தை படுகெட்டி. தாத்தா, பாட்டி, பெரியப்பா, சித்தப்பாக்களையெல்லாம் சேவித்துவிட்டு, 'சேவிச்சா காசு தரணும். தெரியாதா?' என்று கேட்கிறது. அவம்மா சொல்லிக்கொடுத்திருப்பாள் போலிருக்கிறது.*

*சடகோபன் பெண்கள் இரண்டுக்கும் இத்தனை சாமர்த்தியம் வராது. ஆனால் சமர்த்து. சடகோபனின் பெட்டிக்கடை, சிறு மளிகைக் கடையாகிவிட்டதுதான் 'லேட்டஸ்ட் இம்ப்ரூவ்மென்ட்'. வத்சலாதான் பாவம், பானை மாதிரி உடம்பு ஊதிப்போய், இரண்டு குட்டிகளையும் சமாளிக்கமுடியாமல் அல்லாடுகிறாள்.*

*ஏதோ பனி விலகினாற் போலிருக்கிறது. நீயும் பெரிய மனுஷனாகிவிட்டாய், சம்பாதிக்கிறாய், பணம் அனுப்புகிறாய் என்பதுதான் என் அத்தனை திருப்திகளிலும் முதன்மையானதாயிருக்கிறது.*

*ஆனால் வயசுப் பையன் எத்தனை நாட்கள் இப்படித் தனியே கிடந்து அல்லாடுவாய்? ஒரு ரகசியம் சொல்லிவைக்கிறேன். இதைப் புரிந்துகொள்ள முயற்சி செய். பணம் பிரதானமாகத் தோன்றும் வயசு ஒன்று உண்டு. முப்பத்திலிருந்து நாற்பத்தைந்து வரை பேயாய் அலையத் தோன்றும். ஏனோ, உனக்கு அது சீக்கிரம் வந்துவிட்டது.*

*அதே மாதிரி பணம் அலுப்பூட்டும் காலமும் வரும். வெறுமையில், ரூபாய் நோட்டை எப்போதாவது கிழித்துப்போடலாமா என்று தோன்றும். நான் கிழித்திருக்கிறேன். உன் அண்ணா உட்லண்ட்ஸில் முதல் சம்பளம் வாங்கி வந்தபோது, 'உனக்கு எவ்வளவு வேணும்?' என்று கேட்டார்.*

*தாங்கமுடியாத சந்தோஷம். அடிவயிற்றிலிருந்து பீறிட்டுக்கொண்டு ஒரு அழுகை வந்ததுபார். ஆயுசுக்கும் மறக்காது அன்றையதினம். கல்யாணமாகி முப்பது வருஷம் கழித்து, முதல்முறையாக அவரிடமிருந்து அப்படியொரு வார்த்தை!*

*எனக்கே கொஞ்சம் குரூரமாகத்தான் இருந்தார். ஆனாலும் என் ஆசையும் ஒரு முறையாவது தணிய வேண்டுமல்லவா? விஷயத்தைச் சொன்னபோது உன் அண்ணா வியப்படையவில்லை. கோபப்படவில்லை. மாறாக, இருந்ததிலேயே புதிதாக இருந்த ஒரு இருபது ரூபாய் நோட்டை என்னிடம் தந்தார்.*

*நம்பமாட்டாய் நீ! நூறு துண்டுகளாக அதைக் கிழித்து, வெந்நீர் அடுப்பில் போட்டேன். அப்படியொரு சந்தோஷத்தை நான் அனுபவித்ததேயில்லை அதுவரை. அன்று போட்ட முதல் வெந்நீரில் நான்தான் குளித்தேன். என்னமோ, கங்கையில் குளித்தது மாதிரியொரு பரவசம்.*

*இதை உனக்குச் சொல்வதன் காரணத்தை நீ யோசிக்கலாம், யோசிக்க வேண்டும்.*

*ஜெயிப்பது என்று நீ எதைக் கருதுகிறாய் என்பதைப் பொறுத்தே உனக்கு என் சப்போர்ட் இருக்கும்.*

*கல்யாணமாகி வந்த தினத்திலிருந்து என் தோல்விகள் என்னென்ன என்று உனக்கு நான் விளக்க வேண்டாம். ஆனால், இத்தனை வருடங்கள் கழித்துத் திரும்பிப் பார்த்தால் தோற்றதைவிட அடைந்ததுதான் அதிகமோ என்று தோன்றுகிறது. குருவிக்கூடு மாதிரி ஒரு குடும்பம். இதற்கு முன்னால், வேறெதுவுமே பொருட்படுத்தத் தகுந்ததாகப் படவில்லை எனக்கு.*

*கொல்லையில் ஒரு ஓரமாக உன் அண்ணா கீரைத் தோட்டம் போட்டிருக்கிறார். பசேலென்ற என்னமாய்க் கம்பளம் விரித்திருக்கிறது தெரியுமா? தென்னைகளில் மரத்துக்கு மரம் தாவிக்கொண்டிருந்த மூன்று அணில்களும் இப்போது கீரைச் செடிகளுக்கு நடுவே 'ரன்னிங் ரேஸ்' நடத்துகின்றன.*

*போனவாரம் அவர் திருக்கண்ணபுரத்துக்குக் கிளம்பியபோது நானே வலிய நான்கு தேங்காய்களை உரித்து, ஒரு கட்டுக் கீரையையும் ஈரத்துணியில் சுற்றி, பையில் திணித்து அனுப்பிவைத்தேன்.*

*கேள்வியாக வெளிப்படுத்திவிட முடியாத கோபம் கலந்த விமர்சனம், உங்கள் அத்தனை பேர் மனத்திலும் - அவர் மீது உண்டு என்பதை நானறிவேன். இது விஷயத்தில் அம்மாவைவிடவும் உங்கள் எல்லாரைவிடவும் அவரை நான் மட்டுமே புரிந்துகொண்டிருக்கிறேன். நேற்று மணி ஒருத்தியைக் காதலிக்கிறேன் என்றபோது சரி என்று சொன்ன அப்பாவுக்கு, முப்பத்தைந்து வருடங்கள் முன்பு அந்த மனப்பாங்கும் துணிச்சலும் சூழ்நிலையும் இல்லாது போயிருக்கலாம். பச்சையாகச் சொல்வதென்றால், முதல் மகன் என்ற ஒரே காரணத்துக்காக உன் அண்ணாவின் உணர்வுகளை, அவர் சம்மதம் இல்லாமல் பலி போட்டார்கள்.*

*வீட்டுக்கு மூத்தவனாகப் பிறப்பது என்பது நம் குலத்தில் ஒரு சாபம். உன் அண்ணா அதில்தான் மாட்டிக்கொண்டார். இன்றைக்கு அவர் மாதம்தோறும் அங்கே போய்வருவது கொஞ்சிக் குலாவ அல்ல. ஒரு பிராயச்சித்தம் மாதிரி போய்ப் போய்ப் பார்த்து, மன்னிப்புக் கேட்டுவிட்டு வருகிறார், அவளது அப்பாவிடம்.*

*அவள் கல்யாணம் பண்ணிக்கொள்ளவில்லை என்பது உனக்குத் தெரியும். ஆனால், இவர் போகிற தினங்களில் அவள் ஊரிலேயே இருப்பதில்லை என்பது தெரியுமா? இவரும் வருவதாக ஒரு கார்டு எழுதிப்போடாமல் போகமாட்டார்.*

*மனித வாழ்வின் அர்த்தமே, புரிந்துகொள்வது என்கிற ஒற்றைச் சொல்லில் முடிந்துவிடுவதாகத்தான் நான் நினைக்கிறேன். ஒரு வைகாசி உற்சவத்துக்கு என்னையும் அவர் ஊருக்கு அழைத்துச் சென்றார். அவர் கோயில் மண்டபத்திலும், நான் அவள் வீட்டிலுமாகத் தங்கினோம். என்னால் அவளையும், அவளால் என்னையுங்கூடப் புரிந்துகொள்ள முடிந்திருக்கிறது.*

*என்னென்னவோ சொல்லிவிட்டேன். ஆனால், மொத்த விஷயங்களின் சாரம் ஒரே வரிதான். அதை எப்படியாவது நீ புரிந்துகொண்டுவிடமாட்டாயா என்றுதான் அடித்துக்கொள்கிறது.*

*நான் சொல்லச் சொல்ல எழுதி வரும் வத்சலா, கைவலிக்கிறது என்கிறாள். ஆகவே நிறுத்திக்கொள்கிறேன். மைதிலி.*

# *8*

*செங்கோட்டையின் வெளி மைதானத்தில் ஒரு சர்க்கஸ் கம்பெனி கூடாரமிட்டிருந்தது. பரவிய யானைச் சாண நெடிக்குப் பிராந்தியமே திரண்டு வந்தது. பட்பட் வாகனங்களும், பேருந்துகளும் எருமைகளும் பாதசாரிகளும் கலந்து விரையும் பழைய தில்லியின் செங்கோட்டைக்கு எதிர்ப்புற பஸ் நிறுத்தத்தில் வாசு நின்றிருந்தான். கம்பியடித்த இரும்பு வண்டிகளில் வட்டம் வட்டமாக போலீசார் சென்றுகொண்டிருந்தார்கள். விடுமுறை தினங்களில் குண்டு வெடிக்கக்கூடாது என்று அரசியல் சட்டத்தில் குறிப்பேதும் இல்லை. புறநகர்ச் சாலையில் சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள் இரண்டு வெடித்திருக்கின்றன. ஒரு ஞாயிற்றுக்கிழமையின் காலை வேளைக்கென என்னென்ன திட்டங்கள் தீட்டியிருந்தார்களோ.*

*போலீசாரின் மேல் மிகுந்த பரிவுணர்வு திடீரென உண்டானது அவனுக்கு. பத்து மணிக்கு அவன் நொய்டாவிலிருக்க வேண்டும். ஆனால், வெடித்த குண்டுகள், போக்குவரத்தைச் சற்று நேரம் ஸ்தம்பிக்கச் செய்து பிறகு திசைமாற்றிவிட, அவன் செங்கோட்டை அருகே ஊர்ந்து கொண்டிருந்தபோது, பேருந்திலிருந்து இறங்கிவிட்டான்.*

*பல இடங்களில் வழியில் தார் டின்களைப் போட்டுப் பாதையை அடைத்திருந்தார்கள். பாதுகாப்பு. அது மிக முக்கியமல்லவா. காலைச் சிற்றுண்டியைக்கூட சாப்பிட்டிருக்கமாட்டார்கள் போலீசார். வெறுப்பும் தவிப்பும் சலிப்பும் வெளிப்படும் முகபாவம் வெடிகுண்டு பிடிபடும்போதோ, வெடிக்கும்போதோ அவர்களுக்கு ஏற்பட்டுவிடுகிறது. பொதுமக்களின் ஒத்துழைப்பைத் தவிர, வேறெது அவர்களுக்குச் சற்றேனும் ஆறுதலாயிருக்க முடியும்?*

*வாசு, தன்னை நெருங்கி வந்த ஒரு போலீஸ்காரரை நோக்கி ஆதரவாக ஒரு புன்முறுவல் செய்தான். முன்பின் அறிமுகமில்லாத அவர், சில விநாடிகள், 'இவன் முன்பே அறிமுகமானவனோ' என்று எண்ணிப் பார்த்தது அவர் முகபாவம் மூலம் தெரிந்தது.*

*அவனருகில் வந்து நின்று ஹெல்மெட்டைக் கழற்றித் தலையைத் துடைத்துக்கொண்டார் அவர்.*

*'பாவம் சார் உங்கள் பாடு' என்று வாசு சொன்னான்.*

*அவர் ஆமோதிக்கும் விதமாகத் தலையாட்டிய படியே சாலையோரப் பாதசாரிகளை ஒதுங்கிப்போகும்படி உத்தரவிட்டுக்கொண்டிருந்தார். சட்டென்று முன்புறம் சுழலும் விளக்குடன் ஒரு ஜீப் - உள்ளே இருந்தவர் உயரதிகாரியாயிருக்க வேண்டும் - கடந்துபோகவும் அவர் திடீரென்று விரைப்பாகி சல்யூட் அடித்தார்.*

*பிளாட்பாரத்தில் ஒரு கிழவன் தள்ளுவண்டியில் எலுமிச்சை சாறு விற்றுக்கொண்டிருந்தான். ஒரு விநாடி யோசித்தவன், அந்த வண்டியருகே சென்று, 'தோ' என்று இருவிரல்களை நீட்டிவிட்டு, வண்டியில் எழுதியிருந்ததைப் பார்த்து, இரண்டு ரூபாயை வைத்தான்.*

*அந்தப் போலீஸ்காரர் சற்றும் எதிர்பாராதவிதமாக, ஒரு கிளாஸை அவரிடம் நீட்டி 'எடுத்துக்கொள்ளுங்கள் சார்' என்று சொன்னான்.*

*அவசரமாக மறுத்தவர், 'பரவாயில்லை சார். எங்களுக்காகப் பாடுபடுபவருக்கு ஒரு வெயில் நேரச் சிறு உதவி' என்று மாறாத புன்னகையுடன் அவன் சொன்னதும், சங்கடம் கலந்த சந்தோஷமாகிவிட்டது, அவருக்கு.*

*'என்ன சார் செய்வது? இப்படித்தான் அடிக்கடி ஏதாவது நேர்ந்துவிடுகிறது' என்றவர், 'நீங்கள்...?' என்று இழுத்தார்.*

*'வாசுதேவன். நியூஸ் பேப்பர் ஏஜெண்ட். கல்காஜி அனுமான் மந்திர் அருகே கடை வைத்திருக்கிறேன். கரோல்பாக், ராமகிருஷ்ணாபுரம், கன்னாட் பிளேஸ், நேரு பிளேஸ், நிஜாமுதீன் ஏரியாக்களில் ஏன் வியாபாரம்' என்று வாசு சொன்னான்.*

*'தமிழ்நாடா?' என்று அவர் கேட்டார். 'ஆமாம் சார்' என்றவன், 'ஒரு வேலையாக நொய்டா போகக் கிளம்பினேன். அந்தப் பாதையில்தான் குண்டு வெடித்துவிட்டது. யாரோ தூக்கிப்போட்டாற்போல இங்கே வந்து நிற்கிறேன்! சர்க்கஸ் பார்த்துவிட்டுப் போய்ச் சேர வேண்டியதுதான்' என்று சிரித்துக்கொண்டே சொன்னான்.*

*எலுமிச்சை சாறைக் குடித்து முடித்தவர், சந்தோஷமுடன் நன்றி சொல்லிவிட்டு நகர்ந்தார்.*

*சுமார் இருபது நிமிடங்களுக்கு மேல் என்ன செய்யலாம் என்று விளங்காமல் அங்கேயே உலாவிக்கொண்டிருந்தான் வாசு. எதிர்பாராத விநாடியில் அந்த போலீஸ்காரர் அவனைக் கை தட்டிக் கூப்பிட்டார். அவரருகே மோட்டார் சைக்கிளில் இன்னொரு போலீஸ்காரர் இப்போது நின்றிருந்தார்.*

*'இவர் அந்தப் பக்கமாகப் போகிறார். நீங்கள் பின்னால் ஏறிக்கொள்ளலாம்.'*

*நம்ப முடியாதவனாக வாசு அவரை நன்றியுடன் பார்த்தார்.*

*'ஏறிக்கொள்ளுங்கள், சீக்கிரம்' என்று அவசரப்படுத்தினார்.*

*'நம் ஏரியாவில் பேப்பர் ஏஜெண்டாக இருக்கிறார். பாவம், அவசர வேலை போலிருக்கிறது. நீ முடிந்த தூரம் கொண்டு விட்டுவிடு' என்று மோட்டார் சைக்கிள் போலீஸ்காரரிடம் சொல்லிவிட்டு, 'ஜாயியே சாப்' என்றார், அவனைப் பார்த்து.*

*சாப்! வாசுவுக்குப் பெருமகிழ்ச்சி உண்டாகியிருந்தது. அவருக்கு மற்றுமொரு முறை நன்றி சொல்லிவிட்டுக் கிளம்பினான். 'நம் ஏரியா' என்ற அந்த போலீஸ்காரர் சொன்னபோது, எந்த ஏரியா என்று கேட்டிருக்கலாமென்று தோன்றியது.*

*சில நாட்களாகக் குழப்பம் ஒரு புழுவாக நெளிந்துகொண்டிருந்தது அவனுக்குள். கணபதி சாரும் மன்னியும் மற்றவர்களும் தன்னைப் பற்றி யோசிக்கும்போது வந்தடைகிற இடம் பிழையானதாகவே இருப்பதாக அவன் கருதினான். நடைமுறை வாழ்வின் இருவேறு துருவங்களில், இருவேறு சமூக, பொருளாதார ஸ்திதியில் உலவிக்கொண்டிருப்பவர்கள் எப்படித் தன்னை ஒன்றாக மதிப்பிடுகிறார்கள்?*

*சம்பாதிக்க வேண்டும். அவன் தன் வாழ்வின் அர்த்தத்தை வெளிப்படுத்தத் தேர்ந்தெடுத்திருந்த சொல் அது. பிழையேதுமில்லையே? ஆனால், சம்பாத்தியம் என்பது தன்னளவில் ஒரு குறியீடு மட்டுமேயல்லவா! வழுக்கு மரத்தில் ஏறிக்கொண்டிருப்பவனுக்கு உச்சியிலிருக்கும் பானையின் மீதுதான் பார்வை இருக்கும். இலக்கை அடைவது இறுதிக்கட்டம். ஆனால், இறுதி வெற்றிக்குப் பிறகான வெறுமையைப் பற்றிக் கவலை கொள்பவர்கள், முந்தைய முயற்சியையும் வலிகள் மீறி மேலேறும்போது உண்டாகும் மகிழ்ச்சியை அனுபவிப்பதையும் ஏன் அங்கீகரிக்க மறுக்கிறார்கள்?*

*'பணம் சேர்க்கிறது ஒரு நிதானமான பிராஸஸ். நீ ரொம்ப அவசரப்படறே' என்று அவன் பார் வேலையை விட்டுவிட்டதாக வந்து சொன்னபோது கணபதிசார் சொன்னார்.*

*அவரால்கூடத் தவறாகப் புரிந்துகொள்ள முடிகிறது! 'லாபகரமான சில செயல்களில் நான் தொடர்ந்து ஈடுபட்டுக்கொண்டிருக்கிறேன் என்பதுதான் என் எதிர்காலம் குறித்து நான் நம்பிக்கை கொள்ள இருக்கிற ஒரே விஷயம். இவை வெறும் அனுபவங்களே தவிர, இறுதி நோக்கமல்ல. பார் அட்டண்டராகவும் பார்சல் கட்டுபவனாகவும் வீடு பெருக்கித் துடைப்பவனாகவுமே இருந்து, எப்படியும், என்னவும் செய்து சம்பாதித்துவிடுவதுதான் என் நோக்கம் என்றா என் செயல்கள் காட்டுகின்றன? மன்னிக்க வேண்டும் கணபதி சார்! எனக்கு விளக்கத் தெரியவில்லை. ஆனால் உங்கள் கருத்து சரியல்ல' என்று மனத்துக்குள் சொல்லிக்கொண்டான்.*

*ஒரு சாபம் மாதிரி அவன் குடும்பம் மீது கவிந்த ஏழைமையையும் விளைவான மந்தத்தனத்தையும் அவனது கல்வி போக்கிவிடும் என்று சொன்னார்கள். ஒருவேளை அது உண்மையாகவுமிருக்கலாம். தகுதி ஒரு பொருட்டில்லாமல் கேவலம், சில தகிடுதத்தங்களின் மூலமே சாத்தியமாகிவிடமுடிகிற கல்வி அவனுக்குக் குமட்டலை உண்டு பண்ணியது. கல்லூரி நாட்களை இப்போது நினைத்தாலும் உடலெங்கும் ஓர் அருவருப்புணர்வும் கோழை போன்றதொரு துர்நாற்றமெடுத்த திரவமும் ஓடுவதுபோல் உணர்ந்தான்.*

*'அதைவிட பார் வேலையோ, அசோகாவின் பின்புறம் இரவுகளில் நிற்பதோகூடக் கேவலமில்லை சார்' என்று அவன் சொல்லிக்கொண்டான்.*

*பிராமணனுக்கு உடலுழைப்பு வராது. பிசினஸ் சரிப்படாது. வலி தாங்கமாட்டான். அவமானம் அவன் சகித்துக்கொள்ளக்கூடிய உணர்ச்சி அல்ல. தவிர, அவன் கோழை. ஒரு தட்டுத் தட்டினால் வேட்டியை நனைத்துக்கொண்டுவிடுவான். அவனால் முடிந்ததெல்லாம் படிப்பது. அசை போடும் பசுவைப்போல் உருப்போட்டுத் தேர்வெழுதித் தேறி, வெள்ளைக் காலர் வேலைகளில் புத்தியின் மூலம் அமர்ந்துவிடுவது. பிறகு வீடு, மனைவி, பணம், பாதுகாப்பு. வயதான காலத்தில் வாசலில் ஒரு ஈஸிசேர். வாயில் நாலாயிரம். வசவில் நூறாயிரம். இறந்த பின் திவசம்; எள்ளுக்குக் கேடு.*

*இதுதானே உங்கள் இறுதி மதிப்பீடு? நல்லது, நான் பிராமணனில்லை. யார்தான் பிராமணனாயிருக்கிறார்கள்? பிரும்மம் உணர்ந்த பண்டிதர்களைப் புதைத்த இடத்தில் புல் முளைத்துக் காடாகி, விலங்குகள் குடியேறிவிட்டன. அடையாளம் தொலைத்துவிட்ட ஒரு சமூகத்தைத் தொடர்ந்து தாக்கிக்கொண்டிருப்பது எரியும் பிணத்தை இழுத்துப்போட்டு அடிப்பதல்லாமல் வேறென்ன?*

*'நான் பூணூலை மறுபடியும் கழற்றி எறிந்துவிட்டேன் சார்' என்ற அவன் கணபதி சாரிடம் ஒருமுறை சொன்னான். அவனது முன்கதை அனைத்தையும் அறிந்தவராதலால் அவர் சிரித்தபடி சொன்னார்,' என்ன பெரிய ரஷ்யப் புரட்சி செய்துவிட்டாய்? பூணூல்தான் அடையாளம் என்று நினைத்துக்கொண்டிருப்பதன் மூலமே நீ பிராமணன்தான் என்பதை நிரூபித்துக்கொண்டிருக்கிறாய்.'*

*வாழ்க்கை முழுக்க முழுக்க உணர்ச்சிகளால் நெய்யப்பட்ட சேலை மாதிரி விரிந்துகிடக்கிறது. சேலையில் புடைத்துக்கொண்டிருக்கும் சரிகைகள் போலல்லவா இந்த அறிவு ஜீவிகள் இருக்கிறார்கள்?*

*'சார், நீங்கள் என்னை வாதத்தில் மடக்கிவிடுவது மிக சுலபம். நான் வெறும் முட்டாள். ஆனால் என் உணர்ச்சி மிகவும் அர்த்தபூர்வமானது. எப்போதாவதேனும் அதைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள்' என்று சொல்லிவிட்டு வந்துவிட்டான்.*

*நொய்டாவில் அவன் ஒரு சர்தாரைப் பார்க்கவேண்டியிருந்தது. புதுதில்லி முழுவதற்கும் வெண்ணெய், ஜாம், ரொட்டி, பிற பேக்கரி பொருட்கள் சப்ளை செய்கிற பெரும்பணக்காரர். இது தவிர அவருக்குப் பெரியதொரு மாட்டுப் பண்ணையுமிருந்தது. கூடுதலாக அங்கே, ஆர்னிகா என்கிளேவில் ஒரு ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்.*

*மூன்று தினங்கள் முன்பு, நீதிபதி சாபின் மருமகள் பூமிகா அவனுக்கு எழுதியிருந்த கடிதத்தில் நொய்டா சர்தார் பற்றிக் குறிப்பிட்டிருந்தாள். வாசு அவரை உடனே தொடர்புகொள்வதன் மூலம் அவர்களது ஷூ வியாபாரத்துக்கு வேறொரு பரிமாணம் கொடுக்க இயலும்.*

*சர்தாரின் ஷாப்பிங் காம்ப்ளக்ஸில் பதினைந்த சதுர அடிக் கடையொன்று காலியாகியது. அவரது சகோதரி மகளின் சிபாரிசு என்பதால் அது வாசுவுக்குக் கிடைக்கக்கூடும். ஷூ மட்டுமல்லாது ஏனைய அமெரிக்கப் பொருட்களையும் அங்கே கடை வைக்கலாம் என்று அவள் எழுதியிருந்தாள். கடிதத்தின் நகல் சர்தாருக்கும் சென்றிருக்கிறது.*

*பத்து மணிக்கு வருவதாக அவன் தெரிவித்திருந்தான். ஆனால் அவன் நொய்டாவை அடைந்தபோது மணி, பகல் ஒன்று.*

*சர்தார் நிச்சயம் நீதிபதி மருகளின் மாமாவாகத்தான் இருக்க முடியும். வாய் நிறையப் பானுடன் அவனை வரவேற்றார்.*

*‘ஆயியே வாசுபாய்’ என்றார் சர்தார்.*

*‘நஹி, மே வாசு ஐயங்கார்!’ என்று சொல்லிச் சிரித்தான் அவன்.*

# *9*

*வழக்கத்தைவிட மூன்று மணி நேரம் தாமதமாக வந்து சேர்ந்தது தமிழ்நாடு எக்ஸ்பிரஸ். கூட்டத்தில் இடிபட்டு இறங்கி வெளியேறி பூங்கா ரயில் நிலையம் வந்தடைவதற்குள் வியர்த்துவிட்டது வரதனுக்கு.*

*ஆனால், காலை வேளையில் தாம்பரம் நோக்கிச் செல்லும் ரயில்களில் கூட்டமிருப்பதில்லை.*

*சைதாப்பேட்டையில் இறங்கி, காரணீஸ்வரர் கோயில் தெருவைத் தாண்டுவதற்குள் எதிரே சீனா வருவதைப் பார்த்துவிட்டான்.*

*'இப்பதானா வறே?' என்றான் சீனா. 'ரயில் லேட்டா?'*

*'ஆமா, மூணு மணி நேரம். ராத்திரி ஆந்திரால எங்கேயோ போட்டிருக்கான். அசந்து தூங்கினதுல நின்னதும் தெரியலை, புறப்பட்டதும் தெரியலை. கார்த்தால ரயில் நிக்கிறது; ஐயோ இறங்கணுமேன்னு பரபரன்னு ஜன்னல் வழியா பார்த்தால், ஜோலார்பேட்டை. சீ போன்னு ஆயிடுத்து.'*

*'வாசு எப்படி இருக்கான்?' என்று சீனா கேட்டான்.*

*வரதன் மேல் வேஷ்டியால் முகத்தைத் துடைத்துக்கொண்டான். ஒரு விநாடி தயங்கியவன், 'அவனுக்கென்ன - நீ எங்கே கிளம்பிண்டிருக்கே?' என்றான்.*

*'ஒண்ணுமில்லை. இங்கே பஞ்சுமாமா ஆத்துவரைக்கும்தான். பதினேழாந்தேதி அவர் பொண்ணுக்கு நிச்சயதார்த்தம். அண்ணாதான் வந்து கேட்டரிங் எடுத்துக்கணும்னுட்டுப் போனார். அண்ணா என்னைப் போகச் சொன்னான். பொங்கல், போண்டா, கேசரிதான். லிஸ்ட் குடுத்துட்டு வரலாம்னு கிளம்பினேன்.'*

*'சுருக்க வந்து சேரு' என்று சொல்லிவிட்டு, தேரடியில் திரும்பி சுப்பிரமணியர் தெருவில் வேகமாக நடக்க ஆரம்பித்தான் வரதன்.*

*'ஏண்டா லேட்டு?' என்று வாசலிலேயே பார்த்துவிட்டு சுந்தரா கேட்டான். 'அப்பா புலம்பிண்டே இருக்கார், இன்னும் காணமேன்னு. டெல்லிப் பக்கம் போனதுமே வாசு காத்து உனக்கும் அடிச்சுடுத்துன்னு சின்னமன்னியானா கிண்டல் பண்ணிண்டிருக்கா' என்று சிரித்தான்.*

*'டிரெயின் லேட்டாயிடுத்து சுந்தரா' என்றபடி கோயிலைப் பார்த்து ஒரு கும்பிடு போட்டுவிட்டு, வீட்டுக்குள் போனான் வரதன்.*

*அப்பா, ஈஸிசேரில் எழுந்து உட்கார்ந்தார்.*

*'எப்படிடா இருக்கான் அவன்?' என்று அம்மா கேட்டாள்.*

*'உடம்பு ஒண்ணுமில்லாம இருக்கோல்லியோ?' என்று மைதிலி கேட்டாள்.*

*எதையும் மறைப்பதில் அர்த்தமில்லை என்று வரதனுக்குத் தோன்றியது. பீடிகைகளில்லாமலே சொல்லிவிடலாம் என்றுபட்டது.*

*‘வாசு, சிங்கப்பூர் போயிருக்காம்பா’ என்றான் அப்பாவைப் பார்த்து.*

*‘என்னது!’ அவர் எழுந்துவிட்டார்.*

*‘எதுக்குப் பதறறே? பிஸினஸ் மேனாயிட்டா இதெல்லாம் சாதாரணம். திடீர்னு ஏதோ வேலை வந்துடுத்து போலருக்கு. நான் யுனிவர்சிடியிலே சதஸை முடிச்சுட்டு, விசாரிச்சுண்டு அவன் இருக்கற ஊருக்குப் போய் அட்ரஸ் தேடிக் கண்டுபிடிச்சா, ஆளில்லை. அக்கம் பக்கத்துல கேட்டா, போனவாரம் திடும்னு பிஸினஸ் விசா கிடைச்சுக் கிளம்பிட்டாங்கறா!’*

*‘என்னத்துக்குப் போச்சாம், நாயி? சொல்லமாட்டானோ கடங்காரன்? நாசமத்துப்போக’ என்றாள் அம்மா.*

*சட்டென்று பேச்சை மாற்றி ‘நீ போனகாரியம் என்னாச்சு?’ என்று அப்பா, நிதானமடைய முயன்றதாக வரதனுக்குத் தோன்றியது.*

*தொடர்ந்து ஆளுக்கொன்றாகக் கேள்விகள் கேட்டுக்கொண்டே இருந்தார்கள். புஸ்தகம் விற்கிறவனுக்கு சிங்கப்பூரில் என்ன வேலை? போதாக்குறைக்கு ஒரு பர்மாபஜார் கடையை வேறு பார்த்துக்கொள்வதாகச் சொல்லியிருந்தானே? சிங்கப்பூர் போகிற அளவுக்கு அவனிடம் ஏது காசு? கெட்ட வழியில் போகாமல் இருக்கணுமே? வீட்டு ஞாபகம் துளியாவது இருந்தால் இப்படிச் செய்வானா? கடங்காரன். இவன் சம்பாதிக்கவில்லை என்று யார் அழுதார்கள். பத்து வருஷம் முன்னால் இந்த வரதன் கடங்காரன்தான் அவனுக்குக் கோணல் புத்தியை ஏற்றிவிட்டது. பொய் சர்டிபிகேட் காட்டி காலேஜில் சேர்த்துவிட்டான். வம்சத்தில் யாருக்குமில்லை, அப்படியொரு குண்டு தைரியம். இதெல்லாம் படவேண்டுமென்று எழுதியிருக்கிறது. ஒரு நடை வந்து பார்த்துவிட்டுப்போக என்ன கேடு அவனுக்கு? செத்தா போய்விட்டோம் எல்லாரும்? எக்கேடோ கெடட்டும். குழந்தை நன்றாக இருந்தால் சரி.*

*குளித்துச் சாப்பிட்டுவிட்டு வாசலறைக்கு வந்து படுத்தான் வரதன். மறுநாளே அவன் ஸ்ரீரங்கம் கிளம்பிவிடுவதாக இருந்தான். போவதற்கு முன்னால் மதுராந்தகம் போய் வைதேகியை அழைத்துவர வேண்டும். அவள் அண்ணனுக்குக் கல்யாணம் நிச்சயமாகியிருந்த சாக்கில் எப்படியோ இந்த முறை ஒரு வாரமும் அம்மா வீட்டிலேயே டேரா போட்டுவிட்டாள். வத்சலா வேறு அவன் முகத்துக்கு நேராகவே சொல்லிவிட்டாள்: ‘ஆயிசுல ஒருநாள் நாங்க ரெண்டுபேரும் இப்படி எங்காத்துக்குப் போய் சேர்ந்தாப்பல ஒரு வாரம் இருந்திருப்போமா?’*

*‘விடுடி. சும்மா வம்பு பண்ணி, அம்மாவை ‘ரேக்கி’ விட்டுடாதே!’ என்றாள் மைதிலி.*

*அடுத்த முறை வரும்போது அவளை இங்கேயே தங்கச்சொல்லி ஒரு வாரம் விட்டுப்போகவேண்டுமென்று வரதன் நினைத்துக்கொண்டான்.*

*விடை தெரியாத வினாக்களும், விளைவான மண்டையிடியும் சலிப்பும் கவலையும் சோர்வும் மூன்று நாட்களாக அவனைப் படாதபாடு படுத்திக்கொண்டிருந்தன. காலை காரணீஸ்வரர் கோயில் தெரு அருகே சீனாவைச் சந்தித்தபோது சொன்ன மாதிரி, உண்மையில் அவன் ரயிலில் தூங்கியிருக்கவில்லை. வாசுவைப் பற்றிய கவலைகளை வெல்ல முடியாமல் இரவெல்லாம் பெட்டியின் இரு மூலைகளுக்குமாக நடந்துகொண்டே இருந்தான்.*

*பலார்ஷாவில் சிக்னல் கிடைக்காமல் ரயில் நின்றுகொண்டே இருந்தபோது அவன் இறங்கி ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் உலாத்தினான். நெடு நாட்களாக, அந்தப் பக்கம் பிரசித்தமான சப்பாத்திக் கல் வாங்க வேண்டுமென்று அவன் எண்ணியிருந்தான். கருமையும் வழுவழுப்புமாக ஸ்டேஷனிலேயே, ‘சக்ளே... சக்ளே’ என்று விற்றுக்கொண்டிருந்தபோது ஏனோ அவனுக்கு அதில் சுவாரசியமில்லாமலிருந்து விட்டது. ஏனிப்படிச் செய்தான்? ஏனிப்படிச் செய்தான் என்று ஓயாமல் அவனுக்குள் ஒரு கேள்வி திரும்பத் திரும்பக்*

*கேட்டுக்கொண்டேயிருந்தது.*

*எத்தனை வருடங்கள்! ஒரு வெறுப்பிலும் சலிப்பிலும் ஓடிப்போகிறவர்களெல்லாம் இப்படியா சுத்தமாகத் துடைத்துப் போட்டுவிட்டுக் கண்காணாத தூரத்தில் போய் உட்கார்ந்துகொண்டு, வெறும் கடிதம் மட்டும் எழுதிக்கொண்டிருப்பார்கள்? அப்படி முகம் பார்க்கக்கூட விருப்பமில்லாமல் போய்விடுகிற அளவுக்கு என்ன ஆகிவிட்டது?*

*'மன்னீ நான் புடைவை பிடிச்சானாகவே கடைசி வரை இருந்திருப்பேன். ஒரு குற்றம் செய்யவைத்து, என்னில் முதல் கயமையையும் பிறகு உலகம் தெரிந்துகொள்வதையும் வரதன் உண்டாக்கிவிட்டான். அவன் நல்லதுதான் எப்போதும் நினைத்தான். ஆனால் என்னால் என்னை எப்போதும் கொன்றுகொள்ளமுடியும் என்பதுபோல் என் மனசாட்சியைக் கொல்ல முடியவில்லையே' என்று எழுதியிருந்தான். மைதிலிக்கு முதல் முதலில் எழுதிய கடிதத்தில்.*

*கடவுளே, நான்தான் காரணமாகிவிட்டேனா! என்று வரதன் தனக்குள் கேட்டுக்கொண்டே இருந்தான். நினைத்து நினைத்து அவன் கண்கள் உடைந்து பெருகுவதும், இரண்டாமவர் அறியாமல் துடைத்துக்கொள்வதுமாகவே இருந்தான்.*

*சாபம்தான் இது என்று தோன்றியது அவனுக்கு. ஏழைமையைப்போல. அண்ணாவுக்குக் குழந்தை பிறக்காததுபோல. யாருக்குமே சரியான உத்தியோகம் கிடைக்காததுபோல. சரோ புருஷனுக்கு டி.பி. வந்திருப்பதைப்போல. இந்த வீட்டின் சுவர்களோடு புதைந்துவிட்ட மன்னிகளின் நசுங்கிய கனவுகள்போல. வாசு இப்படிப் பரம்பொருள் மாதிரி, இருப்பதும் இல்லாததுமான சஞ்சலத்தை முடிவில்லாமல் தந்துகொண்டிருப்பதும் ஒரு சாபம்தான் என்று அவன் நினைத்தான்.*

*'ரங்கநாதா!' என்று வாய்விட்டுச் சொன்னான். 'நீ இருக்கேங்கற நம்பிக்கைலதான் தினம் உன்னை வந்து வந்து சேவிச்சுண்டிருக்கேன். இந்தாத்துல வேற யாருக்குமில்லாத பக்தியும் சிரேஷ்டமும் எனக்குத்தான் உண்டுன்னு பெருமைகூட உண்டு எனக்கு. என்னைப் போக்கிரி ஆக்கிடாதே! நாஸ்திகன் ஆக்கிடாதே. வாசுவைக் கொண்டுவந்து சேர்த்துடு' என்று பைத்தியம் மாதிரி, யாருமில்லாததை உறுதிப்படுத்திக்கொண்டு வாய்விட்டுப் புலம்பினான்.*

*உறங்கியது தெரியாமல் பிறகு உறங்கிப்போனான்.*

*நான்கு மணிக்கு விழிப்புத் தட்டியபோது, பெரியண்ணாவும் சடகோபனும் அவன் தலைமாட்டில் மௌனமாக உட்கார்ந்திருப்பதைக் கண்டு விரைந்து எழுந்தான்.*

*'களைப்பெல்லாம் போச்சா?' என்று சடகோபன் கேட்டான்.*

*வரதன் சிரித்தான்.*

*'போ. உள்ள மன்னி காப்பி போட்டு ரெடியா வெச்சிருக்கா. சாப்பிட்டுட்டு நைஸா வெளில வா. கொஞ்சம் பேசணும்' என்று அண்ணா சொன்னான்.*

*வரதன் மௌனமாக எழுந்து உள்ளே போனான். காப்பியைச் சாப்பிட்டான். கொல்லைக்குப்போய் நீர் இரைத்து முகம் அலம்பிக்கொண்டான். வேட்டியை மாற்றிக்கொண்டு பளிச்சென்று வழக்கம்போல் பட்டைத் திருமண் இட்டுக்கொண்டான். 'கோயில் வரைக்கும் போயிட்டு வரேன் மன்னி' என்று சொல்லிவிட்டு வெளியே வந்தான். கூடத்தில் அப்பா, வழக்கமான இடத்தில் ஈசிசேரில் படுத்துக்கொண்டிருந்தார். அம்மா இருட்டு ரூமில் பிரோவைக் குடைந்துகொண்டிருந்தாள். ரேழியில் வத்சலா, லட்சுமிக்கு வீட்டுப்பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருப்பதைப் பார்த்தபடியே கடந்து வாசலுக்கு வந்தான்.*

*சடகோபனும் பெரியண்ணாவும் வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு வாசலில் தயாராக நின்றுகொண்டிருந்தார்கள். வரதன் பொதுவாக 'போலாம்' என்று சொன்னான்.*

*கோயிலுக்குப் போனார்கள். வரதனைப் பார்த்ததும் பட்டாச்சாரியார், 'வாரும் சுவாமி. டெல்லிக்குப் போயிருக்கறதான்னா உம்ம மன்னி சொன்னா?' என்று கேட்டார்.*

*'காலம்பறதான் வந்தேன்' என்று வரதன் சொன்னான்.*

*'ஆத்துக்காரி சவுக்கியமோன்னோ?'*

*'இருக்கா.'*

*'அம்மாவாத்துக்குப் போயிருக்காளாக்கும்.'*

*வரதன் மௌனமாகத் தலையாட்டினான். 'எப்போ அங்கே பிரும்மோத்ஸ்வம் ஆரம்பிக்கிறது?' என்று என்னென்னமோ கேட்டுவிட்டு, 'இன்னிக்கு பார்ஸாரதி ஐயங்கார் பர்த்டே. விசாகமோன்னோ? அரைமணில சேவை ஆரம்பிச்சுடும். பெருமாளுக்குத் திருமஞ்சனம் பண்றார். நீர் இருக்கலாமோல்லியோ?' என்று கேட்டார்.*

*'நடுல வந்து கலந்துக்கறேன்' என்று சொல்லிவிட்டு விறுவிறுவென இடது புறமாக நடந்து மதில் சுவரை ஒட்டிய கோடியில் ஆண்டாள் சந்நிதி அருகே அமர்ந்தார்கள். அங்கே பையன்கள் கிரிக்கெட் ஆடிக்கொண்டிருந்தாலும் பேச்சுக்குக் குந்தகமில்லை.*

*அண்ணா, நேரடியாக விஷயத்துக்கு வந்தான்.*

*'என்னதாண்டா ஆச்சு அவனுக்கு? உசிரோட இருக்கானோல்லியோ?'*

*'சீச்சீ!' என்று அவசரமாகத் தடுத்தான் வரதன்.*

*'நிஜமாவே சிங்கப்பூர் போயிட்டானாண்டா. முதல்ல அவன் அட்ரஸ்ல போய் விசாரிச்சேன். ஏஜென்ஸி வேலையை க்ளோஸ் பண்ணி, ஒரு மாசம் முன்னாலயே கரெக்டா அவாவாளுக்கு பைசல் பண்ணிட்டானாம். நொய்டாவிலேயே ரூம் பார்த்துண்டு, கடையை கவனிச்சுக்கறான்னு அந்த ஜட்ஜ் ஆத்து மாமி சொன்னா. ஆனா, கொஞ்ச நாளா போனே பண்ணலை; ஆளும் வரலைன்னு இவ கவலைப்பட்டிருக்கா. அஞ்சு லட்ச ரூபா சரக்கு அனுப்பியிருந்தாளாம் அவ மாட்டுப்பொண்ணு. ஏர்போர்ட் போய் அதை எடுத்துக்கலையேன்னு அங்கேருந்து கேட்டு போன் வந்திருக்கு. இவனானா, ரெண்டு நாள் இருக்கமாட்டேன்னு சொல்லிட்டு, கடையைப் பார்த்துக்க வேற ஒரு ஃப்ரெண்டை உட்காரவெச்சுட்டுப் போனவன், மூணாம் நாள் அந்த சர்தாருக்கு போன் பண்ணியிருக்கான். இது மாதிரி சமாசாரம்; ஒரு நல்ல ஆஃபர் வந்திருக்கு. நான் சிங்கப்பூர் போறேன். பூமிகா மேடமுக்கு லெட்டர் போட்டுட்டேன், மாத்து ஏற்பாடு பண்ணிக்கச் சொல்லி. அதுவரைக்கும் உங்க தங்கை பொண்ணு கடையை நீங்களே பார்த்துண்டாலும் சரி; மூடிவெச்சாலும் சரி. என்னை மன்னிச்சுருங்கோன்னானாம்.'*

*'அடப்பாவி!' என்றான் சடகோபன்.*

*'கேளு, சிங்கப்பூர்ல என்ன வேலை, திடீர்னு இப்படிச் சொல்றியே, கடையைப் பார்த்துக்கறது பிரச்னையில்லை. நீ யாரையாவது நம்பி மோசம் போயிடாதேப்பான்னு சொல்லியிருக்கார் அந்த சர்தார்.'*

*'உனக்கெப்படி இதெல்லாம் தெரியும்?'*

*‘இந்த நாய் பண்ணியிருக்கற கூத்துல நான் டில்லி, உத்திரபிரதேசமெல்லாம் நாலு நாள் பேயா இல்லே அலைய வேண்டியதாயிடுத்து? நொய்டாபோய் அந்த முதலாளியையே பார்த்தேன். வாசுவுக்கு நான் அண்ணன்னா, நம்பமாட்டேங்கறான்னா பார்த்துக்கோ, அப்படி மாறிப்போயிருக்கு அது.’*

*‘சிங்கப்பூருக்கு எதுக்குப் போனானாம்?’*

*‘யார் கண்டா? நல்ல உத்தியோகம் கிடைச்சிருக்கு; நிறைய சம்பளம். நான் யாரையும் ஏமாத்தலை; துரோகம் பண்ணலை; கொள்ளையடிக்கலை. சொல்லிக்காம போற தப்பைத்தான் செஞ்சிருக்கேன். அப்பா ஸ்தானத்துல இருந்து என்னை ஆசீர்வாதம் பண்ணுங்கோன்னு அந்த சர்தார்கிட்டே போன்ல அழுதானாம்.’*

*‘அட நாசமாப்போறவனே!’ என்றார் பெரியண்ணா.*

*‘அப்படியெல்லாம் சொல்லாதேடா. ஒண்ணு புரிஞ்சுடுத்து. அவன் பிழைச்சுண்டுட்டான். எப்பாவாவது வருவான்னு நம்பிண்டிருக்க வேண்டியதுதான்.’*

*‘அப்பாக்கு உடம்பு சீரியஸ்னு வேணா சிங்கப்பூர் பேப்பர்ல விளம்பரம் குடுப்போமா?’ என்றான் வரதன்.*

*‘பைத்தியமாட்டம் பேசாத வரதா. அவனுக்கு புத்தி தெரிஞ்சுடுத்து. அவனைப் பத்தி இனிமே பயப்பட வேண்டாம்னுதான் தோணறது. ஆனா என்னத்துக்காக இப்படி பணத்தைத் துரத்திண்டு பேயா அலையறான்னுதான் புரியலை. விடு, கழுதை ஒரு வருஷம், ரெண்டு வருஷத்துல வந்து சேர்ந்துடும்’ என்றான் சடகோபன்.*

*‘எனக்கு அம்மாவையும் அப்பாவையும் நினைச்சாத்தான் கவலையா இருக்கு’ என்று அண்ணா சொன்னான்.*

*‘நான் நன்னா யோசிச்சி ஒரு முடிவுக்கு வந்திருக்கேண்டா கண்ணா’ என்றான் வரதன்.*

*‘என்னது?’*

*‘நம்ம காஞ்சீபுரம் வீடு ப்ராஜெக்ட் எப்ப முடியும்?’*

*‘சித்திரை மாசம் கிரகப்பிரவேசம் வெச்சுக்கலாம்னு அப்பா சொன்னார். ஆல்மோஸ்ட் முடிஞ்சாச்சு. நேத்தியோட தளம் போடறது முடிஞ்சி தண்ணி ஊத்திண்டிருக்கா.’*

*‘தொட்டுத் தொட்டு இன்னும் எத்தனை நாள் இழுக்கும்?’*

*‘நாம என்னடா, மொத்தமா காசு வெச்சிண்டா கட்டறோம். ஒரு ரூவா கிடைச்சா ஒரு ஆணி. பத்து ரூபா கிடைச்சா ஒரு கட்டை ஆயிரம் தேறித்துன்னா பத்து மூட்டை சிமிண்டுன்னுதானே வாங்கி வேலை பார்த்துண்டிருக்கோம்? ரங்கன் என்னவோ அடுத்த மாசம் மொத்தமா இருபத்தஞ்சு ரூபா யார்கிட்டேயோ கடன் கிடைச்சுடும்னு சொல்லிண்டிருக்கான். அது வந்துருத்துன்னா முடிஞ்ச மாதிரிதான்.’*

*‘அது முடிஞ்சு நாம காஞ்சீபுரத்துக்குக் குடித்தனம் போகும்போது நானும் வந்துடுவேன், சீரங்கத்தை விட்டு’ என்று வரதன் சொன்னான்.*

*‘என்னாச்சுடா?’*

*‘ஒண்ணும்டி ஆகலை. இனிமேலும் நான் அப்பாவை விட்டுட்டு இருக்கறதில்லைன்னு முடிவு பண்ணிட்டேன். சீரங்கத்துல ரங்கநாதன்னா, காஞ்சீபுரத்துல வரதராஜன். கோஷ்டி மாறிண்டுட வேண்டியதுதான்.’*

*‘இதென்ன ஆபீஸா, நினைச்சுண்டா டிரான்ஸ்பர் வாங்கிக்க?’ என்று அண்ணா கேட்டான்.*

*‘ஆபீஸ் மாதிரிதான் ஆயாச்சுன்னு வெச்சுக்கோயேன். இந்த விசை கிளம்பும்போது ஜீயர்கிட்டயே பேசிட்டேன். இந்த மாதிரி சமாசாரம்னு. போயேன், நான் சொல்லிவிடறேன். அங்கே சேவாகால கோஷ்டில சேர்ந்துண்டு, முதலியாண்டான் சந்நிதில அட்டண்டன்ஸ் குடுத்திண்டு இருன்னுட்டார்.’*

*‘அப்பாகிட்டே சொல்லிட்டியாடா?’ என்று ஆர்வமுடன் கேட்டான் சடகோபன்.’*

*‘இன்னும் இல்லைடா.’*

*‘முதல்ல போய்ச் சொல்லுடா. அவர் மனசு பட்டுண்டிருக்கற பாட்டுக்கு எவ்வளவோ ஆறுதலா இருக்கும் இது.’*

*‘உன் கடையை என்னடா பண்ணப்போறே?’ என்று வரதன் கேட்டான்.’*

*‘என்ன பிரமாதக் கடை? ஒரு பொட்டில போட்டுத் தூக்கிண்டு போய் அங்க விரிச்சுட வேண்டியதுதான். நல்ல வேளை, மெயின் ரோடுலேயே நம்ம நிலம் இருக்கறதால ஆத்து வாசல்லேயே அதுக்கும் சேர்த்து ஒரு பொந்து கட்டிக் குடுத்திருக்கான் கண்ணன்’ என்று சிரித்தான்.*

*‘உனக்கெப்படிடா சமையல், வீடு கட்டறது, மண்ணாங்கட்டினு என்னென்னெல்லாமோ தெரிஞ்சிருக்கு?’ என்று வரதன், பெரியண்ணாவைப் பார்த்துக் கேட்டான்.*

*அவன் சிரித்தான்.*

*‘தெரியலை. ரத்தத்துலேயே வந்துரும்போலருக்கு, முதல் பையனா பிறந்துட்டா!’*

*‘நல்லவேளை. நீ கடைசிப் பையனா பிறந்து தொலைக்காம இருந்தியே!’ என்று சடகோபன் சொன்னான்.*

*வரதன் சிரித்தான். சுந்தராவும் மணியும் தேடிக்கொண்டு வருவது தூரத்தில் தெரிந்தது.*

*‘நீங்க கிளம்புங்கோ. சந்நிதிக்குப்போய் எட்டிப் பார்த்துட்டு வந்துடறேன்’ என்று வரதன் எழுந்துகொண்டாள்.*

*கோயில் மணி அடிக்க ஆரம்பித்தது.*

# *பாகம் - மூன்று*

## *1*

*மரியாதைக்குரிய பூமிகாஜீ, நலமாயிருக்கிறீர்களல்லவா. சென்ற வருடம் நான் சிங்கப்பூர் புறப்படுகிற அவசரத்தில் உங்களுக்கொரு கடிதம் எழுதியிருந்தேன். கடிதம் என்று அதை எப்படிச் சொல்வது? பதற்றத்தையும் தவிப்பையும் குற்ற உணர்வையும் கலந்து கொட்டி எழுதிய என் ராஜினாமா அது. ஒரு பட்டியலிட்டுப் பார்த்தால், நான் மன்னிப்புக் கோரவும் நன்றி கூறவும் நமது தேசத்தின் பல பகுதிகளில் கொத்துக் கொத்தாக நிறைய மனிதர்கள் இருக்கிறார்கள். வேறு யாரையும்விட அவர்களுள் தலையாயவராக நான் உங்களையே கருதுகிறேன்.*

*என்னை மன்னித்துவிடுங்கள். என் அந்தராத்மாவின் ஆழத்திலிருந்து பெருக்கெடுக்கும் நன்றியுணர்வை ஏற்றுக்கொள்ளுங்கள்.*

*மிகச் சாதாரணமான ஒரு வேலைக்காரனாக உங்கள் கணவரின் பெற்றோர் வீட்டில் பெருக்கித் துடைத்துக்கொண்டிருந்தவன் நான். பெயர் வாசு. இதற்கு மேல் என்னைப் பற்றி ஒன்றுமே தெரியாதவர் நீங்கள்.*

*சந்திக்கிற, அறிமுகமாகிற எல்லோரிடமும் நட்பாகப் பேசிப் பழகுவது; அதன் மூலம் ஏதாவது ஒரு உதவியைக் கேட்டுப் பெற்றுக்கொள்வது என்பது, பிழைப்புத்தேடி வீட்டை விட்டுக் கிளம்பிய நாளாக நான் கடைப்பிடித்துவரும் ஒரு வழக்கம். என் தருமமே அதுதான் என்று சொன்னாலும் தப்பில்லை.*

*மிகப்பல ஆண்டுகளுக்கு முன்னால், ஆந்திரப் பிரதேச ரயில் நிலையம் ஒன்றில் டிக்கெட் இல்லாமல் பயணம் செய்ததற்காக மாட்டிக்கொண்டேன். இரக்கம் மேலிட்டு என்னை தண்டிக்காமல் விடுவித்த அந்த முகமறியாத பரிசோதகருக்கு வெறுமனே கைகூப்பி நன்றி சொல்லிவிட்டுப் போயிருக்கலாம். ஆனால், நான் அப்படிச் செய்யவில்லை. ஆயிரம் பேர் நடமாடிக்கொண்டிருந்த ஸ்டேஷன் என்றும் பாராமல், அவரை ஒரு ஓரத்துக்கு அழைத்துப்போய் சாஷ்டாங்கமாகக் காலில் விழுந்து, நன்றி சொன்னேன்.*

*வணக்கம் ஒரு பெரிய வரமல்லவா. எனக்குள், என்னையொரு வில்லாக நான் உருவகப்படுத்திக்கொண்டது அப்போதுதான். வில் வளைகிற அளவுக்கு அம்பு சீறிப் பாயுமல்லவா. தவிர, யாருக்குத்தான் தன்னை வணங்குபவனைப் பிடிக்காது?*

*'உனக்கு என்ன வேண்டும்? எங்கே போக விரும்புகிறாய்?' என்று கேட்டு, அவர்தான் தில்லிக்கு டிக்கெட் எடுத்துக்கொடுத்தார்.*

*வெளிப்படுத்தப்படுகிற பணிவின் அசாதாரண சக்தியை அன்று புரிந்துகொண்டேன். அதே பணிவுதான் எனக்கு ஏழு வருடங்கள் தலைநகரில் சோறு போட்டது - உங்கள் மாமனாரைப் போன்ற மிக உயர்ந்த அந்தஸ்தில் உள்ளவர்களோடும் சுலபமாக இணக்கம் கொள்ளச் செய்தது.*

*ஆயினும் அவர்களுக்கெல்லாம் நான் உழைத்துக் கடன் தீர்த்திருக்கிறேன். அந்தத் திருப்தி எனக்குண்டு. தீர்க்காமல் விட்டுவந்த கடன் உங்களுடையதுதான்.*

*முன்பின் அறிமுகமில்லாதவனை நம்பி எத்தனை பெரிய உதவிகளெல்லாம் செய்தீர்கள்!*

*வெறும் நம்பிக்கை. ஐம்பது ஐம்பது ஷூக்களை வாங்கி அனுப்புவது நஷ்டமானாலும் உங்களுக்குப் பெருஞ்சுமையாக இருக்காது என்று கணக்குப்போட்டே, நான் உங்களிடம் கோரிக்கை வைத்தேன். விற்ற காசை ஒழுங்காகக் கொடுத்துவிடுகிறான் என்பதுதான் என் மீதான உங்களின் நம்பிக்கை உறுதிபடக் காரணமாக அமைந்தது.*

*நமது மக்களின் அந்நிய மோகம் எத்தகையது என்பது அந்த ஆறேழு மாதங்களில் எனக்குப் புரிந்துவிட்டது. கேவலம் செருப்புகூட வெளிநாட்டுச் சரக்கென்றால் உடனே விற்றுத் தீர்ந்துவிடுகிறது என்றால் சுதந்திரமடைந்த நாற்பது ஆண்டுகளில் நம் தலைவர்கள் தேசியம் வளர்த்து என்ன கிழித்தார்கள் என்று கேட்கத் தோன்றுகிறது. ஒரு ஜப்பான்காரனிடமோ பிரெஞ்சுக்காரனிடமோ அமெரிக்க ஷூவை இப்படிச் சுலபமாகத் தள்ளிவிட முடியுமா என்று யோசித்துப் பாருங்கள்.*

*ஜீ! நான் தவறுகள் செய்யத் தயங்காதவன். நானேதான் உங்களுக்கு ஷூ விற்கும் யோசனையையும் தந்தேன். ஆனால், கூடவே குரல் கொடுத்துக்கொண்டு எனக்குள் ஒருத்தன் எந்நேரமும் அரித்துக்கொண்டே இருப்பான். எந்தத் தவறையும் நான் அதிக காலம் செய்ததில்லை என்பது மட்டுந்தான் நான் அகங்காரம் கொள்ளத்தக்க ஒரே விஷயம்.*

*இந்த செருப்பு விற்கிற பிசினஸில் எனக்கு நிறையப் பணம் கிடைத்தது உண்மை. தேசத்தின் தென்கோடியில் மூன்று வேளையும் மோர் சாதம் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் என் மிகப்பெரிய குடும்பத்தின் பொருளாதாரச் சுமையை ஓரளவு இறக்கிவைக்க முடிந்தது.*

*ஆனால், நான் முன்பே குறிப்பிட்டதுபோல அதிலொரு அருவருப்புணர்வு எப்படியோ உண்டாகிவிட்டது. மக்களின் மனோபாவத்தை எண்ணி மறுகுவதும் செய்கிற தொழிலின் மீது விமர்சனங்கள் கொண்டிருப்பதும், கேவலம், பிழைப்புத்தேடி ஓடி வந்தவனுக்குகந்த காரியங்களல்ல என் என்னை நானே சமாதானப்படுத்திக்கொண்டேன். அதன் தொடர்ச்சியாகத்தான் நீங்கள் உங்கள் மாமாவின் ஷாப்பிங் காம்ப்ளக்ஸில் ஒரு 'பிரத்தியேக அமெரிக்கப் பொருட்கள் கடை' தொடங்கி என்னையே கடையின் பொறுப்பாளனாக நியமித்தபோது பேசாமல் ஒப்புக்கொண்டேன்.*

*மூவாயிரம் ரூபாய்கள்! வேறு யார் எனக்கு அத்தனை பெரிய சம்பளம் தருவார்கள்? ஆனால் நீங்கள் தந்தீர்கள். கடையில் விற்பனைக்கு வைத்த அனைத்துப் பொருட்களிலும் ஒவ்வொன்றைக் கொண்ட ஒரு பரிசுப் பெட்டி ஒன்றையும் எனக்கு அனுப்பிவைத்தீர்கள்.*

*ஒன்று சொல்ல வேண்டும். நேர்த்தியான தயாரிப்பின் மூலம் ஒரு ரசனையற்றவனைக்கூட நிமிர்ந்து பார்க்கச் செய்துவிடுவதில் அமெரிக்கர்கள் கில்லாடிகள்.*

*வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியில் தொடங்கி நகம் வெட்டும் கருவிவரை இருந்த அந்த பார்ஸல் ஒரு விநாடி என்னை நிலைகுலையச் செய்துவிட்டதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.*

*கடைசியில், நானும் இவ்வளவுதானா என்று கேட்டுக்கொண்டேன். கொஞ்ச நேரம்தான். அந்த அமெரிக்க ஷூவை சாக்கடையில் தோய்த்து என் முகத்தில் நானே அடித்துக்கொள்வது மாதிரி கற்பனை எழுந்தது. உடனே பார்சலைப் பிரித்து அத்தனை பொருட்களையும் விற்பனைக்கு வைத்துவிட்டேன், எதுவும் என்னுடையதல்ல என்று உறுதியாக நினைத்துக்கொண்டு.*

*இதனாலெல்லாம் நான் பெரிய தேசியவாதி, சுதேசிப்ரியன், சத்திய சந்தன் என்று தயவு செய்து எண்ணிக்கொண்டுவிடாதீர்கள். இந்த தேசத்தின் லட்சக்கணக்கான படிப்பற்ற, வேலையற்ற, ஒழுக்க வரையறைகளற்ற இளைஞர்களுள் ஒருவன்தான்.*

*ஆனால் ஏதோ ஒரு தருமம் எப்போதும் கட்டிப் போடுகிறது. என் குடும்பச் சூழல்*

*காரணமாயிருக்கலாம், அதற்கு. இளம் வயதில் செய்துவிட்ட பெரும்பிழை உண்டாக்கிய குற்ற உணர்வும்கூடக் காரணந்தான் - ஓர் எல்லை வரை.*

*ஆனால் வியாபாரம் என்பது முற்றிலும் வேறானதல்லவா? இப்படியொரு கிறுக்கன் எப்படி வெளிநாட்டுச் சரக்குகளை விற்கச் சரிப்படுவான்? என் தனிப்பட்ட தருமங்கள் ஒருபோதும் நல்ல லாபத்தை உங்களுக்கு ஈட்டித் தரவிடாது என்பது புரிந்துவிட்டது. அதனால்தான், நீங்கள் நஷ்டப்படக்கூடாது என்று நானாக விலகிவிட்டேன்.*

*இத்தனை பேசுபவன் சிங்கப்பூர் போய் மட்டும் எப்படிப் பிழைக்கமுடியும் என்று கேட்கலாம்.*

*விடுமுறைக்கு தில்லி வந்திருந்த ஒரு சிங்கப்பூர் இந்தியர், நம் அமெரிக்கா ஷாப்புக்கு அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்தார். நம் கடைக்குப் பக்கத்தில்தானே டெலிபோன் பூத் இருக்கிறது? அங்கே வெளிநாட்டு கால் செய்ய வருபவர், கூட்டம் மிகுந்த நேரங்களில் நம் கடையில்தான் உட்கார்ந்திருப்பார். அப்படித்தான் பேச்சுக் கொடுத்து அறிமுகமானார்.*

*ஏதேதோ பேசி, இறுதியில் சிங்கப்பூர் தமிழர்களில் வந்து நின்றோம். கலைப் பொருட்களில் ஆரம்பித்து, கல்யாணச் சாப்பாடு வரை அவர்கள் இன்னும் தென்னிந்தியக் கலாசாரத்தையே பின்பற்றி வருவதாகவும் ஒரு நல்ல ஆவக்காய் ஊறுக்காய்க்காகவும் கத்ரி கோபால்நாத்தின் சாக்ஸபோன் கேஸட்டுக்காகவும் தஞ்சாவூர் வீணைக்காவும் பல மைல்கள் பயணம் செய்யவும் ஆயிரக்கணக்கில் செலவழிக்கவும் தயாராயிருக்கிறார்கள் என்று சொன்னார். செரங்கூன் வீதியிலிருக்கும் தமிழர் கடைகள் போதவில்லை என்றும் சொன்னார்.*

*என் குணம் பற்றித்தான் முன்பே சொல்லியிருக்கிறேனே?*

*அவரிடம் என்னைப் பற்றி விரிவாக எடுத்துச்சொல்லி, 'எனக்கு நன்றாக ஆவக்காய் ஊறுகாய் போட வரும் சார்' என்று சொன்னேன்.*

*தொழில் முறையில் அவர் ஒரு ஆடை ஏற்றுமதியாளர்தான். ஆனால் இப்படியொரு பிஸினஸையும் ஆரம்பிக்கிற எண்ணம் இருந்திருக்கிறது. நான் ஒரு தமிழன் என்று அவருக்குத் தெரியப்படுத்தியதுதான் என் வாழ்வின் முதல் பிரும்ம முகூர்த்தம். பாஸ்போர்ட், விசாவுக்கெல்லாம் அவரே ஏற்பாடு செய்துவிட்டார்.*

*அவர் கிளம்புகிற நாள் நெருங்கி, நானும் கூடவே செல்லலாம் என்று முடிவாகிவிட்டதால் முன்கூட்டித் தெரியப்படுத்தவோ, நேரில் பேசி விடைபெறவோ இயலாமலாகிவிட்டது.*

*இப்போது நான் சிங்கப்பூர்வாசி! மூலதனம் அவருடையதுதான் என்றாலும் உழைப்பு முழுக்க என் ஒருவனையே சார்ந்தது. சிறிய அளவில் ஒரு தமிழ்க்கடை ஆரம்பித்தாகிவிட்டது. ஆவக்காய் ஊறுகாய் மட்டுமல்லாமல் அத்தனை ஊறுகாய்களும் கிடைக்கும். காய்கறிகள், தோசை மாவு, கை முறுக்கு, எள்ளுருண்டை, ரஜினி பட கேஸட், கும்பகோணம் வெற்றிலை, திருநெல்வேலி அல்வா, வாரியார் புத்தகங்கள், விஷ்ணு சகஸ்ரநாமம், தர்ப்பைப் புல், சமித்து - இன்னதுதான் என்று கிடையாது. நேற்று மாலை ஒரு பெண்மணி அவசரமாக வந்து, 'மீனாட்சியம்மாள் - சமைத்துப்பார் இருக்கா?' என்று கேட்டார். செத்துப்போன மீனாட்சி அம்மாளின் ஆத்மாவிடம் மானசீகமாக மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, 'இருக்கே! ஆனா தேடி எடுக்கணும்; நாளைக்கு வரீங்களா?' என்று சொன்னேன்.*

*பெரு மகிழ்ச்சியுடன் அந்த திருபுவனத்துப் பெண்மணி கிளம்பிப் போனார்.*

*இதோ இன்றையபொழுது விடிந்து சில மணி நேரங்களாகிவிட்டன. விமான நிலையத்துக்குத்தான் கிளம்பிக்கொண்டிருக்கிறேன். மீனாட்சியம்மாள் அவசியம் வந்து சேர்ந்திருப்பார்.*

*பூமிகாஜி! எப்படியும் எங்கேயும் பிழைத்துக்கொண்டுவிட முடியும் என்கிற நம்பிக்கையை எனக்குள் அழுத்தமாக உருவாக்கியது நீங்களனுப்பிய முதல் நூறு ஜோடி ஷூக்கள்தாம். அதை நான் மறக்கமாட்டேன். கூடிய சீக்கிரம் நானொரு முதலாளி ஆகிவிடுவேன். அதிலெனக்குச் சந்தேகமேயில்லை. என் நிறுவனத்துக்கு உங்கள் பெயரை வைப்பதன் மூலம் மட்டுமே உங்கள் கடனைத் தீர்த்துவிட்டதாக நான் நிம்மதி கொள்ளமுடியும். என்னை ஆசீர்தியுங்கள். வாசு.*

## *2*

*அன்புள்ள கணபதி சார்,*

*நலந்தானே? உங்கள் ஆசியில் என் நலத்துக்கு ஒருபோதும் குறை வராது. ஒரு நல்ல செய்தியைப் பகிர்ந்துகொள்ளவே இக்கடிதம்.*

*நான் வேலைபார்க்கிற இந்த மகாலெட்சுமி டிரேடர்ஸில் நானே ஒரு பாகஸ்தனாகிறேன். தோற்றத்திலும் சரி; பெருந்தன்மை குணத்திலும் சரி, என் முதலாளி பல விதங்களில் உங்களைப் பெரிதும் ஒத்திருக்கிறார். அடிப்படையில் அவர் ஒரு நிறம் மாறாத கம்யூனிஸ்ட் என்பதால் உழைப்பவனுக்கு உரிய பங்கு தருவதில் மனச்சிக்கல் ஏதும் அவரிடம் இல்லை. சிங்கப்பூர் வந்த இரண்டரை வருடங்களில் இது சாத்தியமாகியிருக்கிறதென்றால் தலைகால் புரியாமல் நான் எப்படி குதித்துக்கொண்டிருப்பேன் என்று நீங்களே கற்பனை செய்துகொள்ளுங்கள்.*

*நினைத்துப் பார்த்தால், வந்து சேர வேண்டிய இடத்துக்கு மிகச் சரியாக, நேர்மையாக, நியாயமாக வந்திருப்பதாகவே தோன்றுவதால் என் சந்தோஷம் அர்த்தபூர்வமானதுதான் என்று நினைக்கிறேன். இந்தக் கணம் உண்டாகிற நியாயமான பெருமிதம் என்னை மேலும் அடக்கமும் பவ்யமும் கொள்ளச் செய்யுமானால் இன்னும் உயரமுடியும்; சந்தேகமில்லை.*

*எத்தனை கோபமும் கொந்தளிப்பும் குழப்பமும் கொண்டவனாயிருந்தேன், அப்போது? சிரிப்புத்தான் வருகிறது.*

*உங்களுக்கு நினைவிருக்கிறதா? தேசம் முழுவதும் இட ஒதுக்கீட்டுப் பிரச்னையைக் கொத்து பரோட்டா போட்டுக்ண்டிருந்தபோது, எத்தனை மேலோட்டமாக, வெறும் சுய இரக்கத்துக்கு ஆட்பட்டு உங்களிடம் நானும் என்னென்னவோ பேசியிருக்கிறேன்.*

*இப்போது தோன்றுகிறது, யாருக்கு யார் என்ன இடம் ஒதுக்கிவிட முடியும்? ஐந்து வருடங்களாகிவிட்டன. அந்தப் பிரதமர் போய் அடுத்தப் பிரதமரும் போய் இன்னொரு அரசும் வந்துவிட்டது. பிற்படுத்தப்பட்டவர்கள் முன்னேற வேண்டும். இதில் நம் அரசியல்வாதிகளில் யாருக்கும் எந்த ஆட்சேபணையும் இருக்க முடியாது. ஆகவே, அந்த மசோதா நிறைவேற்றப்படுவதிலும் பெரிய சிக்கல்களேதும் கிடையாது.*

*இந்த ஐந்து வருடத்தில் எத்தனை பேர் முன்னேறியிருக்கிறார்கள் என்று யாராவது சொல்லட்டும்? புள்ளி விவரங்களுக்குப் பஞ்சமிருக்காது என்பது எனக்குத் தெரியாததல்ல. ஏட்டளவில் எதுவும் சாத்தியம் என்று காட்டுவதுதான் நமது தேசியத் தொற்றுவியாதி ஆயிற்றே. என் கேள்வியெல்லாம் இன்னும் நூறு வருடங்களானாலும் இவர்கள் இதையே சொல்லித்தான் பிழைப்பை ஓட்டிக்கொண்டிருப்பார்கள் என்பதை மறுக்க முடியுமா என்பதுதான்.*

*இப்போது அங்கே ஏதோ புதிய பொருளாதாரக் கொள்கையாமே? ஜமாயுங்கள். வளர்ந்துவிட்ட தேசத்திலிருந்து வந்து கடை விரிப்பவன் ஒரு போதும் நாற்பது பர்ஸண்ட் மதிப்பெண் வாங்கியவனைக் கூப்பிட்டு வேலைக்கு வைத்துக்கொள்ளமாட்டான். வேண்டுமானால், தில்லியில் நான் பார்த்துக்கொண்டிருந்த வேலைகளுக்கு ஆளெடுப்பார்கள், இட ஒதுக்கீட்டை அவர்களும் அனுசரித்தாக வேண்டுமென்றால்.*

*திறமைசாலிகளையெல்லாம் வெளிநாடுகளுக்கு விமானமேற்றி அனுப்பும் காரியத்தை ஒருபுறம் செய்துகொண்டு, இன்னொரு பக்கம் வெள்ளைக்காரனுக்கு வாசல் திறந்துவைப்பதைப் பார்த்தால் சிரிப்புத்தான் வருகிறது.*

*நீதிபதி வி.கே. சாப் ஒருமுறை, 'இந்தியா ஒரு பெரிய லாட்ஜ்' என்று என்னிடம் சொன்னது இன்னும் நன்றாக நினைவிருக்கிறது. அதுசரிதான். ஆனால், கூடிய சீக்கிரம் அது முதலாளி இல்லாத லாட்ஜாகப்போகிறது - ஐ மீன் சந்தை மடம்.*

*யோசித்துப் பார்த்தால், அவரவருக்கான இடத்தை அவரவரேதான் ஒதுக்கிக்கொண்டாக வேண்டுமென்று தோன்றுகிறது. விலை கொடுக்காமல் ஒரு கத்திரிக்காய் வாங்க முடியுமா நம்மால்? சலுகைகளோ, நிவாரண நிதிகளோ, இழப்பீட்டுத் தொகைகளோ நம்மை அவமதிக்கத்தான் செய்கின்றன என்று ஏன் யாருமே நினைப்பதில்லை? திறமையும் உழைக்கும் குணமும் முன்னேறும் வெறியும் கொண்டவன் யாரும் சலுகைகளை எதிர்பார்த்திருப்பான் என்று நான் நம்பவில்லை.*

*இருக்கிற இருப்பைப் பார்த்தால், நம் நாட்டுக்கு ஜனநாயகம் உண்மையிலேயே ஓர் ஆடம்பரம்தான் என்று தோன்றுகிறது. சீக்கிரம் 'லாட்ஜை' காலி பண்ணிவைக்கச் சொல்லுங்கள். நானே வந்து கடை விரித்தாலும் விரிப்பேன்.*

*ஒரு சந்தேகம். என்.ஆர்.ஐ.யாக வந்து வியாபாரம் செய்தால் 'எஃப்.ஸி' என்று பார்க்கமாட்டார்களல்லவா?*

*அன்புடன்,*

*வாசு*

## 3

*அன்புள்ள மன்னி,*

*சௌக்கியந்தானே? ரொம்ப நாளாகிவிட்டது, உனக்கு இப்படித் தனியாக எழுதி. புரிந்துகொள், புரிந்துகொள் என்று முன்பொரு கடிதத்தில் நீ முட்டிக்கொண்டதைப் புரிந்துகொள்ள ஏற்பட்ட தாமதம்தான் இந்தக் கடிதத்தின் தாமதத்துக்கும் காரணம்.*

*உண்மையில் நான் எதையுமே புரிந்துகொள்ளும் மன நிலையில் இல்லை அப்போது. இப்போது எல்லாமே புரிந்துவிட்டது. நீ புரிந்துகொள்ளாதவற்றைச் சுட்டிக்காட்டும் பக்குவம் வரும் அளவுக்குத் தேறிவிட்டேன்.*

*முதல் விஷயம் - நான் பணத்தைத் துரத்தவில்லை. (இது எனக்குப் புரியவே கொஞ்ச நாள் பிடித்தது என்றால் நீங்களெல்லாம் உண்மையில் ரொம்பவுமேதான் அஞ்சியிருப்பீர்கள்!) ஓர் உயரத்தை நான் மனத்தில் குறித்துவைத்திருந்தேன். சமூக அடையாளங்களைப் பொருளாதார அடையாளங்கள் பின்தள்ளிவிட்ட காலத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.*

*என் பிறப்புக்காகவோ, ஜாதிக்காகவோ, அல்லாமல் வெறும் உயிரும் உடலுமான எனக்கொரு கௌரவமும் அந்தஸ்தும் உண்டாக வேண்டுமென்று விரும்பினேன். அதற்கு என்னை முற்றிலும் தகுதியுடையவனாக ஆக்கிக்கொள்ள நான் தேர்ந்தெடுத்த வழி, உழைப்பது. எல்லாரும் கண்டடைந்த பாதைதான் இது. ஆனால் நான் வந்து சேர்ந்த விதம் வேறு.*

*வீடு, குடும்பம், உறவுகள், பாசம் எல்லாம் முக்கியமானவைதான். ஆனால், சுயமரியாதை எல்லாவற்றைவிடவும் பெரிதல்லவா. இத்தனை வருடத் தனி வாழ்வில் நான் அடைந்த மெய்ஞானம் இதுதான். இழந்துவிட்ட அடையாளங்களை நம்மால் மீட்க முடியாது போகலாம். ஆனால் ஏதாவதொரு அடையாளம் நமக்கும் வேண்டித்தானே இருக்கிறது?*

*கீரைக் கட்டைத் திருக்கண்ணபுரத்துக்குக் கொடுத்தனுப்பியது மூலம் நீ பெற்ற அடையாளம் என்னவென்று யோசித்துப் பார். இற்றுவிட்டப் பழைய உறவுக்கு அண்ணா அரிசியும் நெய்யும் பருப்பும் வாங்கிப்போட்டுப் பிராயச்சித்தம் கொள்வதன் மூலம் என்ன அடையாளத்தைத் தேடிக்கொண்டிருக்கிறான் என்று நான் புரிந்துகொண்டுவிட்டேன்.*

*என் செயல்களில் நியாய அநியாயங்களைப் பிறகு விரிவான விமரிசனத்துக்கு வைத்துக்கொள்ளலாம். இப்போதைக்கு நானும் ஒரு மனிதனாக நிமிர்ந்திருக்க முடிந்திருக்கிறது என்பதுதான் நான் ஓடிப்போனதின் ஒரே அர்த்தம்.*

*அடுத்த மாதம் நான் இந்தியா வருகிறேன். இரண்டு மாதங்கள் உங்களுடன் இருப்பேன். வெறுமனே பேசி மகிழவும் சீராடிவிட்டுப் போகவுமல்ல. சிறிய அளவில் அங்கே ஒரு தொழில் தொடங்கும் உத்தேசம் இருக்கிறது. நம் குடும்பத்தின் ஒவ்வொரு உயிரும் அதில் ஈடுபட வேண்டும். வேறு யாரிடமுமில்லாத ஒரு பெரும் சொத்து நம்மிடம் இருக்கிறது; ஒற்றுமை.*

*அதைத்தான் அஸ்திவாரமாகப் போட்டு ஆரம்பிக்கலாமென்றிருக்கிறேன்.*

*கடைசியாக ஒன்று. 'நான் புரிந்துகொள்ளச் சொல்லிக் கேட்டது இவை எதுவுமே அல்லவே?' என்று நீ ஒரு பெருமூச்சுக் கலந்த புன்முறுவலுடன் இதைப் படிக்கிற விநாடியில் நினைத்துக்கொண்டிருக்கலாம். நான் அதைப் புரிந்துகொண்டேன் என்பதை உடைத்துக்காட்டப் போவதில்லை இப்போது.*

*நானுந்தான் கொஞ்சநாள் பொத்திவைத்துக்கொள்கிறேனே?*

*அன்புள்ள,*

*வாசு*

முற்றும்

# பின் குறிப்பு

*இந்நாவலை நான் 1999 - 2000 ல் எழுதினேன். இது வெளியானதே பலருக்குத் தெரியாது. வெளிவந்த காலக்கட்டத்தில் இதற்கு எழுந்த கண்டனங்களும் எதிர்ப்புகளும் நியாயமாக இந்நாவலை அதிகம் விற்கச் செய்திருக்க வேண்டும். அன்று சோஷியல் மீடியாக்கள் கிடையாது. அறிவுஜீவி விமரிசகர்களின் கருத்துகள் வெகு மக்களைச் சென்றடையும் சாத்தியங்கள் அநேகமாக இல்லை. சிற்றிதழ் சார்ந்த வாசகர்கள் மட்டுமே அவர்களை வாசிப்பார்கள். அவர்கள் பதில்வினை ஆற்றினால் அது வெளிவரவே குறைந்தது மூன்று மாதங்களாகும்.*

*எப்படியோ இது காணாமல் போய்விட்டது. இணையத்தில் திருமலை, பால ஹனுமான், பாஸ்டன் பாலாஜி போன்ற ஒருசிலர் இந்நாவல் பற்றி நல்ல விதமாக எழுதினார்கள். (யாஹூ க்ரூப் காலம்.) சிலர், படித்தேன்; பிரமாதம் என்றார்கள். பலபேர் எங்கே கிடைக்கும் என்றார்கள். இதனை வெளியிட்ட பதிப்பாளர் இன்று எங்கே இருக்கிறார் என்று எனக்குத் தெரியாது. ஓரிரு வருடங்களுக்கு முன் இந்நாவலின் மறுபதிப்பைக் கஷ்டப்பட்டுக் கொண்டு வந்தேன். அதுவும் எங்கே போனதென்று தெரியவில்லை.*

*இன்னும் சிலராவது இதைப் படிக்கலாம் என்று இப்போதும் ஆசையிருப்பதால் இதனை இலவச மின்னூலாக வெளியிடுகிறேன். நண்பர்கள் சீனிவாசன், ரவி ஆகியோருக்கு என் நன்றி. அட்டைப்படம் உருவாக்கியளித்த ஓவியர் ப்ரேமுக்கு என் அன்பு.*

*பாரா*

## பாராவின் பிற நூல்கள்:

*அரசியல்:*

*1.* பாக்: ஒரு புதிரின் சரிதம்
*2.* டாலர் தேசம்
*3.* நிலமெல்லாம் ரத்தம்
*4.* மாயவலை
*5. 9/11* - சூழ்ச்சி வீழ்ச்சி மீட்சி
*6.* ஹிட்லர்
*7.* ஐ.எஸ்.ஐ: நிழல் அரசின் நிஜ முகம்
*8.* காஷ்மீர்
*9.* ஆர்.எஸ்.எஸ்.
*10.* மாவோயிஸ்ட்: அபாயங்களும் பின்னணிகளும்
*11.* ஆயில் ரேகை
*12.* பிரபாகரன்: வாழ்வும் மரணமும்
*13.* இராக்: ப்ளஸ் சதாம் மைனஸ் சதாம்
*14.* கலவரகாலக் குறிப்புகள்
*15.* ஆடிப்பாரு மங்காத்தா
*16.* சர்வாதிகாரத்திலிருந்து ஜனநாயகத்துக்கு

*பிற:*

*17.* உணவின் வரலாறு
*18.* பின்கதைச் சுருக்கம்
*19.* எக்ஸலண்ட்: செய்யும் எதிலும் உன்னதம்
*20.* யானி: இசைப் போராளி
*21. 24* கேரட்
*22.* மூன்றெழுத்து
*23.* அன்சைஸ்
*24.* குற்றியலுலகம்
*25.* சந்து வெளி நாகரிகம்
*26.* இங்க்கி பிங்க்கி பாங்க்கி
*27. 154* கிலோ பைட்
*28.* ஓப்பன் டிக்கெட்
*29.* பர்வேஸ் முஷாரஃப்

*சிறுவர் நூல்கள்:*

*30.* இஸ்லாம்
*31.* அமெரிக்க சுதந்தரப் போர்
*32.* மொசார்ட்
*33.* இரண்டாம் உலகப் போர்
*34.* மகாவீரர்
*35.* புதையல் தீவு
*36.* ஐஸ் க்ரீம் பூதம்

*புனைவு:*

*37.* நிலா வேட்டை
*38.* அலை உறங்கும் கடல்

39. புவியிலோரிடம்
40. மூவர்
41. காந்தி சிலைக் கதைகள்
42. யாளி முட்டை
43. மெல்லினம்
44. கொசு
45. ரெண்டு
46. தூணிலும் இருப்பான்
47. அலகிலா விளையாட்டு
48. கால் கிலோ காதல் அரை கிலோ கனவு